வரு.75 இல. 42 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-


கருணை இல்லம் கோகுலம்
ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.
நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் වාරමන්ජරි
2023 ஒக்டோபர் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை October 22 Sunday, 2023


ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்
ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்
Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு,கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK


03
நோயாளி ஓவியம் வரைய மூளைக் கட்டியை அகற்றிய மருத்துவர்கள்


08
அரசாங்கத்தை பலிக்கடாவாக்க முயற்சிக்கும் எதிர்க்கட்சிகள்!


12
தீவிரமடையும் இஸ்ரேல் ஹமாஸ் போர்


24
இலங்கை முதல் வெற்றி

# 2048ஆம் ஆண்டுக்குள் ஸ்மார்ட் நாட்டை உருவாக்குவதே இலக்கு

## UNP விசேட பேராளர் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





இலங்கையை ஸ்மார்ட் நாடாக கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதே தமது நோக்கமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

நேற்று (21) கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாட்டில் கலந்துகொண்டு பேசும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று மாலை மிக கோலாகலமாக ஆரம்பமானது.

2048 ஆம் ஆண்டுக்குள் ஸ்மார்ட் நாட்டை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் இந்த வருட மாநாடு ஆரம்பமானதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன, தலைவர் வஜிர அபேவர்த்தன,

06



மின்சார, இலத்திரனியல் போக்குவரத்து;

## நாட்டில் முதலாவது தேசிய கண்காட்சி மற்றும் மாநாடு

### நவம்பர் 10, 11, 12ஆம் திகதிகளில் பிட்டிபனவில்



இலங்கையின் அனைத்துத் துறையினரின் பங்களிப்புடன் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போக்குவரத்து தொடர்பான முதலாவது தேசிய கண்காட்சி மற்றும் மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

இந்த தேசிய கண்காட்சி 2024ஆம் ஆண்டின் மின் நடப்பு ஆண்டு மற்றும் இந்த ஆண்டு

06

## IMF உடன்படிக்கையால் கடன் மறுசீரமைப்பு துரிதம்

### இரண்டாவது தவணையாக 330 மில். டொலர் விரைவில்



சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையால் கடன் மறுசீரமைப்பு துரிதப்படுத்தப்பட்டதுடன், இரண்டாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை விரைவில் பெற்றுக்கொள்ளுமெனவும், நிதி இராஜாங்க அமைச்சர்

06

காதர் மஸ்தானின் முயற்சியின் பலனாக

## தேசிய மீலாத் விழா இன்று; மன்னார் நகர் விழாக்கோலம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொள்கிறார்



புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் 2023ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா, முசலி தேசிய பாடசாலையில் இன்று (22) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய மன்னார் மாவட்டத்தில் தேசிய மீலாத் விழாவை

06

## காசாவிலுள்ள இலங்கையர் பாதுகாக்கப்பட வேண்டும்

### சபையில் சஜித் பிரேமதாச வலியுறுத்து



காசாவிலுள்ள இலங்கையர்களை பாதுகாக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு இடையில் இடம்பெற்றுவரும் மோதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய

06

## எஹெலியகொடை பொலிஸ் OIC தன்னைத்தானே சுட்டு தற்கொலை

### நேற்று அதிகாலை சம்பவம்



எஹெலியகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியங்கர சில்வா நேற்று (21) அதிகாலை தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தலையில் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த மரணம் தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணையில் பொலிஸ் பொறுப்பதிகாரியின் மனைவி தெரிவிக்கையில், அவரது தாயார் சொத்தை இளைய சகோதரனுக்கு மட்டும் எழுதி வைக்க முற்பட்டதால்

06

## பீடி உற்பத்தி தொழிலுக்கு விரைவில் தேசிய கொள்கை

### அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானம்



நாட்டில் பீடி உற்பத்தி கைத்தொழிலை முறையாக நடத்துவதற்கு புதிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் கடந்த வாரம் அனைத்துத் தரப்பினருடனும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின்

06

## அடுத்த வருடத்துக்கான பட்ஜட் நவம்பர் 13 இல்!

### பாராளுமன்றில் சமர்ப்பிக்க ஏற்பாடு



அடுத்த வருடத்துக்கான (2024) வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக,

06

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## நாட்டின் இதயங்களுக்கு நடந்த கதி என்ன?

ஒரு நாட்டின் இதயம் கிராமங்கள் என்றுதான் அந்நாட்களில் பலரும் கூறுவதுண்டு. அவ்வாறான கூற்றுக்கு காரணங்கள் இல்லாமலில்லை. ஏனெனில் நகரங்களைப் பார்க்கிலும் கிராமங்களில் சிறப்பான விடயங்கள் ஏராளமாக இருக்கின்றன.

நகரங்களில் வாழ்கின்ற நாகரிக மனிதர்கள் கிராமத்தைப் பார்த்து 'பட்டிக்காடு' என்று பரிகசித்துப் பேசுவதுண்டு. கிராமத்தில் இருந்து நகரத்துக்கு வருவோரை 'பட்டிக்காட்டான்' என்று கூறுகின்ற வழக்கம் இன்றும் நிலவுகின்றது. ஆனாலும் அந்தப் பட்டிக்காடுதான் உண்மையில் நாட்டின் இதயமாக இருந்து கொண்டிருக்கின்றது.

நகர மக்களுக்கு உணவுகள் அத்தனையையும் தருபவர்கள் கிராமத்தவர்களாவர். ஒட்டுமொத்த நாடுமே முடங்கிப் போகுமானால் கிராமத்து மக்களுக்கு உணவுக்குப் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால் கிராமங்களிலிருந்து உணவு கொண்டுவரப்படுவது தடைப்பட்டுப் போவதால் நகரமக்கள் பட்டினியை எதிர்நோக்கும் அவலம் ஏற்படுமென்பதை கொவிட் பெருந்தொற்று காலத்தின் போது நாம் சந்தித்தோம்.

உணவுத்தேவை ஒருபுறம் இருக்கட்டும்! கொழும்பு உட்பட நாட்டின் அத்தனை நகரங்களையும்

06



06

## அமெரிக்காவின் நீதியும் தர்மமும் வஞ்சகமானது!

சபையில் HMM ஹரீஸ் எம்.பி. காட்டம்

## இன்றைய இலவச இணைப்பு அரசாங்க வர்த்தமானியில்...



மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) கற்கைநெறிக்கான மாணவர் சேர்க்கை

06

இலங்கையின் பிரபல வர்த்தகரான

## லலித் கொத்தலாவல நேற்று காலமானார்



இலங்கையின் பிரபல வர்த்தகரும் செலிங்கோ குழுமத்தின் தலைவருமான லலித் கொத்தலாவல தனது 85ஆவது வயதில் நேற்று (21) காலை காலமானார்.

06

## டயனா கமகே மீதான தாக்குதல்!

### அறிக்கை கோரியுள்ள சபாநாயகர்



பாராளுமன்றத்தில் வைத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேராவால் தான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பாக உடனடியாக விசாரணை

06

மதுபோதையில் வாகனம் செலுத்தும்

## சாரதி ஒருவரை கைதுசெய்யும் பொலிஸாருக்கு தலா ரூ. 5,000

### அடுத்த 03 மாதங்களுக்கு முன்னோடித் திட்டம்

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் சாரதிகளை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 5,000 ரூபா ஊக்குவிப்புத்தொகை வழங்கப்படுமென, போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்தார்.




இந்த மாதம் ஒக்டோபர் முதல் இந்தாண்டு டிசெம்பர்வரை 3 மாதங்களுக்கு முன்னோடித் திட்டமாக இது நடைமுறைப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

06

நாட்டின் மூத்த நடனக் கலைஞர்

## ரஜினி செல்வநாயகம் நேற்று காலமானார்



நாட்டின் மூத்த நடனக் கலைஞர்களில் ஒருவரான கலாசூரி ரஜினி செல்வநாயகம் தனது 87ஆவது வயதில் நேற்று முன்தினம் (20)

06

## நவம்பர் 10ம் திகதி உலக போக்குவரத்து தினமாகும்

# தேசிய போக்குவரத்து சேவையின் திருப்புமுனையாக அமையும் 2024



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன

**நிலையான அபிவிருத்திக்காக தேசிய போக்குவரத்துக் கட்டமைப்பு மின்சாரத்துக்கு மாற்றப்படப் போகின்றதே, என்னென்ன மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன?**

போக்குவரத்து, கைத்தொழில், சுற்றாடல் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அனைத்து அமைச்சுக்களையும் ஒருங்கிணைத்து 2024ம் ஆண்டை இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பை டிஜிட்டல்மயமாக்கும், இலத்திரனியல் மற்றும் மின்சாரத் துறைக்கு மாற்றுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

**இது அரசின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு வேலைத்திட்டமா?**

இது அரசினால் முன்னெடுக்கப்படும் ஒரு வேலைத்திட்டமல்ல. அரசின் முயற்சி, தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், தனியார் துறையின் சிறப்புப் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு போக்குவரத்துத் துறையை செலவு குறைந்த, நம்பகமான, வெற்றிகரமான மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கு உகந்ததாக மாற்றுவது தொடர்பான மக்கள் பங்குபற்றலுடனான வேலைத்திட்டமாகவே இது செயல்படுத்தப்படுகிறது.

**இ.போ.சபை உள்ளிட்ட பேருந்துகள், புகையிரதம் மற்றும் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனத் துறைக்குரிய பல நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நீங்கள் 2024ம் ஆண்டினுள் செய்யப்போகும் முக்கிய மாற்றங்கள் என்ன?**

மின்மயமாக்கலில் அறிமுகப்படுத்தப்படும் முக்கிய மாற்றங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். முதற்கட்டமாக நாம் போக்குவரத்து திணைக்களத்தை முழுமையாகவே டிஜிட்டல்மயமாக்கும் 'இமோட்டரிங்' என்ற திட்டத்தை செயல்படுத்தவுள்ளோம். இலங்கையில் நீண்டகாலமாக இந்தத் திணைக்களத்தில் பல்வேறு காலதாமதம், முறைகேடுகள், மோசடிகள், ஊழல்கள் பல இடம்பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இவை அனைத்தையும் தடுப்பதற்குள்ள ஒரே தீர்வு டிஜிட்டல் மயமாக்குவதேயாகும். இதனடிப்படையில் நான் இந்த அமைச்சைப் பொறுப்பை ஏற்பதற்கு சில காலத்திற்கு முன்னர் இருந்த அமைச்சர்கள் 'இமோட்டரிங்' திட்டத்திற்கு, ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையான முறைகளின் பிரகாரம் விலைமனுக்கோரி அவை வழங்கப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டிருந்தாலும் பல்வேறு சக்திகளினால் தொடர்ச்சியாகப் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்த இடமளிக்கவில்லை. நீங்கள் அறிந்தவகையில் சுங்கம், உள்நாட்டு இறைவரி, கலால் திணைக்களம் போன்றன பல காலங்களுக்கு முன்னரே டிஜிட்டல் மயமாக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் அவை பல்வேறு சக்திகளால் செயற்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்படவில்லை. நாரஹேன்பிட்டியில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வேரஹெரவுக்கு கொண்டு செல்லப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்படுவதற்கு முன்னர் கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டியிருந்தமையே இந்தத் தாமதத்துக்கு காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது கட்டடங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்காததால், இன்னும் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தை செயல்படுத்த முடியாது. எனவே அமைச்சரவைக்கு அறிவித்து அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது.

ஹுணுப்பிட்டிய கங்காராம பிரதேசத்திற்கு அருகில் கட்டடத் தொகுதியிலுள்ள சில கட்டடங்களைப் பெற்றுக் கொண்டு ஈமோட்டரிங் வேலைத்திட்டத்தை அவ்விடத்திற்குக் கொண்டு செல்ல வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சராக உள்ள அமைச்சர் லசன்ன அழகியவண்ண இதனை பொறுப்பேற்றுள்ளார். வாகனத்தை இறக்குமதி செய்து பதிவு செய்து முடியும் வரை முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தின் மூலம் வாகனத்தைப் பதிவு செய்யும் புரட்சிகரமான மாற்றத்தை அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தவுள்ளோம். இவ்வாறான புரட்சிகரமான மாற்றங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருக்கவில்லை. இரண்டாவதாக நாம் எரிபொருள் பாவனைக்கு பதிலாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களைப் பொருத்துதல், உற்பத்தி செய்தல் இறக்குமதி என்பனவற்றுக்காக தனியாருக்கு அதிகபட்ச அரச ஒத்துழைப்பை வழங்குவோம். மூன்றாவது மின்சார வாகனங்கள். இதுவரைக்கும் இலங்கையில் மின்சார வாகனங்கள் பதிவு செய்யப்படவில்லை. அதற்கான தரங்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்குவோம். தற்போது மின்சார முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டு இலக்கத் தகடு வழங்கப்படுகின்றன. புகையிரம் மற்றும் பஸ்களில் டிக்கட்டுக்களை வழங்குவதை ஈடிக்கட் முறையின் ஊடாக மேற்கொள்ளவுள்ளோம். அப்போது டிக்கட்டுகள் தொடர்பான வருமான இழப்பும், மோசடிகள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்பும் நிறுத்தப்படும். மேல் மாகாணத்தில் 2000 மின்சார பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் திட்டத்திற்கு சர்வதேச விலைமனு கோரப்பட்டுள்ளது.

**இதனடிப்படையில், அடுத்த ஆண்டில் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் கார்கள், பேருந்துகள், ரயில்கள் போன்றவை எமக்கு கிடைப்பது நடைமுறை சாத்தியமாகுமா?**

நான் அமைச்சர் என்பதால் கனவு காணவில்லை. செய்ய முடியாது எனக் கூறிய பல திட்டங்களை நாம் வெற்றிகரமாகச் செயற்படுத்தியிருக்கின்றோம். போக்குவரத்துத் துறையின் இந்த திருப்புமுனை முயற்சிக்கு அனைத்து தரப்பினரது இணக்கப்பாடும் கிடைக்குமானால் 2024ம் ஆண்டில் நடைமுறைப்படுத்த முடியும். ஏனென்றால், தற்போது, இந்த நாட்டில் தனித்துவம் வாய்ந்த படைப்பாற்றல் கொண்டவர்கள் தங்கள் சொந்த ஆற்றலால் நாடு பெருமை கொள்ளும் வகையில் மின்சார வாகனங்களைத் தயாரிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் தற்போது வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்கிறார்கள். மின்சார சைக்கிள்கள், மின்சார மோட்டார் சைக்கிள்கள், மின்சார மோட்டார் கார்கள், மின்சார முச்சக்கர வண்டிகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் 1520 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளனர். அவர்கள் சர்வதேசத்துடன் போட்டி போட்டு வெளிநாட்டுச் சந்தைக்கான வழிகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

**கார் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக நீங்கள் நம்புகின்றீர்களா?**

ஒருபோதுமில்லை. இன்னும் ஏராளமான பல பிரச்சினைகள் மீதமிருக்கின்றன. குறிப்பாக வாகனங்கள், உதிரிப்பாகங்கள் இறக்குமதியின் போது அவர்கள் முன்வந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யூ. என். டீ. பி போன்ற நிறுவனங்களுடன் இணைந்து விசேட கடன் திட்டங்களை உருவாக்கி வழங்க வேண்டும்.



**எமது நாட்டை மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு மாற்றுவதற்காக சர்வதேச ஆதரவைப் பெற முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

ஆம். கொவிட் 19 தொற்றின் பின்னர் யூ.என்.டீ.பி நிறுவனம், யூ.என். எஸ்கேப் நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுடன் இது தொடர்பான செயற்பாடுகளில் நான் கலந்து கொண்டேன். அனைத்து நாடுகளும் மிகப் பாரியளவில் நிலையான அபிவிருத்திக்காக எரிபொருள் பாவனையிலிருந்து விடுபட்டு மின்சாரத்தில் அல்லது வேறு சக்தியில் செயற்படும் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி முன்னேறிச் சென்றுள்ளன. குறிப்பாக அதிகூடிய மக்கள் வாழும் சீனாவிலும், இந்தியாவிலும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் வாகனங்கள், புகையிரதங்கள் போன்ற அனைத்தும் வாகனங்களும் விரைவாக மின்சாரத்திற்கு மாற்றப்பட்டன. கொரியா உள்ளிட்ட மற்றைய நாடுகளும் இதில் ஆராய்ச்சி செய்கின்றன. சுற்றுச்சூழல் வேலைத்திட்டங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக நிதியங்கள் உருவாக்கப்பட்டு இதற்காக உதவியளிக்கின்றன. 2030/40ம் தசாப்தத்தினுள் உலகில் உள்ள ஏராளமான நாடுகள் பொதுப் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக இலத்திரனியல் மற்றும் மின்சார துறைகளின் பாவனையை விரிவுபடுத்துகின்றன.

**நமது நாட்டில் மின்சார வாகனங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி?**

குறிப்பாக, வெகுஜன ஊடக அமைச்சர் என்ற வகையில், தேசிய தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு இந்நாட்டு மக்கள் அதிகமாக சுற்றுச்சூழலுக்கு உகந்த, குறைந்த விலை மின்சார வாகனங்களைப் பயன்படுத்த முன்வருவதற்கும், அதற்காக அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக பூரண பங்களிப்பை வழங்குவதற்கும் விசேட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று தனியார் துறை ஊடகங்களும் இந்த போக்குவரத்துக் கட்டமைப்பின் திருப்புமுனைக்கான பயணத்திற்கு பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கின்றோம்.

**அந்த மாணவர்களுக்கும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள கண்காட்சியில் செயன்முறை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமா?**

ஆம். கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்து, தொழில்நுட்பம் கற்கும் அனைத்து மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் மற்றும் ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரும் நவம்பர் மாதம் 10ம் திகதியிலிருந்து 12ம் திகதி வரையில் இடம்பெறவுள்ள கண்காட்சியைப் பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2024ம் ஆண்டின் இறுதியில் நடைபெறும் இந்த சர்வதேச இலத்திரனியல் மற்றும் மின்சாரக் கண்காட்சியின் மூலம் போக்குவரத்துத் துறையில் ஒரு பெரிய சவாலை வெற்றிகரமாக முறியடிப்போம் என்று நாங்கள் நம்புகிறோம்.

**சுபாஷினி ஜயரத்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

---




# ஏற்றுமதிக்காக மின்சர முச்சக்கர வண்டிகளை தயாரிக்கும் சித்தமுல்லை மில்டன்



- 10 வீதத்திற்கும் குறைந்த வட்டியில் பத்து கோடி கடன் தேவையாம்.
- கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை முச்சக்கர வண்டி திட்டத்தை அங்கீகரித்தாலும் சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளை அரச மற்றும் தனியார் வங்கிகள் வழங்கவில்லை.
- ஒரு கிலோ மீற்றருக்கான செலவு 3/- ரூபாய் மட்டுமே.
- 800 கிலோ ஏற்றக்கூடிய மின்சார முச்சக்கர லொறியும் உற்பத்தி செய்துள்ளார்.
- முதலாவது ஏற்றுமதி ஜப்பானுக்கும், கொரியாவுக்குமாகும்.

இலங்கைக்கு இந்தியாவிலிருந்து முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்து கொள்கலனிலிருந்து இறக்கப்படுவது மடபாத்த பிரதேசத்திலாகும். இந்தியாவிலிருந்து கொள்கலன்களில் கொண்டு வரப்படும் முச்சக்கர வண்டிகள் அங்கு இறக்கப்படுகின்றன. எனினும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டிகள் கொள்கலன்களில் ஏற்றப்படுவதைக் கண்டு நாம் ஆச்சரியப்பட்டுப் போனோம். இதனை நாம் கண்டது மில்டன் மோட்டர்ஸ் முச்சக்கர வண்டிகளை உற்பத்தி செய்யும் இடத்துக்கு முன்பாகவாகும். மில்டனை முதன் முதலில் மக்களுக்கு அறிமுகப்படுத்துவது நாங்கள்தான்.

"இந்த முச்சக்கர வண்டிகள் மாதிரிகளாக ஜப்பானுக்கு அனுப்பப்படுகின்றன. நண்பர் ஒருவர் மூலமாக எமக்கு ஜப்பானுக்கு இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டிகளுக்கான ஓடர் கிடைத்தது. அவர்கள் கேட்ட உதிரிப் பாகங்களைப் பொருத்தி ஜப்பானுக்கு ஏற்ற வகையில்தான் இந்த முச்சக்கர வண்டிகள் இரண்டையும் புதிதாகத் தயாரித்தோம்"

இந்த முச்சக்கர வண்டிகள் பொதுப் போக்குவரத்துக்காக அல்லாமல், மருத்துவமனை கட்டமைப்புகளுக்குள், கொள்கலன் யார்டுகளினுள் மற்றும் அதிவேக மின்சார புகையிரதங்களிலிருந்து பொருட்களை இறங்கி பஸ் தரிப்பிடங்களுக்குச் செல்வது போன்ற தேவைகளுக்காக ஜப்பான் நாட்டினால் ஆர்டர் செய்யப்பட்டதாக மில்டன் கூறினார்.

மில்டன் மேலும் நான்கு மின்சார முச்சக்கர வண்டிகளை கொரியாவுக்கு அனுப்புவதற்காக ஒரு கொள்கலனில் ஏற்றினார். இலங்கையின் மின்சார முச்சக்கர வண்டிகளைத் தயாரிப்பது பற்றிய கட்டுரை லேக்ஹவுஸ் நிறுவன பத்திரிகைகளில் வெளியானதையடுத்து, கொரியாவில் சிறிது காலம் தங்கி கொரியாவில் மின்சார முச்சக்கரவண்டி பற்றி ஆய்வு செய்யும் வாய்ப்பு மில்டனுக்கு கிடைத்தது.

"பீ.ஜீ.எனர்ஜி என்ற கொரியன் கம்பனிக்குத்தான் இந்த முச்சக்கர வண்டிகளை அனுப்புகிறேன். இந்த முச்சக்கர வண்டிகள் கொரியன் திட்டத்தின் பிரகாரம் செசி மற்றும் உடற் பாகங்களை மாற்றி முழுமையாகவே இலங்கையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் மற்றும் கொரியாவில் இருந்து ஆர்டர்கள் வரும்போது நாம் புதிய இயந்திரங்களைக் கூட கொண்டு வர வேண்டும்"

முச்சக்கர வண்டியை தயாரிப்பதற்குத் தேவையான உயர்தர துருப்பிடிக்காத தகடுகளைப் பெறுவதே தனக்கு முக்கிய பிரச்சினையாக இருப்பதாகச் சொல்கிறார் மில்டன். மேலும், மற்ற உலோக பாகங்கள், இறப்பர் பாகங்கள், கண்ணாடிகள் மற்றும் பிளாஸ்டிக் பாகங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களில் பெரும் தொகையை முதலீடு செய்ய வேண்டும்.

" இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டித் திட்டத்துக்குத் தேவையான பத்துக் கோடி ரூபாய் கடன் தொகையை கைத்தொழில் அபிவிருத்திச் சபை அனுமதித்துள்ளது"

"அப்படியானால் அரச துறையின் வங்கிகளும் இந்த கடனை அங்கீகரிப்பதற்கு ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை?" என்று நான் கேட்டேன்.

"பிணையை வைத்துக் கொண்டும் 20க்கும் அதிக வட்டி வீதத்தில் கடன் வழங்கவே வங்கிகள் முயற்சிக்கின்றன. அந்த வீதத்தில் கடன் பெற்று இந்த துறையை முன்னெடுத்துச் செல்ல முடியாது"

வியட்நாமும் கென்யாவும் தங்கள் நாடுகளில் மின்சார முச்சக்கர வண்டி தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அழைப்பு விடுத்துள்ளதாக மில்டன் கூறினார். ஜப்பான் மற்றும் கொரியா அந்த நாடுகளில் தயாரிக்கப்படும் மின்சார மோட்டார் மற்றும் ரீசார்ஜ் செய்யக்கூடிய பேட்டரி வசதிகள் காரணமாகவே மின்சார முச்சக்கர வண்டிகளை கோருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

நாம் மில்டனைச் சந்திக்கச் சென்ற முன்னைய காலங்களை விட தற்போது மில்டனின் தொழிற்சாலையில் புதிதாக தயாரிக்கப்பட்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் நிறைந்திருந்தன. என்றாலும் மின்சார முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்கு தேவையான சட்ட முறைமை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பது மிகப்பெரிய பிரச்சினையாகும்.

இலங்கையில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கான உதிரிப் பாகங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணியை விரயம் செய்யக் கூடாது என்கிறார் மில்டன்.

தற்போதைய மில்டனின் தொழிற்சாலை எவ்வித அரச அனுசரணையும் இல்லாமல் 700 இலட்சம் வங்கிக் கடனைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு தற்போதுள்ள இயந்திரங்களின் பெறுமதி 25 கோடிக்கும் அதிகமாகும். வங்கி கடன்களுக்காக இலங்கை வங்கி, பேன் ஏசியா வங்கி மற்றும் வெலிபெல் பினான்ஸ் போன்றன மில்டனுக்கு நிதி அனுசரணையினை வழங்கியிருக்கின்றன. முச்சக்கர வண்டிக்கான எந்தவொரு உதிரிப் பாகத்தையும் இறக்குமதி செய்வது தேவையற்றது என மில்டன் கூறினார்.

இலங்கையின் பல பகுதிகளில், சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்ட உதிரிபாகங்களின் நட்




மற்றும் போல்ட்களை இறுக்கித்தான் வாகனங்கள் பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் மில்டன் மோட்டார்ஸ் தொழிற்சாலையில் முச்சக்கர வண்டிகள் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே உற்பத்தி செய்யப்படுவதை உங்கள் கண்களால் பார்க்க முடியும்.

"இந்த மோல்ட்களை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கு கோடிக்கணக்கான நிதி செலவிடப்பட்டிருக்குமே?" எனக் கேட்டோம்.

"இந்த அச்சுகள் அனைத்தும் இலங்கையில் செய்யப்பட்டவை. இவற்றைச் செய்தது லக்மடு இன்ஜீனியரிங். உடற் பாகங்களைச் செய்யும் இந்த பெரிய இயந்திரங்கள் இலங்கையில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்" என்றார் மில்டன்.

"இப்போதுள்ள பெட்ரோல் முச்சக்கர வண்டியை மின்சார வண்டியாக மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகும்?"

"12 இலட்சம் ரூபாய் செலவாகும். புதிதாகவே நாம் தயாரித்துள்ள இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டியை 18 இலட்சத்திற்கு விலை நிர்ணயிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்" என்றார் மில்டன்.

"இப்போது இந்த முச்சக்கர வண்டி இந்தியன் முச்சக்கர வண்டியைப் போல துருப் பிடிக்கா விட்டால் அதனை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாதா?" என நான் கேட்டேன்.

"எனக்கு முதலில் தேவையாக இருப்பது நான் பிறந்த இலங்கையில் இந்த முச்சக்கர வண்டியைப் பதிவு செய்து எமது வீதிகளில் பயணிப்பதை கண்ணாரக் காண்பதேயாகும். இதற்கான உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு சலுகை அடிப்படையில் கடன் கிடைக்குமானால் இந்தியா அல்ல உலகில் எந்த நாட்டுக்கும் இந்த முச்சக்கர வண்டியை ஏற்றுமதி செய்ய முடியும். ஆயிரக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் முடியும்"

மில்டனின் புதிய உற்பத்தியாக இருப்பது டிலிவரி முச்சக்கர வண்டி அல்லது சிறிய லொறியாகும். அதில் 800 கிலோ சுமையை இலகுவாகக் கொண்டு செல்லக் கூடிய தட்டு பொருத்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு தொன்னுக்குச் சற்று குறைந்த சுமையை ஏற்ற முடியும். அந்த சிறிய லொறியில் ஓரிரண்டு சுற்றுக்கள் பயணித்ததும் எந்தக் குலுக்கலும் இன்றிப் பயணிப்பதை உணர முடியும். பொதுவாக தற்போதிருப்பது டீசலில் இயங்கக் கூடிய டிலிவரி முச்சக்கர வண்டிகளாகும். அதனை ஸ்டார்ட் செய்யும் போது அப்பிரதேசத்திற்கே கேட்கும் வகையில் சத்தம் எழும்.

"இந்த மின்சார டிலிவரி முச்சக்கர லொறியானது ஏனைய இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டியைப் போன்றதாகும். ஸ்டார்ட் செய்தாலும் சத்தம் கேட்காது. ஏனைய டீசல் முச்சக்கர வண்டிகளில் சுமை கூடினால் அப்பிரதேசத்திற்கே கேட்கும் வகையில் அதிக சத்தத்துடன்தான் பாரத்தைச் சுமக்கும். இந்த இலக்ட்ரோனிக் முச்சக்கர லொறியில் அவ்வாறு எந்தச் சத்தமும் வராது. சுற்றாடலுக்கு உகந்தது. புகையையும் வெளியிடாது"

இலக்ட்ரோனிக் முச்சக்கர வண்டியின் இதயமாக இருப்பது அதன் சார்ஜ் செய்யக்கூடிய பெட்டரியாகும். பெட்டரி ஒன்றின் சார்ஜ் செய்யக் கூடிய ஆயுட்காலம் இதில் பிரதானமானதாகும். விடயங்களைத் தேடிப் பார்த்த போது சீனா பெட்டரியின் ஆயுட்காலம் 3 வருடங்கள் என்பதை கண்டு கொண்டோம். அதேபோல் கொரியா பெட்டரியின் ஆயுட்காலம் 10 வருடங்களாகும்.

"ஜப்பான் பெட்டரிதான் சிறந்த உத்தரவாதம். 20 வருடங்கள். நிறையப் பேர் கேட்பதும் அதைத்தான்"

உலகின் முச்சக்கர வண்டி சந்தையினுள் முதலில் வெற்றிக் கொடியை நட்டது இத்தாலியாகும். அதன் பின்னர் முச்சக்கர வண்டி வர்த்தகத்தில் மகுடம் சூடியது இந்தியாவாகும். இந்தியா ஆசிய நாடுகளில் மாத்திரமின்றி ஐரோப்பிய நாடுகளிலும் கூட Bajaj மற்றும் TVS முச்சக்கர வண்டிகளுக்கான ஏகபோகத்தை உருவாக்கிக் கொண்டது.

எனினும் அந்த ஏகபோகத்துக்கு எதிராக மில்டனின் இந்த மின்சார முச்சக்கர வண்டியின் புரட்சியை நவம்பர் 10, 11 மற்றும் 12ம் திகதிகளில் பிட்டிபனவில் கண்டு கொள்ள முடியும். 2024ம் ஆண்டை இலத்திரனியல் போக்குவரத்து ஆண்டாக மாற்றுவதற்காக, நாட்டில் முதற்தடவையாக அனைத்துத் துறையினரின் பங்களிப்போடு மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போக்குவரத்து முறைகள் குறித்த தேசிய கண்காட்சி மற்றும் மாநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. 2023ம் ஆண்டின் உலக போக்குவரத்து தினத்துடன் இணைந்ததாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் போக்குவரத்து முறை தொடர்பான தேசிய கண்காட்சி மற்றும் மாநாடு (Green mobility exhibition and conference) நவம்பர் 10, 11 மற்றும் 12ம் திகதிகளில் ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

**வஜிர லியனகே**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# சிறுபிள்ளைத்தனமான சம்பவங்களும் நற்பெயரைக் கெடுக்கும் MPக்களும்




லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றம் என்ற உயரிய சபையில் எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்ற நியதிகள் காணப்படுகின்ற நிலையிலும் அதற்காக எழுத்து மூல சட்டங்கள் நியதிகள் உள்ள போதும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்வது தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இது மிகுந்த கௌரவத்துக்குரிய பாராளுமன்றத்திற்கும் மக்கள் பெரும் நம்பிக்கையுடன் வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தை அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கௌரவத்தையும் நற்பெயரையும் பாதிக்கும் விடயமாகவே அமைந்து விடுகின்றது.







அந்த வகையில் இக்காலங்களில் பாராளுமன்றத்தில் நடக்கக் கூடாத சில விடயங்களும் சம்பவங்களும் நடந்து வருவதைக் காணலாம்.

சில தினங்களாகவே பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளினால் சில சில குளறுபடிகள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்ச்சை யொன்றின் போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும சபையின் மத்திக்கு வந்து மிக மோசமாக நடந்து கொண்டதுடன் செங்கோலையும் தூக்குவதற்கு முயற்சி செய்து, அதன் போது அதில் தமது கைகளை பதித்து செங்கோலை தமது கைகளால் தட்டிய சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

செங்கோலை தூக்க முயல்வது செங்கோலின் மீது கைகளை பதிப்பது அதன் மீது தட்டுவது போன்ற செயற்பாடுகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின்படி குற்றமாகும்.

அவ்வாறு நடந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெருமவுக்கு நான்கு வாரங்கள் பாராளுமன்ற அமர்வுக்கான தடையை சபாநாயகர் விதித்தார்.

தமது செயற்பாட்டை நியாயப்படுத்தி பாராளுமன்றத்துக்கு வெளியில் ஊடகவியலாளர்களுக்கு அவர் கருத்து தெரிவித்திருந்தமையையும் குறிப்பிட வேண்டும். என்றாலும் எந்த வகையிலும் அதனை நியாயப்படுத்த முடியாது. பாராளுமன்றத்தில் செயல்பட வேண்டிய விதிமுறைகளுக்கு இணங்கவே பாராளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்பதை தெரிந்தும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அது அவ்வாறிருக்க கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற கட்டடத்தில் வைத்து சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகேக்கும் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வாய்த் தர்க்கம் கைகலப்பு வரை சென்றுள்ளது. தம்மீது பாராளுமன்ற கட்டடத்திற்குள் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபாநாயகருக்கு முறைப்பாடு ஒன்றை முன்வைத்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரான அஜித் ரோஹண பண்டாரவும் தன்னை டயனா கமகே தாக்க வந்ததாக தெரிவித்து சபாநாயகரிடம் முறைப்பாட்டை முன்வைத்தார். அதனைக் கவனத்தில் கொண்டு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

மேற்படி குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ச, ரமேஷ் பத்திரண, ஷகயந்த கருணாதிலக, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் உள்ளடங்குவதாகவும் அந்த குழுவினர் விசாரணைகளை நடத்தி தீர்ப்பை வெளியிடுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தன் மீது சபைக்கு வெளியே வைத்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி சுஜித் பெரேரா தாக்கியதாக சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய நிலையில்.

டயனா கமகேயினால் சுஜித் பெரேரா எம்.பி.யே தாக்கப்பட்டதாக கூறி அதற்கான வீடியோ ஆதாரத்தையும் எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கையளித்தனர்.

பாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இதன் போது மாலை 3.55 மணியளவில் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே திடீரென சபைக்குள் வந்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி விடயத்தை முன்வைத்தார்.

அதில் இராஜாங்க அமைச்சரான தான் சபைக்கு வெளியில் நின்றபோது அங்கு வந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான சுஜித் பெரேரா தன்னுடன் தர்க்கப்பட்டு தன்னைத் தாக்கியதாகக் கூறினார். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் பெண்களை துஷ்பிரயோகம் செய்வதில்தான் ஆர்வமாக உள்ளார்கள். இந்த சுஜித் பெரேரா எம்.பி. வீட்டில் தனது மனைவியை தாக்குவது போலவே ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினரான தன்னையும் தாக்கியதாக டயனா குற்றம்சாட்டினார்.

இந்த விவகாரத்தை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுப்பேன். அதுமட்டுமன்றி நான் வீதியில் இறங்கிப் போராடவுள்ளேன். எனவே என்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நீதி கிடைக்க பாராளுமன்றத்தில் உள்ள பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்னுடன் அனைவரும் இந்த போராட்டத்தில் இணைந்து கொள்ளலாம். தாக்குதல் தொடர்பில் சபாநாயகர் உடனடி விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

இதனையடுத்து எழுந்த பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்விடயம் பாரதூரமானது. எனவே உடனடியாக சபையை 10 நிமிடங்கள் இடைநிறுத்தி சபாநாயகர் அலுவலகத்தில் இது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்றார்.

அதனையடுத்து சபைக்கு தலைமை தாங்கிய பியதிஸ்ஸ எம்.பி. சபையை 10 நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்படுவதாக 4 மணியளவில் அறிவித்தார். அதன்பின்னர் சபை மீண்டும் 4.15 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதன் போது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. பேசுகையில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான சுஜித் பெரேரா தாக்கியதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார். சபையும் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் டயனா கமகே எம்.பி. மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கைப் பையால் சஜித் பெரேரா எம்.பி.யைத் தாக்கும் வீடியோ ஆதாரத்தை சபாநாயகரிடம் கையளித்தோம். எனவே அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

அதனையடுத்து எழுந்த சுஜித் எம் பி ரோஹன பண்டார எம்பி யுடன் டயானா கமகே தகபா வார்த்தைகளைப் பயன்படுத்தி தர்க்கப்பட்டுக்கொண்டிருந்தார். அப்போது நான் அவரிடம் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம் எனக்கூறியபோது என்னையும் தகாத வார்த்தைகளினால் திட்டியவாறு தாக்கினார். அவரின் தாக்குதலை தடுக்கும் முயற்சியிலேயே நான் ஈடுபட்டேன். எனவே நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ரோஹன பண்டார பேசுகையில், டயனா கமகே எம்.பி. என்னுடன் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி தர்க்கத்தில் ஈடுபட்டார். எனது காற்சட்டையை கழற்றுவதாகவும் கூறினார். எல்லோருமே பெண்கள் துன்புறுத்தப்படுவதாகவே கூறுகின்றனர். ஆனால் டயனா கமகே எம்.பி.யினால் ஆண் எம்.பி.க்கள் துன்புறுத்தப்படுகின்றனர். எமக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் இந்த பெண் எம்.பி.யிடமிருந்து ஆண் எம்.பி.க்களின் உரிமைகளை சபாநாயகர் பாதுகாக்கவேண்டும் . அவர் ஒரு கழிவு பௌஸர் என்றார்.

இதனைக் கேட்டு ஆவேசமாக எழுந்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களின் கன்னத்தில் அறைவேன். இரண்டு எம்பிக்களையும் அப்போதே அறைந்திருக்க வேண்டும். ஆனால் அறைய முடியவில்லை. என்னை அப்படி கழிவு பௌசர் என்று கூறும் எம்.பி. யின் அம்மா, மனைவி, சகோதரிகள் தான் கழிவு பௌசர்கள் என்றும் அவர் கூச்சலிட்டார். அதன் போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ. இது தொடர்பில் சபாநாயகர் முறையான விசாரணை நடத்துவார் என்றார்.

அதனையடுத்து வருகை தந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மேற்படி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட பின்னர் அவர்கள் விசாரணை செய்து தீர்ப்பொன்றை வழங்குவார்கள் என்றும் குறிப்பிட்டார். அந்த விவகாரம் சபையில் இவ்வாறுதான் முற்றுப் பெற்றது.

# நோயாளி ஓவியம் வரைய மூளைக் கட்டியை வெற்றிகரமாக அகற்றிய மருத்துவர்கள்

சத்திரசிகிச்சை என்பது வாழ்க்கையில் முகங்கொடுக்கும் மிக மோசமான அனுபவங்களில் ஒன்றாகும். மயக்கவியல் மருத்துவ உலகில் நுழைய முன்னர், அறுவைச் சிகிச்சையுடன் தொடர்புடைய வலி மற்றும் உணர்வு காரணமாக அறுவை சிகிச்சையென்பது ஒரு திகிலூட்டும் அனுபவமாக இருந்தது. அன்று சத்திரசிகிச்சையின் போது சுயநினைவை இழக்கச் செய்வதற்கான முறைகள் இல்லாதிருந்ததால் நோயாளியின் உணர்வைக் கட்டுப்படுத்தி மிகக் குறுகிய காலத்துக்குள் அறுவை சிகிச்சையை முடிக்க வேண்டி இருந்தது. அறுவைசிகிச்சை மருத்துவத்தின் முன்னேற்றம் தொடர்பான இந்த சிக்கல் 177 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1846 ஒக்டோபர் 16ல் தீர்க்கப்பட்டது. அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பொது வைத்தியசாலையில் வில்லியம் தோமஸ் மார்டன் என்ற பல் மருத்துவர், எட்வர்ட் கில்பர்ட் அபோட் என்ற நோயாளியின் கழுத்தில் இருந்த கட்டியை அகற்ற டை எதில் ஈதர் என்ற மயக்க மருந்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தி அன்றைய தினம் உலகில் முதன்முறையாக முழுமையான மயக்க மருந்தை வெற்றிகரமாகப் பயன்படுத்திய மருத்துவராக வரலாற்றில் பதியப்பட்டார். அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16ம் திகதி "உலக மயக்க மருந்து தினமாக" அனுஷ்டிக்கப்படுகிறது.



பல வழிகளில் உலகம் முழுவதும் மயக்க மருந்து தினத்தை கொண்டாடும் வேளையில், மயக்க மருந்துத் துறை வரலாற்றைப் புரட்டிப் போடும் சத்திரசிகிச்சையொன்று அண்மையில் இலங்கையில் நடைபெற்றது. ' Awake craniotomy' என்ற நோயாளியை சுயநினைவிழக்கச் செய்யாமல் சுயநினைவுடன் இருக்கும் போதே நோயாளியின் பல்வேறு செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டு அண்மையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மூளை சத்திரசிகிச்சையானது இந்நாட்டின் மருத்துவ வரலாற்றில் புதிய பயணத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

மிக ஆபத்தான மூளை சத்திர சிகிச்சையின் போது நோயாளியை முற்றாக மயக்காமல் குறைந்தபட்ச மயக்கத்தில் இருக்கும்போது மூளைக் கட்டியை அகற்றிய அதேவேளை, நோயாளியின் திறன்களைக் காட்டும் வண்ணம் அவரை சத்திரசிகிச்சை நடைபெற்ற போதே ஓவியம் வரையச் செய்தமை இந்த வரலாற்றுப் புரட்சியின் அழிக்க முடியாத அடையாளமாகும். கடந்த 9ம் திகதி அனுராதபுரம் நொச்சியாகமவைச் சேர்ந்த 36 வயதுடைய வடிவமைப்பாளரான சமன் ஜயசிங்கவை இந்த சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தியது நரம்பியல் நிபுணர் டாக்டர் மதுஷங்க கோமஸ், நரம்பியல் நிபுணர் டொக்டர் றொஹான் பாரிஸ், மயக்கவியல் நிபுணர் டாக்டர் லெவன் காரியவசம், மயக்கவியல் நிபுணர் டாக்டர் விசாகா கர்னர் உள்ளிட்ட அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்திய குழுவினராகும்.

இந்த அற்புதமான அனுபவத்தை சமன் தினகரனுக்கு இவ்வாறு கூறினார்.

"எனது பெயர் சமன் ஜயசிங்க. எனக்கு 36 வயதாகின்றது. நான் நொச்சியாகமவில் வசிக்கின்றேன். திருமணமாகி விவாகரத்துப் பெற்றுவிட்டேன். எனது தாய் பண்டார மெனிக்கே. தந்தை சாகர உதய என்னைப் போன்று கலையுடன் தொடர்புபட்டவர். எனக்கு ஏற்பட்ட திடீர் விபத்தின் பின்னர் உயர் தரத்தில் கற்க முடியாது போனது. பாடசாலை செல்லும் காலத்திலிருந்தே நான் நன்றாக சித்திரம் வரைவேன். எனது 19ஆவது வயதில் எங்கள் ஊர் விகாரையில் சங்கரக்கித தேரரால் எனக்கு விகாரை ஓவியங்கள் வரைவதற்கு வாய்ப்பு கிடைத்தது. விகாரைகளில் நெருங்கிச் செயற்பட்டதால் பௌத்த சமயத்தின் மீது மிகுந்த பற்று ஏற்பட்டது. அன்றிலிருந்து நான் விகாரை ஓவியம், சிலைகள் வடிப்பது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகிறேன்.

சில நாட்களாக நான் வேலை செய்யும் போது அதிக தூக்கம் வருவதை உணர்ந்தேன். உடல்பருமனாக இருப்பதால்தான் அவ்வாறு வருவதாக நினைத்தேன். நாட் செல்லச் செல்ல அது அதிகரித்தது. வலது காலில் லேசான விறைப்பும் இருந்தது. அவ்வப்போது தலை வலியும் ஏற்பட்டது. பின்னர் நான் அனுராதபுரம் வைத்தியசாலையில் நரம்பியல் நோய்கள் தொடர்பாக சிகிச்சை பெற்றேன். முதலில் சில சிறிய சோதனைகள் செய்யப்பட்டன. பின்னர் அனுராதபுரம் போதனா வைத்தியாசாலையின் எம். ஆர். ஐ ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டது. அதன் பின்னர்தான் எனது மூளையின் இடது புறத்தில் அதாவது வலது பக்கத்தைக் கட்டுப்படுத்தும் பகுதியில் கட்டி ஒன்று உள்ளதை வைத்தியர்கள் கண்டுபிடித்தார்கள்.

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டொக்டர் மதுஷங்க கோமஸ் மற்றும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோஹன் பாரிஸ் ஆகியோரே நோயைக் கண்டறிந்தனர். இதற்கிடையில், டாக்டர் திலன் என்னுடன் மிகவும் நட்புடன் பழகினார். அந்த நட்பின் காரணமாக மருத்துவமனையின் சித்திரம் ஒன்று கூட வரைந்தேன். அந்நேரம் மூளைக்கட்டி பெரிதாக வளர்ந்து கொண்டிருந்தது. இந்த வகை கட்டியானது அரிதான ஆனால் கொடிய வகைக் கட்டி என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தக் கட்டி உருவாகி நோயாளி மரணம் அடையும் வரைக்கும் அறிகுறியேதும் இருக்காது என்றும் மருத்துவர்கள் தெளிவுபடுத்தினர். எனவே ஒக்டோபர் 5ம் திகதி சத்திரசிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். சத்திரசிகிச்சைக்கு முன் நான் பயத்தை உணர்ந்தேன். எனினும் இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே மாதிரியான கட்டியை மயக்க மருந்து இல்லாமல் சத்திரசிகிச்சை செய்ததாகவும், அதற்கு நானும் தயாராக இருக்க வேண்டும் என்றும் டாக்டர்கள் கூறினர். இந்த சத்திரசிகிச்சையைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் எனக்கு இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறினார்கள். ஒக்டோபர் 09ம் திகதி காலை 7.15 மணியளவில் சத்திரசிகிச்சை கூடத்திற்கு என்னை அனுப்பினார்கள். பின்னர் முதலில் தலையை விறைக்கச் செய்வதற்கான ஊசியை தலையைச் சுற்றி அடித்தார்கள். அதன் பின்னர் எனக்கு சுயநினைவு கொஞ்சமே இருந்தது. வைத்தியர்கள் வழங்கிய உத்தரவுகள் அனைத்தையும் நான் அந்த சுயநினைவுடன் செய்திருந்தேன். பாதி உறக்கத்தில் இருந்த என்னிடம் அவர்கள் அவ்வப்போது பேச்சுக் கொடுத்துக் கொண்டும், புத்தகங்களைக் காட்டி ஒவ்வொரு விடயங்களை கேட்டுக் கொண்டுமிருந்தார்கள். இதனிடையே துணியால் மூடப்பட்ட தலையின் பின்புறப் பகுதியில் வைத்தியர்கள் சத்திரசிகிச்சையினைச் செய்தார்கள். இன்னும் சிலர் முன்னால் இருந்தார்கள். அந்தநேரத்தில் சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது என்பது எனக்கு விளங்கவில்லை. அவர்கள் என்னிடம் தாமரைப் பூ ஒன்றை வரையச் சொன்னார்கள். அரைத் தூக்கத்தில்தான் நான் தாமரைப் பூவை வரைந்திருக்கின்றேன். முதலில் என்ன வரைய முடியும் எனக் கேட்டார்கள். நித்திரைக் கலக்கத்தில் இருந்ததால் நான் சித்திரம் வரைவதில்லை எனக் கூறினேன். பின்னர் அவர்கள் கூறியவற்றை நான் செய்திருக்கின்றேன். சத்திரசிகிச்சை மாலை 3.45 மணிக்கே முடிந்தது. சுமார் 6 மணித்தியாலங்கள் எடுத்திருக்கின்றது. சத்திரசிகிச்சையின் பின்னர் விறைப்புத் தன்மை மாத்திரமே இருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றிய பின்னர் நித்திரை கொள்வதற்கான மருந்து வழங்கினார்கள். 50 மணி நேரம் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தேன். 5 சென்றி மீற்றர் அளவிலான கட்டி இருந்ததாக வைத்தியர்கள் கூறினார்கள். இது மூளையில் மத்தியில் இருந்ததாகவும், அதனால் பாதிப்பைக் குறைப்பதற்காக மயக்கமடையச் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும் என்றே அவர்கள் என்னிடம் கூறினார்கள்.



சமனின் இடது மூளையின் வலது பாதியின் முன்பக்கச் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் பிரதேசத்தில் உருவான கட்டியை நீக்கும் சத்திரசிகிச்சை சிக்கலாகியது. அறுவை சிகிச்சையின் போது நோயாளியுடன் தொடர்ச்சியாகக் கதைத்துக் கொண்டு அவரது நினைவாற்றல், வலது புறத்தின் கை மற்றும் கால்களின் அசைவுகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளிடையே மூளையின் கட்டியை நீக்குதல் 'Awake craniotomy ' என்ற வைத்திய எண்ணக்கருவுக்குரிய ஆச்சரியமிக்க ஒரு சத்திரசிகிச்சையாகும். இலங்கையின் வைத்திய துறையில் ஒரு மைல்கல்லை உருவாக்கிய 'Awake Craniotomy' சத்திரசிகிச்சை 2020ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி அனுராதபுரம் போதனா வைத்திசாலையில் மேற்கொள்ளப்பட்டதும் இதே நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் மதுஷங்க கோமஸ், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோஹன் பாரிஸ் மற்றும் ஏனைய வைத்தியர்களாலேயாகும். இதே வைத்தியர்கள் குழுவினர் 2021 ஜனவரி 15 அன்று அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இரண்டாவது மூளை சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர். வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட 42 வயது விவசாயி ஒருவரின் கட்டியை அகற்றும் பணிக்காகவே அந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 'Awake Craniotomy' இன்னமும் வைத்திய துறையில் புதிய எண்ணக்கருவாகும். நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் மதுஷங்க கோமஸ் மற்றும் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோஹன் பாரிஸ் ஆகியோர் ஐக்கிய இராச்சியத்தின் மான்செஸ்டரில் அமைந்துள்ள மிட்லாண்ட் ரோயல் வைத்தியசாலையிலேயே இதற்கான பயிற்சியை பெற்றனர்.

"இதை இலங்கையில் நடைமுறைப்படுத்த விரும்பினோம். இங்கே முக்கிய நன்மை நோயாளிக்கும் வைத்தியசாலைக்கும் கிடைக்கின்றது..." "இந்த Awake craniotomy என்பது, உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் சுயநினைவை இழக்கச் செய்யும் சத்திரசிகிச்சையாகும். இதன் பிரதான நோக்கமாக இருப்பது சிக்கல்களைக் குறைத்து நோயாளியின் மூளையில் பாதிப்பை ஏற்படுத்திய பகுதிகளை நீக்குவதாகும். இங்கே இரண்டு முக்கிய நன்மைகள் உள்ளன. ஒன்று சிக்கல்கள் குறைவாக இருப்பது. இரண்டாவது நோயாளி சத்திரசிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டிய காலம் குறைவாக இருப்பதாகும். இதனால் செலவுகள் மற்றும் நோயாளியின் சிரமங்களும் குறைகின்றது. இத்தகைய சத்திர சிகிச்சைகள் எல்லா நோயாளிகளுக்கும் செய்யப்படுவதில்லை. அதனைச் செய்வதற்கு அத்தியவசியமான சில நோயாளர்கள் உள்ளனர். நோயாளி நல்ல சுயநினைவுடன் இருந்தால் மட்டுமே இதை வெற்றிகரமாக செய்ய முடியும். ஏனெனில் சத்திரசிகிச்சை முழுவதும் நோயாளி எங்களுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வகையான சத்திர சிகிச்சை செய்யப்படுவது மூளையில் கட்டி, புற்று நோய், இரத்த உறைவு, சீழ் கட்டி போன்றவை மூளையின் முக்கிய இடங்களுக்கு அருகில் அமைந்திருக்கும் போதுதான், 'Awake Craniotomy'முறையில் சத்திர சிகிச்சை செய்வது சாதகமானதாக அமையும்.

சத்திர சிகிச்சையின் போது, மண்டையோட்டை அகற்றி உள்ளே சென்ற பிறகு, மூளையின் ஒவ்வொரு பகுதியும் ஒரே மாதிரியாக இருக்கும். சத்திரசிகிச்சையின் போது கட்டியை வேறுபடுத்தி அடையாளம் கண்டு கொள்வதற்கு நல்ல அனுபவம் இருக்க வேண்டும், ஏனெனில் இதுபோன்ற அனைத்து கட்டிகளின் வடிவமும் நிறமும் ஒரே மாதிரியாக இருப்பதனாலாகும். முன்னரே பெற்றுக் கொண்ட எம். ஆர். ஐ பரிசோதனை மற்றும் வழிசெலுத்தல் அமைப்புகள் போன்ற முறைகள் மூலம் இந்தக் கட்டியைக் கண்டறியலாம்.

இந்த சத்திரசிகிச்சையின் போது, நோயாளியை அதற்காக பயிற்சியளிக்க வேண்டி வரும். தான் சுயநினைவுடன் இருக்கும் போதுதான் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் என்பது நோயாளிக்குத் தெரியும். இதன் காரணமாக, நோயாளி முதலில் பயப்படுவார். சத்திரசிகிச்சைக்கு முன், அந்த நோயாளிக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கி, இரண்டு பயிற்சி அமர்வுகள் நடத்தப்படுகின்றன. அதேபோன்று சத்திரசிகிச்சை கூடம் மற்றும் வைத்தியசாலை வைத்திய குழுவினர் நோயாளிக்கு நெருக்கமாக்கப்படுவர். நாம் கேள்விகளைக் கேட்டும் மற்றும் புத்தகங்களை படங்களுடன் முன்கூட்டியே காண்பித்தும் பழக்கப்படுத்த வேண்டும். மூளை தொடர்பான அறுவை சிகிச்சைகளுக்கு மட்டுமே இந்த அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. ஏனெனில் உணர்வுப் புள்ளிகளின் செயல்பாட்டைச் சரிபார்ப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும் என்பதனாலாகும். அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணர் டாக்டர் மதுசங்க கோமஸ், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோஹன் பாரிஸ், மயக்கவியல் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் லெவன் காரியவசம், மயக்கவியல் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் விஷாகா கெர்னர் ஆகியோர் மருத்துவக் குழுவில் பங்கேற்றனர்.

"இப்போது எனக்கு முன்னர் இருந்ததை விடவும் சுகம் கிடைத்திருக்கின்றது. 12ம் திகதி டிக்கட் வெட்டி வந்தேன். இப்போது எனக்கு எந்த உடல் உபாதையும் இல்லை. அவர்கள் உலகில் வாழும் கடவுள்கள். சொல்வதற்கு வார்த்தைகளில்லை....." என்று சமன் ஜயசிங்க கூறினார்.

அவரது அறுவைச் சிகிச்சையின் போது அவர் வரைந்த தாமரை இன்னும் பலரை ஆச்சரியப்படுத்துகிறது, ஏனெனில் அதற்குள் இருப்பது எமக்குத் தெரியாத சக்தி அல்லாமல், மனித இயக்கத் திறனுக்கும் மனதுக்கும் இடையிலான தொடர்பாகும். இன்று, மருத்துவத் துறை அதையெல்லாம் பாதுகாத்துக் கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டது.

சுபாஷினி ஜயரத்ன
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# இலங்கையின் அபிவிருத்தி உட்கட்டமைப்பை மேம்படுத்த சீனா தொடர்ந்தும் பூரண ஆதரவு

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிகளில் ஒன்றாக கடன் மறுசீரமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு உடன்பாடுகள் எட்டப்பட்டு வருகின்றன.**



இலங்கையின் இந்தக் கடன்மறுசீரமைப்புகளுக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என மீண்டும் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற 'பெல்ட் அண்ட் ரோட்' மூன்றாவது மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக சீன நிதி அமைச்சர் லியு குன் தெரிவித்திருந்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்த சீன நிதியமைச்சர், நெருக்கடியைச் சமாளிக்க இதுவரை இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றிருந்தார்.

இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் என்றும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவி வருகின்ற உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இது மாத்திரமன்றி சீனாவின் துணைப் பிரதமருடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் 'பெல்ட் அண்ட் ரோட்' முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன், இத்திட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டது.








## இலங்கையில் தொழில் முதலீடுகளை ஆரம்பிக்க முன்வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு!

சீன – இலங்கை இறப்பர், அரிசி ஒப்பந்தம் இலங்கை செய்து கொண்ட முதலாவது வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கை என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளினதும் பொதுவான கொள்கைகளுக்கு அமைவாக புதிய வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற 'பெல்ட் அண்ட் ரோட்' மூன்றாவது மாநாட்டில் ரஷ்யா, இந்தோனேசியா, வியட்னாம், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட பல்வேறு தலைவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்திருந்தது. சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' முயற்சி குறித்து எடுத்து நோக்கினால் இத்திட்டம் உருவாக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டு இதன் முதலாவது மாநாடு நடைபெற்றது. 'பெல்ட் அண்ட் ரோட்' அல்லது 'வன் பெல்ட், வன் ரோட்' என அறியப்படும் இந்த முயற்சியானது சீன அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலோபாயத் திட்டமாகும். 150 இற்கும் அதிகமான நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களில் முதலீடுகளைச் செய்யும் சீனாவின் திட்டமாகும்.

'பெல்ட்' என்பது 'பட்டுப் பாதைப் பொருளாதார பட்டை' என்பதன் சுருக்கமாகும். இது மேற்குப் பகுதிகளின் புகழ்பெற்ற வரலாற்று வர்த்தகப் பாதையில் நிலத்தால் சூழப்பட்ட மத்திய ஆசியா வழியாக தரைவழி மற்றும் ரயில் போக்குவரத்திற்காக முன்மொழியப்பட்ட தரைவழிப் பாதைகளைக் குறிக்கிறது.

அதேசமயம் 'ரோட்' என்பது '21 ஆம் நூற்றாண்டு கடல்சார் பட்டுப் பாதை' என்பதன் சுருக்கமாகும். இது தென்கிழக்கு ஆசியா வழியாக தெற்காசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவிற்கு இந்தோபசிபிக் கடல் மார்க்கத்தைக் குறிக்கிறது.

துறைமுகங்கள், வானளாவிய கட்டடங்கள், ரயில் பாதைகள், வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள், அணைகள், நிலக்கரியால் இயங்கும் மின் நிலையங்கள் மற்றும் ரயில் பாதை சுரங்கங்கள் ஆகியவை 'பெல்ட் அண்ட் ரோட்' முன்முயற்சி உள்கட்டமைப்பு முதலீடுகளின் எடுத்துக்காட்டுகளாகும்.





சீனாவின் தொன்மையான பட்டுப்பாதைத் திட்டத்தின் மெருகூட்டப்பட்ட கொள்கைத் திட்டமாக இதனை அறிமுகப்படுத்தலாம். பட்டு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு போக்குவரத்துச் செய்வதற்கான கடல்மார்க்கத்தில் இணைக்கப்படும் நாடுகளை தற்போது ஒருங்கிணைத்து அந்த நாடுகளுடன் தனது தொடர்புகளை வலுப்படுத்துவது சீனாவின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டத்தினால் இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் நன்மைகளைப் பெறுகின்றன. இதனை பரஸ்பர நன்மையைப் பெறுவதற்கான முயற்சியாக்குவதற்கு நாடுகளின் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று சீனா விரும்புகின்றது. எதிர்காலத்தில் 'பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்பு' திட்டத்திற்கு அடிப்படையாக அமையும் எட்டு அம்சக் கொள்கைகளையும் சீன ஜனாதிபதி வெளியிட்டார். சர்வதேச பலதரப்பு வலையமைப்பை உருவாக்குதல், உலகளாவிய திறந்த பொருளாதாரத்தை ஆதரித்தல், ஒத்துழைப்பிற்கான நடைமுறை அணுகுமுறையை உருவாக்குதல், பசுமை வளர்ச்சியை ஊக்குவித்தல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான வாய்ப்புகளை வழங்குதல், ஒவ்வொருவருக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துதல், 'பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்பு' திட்டம், உறுப்பு நாடுகளிடையே பிரிக்க முடியாத உறவை ஊக்குவித்தல், உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் அந்த நாடுகளுக்கு இடையே நிறுவன ரீதியான உறவுகளை வலுப்படுத்துவது என்பனவே அந்த எட்டு முக்கிய கொள்கைகளாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாடு எதிர்கொண்ட இக்கட்டான சூழ்நிலையில் சீனாவின் உதவியைப் பெற்றுக் கொண்டுள்ளது. சீனாவிடமிருந்து இலங்கை பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. அது மாத்திரமன்றி, இலங்கைக்கு உதவி தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் சீனா உதவிகளை வழங்கியுள்ளது.

இதற்கு பெல்ட் அண்ட் ரோட் போன்ற முயற்சிகள் பேருதவியாக இருந்துள்ளன.

அதேநேரம், இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் இவ்வாறான சர்வதேச மாநாடுகளில் பங்கெடுப்பது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. ஜனாதிபதி

## சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற 'பெல்ட் அண்ட் ரோட்' மூன்றாவது மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றதன் விளைவாக இலங்–கைக்கு கிடைக்கவிருக்கும் அனுகூலங்கள்!

## பொருளாதார நெருக்கடியிலி-ருந்து மீள்வதற்கு இலங்கை இதுவரை மேற்கொண்டுள்ள நட-வடிக்கைகளின் முன்னேற்றத்-துக்கு சீனா பாராட்டு

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த சீன விஜயத்தின் போது இந்தோனேசியா மற்றும் வியட்னாம் போன்ற நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அந்நாட்டு உயர்மட்டக் குழுவினருடன் கலந்துரையாடுவதற்கும், ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்குமான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

அதேசமயம் இலங்கையில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மைய பொருளாதார நெருக்கடி மற்றும் பாம்ஒயில் மீதான தடை காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாக்கம் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்தோனேசிய ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

ஆசிய நாடுகள் பலவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை முறைப்படுத்தவும் இலங்கை செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோனேசியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு இது மிகவும் பொருத்தமான சமயம் என இந்தோனேசிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கான களமாக வியட்நாமை மாற்றியமைக்க தயாரெனவும், இலங்கை மற்றும் வியட்நாமுக்கிடையிலான பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளைப் பலப்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் வியட்நாம் ஜனாதிபதி வோ வென் தோக், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார். இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று சர்வதேச தலைவர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கான ஒத்துழைப்பை அதிகரிப்பது காலத்தின் தேவையாகும் என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

# யாஸீன் மௌலானா (ரஹ்) வின் அரபு நூலுக்கு எகிப்தின் அஸ்ஹர் விரிவுரையாளர் விளக்க நூல்



இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த மார்க்க அறிஞரும், சூபி மகானும், சிறந்த எழுத்தாளரும், பன்னூல் ஆசிரியரும், கவிஞருமான ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா (ரஹ்) அரபி மொழியில் எழுதிய யவானிஉ அஸ்மாருந் நிஉமாஉ என்ற மூல நூலுக்கு 'மிஷ்காத்துல் அவ்லியா பீ ஷரஹி யவானிஉ அஸ்மாருந் நஹ்மா' என்ற தலைப்பில் எகிப்தில் விளக்கவுரை எழுதி வெளியிடப்படுள்ளது.

எகிப்தில் வசித்துவரும் மொரோக்கோ நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட ஆன்மிக ஞானத்துறையில் விளக்கமுடைய அறிஞரும் அல் அஸ்ஹர் பல்கலைக்கழக விரிவுரையாளருமான ஷேய்க் அஹ்மத் அல் மஸீதி 690 பக்கங்களில் எழுதியுள்ள இந்நூல் எகிப்து இஸ்லாமிய கலாசார நிறுவனத்தால் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெலிகம பைத்துல் பரக்கா வாளாகத்தில் 18 வது தடவையாக நடைபெற்ற மீலாதுன் நபி விழாவின் நிறைவு விழாவில் அவ்னிய்யா உலக அமைதி நிதியத்தின் தலைவர் ஷைகு நாயகம் அஸ்ஸய்யிது ஜமாலிய்யா சைய்யது கலீல் அவுன் மௌலானா அல் ஹஸனி ஹுஸைனி ஹாஷிமி தலைமையில் இந்நூல் வெளிடப்பட்டது. சையது ஸாஜித் அலி மௌலானா, பேராசிரியர் சையது வாரிது அலி மௌலானா, சையது



ஜாஹித் அலி மௌலானா முன்னிலையில் சையது யாஸீன் அலி மௌலானா இந்நூலை வெளியிட்டு வைக்க, கலாநிதி அன்வர் பாதுஷா உலவி, கலாநிதி அப்துல்லா ஜமாலி மற்றும் மௌலானாக்கள் முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் அரபு மொழியில் எழுதிய நூலுக்கு எகிப்தின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழக அறிஞர் ஒருவர் விளக்கவுரை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை மற்றும் தமிழ்நாட்டு முஸ்லிம்களின் கல்வி, மெய்ஞ்ஞானம் மற்றும் சமூக மறுமலர்ச்சிக்குப் பங்காற்றிய அஸ்ஸய்யிது யாஸீன் மௌலானா (ரஹ்), மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்குவெல்லவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை வெலிகம புஹாரி மத்ரஸாவிலும், மாத்தறையிலுள்ள கல்விக்கூடமொன்றிலும் கற்ற யாஸீன் மௌலானா, தனது தாயாரின் மறைவுக்கு பின்னர் உயர் கல்விக்காக இந்தியா சென்றதோடு அங்கு மேலைப்பாளயத்தில் அமைந்துள்ள மஉனுல் அஸ்பியா கல்விக்கூடத்தில், யூசுப் வலியுல்லாஹ்(ரஹ்), அஹ்மத் அலி (ரஹ்) ஆகியோரிடம் கல்வி பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து பலவரக்காட்டில் வாழ்ந்த மார்க்க மேதை அலவிய்யுல் ஜெமீலி (ரஹ்) அவர்களிடமும் பின்னர் லாஹுர் இஸ்லாமியக் கல்லூரியிலும் உயர்கல்வியைக் கற்று, மௌலவி பாஸில் பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து தேவ்பந்த் கல்விக்கூடத்தில் கற்று, மௌலவி பாஸிலே அஉலா பட்டம் பெற்றதோடு தமிழ் நாட்டில் ஜமாலியா அரபு கல்லூரியிலும் சிறந்த உயர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழ், அரபு, சிங்களம், ஆங்கிலம் உட்பட 11 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர், ஒரு தடவை மக்காவில் ஆற்றிய சொற்பொழிவினைக் கண்டு வியந்த அரபிகள் அன்னாரை 'ஷைகுல் அரப்' எனக் கௌரவித்தார்கள்.

அளுத்காமம் ஜம்மிய்யதுல் உலமாவின் தலைவராகவும், அகில இலங்கை உலமா போர்ட் தலைவராகவும், இலங்கை அரசாங்க இலாகாவின் முன்னாள் அரபுப் பரீட்சைப் பிரிவின் தலைவராகவும், வெலிகம முஸ்லிம் லீக் தலைவராகவும் விளங்கிய இவர். இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றிய முக்கியஸ்தர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸுடன் இணைந்து செயற்பட்டுள்ளார்.

அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ், 'இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி' எனும் நிதியத்தை ஆரம்பித்த போது அந்நியத்திற்கு உதவ வேண்டும் எனப் பணம் படைத்தவர்களை ஊக்குவித்த இவர், இந்நிதியத்தை திறம்பட நடத்திச் செல்வதற்கு அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸுக்கு உறுதுணையாக இருந்தார்.

இலங்கை அரசாங்க மத்ரஸா புனர்நிர்மாண சங்கத்தின் தலைவராகவும், ஆலோசகராகவும் கடமையாற்றிய இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபுப் பிரிவின் அப்போதைய தலைவராக இருந்த பேராசிரியர் எஸ்.ஏ. இமாமுடன் இணைந்து அரபு கல்வியின் விருத்திக்கும், அரபுக் கல்லூரிகளுக்கான பாடத்திட்டத்தை வடிவமைப்பதற்கும் பெரும் பங்காற்றினார்.

1961ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வானொலியில் 'ஹலாலும் ஹராமும்', 'அரபு இலக்கிய வளர்ச்சி மற்றும் மத்ஹபுகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்புகளில் தொடர் சொற்பொழிவுகளை இவர் நடாத்தி வந்தார். 'மௌனதுர் ரஹ்மான் பீ தத்ரீஸில் குர்ஆன்' எனும் பெயரில் நாட்டின் பல பகுதிகளிலும் குர்ஆன் மத்ரஸாக்களையும் நிறுவினார்.

பல்வேறு தலைப்புக்களில் பல நூல்களை எழுதியுள்ள இவரது அரபு மொழி நூல்களில் யவானிஉ அதுமாருந்நிஉமாஉ என்பதும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**அபூஸாஹிர்**


## கேள்வி அறிவித்தல்

### இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

### கேள்வி இல.: 86/2023.11.15

விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கல்வி தொலைக்காட்சி அலைவரிசைக்காக ஒரு நாளைக்கு 18 மணித்தியால வான் காலம் மற்றும் நாடு முழுவதற்குமான நிலப்பரப்பு தொலைக்காட்சி கடத்தல் வலையமைப்பை வாடகைக்கு வழங்குதல்

விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கல்வி தொலைக்காட்சி அலைவரிசைக்காக ஒரு நாளைக்கு 18 மணித்தியால வான் காலம் மற்றும் நாடு முழுவதற்குமான நிலப்பரப்பு தொலைக்காட்சி கடத்தல் வலையமைப்பை வாடகைக்கு வழங்குவதற்காக இலங்கை, கொழும்பு7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு தகுதிவாய்ந்த கீர்த்திவாய்ந்த ஊடக நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் 2023.11.14ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெறுகைக்கான உதவி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகரிடமிருந்து கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை வழங்குவதற்காக கூட்டுத்தாபன பிரதான கணக்காளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமான 5000.00 ரூபாவை (ஐந்தாயிரம் ரூபா) செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 2023.11.14ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம். இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

2023.11.15ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) அவற்றை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பொறியியலுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 580 136/தொலைநகல் : +94 112 500 373).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07,**
**இலங்கை.** (SLRC Website : http://www.rupavahini.lk)



சுகாதார அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் (SPMC)

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இரத்மலானையில் அமைந்துள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் புதிதாக வாடகைக்குப் பெறப்பட்ட களஞ்சியத்திற்கான வளிச்சீராக்கி அமைப்பை வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் கையளித்தல்

ஒப்படை இல.: SPMC/MM/27/2023

01. இரத்மலானையில் அமைந்துள்ள SPMCஇன் புதிதாக வாடகைக்குப் பெறப்பட்ட களஞ்சியத்திற்கான வளிச்சீராக்கி அமைப்பை வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் கையளித்தலுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சுகாதார அமைச்சின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரைப் பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00க்கு இடையே 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 13 ஆம் திகதி வரை SPMCஇன் கணக்கு பிரிவில் 3,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப்பணத்தில் செலுத்தி SPMC, திட்டமிடல் மற்றும் பெறுகை - பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்ய முடியும்.
03. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தில் 2023 நவம்பர் 02 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.
04. விலைமனுதாரர்கள் விலைமனுவுடன் சேர்த்து 90 நாட்களுக்காக செல்லுபடியாகும் இலங்கையின் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட மொத்த ஒப்பந்தத் தொகையில் 1% இன் பெறுமதிக்கு நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 நவம்பர் 14 அன்று 1400 மணி அல்லது அதற்கு முன்னர் என்பதோடு இறுதி நேரம் முடிவுற்ற பின் இரத்மலானை SPMC இல் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற முகவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இடமானது, இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொதலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அலுவலகமாகும்.
06. வேலை நாட்களில் ((மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00) 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 13 ஆம் திகதி வரை இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் விலைமனு ஆவணங்கள் பரீட்சிப்பதற்காகக் கிடைக்கப்பெறும்.
07. முழுமைபெறாத அல்லது தாமதித்து சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
08. மேலதிக விபரங்களை SPMC, பொறியியல் - பிரதி பொது முகாமையாளரிடம் இருந்து பெற முடியும் (தொ.: 2623246/ 2635353 (பொது) - நீடிப்பு 701/702)
10. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இரத்மலானையில் அமைந்துள்ள SPMCஇன் பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் களஞ்சியத்திற்கான வளிச்சீராக்கி அமைப்பின் வடிவமைத்தல், வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் கையளித்தல்" விலைமனு குறிப்பு - SPMC/MM/27/2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

"விலைமனு தகவலின்" விபரங்களை எமது இணையதளத்தில் இருந்து காண முடியும் (www.spmc.gov.lk)

**தலைவர் - பெறுகைக் குழு**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர்.ஜோன் கொதலாவல மாவத்தை,**
**கந்தவல தோட்டம்,**
**இரத்மலானை, இலங்கை.**

**தொ.: (00) 94-11-2635353(00)94-11-2637574**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmc.gov.lk**



## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

### கொழும்பு 13, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையில் நீச்சல் தடாக உள்ளக அரங்கு பகுதியில் பார்வையாளர் இருக்கைகளின் வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை

1. 2023 - SIS நீச்சல் தடாக பகுதியில் பார்வையாளர் இருக்கைகளின் வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
   800 HDPE பிளாஸ்டிக் பார்வையாளர் இருக்கைகள்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, பெறுகை அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு, 2023.10.24 ஆம் திகதி தொடக்கம் 2023.11.13 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 09.00 மணி தொடக்கம் 14 30 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரி கொழும்பு 13, ஆத்தர் டி சில்வா மாவத்தை, த. பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
   தொ.: 0112384385/0112445677, தொலைநகல்: 0112445675
6. தகுதியுடைய விலைமனுதாரர்கள் தற்போது வரை குறைந்தது கடந்த ஐந்து ஆண்டுகளில் வெற்றிகரமாக பொருட்களை வழங்குவதில் அனுபவத்துடன் இலங்கையில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 ரூபாவை (வெட் உடன்) செலுத்தி கீழுள்ள சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, த. பெட்டி 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றை வாங்கலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2023.11.14 ஆம் திகதி 1400 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள கொழும்பு 13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, வெளி அரங்கு, நிர்வாகக் கட்டிம் என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழுள்ள கொழும்பு 13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, வெளி அரங்கு, நிர்வாகக் கட்டிடம் என்ற முகவரியில் நேரடியாக அல்லது ஒன்லைனில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட ரூபா எண்பத்து நான்காயிரம் (ரூபா 84000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த. பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, வெளி அரங்கு, நீச்சல் தடாக முகப்பு அறையில் 2023 நவம்பர் 02 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
11. 2023.11.14 தொடக்கம் 2024.02.29 வரை (விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 107 நாட்கள்) விலைமனு பிணையின் செல்லுபடிக் காலம் இருத்தல் வேண்டும்.
12. 2023.11.14 தொடக்கம் 2024.01.29 வரை (விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 77 நாட்கள்) விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை**
**த. பெட்டி 2211**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.**
**தொ.: 0112445677/ 0112384385**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

Uva Wellassa University

### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கான நூலக சேவை வசதிகளுக்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

UWU/G/NCB/FOM/23/03

பின்வருமாறு விபரிக்கப்படும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கான நூலக சேவை வசதிகளுக்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
2. விலைமனுதாரர் இலங்கையில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை பதுளை, பசறை வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக களஞ்சியசாலைகள் மற்றும் வழங்கலுக்கான பிரதி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 055-2226475 தொலைநகல்: 055-2226633) மற்றும் பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் 2023-10-23ஆம் திகதி முதல் 2023-11-13ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாக 4,500.00 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பதுளை, பசறை வீதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக களஞ்சியசாலைகள் மற்றும் வழங்கலுக்கான பிரதிநிதியாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பல்கலைக்கழகத்தின் www.uwu.ac.lk என்ற இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை விலைமனுதாரர் பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் முழுமையான ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் விலைமனுதாரர்கள் ''ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில்'' வழங்கப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணமான 4,500.00 இலங்கை ரூபாவிற்கான வங்கி வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது 3114820 என்ற ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கணக்கிலக்கத்திற்கு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணக்கொடுப்பனவை மேற்கொள்ளலாமென்பதுடன் பணப்பற்றுச்சீட்டின்/ பண வரவுத் துண்டின் வாடிக்கையாளரின் பிரதி விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். ஆவணங்களை 2023-11-13ஆம் திகதி வரையில் கொள்வனவு செய்யலாம்.
5. 2023 நவம்பர் 14ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கான நூலக சேவை வசதிகளுக்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் என முகவரியிடப்பட்ட விலைமனுப்பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | விபரங்கள் | பொதி | விலைமனுப் பிணை முறித் தொகை ரூபா |
|---|---|---|---|
| 01 | தளபாடப் பொருட்கள் | பொதி - 01 | 64,000.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் | பொதி - 02 | 123,000.00 |
| விலைமனுப் பிணை முறியின் மொத்தத் தொகை | | | **187,000.00** |

7. 2023 நவம்பர் 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீட அலுவலகத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
8. விலைமனுக்களை பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் இறுதித் திகதிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் 5ஆம் இலக்க உட்கூறில் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
9. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடலின் பின்னர் உடனடியாகவே விலைமனுதாரர்கள் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மூதவைக் கட்டிடத்தின் சிறிய சபை அறையில் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு ஆர்வமுள்ள அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை.**
**தொலைபேசி/ தொலைநகல் இல.: 055-2226475, 055-2226633.**

### SLBC வளாகத்தில்

# கதிர்காமக் கந்தனின் திருவுருவச்சிலை பிரதிஷ்டை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன போதி வளாகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (24) காலை 9.30 மணிக்கு கதிர்காமக்கந்தனின் திருவுருவச்சிலை வள்ளி, தெய்வானை சமேதராய் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

நூற்றாண்டை நெருங்கும் வேளையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்நிகழ்வு அமையவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் வழிகாட்டலின் கீழ்

பொறியியலாளர் சண். குகவரதன், எம்.டி.எல்.குணரத்ன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வானொலி நேயர்களையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை பணிப்பாளர் இரட்ணசிங்கம் கணபதிப்பிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.

### பாணந்துறை, எழுவிலை

# அஹதிய்யாஹ் பாடசாலை மீலாத்தின சிறப்பு நிகழ்வு இன்று

பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலையின் மீலாத் தின சிறப்பு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அலவியா முஸ்லிம் மகா வித்தியாலத்தில் நடைபெறும். எழுவிலை அஹதிய்யாஹ் பாடசாலையின் நிர்வாகக் குழுவினரான என்.ஏ.எம்.ரிப்தி, எம்.பி.எஸ்.வாரிஸ், ஜீ.ஏ.எப்.சஹ்லினா ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த மீலாத் தின சிறப்பு நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 93ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 93ஆவது கவியரங்கு எதிர்வரும் சனிக்கிழமை (28) முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கவியரங்கத்துக்கு கவிஞர் கலைமகன் பைரூஸ் தலைமை தாங்கவுள்ளதுடன், கவியரங்கத்தில் நான்கு நிமிடங்களினுள் கவிதை பாட முடியும். நான்கு நிமிடங்களினுள் கவிதை பாட விரும்புவோர், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் நஜ்முல் ஹுசைனுடன் 074 143 8447 எனும் இலக்கத்தினூடாகவோ, செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீனுடன் 077 738 8149 எனும் இலக்கத்தினூடாகவோ, பொருளாளர் ஈழகணேஷ் 071 756 3646 எனும் இலக்கத்தினூடாகவோ உடனடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# வடக்குக்கான ரயில் நேர அட்டவணையில் மாற்றம்

## நேற்று முதல் புதிய நேரத்தில் இயக்கம்

வடக்கு மாகாணத்துக்கான ரயில் நேர அட்டவணையில் நேற்று (21) முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அநுராதபுரம் முதல் மாஹோவரை ரயில் தண்டவாளம் புனரமைக்கப்படவுள்ள நிலையிலேயே இந்த நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

இதற்கமைய, கல்கிஸ்ஸை முதல் காங்கேசன்துறைவரை பயணிக்கும் ரயில் உட்பட வடமாகாணத்துக்கான அனைத்து ரயில் நேர அட்டவணைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. யாழ்தேவி ரயில் உட்பட ஏனைய ரயில்களின் பயண நேரம் மாற்றப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.40 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு, கோட்டை மற்றும் கல்கிஸ்ஸை நோக்கிப் பயணிக்கும் யாழ்தேவி, நேற்று முற்பகல் 10.00 மணி முதல் காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து புறப்படத் தொடங்கியுள்ளது.

கொழும்பு, கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு பிரதி சனிக்கிழமை தோறும் அதிகாலை 5.20 மணிக்கு ரயில் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், இந்த ரயில் அதிகாலை 5.30 மணிக்கு புறப்படத் தயாராகுமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, தண்டவாளம் புனரமைப்புக் காரணமாக வடமாகாணத்துக்கான ரயில் சேவைகள் அடுத்த மாதம் முதல் மட்டுப்படுத்தப்படவுள்ளதாகவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

### அக்கரைப்பற்று-பொத்துவில் வீதியில்

# மோ. சைக்கிள்கள் இரண்டு நேருக்குநேர் மோதி விபத்து

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பலியாகியுள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை (21) அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் பலியாகியதுடன், மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொத்துவிலிலிருந்து ரொட்டைவயல் பிரதேசத்துக்கு சென்ற மோட்டார் சைக்கிளும் ஹிஜ்ரா நகரிலிருந்து பொத்துவில் பிரதேசத்துக்கு வந்த மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பொத்துவில் 7 ஐ சேர்ந்த ஏ.சாகுல் ஹமீது (வயது 69) சம்பவ இடத்தில் பலியானார். மேலதிக சிகிச்சைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொத்துவில் 15 ஐ சேர்ந்த எம்.பீ.ஜாபீர் (வயது 53) உயிரிழந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர். இதில் படுகாயமடைந்த மற்றைய நபர், கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார். இந்த விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணையை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்காவின் நீதியும் தர்மமும் வஞ்சகமானது!



அமெரிக்காவினுடைய நீதியும் தர்மமும் வஞ்சகமானதென்பதுடன், அது இஸ்லாமிய மக்களுக்கு வேறு, உலகின் ஏனைய நாடுகளுக்கு வேறென்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

ஆகையினாலேயே உலக பாதுகாப்பு சமன்பாட்டில் தற்போது ஒரு தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற விவாதமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது நீதியையும் தர்மத்தையும் ஏற்படுத்துமென்று இவ்வளவு காலமும் நாம் நம்பியிருந்ததாகவும் ஆயினும், இன்று அது ஒரு வெற்றுச் சபையாகி இஸ்லாமிய மக்களுக்கும் பலஸ்தீன மக்களுக்கும் எந்தவித நீதி, நியாயத்தை வழங்காத ஒரு சபையாக மாறியுள்ள நிலையில், உலக இஸ்லாமிய நாடுகளின் அமையம் சவுதியில் ஒன்றுகூடியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"பலஸ்தீனம் இஸ்ரேல் பிரச்சினையை தற்செயலான இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையாக பார்க்கவில்லை. இஸ்ரேலானது, பலஸ்தீனை கடந்த 6ஆம் திகதி மட்டுமல்லாமல், 80 வருடகாலமாக காலத்துக்குக்காலம் யுத்தம் செய்து, அந்த மக்களை அழித்துக்கொண்டிருப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த மோதலினால், இருபக்கமும் பொதுமக்கள் கொல்லப்பட்டதை நாம் கவலையுடன் அவதானிக்கின்றோம். அதேவேளை, மிகக் கொடூரமான முறையில் காசாவிலுள்ள மருத்துவமனையொன்றின் மீது தாக்குதல் நடத்தி, பாரிய யுத்தக் குற்றம் இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் சூழ்நிலையில், உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர் இன்று காஸா மருத்துவமனைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் எனும் அவர்களது இராணுவப்படை காரணமாக உள்ளதாகக் கூறியும் கூட, உலகத்தை வழிநடத்தும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் வேடிக்கை பார்க்கின்றமை கவலையாக உள்ளது. மேலும், ரஷ்ய உக்ரைன் போரில் உலக நாடுகளின் பார்வை வேறு விதமாகவும் அதேவேளை, இஸ்ரேல் பலஸ்தீன மோதலில் உலக நாடுகளின் பார்வை மற்றுமொரு விதமாகவும் இருப்பது மிகவும் வேதனை தருகின்றது" எனத் தெரிவித்தார்.

# சீரடி சாயி பாபாவின் மகாசமாதி தினம் நாளை மறுதினம்

சீரடி சாயி பாபாவின் மகாசமாதி தினம் நாளை மறுதினம் 24ஆம் திகதி விஜய தசமியன்று நடைபெறுகின்றது. கொழும்பு புதுச் செட்டித் தெருவிலுள்ள சீரடி மந்திரில், முழு நாள் நிகழ்ச்சிகளாக யாகம், பூஜைகள், பஜனை, அன்னதானம் என்பன நடைபெறும். விஷேடமாக சீரடி சாயி பக்தர்களின் காணிக்கையாக, இலங்கையில் சீரடி சாயி பாபாவுக்கு, முதல் முதலாக 54 பவுணில் முழு தங்க மகுடம், விலையுயர்ந்த பச்சை மரகதக் கல் பதிக்கப்பட்டு சூட்டப்படவிருக்கிறது. அன்று மாலை புதிதாக மரக் குதிரைகள் பூட்டப்பட்ட சித்திரத்தேரோட்டம் இடம்பெறும். இம்மாதம் 25 தொடக்கம் 27ம் திகதி வரை, இலங்கையில் முதல் முறையாக, தினமும் மாலை 6 மணிக்கு, சீரடி மந்திரில், இந்திய தொலைக்காட்சி புகழ் ஆன்மிக சொற்பொழிவாளர் திருமதி சௌமீயா அபிஷேக் ராஜு வின் சிறப்பு சீரடி சாயி சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

**எஸ்.என்.உதயநாயகம்**
*சீரடி சாயி மத்திய நிலையம் ஸ்ரீ லங்கா*

## 2048ஆம் ஆண்டுக்குள்...

பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, கட்சியின் பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சி உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியை புதிய உலகுக்கு ஏற்ற வகையில் மறுசீரமைப்பதே இந்த விசேட மாநாட்டின் பிரதான நோக்கமென அறிவிக்கப்பட்டது. ஸ்மார்ட் கட்சி,ஸ்மார்ட் நாடு என்பதுடன் கட்சியின் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுமென்றும் இங்கு ஜனாதிபதி தெரிவித்தமை முக்கிய அம்சமாகும்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையை தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ஸ்மார்ட் தேசமாக மாற்றுவது மற்றும் அதன் பொருளாதாரத்தை புதிய உயரத்துக்கு கொண்டு செல்வது என்ற தனது தொலைநோக்கு பார்வையை எடுத்துரைத்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும், மாகாண சபைத் தேர்தலும் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்தார். ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத் தேர்தல் தேர்தலின் பின்னர் சாத்தியமாகுமாகும் பட்சத்தில் மாகாண சபைத் தேர்தலையும் 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

தேர்தல்முறை மறுசீரமைப்பு யோசனை ஊடாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிகள் எடுத்துவருதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் பின்புலத்திலேயே ஜனாதிபதி இந்த அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளார்.

## அடுத்த வருடத்துக்கான...

பாராளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவு அறிவித்துள்ளது. இந்நிலையில், வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு தொடர்பான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன், அது தொடர்பான வாக்கெடுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், அப்பிரிவு தெரிவித்தது.

## பீடி உற்பத்தி தொழிலுக்கு...

பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான கொள்கையொன்றை தயாரிக்கும் நடவடிக்கை நிதி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு கிலோகிராம் பீடி இலைக்கு அறவிடப்படும் 5,000 ரூபா செஸ் வரியை நீக்குமாறும் கலந்துரையாடலில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. பீடி இலை இறக்குமதிக்கு விதிக்கப்படும் 5,000 ரூபா செஸ் வரியுடன் சேர்த்து, ஒவ்வொரு பீடியிலிருந்தும் 2 ரூபா வீதம் அரசு வரியாக வசூலிக்கிறது. கலால் திணைக்களம் இந்த முறையை அறிமுகப்படுத்திய போதிலும், அது சரியாக செயற்படவில்லையென கலந்துரையாடலின் போது தெரியவந்துள்ளதுடன், ஒரு கிலோகிராம் பீடி இலைக்கு அறவிடப்படும் செஸ் வரி காரணமாக அதிகளவான பீடி இலைகள் நாட்டுக்குள் கடத்தப்படுவதாகவும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. எனவே, பீடி உற்பத்தி கைத்தொழிலை சீரமைத்து, கலால் துறையின் செயல்பாடுகளை சீரமைக்க கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. பீடி உற்பத்தி கைத்தொழிலில் தற்போது சுமார் 700 பேர் ஈடுபட்டுள்ளதால், பீடி இலை இறக்குமதிக்கு விதிக்கப்படும் செஸ் வரியை நீக்கவும் ஒரு பீடிக்கு விதிக்கப்படும் வரித்தொகையை 3.50 ரூபாயாக உயர்த்தவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

## நாட்டில் முதலாவது தேசிய...

நவம்பர் 10ஆம் திகதி உலக மின்சார தினத்தை முன்னிட்டு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், நிதி, சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பல அமைச்சுகள் மற்றும் பல தனியார் நிறுவனங்களிடமிருந்து இதற்காக பங்களிப்புகளை பெற்றுள்ளது.

(இது தொடர்பான சிறப்புக் கட்டுரை 02 ஆம் பக்கம்...)

## இன்றைய இலவச இணைப்பு...

தொடர்பான அனைத்துத் தகவல்களும் இன்றைய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் இலவச இணைப்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சின் கீழுள்ள சட்ட ஆணைக்குழு நிர்வாக சேவை பிரிவின் செயலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் அது தொடர்பான அனைத்து தகவல்களும் இதில் தரப்பட்டுள்ளன. அத்துடன், திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்களை ஏல விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு கம்பனிகள் தொடர்பான அறிவித்தல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ரஜினி செல்வநாயகம்...

இரவு காலமானார். இராஜகிரிய, கலப்பலுவ பிரதேசத்தில் அவர் வசித்து வந்ததுடன், தனது நடனக் கல்லூரியின் மூலம் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு அவர் வழிகாட்டியுள்ளார்.

நீண்ட அனுபவம்மிக்க கலாசூரி, கலாகீர்த்தி ரஜினி செல்வநாயகம், இலங்கையில் கலைத்துறைக்கு அளப்பரிய சேவையை வழங்கியுள்ளதுடன், பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

## லலித் கொத்தலாவல...

நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போதே, அவர் காலமானதாக, அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

செலிங்கோ குழுமத்தின் தலைவரான லலித் கொத்தலாவல, செலான் வங்கியின் ஸ்தாபராகவும் ஆரம்பக்கால தலைவராகவும் இருந்தார். இலங்கையின் மூன்றாவது பிரதமரான சேர் ஜோன் கொத்தலாவலவின் மருமகனான லலித் கொத்தலாவல, கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்றதுடன், பட்டயக் கணக்கியல் கற்கையை ஐக்கிய இராச்சியத்தில் பயின்றமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் கருத்து

## நாட்டின் இதயங்களுக்கு நடந்த கதி என்ன?

எடுத்துக் கொண்டோமானால் ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும். நகரங்களில் வாழ்கின்ற கல்வியியலாளர்கள், தொழில்வாண்மை நிபுணர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள், வர்த்தகப் பெரும்புள்ளிகள் எல்லோரையும் எடுத்துநோக்கினால் அவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வந்து சேர்ந்தவர்களாவர்.

'நகரங்களை சிறப்பாக இயக்குவதற்கு கிராமங்களில் இருந்துதான் விற்பன்னர்கள் வர வேண்டியுள்ளது' என்ற யதார்த்தம் இங்கே புரிகின்றது. அதுமாத்திரமன்றி தற்காலத்தில் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்துக் கொண்டால் கிராமத்து மாணவர்களே சாதனை படைக்கின்றார்கள்.

சமுதாய ஒற்றுமை வாழ்வுக்கும், தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கும், மனநிம்மதிக்கும், விவசாய சுயபொருளாதாரத்துக்கும் சிறப்பாக விளங்கி வருகின்ற கிராமங்களிலிருந்து தற்போது மக்கள் நகரை நோக்கி அதிகளவில் இடம்பெயரத் தொடங்குகின்றார்களென்றால் அதற்கான காரணங்களை ஆராய்ந்து கிராமத்து மக்களின் மனக்குறைகளைத் தீர்க்க வேண்டியது மிக அவசியம்.

இலங்கையில் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள்தொகை அதிகரித்துள்ளதாக தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் சமீபத்தில் மேற்கொண்ட கணக்கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையில் நகர்ப்புற சனத்தொகை 44.57 வீதமாக உயர்வடைந்துள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு இறுதியாக இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, நகர்ப்புறங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் எண்ணிக்கை 18.2 வீதமாகக் காணப்பட்டது. இந்த 10 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் நகர்ப்புற சனத்தொகை 44.57 வீதமாக உயர்வடைந்துள்ளது.

நாட்டின் இதயங்களுக்கு நடந்ததென்ன? விவசாயம் மீது கிராமத்து மக்களுக்கு நம்பிக்கை இழந்து விட்டதா? கிராமங்களில் சுயதொழில்வாய்ப்புகள் குறைந்து விட்டதா? இவ்விடயத்தை அலட்சியப்படுத்த முடியாது. அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கிராமத்து மக்கள் மீது பார்வையைச் செலுத்த வேண்டியது அவசியம்!

## IMF உடன்படிக்கையால்...

செஹான் சேமசிங்க தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வை நிறைவு செய்த பின்னர் ஏற்பட்ட அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடானது, பலதரப்புக் கடன் வழங்குநர்களுக்கு எஞ்சிய தவணைகளை செலுத்துவதற்கும் கடன் மறுசீரமைப்பை துரிதப்படுத்துவதற்கும் உதவுமெனவும், நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவால், இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னரே, இரண்டாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுக் கொள்ளுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, "சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இரண்டாம் தவணைத் தொகையை பெற்றுக்கொள்வது தொடர்பாக அவசியமாக இருந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இது தொடர்பாக நீண்ட மீளாய்வுகள் நடைபெற்றன. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டக் குழு, இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வாரங்களாக விரிவான மீளாய்வுகளை நடத்தியது. மேலும் பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற வேண்டியிருந்தமையால், அதன்போது எங்களால் அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

நாம் மொரோக்கோவில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டத்தொடரில் இது தொடர்பாக மேலும் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அதன்போது, இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக எமக்கு தெளிவு பெற வேண்டியிருந்ததால், நாம் மீண்டும் இலங்கைக்கு வந்து அவர்களுடன் இணைய வழியில் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். இந்தத் தீர்மானம் மிக்க அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரும் செயற்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் எமது நாட்டின் அதிகாரிகள், குறிப்பாக மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளிகள் ஆகியோருக்கிடையில் நடைபெற்றது.

இங்கு எமக்கு மிக முக்கியமான விடயங்களில் ஒன்றே, நாம் 2023 மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் ஏற்பட்டிருந்த அனுகூலமான நிலைமைக்கு கடந்த சில வாரங்களில் ஒரு சில தடங்கல்கள் ஏற்பட்டன. சில குழுக்கள் இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்பாக சரியான புரிதலின்றி, இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடு கிடைக்காமை தொடர்பாக பல்வேறு பிரதிகூலமான கருத்துகளை முன்வைத்தனர்.

## தேசிய மீலாத் விழா...

அடிப்படையாகக் கொண்டு, அடுத்த ஒரு வருடத்தினுள் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பல அமைச்சுகள் இந்த வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவுள்ளதாக, தேசிய மீலாத் விழாவின் 2023ஆம் ஆண்டுக்கான இணைப்பாளரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார். இதன் முதற்கட்டமாக இந்த வருடத்தில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளுக்காக 187.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு தலா 3 ஆடுகள் படி வழங்கப்பட்டதுடன், பயிர்ச் செய்கைக்கான உழுந்து, பயறு ஆகியவை வழங்குவதற்காக 21 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## காசாவிலுள்ள இலங்கையர்...

போதே, அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் தொடர்ந்து உரையாற்றிய போது "காசாவில் இடம்பெறுவரும் மோதலின் போது, அங்கு பணியாற்றிவந்த களனியைச் சேர்ந்த 49 வயதுடைய அனுலா ஜயதிலக எனும் இலங்கையர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு இலங்கையர் காயமடைந்துள்ளார். இதேவேளை, வென்னப்புவவைச் சேர்ந்த யட்டவர பண்டார எனும் இலங்கையர் அங்கு காணாமல் போயுள்ளதுடன், இவரைக் கண்டுபிடிக்க இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த மோதலைத் தொடர்ந்து வடக்கு காசாவிலிருந்து தெற்கு காசா நோக்கிச் சென்றவர்களில் 17 இலங்கையர்கள் இருப்பதுடன், அவர்கள் ரபா எல்லை வழியாக எகிப்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## எஹெலியகொடை பொலிஸ் OIC...

மனம் உடைந்திருந்ததாகத் தெரிவித்துள்ளார். அவரது தாய்க்கும் சகோதரனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதை அடுத்து, "நான் இறந்தவுடன் உங்கள் அனைவருக்கும் சரியாகி விடும்" என அவர்களிடம் தனது கணவர் கூறியிருந்ததாகவும் பொலிஸாரிடம் அவரது மனைவி கூறியுள்ளார்.

எஹெலியகொடைபொலிஸ் நிலையத்துக்கு உத்தியோகபூர்வ இல்லம் இல்லாத காரணத்தினால் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதியிலுள்ள ஹோட்டலில் அறையொன்றை தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இவர் மாற்றியுள்ளார். அந்த ஹோட்டல் அறையிலேயே பொலிஸ் பொறுப்பதிகாரி சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்நிலையில், நேற்று (21) அதிகாலை காலை பொலிஸ் நிலையப் அதிகாரி ஒருவர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தினசரி அறிக்கையை வழங்குவதற்காக அறைக்கு வந்துள்ளார். அதிகாலையிலேயே எழுந்திருக்கும் இவர் அழைத்தும் பதில் எதுவுமில்லாத காரணத்தால் மற்றைய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். அதனையடுத்து பொலிஸ் நிலையத்தின் மற்றைய அதிகாரிகள் வந்து கதவுகளை உடைத்து பார்த்த போது, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுக்கையில் பொலிஸ் அதிகாரி இறந்து கிடந்ததை கண்டனர்.

## டயனா கமகே மீதான...

செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பணித்துள்ளார்.

ஐ.ம.ச. வின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேராவால் பாராளுமன்றத்தில் தான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் தெரிவித்ததுடன், இந்த விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணை செய்ய வேண்டுமென்றும் சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமரின் வேண்டுகோளுக்கமைய, சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டதுடன், இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் பணித்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே,

"பாராளுமன்ற நூலகத்துக்கு அருகிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரத்தியேக மின்தூக்கிக்கு அருகில் என்மீது அத்துமீறல் மேற்கொள்ளப்பட்டது.

## சாரதி ஒருவரை கைதுசெய்யும்...

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களால் ஏற்படும் விபத்துகளை தடுப்பதற்காக பொலிஸ் மாஅதிபரின் பரிந்துரைகளுக்கமைய, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கண்டறிவதற்காக 180,000 நவீன சாதனங்கள் ஏற்கெனவே பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட ஊக்குவிப்புத்தொகை காரணமாக மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்வதில் பொலிஸ் உத்தியோகர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாகவும், அவர் தெரிவித்தார். மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்யும் போது, அவர்கள் மதுபோதையில் இருப்பது உறுதி செய்யப்படுமென்பதுடன், பின்னர் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்படும். கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 25,038 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# காசாவில் எட்டாக்கனியாகும் யுத்தநிறுத்தம்



பண்டைய நாகரீகத்தின் தொட்டில், பிரேதப் பெட்டிகளை சுமந்து திரியும் நேரமிது. பெரும் மனிதாபிமான பேரிடரை ஏற்படுத்தியுள்ள காசா, இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்தும் முயற்சிகள் எட்டாக் கனிகளாகின்றன. எனவே, களங்களை கடந்து காரணங் களை தேடியாக வேண்டும். இராணுவ வெற்றிகளை ஈட் டிக்கொள்ள முண்டியடிக்கும் தரப்புக்கள், மூச்சிழுக்க களைத் துப் போனதை களமுனைகள் காட்டுகின்றன.

இதற்குள், பாதிக்கப்பட்டோர், உயிரிழந்தோர் மற்றும் பணயக் கைதி களாகப் பிடிக்கப்பட்டுள்ளோரின் உறவினர் கள் படும்பாடுதான் பரிதாபமானது. ஆட்சி, அதிகாரம், நிலம், புலம் எதுவும் வேண்டாம். எஞ்சியுள்ள உறவுகளை ஒப்படையுங்க ளென்ற ஓலங்களே உயர்ந்து வருகின்றன. இந்த ஓலங்கள் உள்ளூர்க் கலவரங்களை ஏற் படுத்தலாமென அஞ்சிய இஸ்ரேல், ஆர்ப் பாட்டங்களில் ஈடுபடுவோர் லொறிகளில் ஏற்றப்பட்டு காசாவுக்குள் அனுப்பப்படுவ ரென எச்சரித்துள்ளது. தமது அன்புக்குரிய வர்களை பாதுகாத்தால் போதுமென்ற இவர் களது பதறல்கள், போர்க்கள ஒப்பாரிகளை விடவும் காதுகளை பிளந்து கிழிக்கின்றன.

இடிந்து விழும் கட்டடங்கள், எரிந்தெ ழும்பும் தீப்பிழம்புகளில் இறைதூதர்களின் காருண்யங்கள் மட்டும்தான் உயிர் பிழைக் கப்போகின்றன. இஸ்ரேலிய சிறைகளி லுள்ள பலஸ்தீனர்கள், காசாவில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள யூதர்களின் உறவினர்களுக்கு நல்ல செய்தி கிட்டுமா?

இஸ்ரேலின் எல்லை மீறிய தாக்குதல்கள் வைத்தியசாலைகள், புகலிட முகாம்கள் எதையும் விட்டுவைக்காதுள்ள நிலையில், இருதரப்புப் பணயக்கைதிகளின் எதிர்கால மும் பிரேதப் பெட்டிகளாகப் போகின்றன?. எனவே, இழந்தது போதும், இருப்போர் பாதுகாக்கப்பட பிரார்த்திப்போம். போர்க்க ளம் உக்கிரமாவதாலும் பாரபட்சமும் பலப் பட்டுள்ளதாலும் பிரார்த்திப்பது மற்றும் பிரா யச்சித்தம் தேடுவதைத் தவிர வேறு வழிகள் துலங்கவில்லை.

தரைவழித் தாக்குதலுக்கு பல தினங் களுக்கு முன்னரே தயாரான இஸ்ரேல், காசாவுக்குள் நுழைய பச்சைக்கொடி காட் டியிருக்கிறது. போர்முனையின் நேரடிக்க ளத்துக்கு வந்த இஸ்ரேலிய பாது காப்பு அமைச்சர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்து, சிறிய உரையும் நிகழ்த்தி னார். "வாரங்களாகலாம் அல்லது மாதங்களாக லாம் எதிரியை வீழ்த்தும் வரைக்கும் வீறாப்புடன் போரிடுங்கள் என்றார்". சக ஆதரவுகளை எதிர் பார்த்து வியூகம் வகுத்த ஹமாஸ், சுரங்கப்பாதை கள் புதைந்துள்ள காசா வுக்குள் யூத இராணுவம் நுழைவதை எதிர்பார்த்து விழித்திருக்கிறது. இதனால், வான் தாக்குதல்களைத் தவிர வேறு வழிகள் இஸ்ரேலுக்குப் பாதுகாப்பானதாக வும் இல்லை.

இந்த உத்வேகத்தில்தான் வைத்தியசாலை யிலும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. அதிக ளவு எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்ததால், ஹமாஸின் ஏவுகணையே வீரியம் தவறி வைத்தியசாலையில் விழுந்ததாக இஸ்ரேல் கூறுகிறது. வீரியமிழந்த ஏவுகணையே இந்தளவு சேதத்தை ஏற்படுத்தியிருந்தால், இஸ்ரேலின் தெருக்களில் தெறித்து விழுந்த ஏவுகணைகள் அங்கு எந்தளவு சேதங்களை ஏற்படுத்தியிருக்கும். அகதிகள் தஞ்சம டைந்த ஐ.நா.வின் பாடசாலைக்குள் தாக் குதல் நடத்தும் தேவை ஹமாஸுக்கு இருக் காது. இதனால், இஸ்ரேல்தான் இக்கொடிய குற்றத்தை இழைத்திருக்கிறது.

இழப்புக்களை அளவிட்டு வெற்றி, தோல் விகளை நிர்ணயிக்க முடியாதுள்ள போரிது. எதிர்கால வியூகங்களில்தான் இங்கு வீரன் கணிப்பிடப்படுகிறான். சுற்றியுள்ள அரபு நாடுகள் நேரடியாக காஸாவுக்கு உதவாவி டினும் சமாதானம் வந்துவிட்டால், அரபு லீக் உட்பட முஸ்லிம் நாடுகளின் உதவிகள் இங்குதான் ஓடியும், தேடியும் வருவதுண்டு. அதேபோல, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்பன இஸ்ரேலுக்கான உதவிகளை வழங் குவது வழமையான நிகழ்ச்சி நிரலுக்குட் பட்டன.

பத்தாண்டு கடன் திட்டத்தில் 2019 முதல் 2028 வரை, 38 பில்லியன் அமெ ரிக்க டொலர் உதவிக்கு ஒப்பமிடப்பட் டது. இதில், எஞ்சிய எட்டு பில்லியனில் மூன்று பில்லியனை அவசரமாகத் தருமாறு இஸ்ரேல் கோரியுள்ளது. இதற்கு அமெ ரிக்கா இணங்கியுள்ளது. ஏற்கனவே இணங் கிய திட்டமென்பதால் அரபு நாடுகளுக்கு இதை எதிர்க்க முடியாதுள்ளது. இதனால், புதிய உதவிக்காக ஒப்பந்தங்களை கைச்சாத் திடக் கூடாதென அடம்பிடித்தும், எஞ்சிய பழைய தொகையை யுத்த காலத்தில் வழங் குவது முறையல்ல என்றும் கூறியுமே, ஜோ பைடனை சந்திக்க அரபுலகம் மறுத்துவிட் டது. காசா மக்களுக்கு நாளாந்தம் நூறு லொறி களில் உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனால், இருபது லொறிகளுக்கே அனுமதி ஏற்கப்பட்டுள்ளது. பழங்கள், பழச்சாறுகள் மற்றும் கனிரசங்கள் ஏற்றிச் செல்லும் லொறி களைக் கண்ணுறுகையில் கண்கள் பனிக்கின் றன.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறை வனின் ஏவலின் பிரகாரம், இந்த பாரான் தேசத்திலிருந்து இறைதூதர் ஆப்ரஹாம் (இப்ராஹீம்) தனது மனைவி ஹாஜருடன் (ஹாஜரா) புதல்வர் இஸ்மவேலை (இஸ்மா யில்) மக்காவுக்கு அழைத்துச் சென்று செய்த பிரார்த்தனை நிழலாடுகிறது.

"என் இறைவனே உன்னை நாடி வரும் அடியார்களுக்கு காய்களையும் கனிகளையும் சொரிந்துவிடு".

வயல்கள், கழனிகள் மற்றும் சோலைகள் நிறைந்த பாரான் தேசத்தை நோக்கியவாறே இப்பிரார்த்தனை புரியப்பட்டது.

**சுஐப்.எம்.காசிம்**




பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை

## வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024

2024 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை சபை, இல-574, காலி வீதி, கொழும்பு 3 க்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்களாக தங்களைப் பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | துணைப் பிரிவு இல. | |
|---|---|---|
| | | **அச்சிடும் ஒப்பந்தங்கள் மற்றும் விளம்பரப் பொருட்களை வழங்குதல்** |
| | a | பொலித்தீன் பைகளை அச்சிடுதல் மற்றும் வழங்குதல் |
| | b | உக்கும் பைகள் |
| | c | தேயிலை சில்லறை பக்கற்றுகான நாணல் பொதிகள் |
| | d | நெளி பெட்டிகள் |
| | e | மரத்திலான தேயிலை பெட்டி |
| | f | பீங்கான் தேயிலை பெட்டி |
| | g | அலுமினிய தேயிலை கேனிஸ்டர்கள் |
| | h | பிளாஸ்டிக் கொள்கலன்கள் - தேயிலை மாதிரிகளுக்கு |
| | i | அலு.ஃ.போயில் உறைகள் - தேயிலை மாதிரிகளுக்கு |
| | j | ஆண்டறிக்கை, புத்தகங்கள், பிரசுரங்கள், நாட்காட்டிகள், டைரிகள் மற்றும் சுவரொட்டிகள் உள்ளிட்ட விளம்பரப் பொருட்களின் அச்சிடுதல் |
| | k | வெற்று தேயிலை பெட்டிகளை அச்சிடுதல் |
| | l | பெயர்அட்டைகள், அடையாள அட்டைகள் அச்சிடுதல் |
| | m | பதாகைகள் அச்சிடுதல் |
| | n | புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தல் |
| | o | சிவப்பு களிமண் குவளை உற்பத்தியாளர்கள், எல்இடி சிக்னேஜ், தகரக்குவளை மற்றும் பெட்டி, கண்காட்சி கூடம் அமைப்பு, டிசைனிங் மற்றும் ஆ.ஃ.ப்செட் பிரிண்டர்கள், மற்றும் ஸ்கிரீன் பிரிண்டர்கள், நெளி பெட்டிகள், காகித கோப்பைகள் மற்றும் பைகள் |
| | | **கணினிகள்** |
| | a | டோனர் / காட்ரிஜஸ் |
| | b | கணினிகள், சர்வர்கள், பிரிண்டர்கள், யூ.பி.எஸ் மற்றும் உதிரி பாகங்கள் |
| | c | கணினி மென்பொருள் |
| | d | கணினி வன்பொருள் பராமரிப்பு |
| | | **குளிரூட்டிகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள்** |
| | a | மின் சாதனங்கள் |
| | b | மின்னணு சாதனங்கள் |
| | c | குளிரூட்டிகள் |
| | d | மின் நிறுவலின் பழுது மற்றும் பராமரிப்பு |
| | e | குளிரூட்டிகளின் பழுது மற்றும் பராமரிப்பு |
| | f | மின்சார கேபிளிங் மற்றும் வயரிங் |
| | | **மோட்டார் வாகனம், டயர்கள் மற்றும் குழாய்கள்** |
| | a | மோட்டார் வாகனங்கள் |
| | b | மோட்டார் வாகனங்களுக்கான உதிரி மற்றும் பாகங்கள் |
| | c | மோட்டார் வாகனத்திற்கான டயர்கள் மற்றும் குழாய்கள் |
| | d | மோட்டார் வாகனத்திற்கான மின்கலங்கள் |
| | e | மோட்டார் வாகனத்தின் பழுது |
| | f | தானியங்கி மின் பழுது |
| | g | மோட்டார் வாகனத்தின் சேவை மற்றும் உயவு |
| | h | மோட்டார் வாகனங்களின் டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் |
| | i | மோட்டார் வாகனங்களுக்கு சைலன்சர் பழுது |
| | j | வாகனங்களின் இருக்கை கவர்கள் மற்றும் விதான வேலை |

| இல. | துணைப் பிரிவு இல. | |
|---|---|---|
| | | **சேவைகளை வழங்குபவர்கள்** |
| | a | போக்குவரத்து சேவைகள் (கேப் சேவைகள், அனைத்து வகையான பேருந்துகள், டெலிவரி வேன், லாரி போன்றவை...) |
| | b | பூச்சி கட்டுப்பாடு சேவை |
| | c | சரக்கு அனுப்புதல் / கூரியரிங் |
| | d | தனிப்பட்ட விளைவுகளை நீக்குதல் |
| | e | சீருடைகள் மற்றும் துணிகளை சலவை செய்தல் |
| | f | தீ மற்றும் பாதுகாப்பு சேவைகள் |
| | g | விளம்பரம் |
| | | **எழுது பொருள்கள்** |
| | a | எழுதுபொருள் மற்றும் அலுவலக நுகர்பொருட்கள் |
| | b | நகலெடுக்கும் காகிதங்கள் |
| | c | பொலிமர் முத்திரைகள் மற்றும் முத்திரைகள் |
| | d | சுகாதார பொருட்கள் |
| | | **ஆய்வக உபகரணங்கள் மற்றும் சேவைகள்** |
| | a | ஆய்வக உபகரணங்கள் |
| | b | ஆய்வக சோதனை இரசாயனங்கள் மற்றும் நுகர்பொருட்கள் |
| | c | ஆய்வக பாதுகாப்பு நுகர்பொருட்கள் |
| | d | ஆய்வக ஸ்டெர்லைசர்கள் மற்றும் நாசினி |
| | e | ஆய்வக சோதனை பொருட்கள் |
| | f | பொது ஆய்வக உபகரணங்கள் சேவை, பராமரிப்பு மற்றும் பழுது |
| | g | ஆய்வக கருவி அளவுத்திருத்தம் |
| | h | ஆய்வகப் பொருட்களை மீள்சுழற்சி செய்பவர்கள் |
| | | **அலுவலக தளபாடங்கள்** |
| | a | அலுவலக உபகரணங்கள் |
| | b | இரும்பு தளபாடங்கள் |
| | c | மரத் தளபாடங்கள் |
| | d | அலுவலக உபகரணங்களுக்கான பழுது மற்றும் சேவைகள் |
| | | **கட்டுமானங்கள், தொடர்புடைய பணிகள் மற்றும் ஆலோசனை சேவைகள்** |
| | a | சிவில் பொறியியலாளர் ஒப்பந்ததாரர்கள் |
| | b | கட்டிடம் பழுது மற்றும் சீரமைப்பு |
| | c | உலோகத் தயாரிப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள் |
| | d | அலுமினிய தயாரிப்புகள் |
| | e | குழாய் திருத்துனர் |
| | f | ஓவியர்கள் |
| | g | கண்ணாடி வேலை |
| | h | இலத்திரனியலாளர் |
| | i | மின் பொறியியல் ஆலோசகர்கள் |
| | j | மெக்கானிக்கல் இன்ஜினியரிங் ஆலோசகர்கள் |
| | k | இயந்திர பொறியியல் ஆலோசகர்கள் |
| | | **ஏனைய சேவைகள்** |
| | a | கார் விரிப்புகள், பாய்கள், துடைப்பம், தூரிகைகள் மற்றும் வரைபடங்கள் |
| | b | பசுமையான செடிகள் மற்றும் மலர் அலங்காரங்கள் |
| | c | உள்ளக அலங்காரங்கள் மற்றும் திரைச்சீலைகள் |
| | d | பிளாஸ்டிக் பெயர் பலகைகள் |

விண்ணப்பப் படிவங்களை **2023.11.15 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு வேலை நாட்களில் **மு.ப. 9.30 மணி முதல் பிற்பகல் 3.00** மணி வரை ஒவ்வொரு பிரதான பிரிவிற்குமான (முதன்மை வகை 1,2,3,4,5,6,7,8,9,10) **ரூ.1,500/-** மீளசெலுத்தப்படாத கட்டணத்தை SLTB இல் உள்ள காசாளரிடம் செலுத்தி இல 574, காலி வீதி, கொழும்பு 3 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபையின் நிர்வாகப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் அல்லது காசோலைகள் மூலம் பணம் செலுத்தலாம். காசோலைகள் இலங்கை தேயிலை சபையின் பெயரில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் **"வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024"** எனக் குறிப்பிட்டு பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் இணைத்து **2022.11.30** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு முன்னர் **பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை, இல-574, காலி வீதி, கொழும்பு** 3 என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**பொது நியந்தனைகள்**

01. இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் போன்ற பழுதுபார்க்கக்கூடிய / சேவை செய்யக்கூடிய பொருட்கள் வழங்குனர்கள், தேவைப்படும் போது பழுதுபார்ப்பதற்கான வசதிகளைக் கொண்ட தங்களுக்குச் சொந்தமான வேலைத்தளத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
02. தேவையான நேரத்தில் உடனடியாக கேள்விகளை வழங்கத் தவறிய அல்லது குறிப்பிட்ட நேரத்திற்குள் விநியோகம் செய்யத் தவறிய வழங்குனர்கள் / சரியான நேரத்தில் சேவைகளை வழங்கத் தவறினால், விவரக்குறிப்புகள் / மாதிரிகள் அல்லது கொள்முதல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அல்லது தரமற்ற பொருட்களை வழங்கியவர்கள் பதிவேட்டில் இருந்து நீக்கப்படுவார்கள்.
03. பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலிலிருந்து பொருட்கள் வழங்கல் / சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படும். எவ்வாறாயினும், வேறு எந்த முறையிலுமான விலையறிக்கை கோரல் மற்றும் கொள்முதல் அல்லது தேவையான போது புதிய வழங்குனர்களை பதிவு செய்யும் உரிமையை இலங்கை போக்குவரத்து சபை கொண்டுள்ளது.
04. விண்ணப்பதாரர்கள்/ வழங்குனர்கள்/ ஒப்பந்ததாரர்கள் / சேவை வழங்குனர்கள் மற்றும் ஆலோசனை சேவை வழங்குனர்களாக இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களின் மனைவி அல்லது பிள்ளைகள் விண்ணப்பதாரர்கள்/ உரிமையாளர்கள்/ பங்குதாரர்கள்/ பணிப்பாளர்களாயின் அவர்கள் நிறுவனப் பதிவுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.
05. எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ள அல்லது எவ்வித காரணங்களுமின்றி நிராகரிக்கும் உரிமையினை இலங்கை போக்குவரத்து சபை கொண்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையினால் விண்ணப்பம் நிராகரிக்கபடும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் விண்ணப்பக் கட்டணத்தை மீளப் பெறுவதற்கான தகுதியற்றவர்களாவர்.
06. தேயிலை சபையினால் நடத்தப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் மட்டுமே மோட்டார் வாகன பழுதுபார்ப்பு மற்றும் வாகன சேவை வழங்குநர்களுக்கான பதிவு செய்யப்படும்.

ஒவ்வொரு பிரதான பிரிவிற்கும் ரூ.1,500/= மீள்ச் செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி பின்வரும் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய பரிந்துரைப் படிவத் தொகுப்பு மூலம் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். **விண்ணப்பதாரர்கள் இந்த பத்திரிகை விளம்பரத்தின்படி, சேவை மற்றும் உருப்படி எண்ணைக் குறிப்பிட்டு கடிதத்தலைப்பிலான கோரிக்கைக் கடிதமொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.** விண்ணப்பப் படிவங்களை கட்டணமின்றி இலவசமாகப் பரீசீலனை செய்யலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி, கொழும்பு 03.**



**சுகாதார அமைச்சு**

**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC)**

## தேசியபோட்டி கேள்வி கோரல் (NCB)

**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திற்கு (SPMC) மீள் அமைவிட வசதிகளுக்கான சந்தைப்படுத்தல் திணைக்கள அலுவலக இடவசதிகள் மற்றும் பூர்த்தியடைந்த உற்பத்திக் களஞ்சியப் பாவனைக்காக மேலதிக களஞ்சியத்திற்காக ஓர் கட்டிடம் வாடகை /குத்தகைக்கு**

**கேள்வி விபரம் : SPMC/MKT/01/2023**

**மூடப்படல் 2023 நவம்பர் 07 14.00 மணிக்கு**

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திற்கு பூர்த்தியடைந்த உற்பத்திக் களஞ்சியம் மற்றும் சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் அலுவலக இட வசதிக்காக பயன்படுத்த ஓர் கட்டிடத்தை வாடகை /குத்தகைக்கு பெற பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன அத்துடன் முறையே அவர்கள் கீழ்க்காணும் தேவைப்பாடுகளை கொண்டிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.

- ❖ கிட்டத்தட்ட 2500 முதல் 4000 சதுர அடி அளவில் மொத்த பிரதேசத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (அலுவலகம் மற்றும் களஞ்சியம்)
- ❖ தற்போதுள்ள உற்பத்தி தொகுதியில் இருந்து 2Km சுற்றுவட்டத்திற்குள் அமைவிடம் இருத்தல் வேண்டும்.
- ❖ நீர், மின்சாரம் மற்றும் தொ.பே வசதிகளை களஞ்சியம் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ வளாகத்தினுள் கொள்கலன்கள் (20அடி) நுழைந்து நகரக் கூடிய இடையூறுகள் அற்ற அகலமான உள்நுழைவு இருத்தல்
- ❖ களஞ்சியத்தை சுற்றி சுவர்/வேலி ஓர் மூடக்கூடிய வாயிற்கதவுடன் இருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியத்தின் கூரை குறைந்தபட்சம் 12 அடி அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியத்தின் கூரை சீலிங் அல்லது கொங்கிறீட் ஸ்லெப்பை கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ கட்டிடத்தின் எல்லாப்பாகங்களும் வளிச்சீராக்கி வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியத்தின் தரை பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- ❖ காணி மற்றும் களஞ்சியம், வெள்ள அனர்த்தங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதுடன் சகதி நிலமாக இருத்தல் கூடாது.
- ❖ காணியைச் சுற்றிவர அல்லது அதற்கு மேல் அதி உயர் மின்சார இணைப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ❖ ஏற்றுவதற்கு மற்றும் இறக்குவதற்கான வசதிகள்
- ❖ களஞ்சியத்தில் போர்க்கிலிப்ட்டுக்கள் நடமாடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ❖ தீயணைப்பு வசதிகள் முறையாக நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.
- ❖ போதுமான காற்றோட்டம் மற்றும் வெளிச்ச வசதிகள் இருத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் கட்டாயம் இல்லாத வசதிகளை களஞ்சியம் கொண்டிருப்பின் தயவுசெய்து உங்கள் முன்மொழிவுகளில் வேறாக குறிப்பிடுங்கள் மேற்படி கட்டாயம் இல்லாத வசதிகள் மதிப்பீட்டு வேளையில் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

இவ்விடயம் பற்றிய கூற்றுக்களை அலுவலக நேரங்களில் இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபன அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம். மற்றும் சேகரிக்கலாம்.

SPMC இனால் தயாரிக்கப்பட்ட குறித்த கூற்றினை உத்தேச மனுதாரர்கள் முழுமையாகப் பூர்த்தி செய்து விலைமனுக்களுடன் பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது 2023 நவம்பர் 07ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அடையுமாறு இலங்கை, ரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11 அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "களஞ்சியத்திற்கான ஓர் கட்டிடம் வாடகை/குத்தகை" தொடர்பு : SPMC/MKT/01/2023 மற்றும் மூடப்படல் 2023 நவம்பர் 07 14.00 மணி என்று தலைப்பிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023 நவம்பர் 07, 14.00 மணிக்கு மூடப்படும் அத்துடன் விலைமனுக்கள் SPMC இரத்மலானையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். இந்த கேள்வி திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

ஏதேனும் தெளிவுறுத்தல்களை, பிரதி பொது முகாமையாளர் - அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தலை தொ.பே.இல - 2637574, 2635353 மற்றும் 2636966 ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக்குழுவின் தலைவர்**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
**இல.11, சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவல எஸ்டேட்**
**இரத்மலானை, இலங்கை.**

**பெக்ஸ் : (00) 94-11-2634771**
**தொ.பேசி : (00) 94-11-2635353/(00) 94-11-2637574/(00)94-11-2623298**
**இணையதளம் : www.spmc.gov.lk**
**மின்னஞ்சல் : chairman@spmc.gov.lk**





# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# அரசாங்கத்தை பலிக்கடாவாக்க முயற்சிக்கும் எதிர்க்கட்சிகள்!

## 'அரசாங்கம் மிகவும் பலமான நிலையிலேயே உள்ளது' என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**பொருளாதார ரீதியிலான சவால்களை வெற்றிகொள்வதற்கு அரசாங்கம் சரியான பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கும் நிலையில், எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தைப் பலிக்கடாவாக்குவதற்கு முயற்சிப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவர் எமக்குப் பேட்டியளித்தார்.**

**கே: நாட்டில் அரசியல் நிலைமை சீராக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: மிக எளிமையான பதில் இருக்கிறது. இவை அனைத்தையும் ஒப்பீட்டளவில் பார்க்க வேண்டும். ஒரு வருடம் பின்னோக்கிச் செல்லுங்கள். அன்று எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் தெளிவாகத் தெரியும். அரசாங்கம் மிகவும் பலமான நிலையில் உள்ளது.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் உதவியின் இரண்டாவது தவணையை அரசாங்கம் பெறும் என்று எதிர்பார்த்தாலும், அது நிறைவேறாது என்று எதிர்க்கட்சி கூறுகிறது. இதன் உண்மைத் தன்மை என்ன?**

பதில்: அந்தக் கடன் தவணை எங்களுக்கு கிடைக்கக் கூடாது என்று எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. ஆனால் நாங்கள் ஒரு திட்டத்தின்படி செல்கிறோம். ஒப்பந்தங்கள் தாமதமாகலாம், இலக்குகளை அடைவது கடினமாக இருக்கலாம், ஆனால் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன. பெரும்பான்மையானவர்கள் 75 வருட பாரம்பரிய கட்டமைப்பிலிருந்து விடுபட விரும்பினாலும், பாரம்பரிய எதிர்க்கட்சியுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாவது தவணையை நாங்கள் பெற மாட்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள், அதே நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவரோ தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவோம் என்று கூறுகிறார். மேலும் சுருங்கி வரும் பொருளாதாரத்தை நாங்கள் கையாள்கிறோம். இது மிகவும் கடினமான பயணம். இந்த ஒப்பந்தங்களில் உள்ள சிறுசிறு முரண்பாடுகளை நீக்கி இந்தப் பயணத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்லலாம் என்று நினைக்கின்றோம்.

**கே: அரசாங்கத்தின் திட்டத்தை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எதிர்க்கட்சி கூறுகிறதே இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: அரசாங்கம் மிகவும் கடினமான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெளிவுபடுத்தியுள்ளது. எதிர்க்கட்சியைக் கையாள்வதே அரசாங்கத்தின் மிகப்பெரிய பிரச்சினை. மக்களை வீதிக்கு இறக்க முயன்றனர். அந்தத் தடைகளைத் தாண்டி இந்தப் பயணத்தை மேற்கொள்கிறோம்.

**கே: நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து மக்கள் கவலையடைந்துள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்படுகிறார்கள். குறிப்பாக தெற்கில் பாதாள உலகம் தலைதூக்கியுள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: நாம் கண்டிப்பாக அதில் கவனம் செலுத்த வேண்டும். இங்கு நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், இந்த நாடு 30 வருடகால யுத்தத்தை சந்தித்திருந்தது. அந்தப் போரில் ஆயுதங்களைப் பயன்படுத்தியவர்கள் ஏராளம். அது ஒருபுறமிருக்க, போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் கும்பல்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது குற்றச்செயல்களை தீவிரப்படுத்துவது வழமை. ஆனால் இந்த நிலை கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கு, பாதுகாப்புப் படையினரின் முயற்சியின் கீழ் கடுமையான தடுப்பு முறை அமுல்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பாக சுங்கத்துறையினர் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். சுங்கத்துறையினரிடம் அகப்படாமல் இந்த நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவர முடியாது. வழக்கமான சோதனைகளை நாம் இரட்டிப்பாக்கியுள்ளோம். மேலும் இந்தச் சூழ்நிலையை கட்டுப்படுத்த பொதுமக்கள் மற்றும் ஊடக ஆதரவு தேவை. இது இவ்வாறான குற்றங்களைக் கட்டுப்படுத்த உதவும்.

**கே: ஆனால் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், புதிதாக பொலிஸ்மா அதிபர் ஒருவரை அரசாங்கத்தினால் இன்னமும் நியமிக்க முடியாதுள்ளதே?**

பதில்: பொலிஸ் மாஅதிபரின் நியமனம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கடமைகள் இரண்டும் வெவ்வேறு விடயங்கள். எந்தவொரு முரண்பாடும் இடம்பெறாமல், மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் இருக்க அரச தலைவர் உழைத்து வருகிறார். அந்த நியமனம் மேற்கொள்ளப்படும், பொலிஸ் மாஅதிபர் நியமனம் தாமதமடைவது பொலிஸார் அன்றாடப் பணிகளைச் செய்வதைத் தடுக்காது.

**கே: முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த முடிவிற்குப் பிறகு பெரும்பாலான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட ஒருவித அழுத்தத்தில் உள்ளதாகத் தெரிகிறது அல்லவா?**

பதில்: இதற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று கட்சியின் உரிமை. இலங்கை அரசியல் மிகவும் பக்கச்சார்பாக மாறியிருப்பதையே இது காட்டுகிறது. தனியாகப் பாராளுமன்றத்திற்கு வந்த ஒருவரால் நாடு காப்பாற்றப்பட்டது. அவர் முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால் இன்று என்ன நடந்திருக்கும் என்று தெரியவில்லை. ஆனால் நீதிமன்றத் தீர்ப்புப் பற்றி நான் பேசவில்லை. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் மதிக்கிறோம்.

**கே: அதிக வரி விதிப்பு பற்றி அனைவரும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். மருத்துவர்கள் கூட போராட்டம் நடத்துகிறார்கள். வரியைக் குறைக்கவில்லை என்றாலும் நிவாரணம் கிடைக்க வழி இல்லையா?**

பதில்: நாங்கள் இன்னும் விரும்பிய இலக்குகளை அடையவில்லை. உலகிலேயே மிகக்குறைந்த வரி வருவாயைக் கொண்ட நாடு நாம்தான். இலக்கை நோக்கி எங்கோ சென்று கொண்டிருக்கிறோம். அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் அது சுருங்கிய பொருளாதாரத்துடன் செல்ல வேண்டும். அதேசமயம் வங்கி வட்டி வீதங்கள் அதிகரித்து, வியாபாரம் பாதிக்கப்பட்டு, வருமானம் குறைந்துள்ளது. ஒரு அரசாங்கம் வரி விதிக்க வேண்டும். முடிந்தவரை, வரிகளால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்க நாங்கள் பணியாற்றுகிறோம். வரி அடிப்படையை அதிகரிப்பதே எங்கள் இலக்கு. உண்மையில் வரி செலுத்த வேண்டிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வரி செலுத்துவதில்லை. வரி செலுத்த அவர்களை வழிநடத்துதல் மற்றும் அதிக வரிச்சுமையை சுமப்பவர்களுக்கு முறையாக நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவோம்.

**கே: வாகனங்கள் தவிர பிறபொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதன் மூலம் விரும்பிய இலக்குகள் எட்டப்படுமா?**

பதில்: நாம் இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் நாடு, அத்தகைய நாடு இறக்குமதியை முழுமையாக நிறுத்த முடியாது. காய்கறிகளை இறக்குமதி செய்ய அனுமதித்தால், வெள்ளரிகளும் இறக்குமதி செய்யப்படும் என்று சிலர் நினைக்கிறார்கள். எங்களிடம் சக்திவாய்ந்த கட்டுப்பாடுகள் கொண்ட கட்டுப்பாட்டுச் சட்டங்கள் உள்ளன. மேலும் அதற்கு இறக்குமதி வரி விதிப்பு உள்ளது. சில பொருட்களுக்கு 400 சதவீதம் பெரிய வரி விதிக்கிறோம். அத்தகைய கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, அத்தகைய பொருட்களின் இறக்குமதியை நாங்கள் அங்கீகரிக்கிறோம். உள்ளூர் பொருளாதாரத்தை காப்பாற்ற சில பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். ஆனால் நாம் நமது ஏற்றுமதித் தளத்தை மேம்படுத்த வேண்டும்.

**தனியாகப் பாராளுமன்றத்திற்கு வந்த ஒருவரால் நாடு காப்பாற்றப்பட்டது. அவர் முயற்சி மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் இன்று என்ன நடந்திருக்கும் என்பது தெரியவில்லை**



---



# மீண்டெழுந்து வந்த உலக பொருளாதாரத்தில் வீழ்ந்துள்ள பேரிடி!

**உலகின் அமைதி குலைந்து பல வருடங்களாகிவிட்டது. உலக நாடுகளின் பொருளாதாரம் சீரடைந்து கொண்டு வருகையில், ஒவ்வொரு தடவையும் பாரதூரமான நிகழ்வுகள் அரங்கேறி விடுகின்றன. உலகநாடுகள் பொருளாதாரத்தில் மீண்டும் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து விடுகின்றன. அந்நாடுகள் பொருளாதாரத்தில் மீண்டெழுவதற்கு வருடக்கணக்கில் மீண்டும் போராட வேண்டியிருக்கின்றது.**

கடந்த சுமார் நான்கு வருடங்களாகத் தொடருகின்ற நிகழ்வுப் போக்குகளைப் பார்க்கும் போது, உலக பொருளாதாரம் இயல்புநிலைமைக்கு மீண்டு வருவதற்கான வாய்ப்பு இல்லையென்றே நினைக்கத் தோன்றுகின்றது. உலகின் நிலைமை கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வாறுதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உலக நாடுகளின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் இன்னுமே மீண்டெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

நாடுகளின் வருமானம் குன்றி விட்டது. தொழிலில்லாப் பிரச்சினை அசுர வேகத்தில் அதிகரித்து வருகின்றது. இலாபத்தில் இயங்கிய பெருநிறுவனங்களே இறுதிமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன. உலகின் பிரபல்யமான பெருநிறுவனங்கள் தங்களது ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் தொடங்கி விட்டன. இலாபப் பங்கீட்டுக் கொடுப்பனவு வழங்குவதையும் ஏராளமான நிறுவனங்கள் நிறுத்தி விட்டன. அந்நிறுவனங்கள் எதிர்காலம் குறித்த கேள்விக்குறியுடன்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.



**கொவிட் பெருந்தொற்றினால் ஆரம்பமான பொருளாதார வீழ்ச்சியானது ரஷ்ய–உக்ரேன் யுத்தம், இஸ்ரேல்–ஹமாஸ் போர் என்றவாறு முடிவின்றித் தொடர்கின்றது!**

2019 டிசம்பர் மாதத்தில் கொவிட் பெருந்தொற்று உலகநாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும் சர்வதேச பொருளாதாரம் அதலபாதாளத்துக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து எந்தவொரு நாடுமே தப்பிக் கொள்ளவில்லை. அதன் தாக்கம் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இலங்கையும் அப்பாதிப்புக்கு விதிவிலக்காக வில்லை.

உலகை விட்டு கொவிட் பெருந்தொற்று படிப்படியாக விடைபெற்றதும், உலக பொருளாதாரம் பெரும் பிரயத்தனத்துடன் மீண்டெழுந்து வரத் தொடங்கிய வேளையில், ரஷ்ய_ உக்ரேன் யுத்தம் திடீரென வெடித்தது. இருதரப்பிலும் உயிர்ப் பலிகள் அதிகரித்தன. இருநாடுகளின் பொருளாதாரமும் வீழ்ச்சியுற்றது.

அதன் காரணமாக உலகின் பொருளாதாரமே மீண்டும் ஆட்டம் காணத் தொடங்கியது. உலகில் கோதுமைத் தானியத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதில் ரஷ்யாவும் உக்ரேனும் பிரதான இரு நாடுகளாகும். இவ்விரு நாடுகளும் உலகின் கோதுமைத் தேவையில் மூன்றிலொரு பங்கைப் பூர்த்தி செய்கின்றன.

கோதுமையை மாத்திரமன்றி, உலகநாடுகளின் பிற தேவைகள் பலவற்றை ரஷ்யாவும் உக்ரேனும் பூர்த்தி செய்து வந்ததனால் அவ்விரு நாடுகளுக்குமிடையில் கடந்த ஒன்றரை வருடகாலத்துக்கு மேலாக தொடருகின்ற யுத்தமானது உலக பொருளாதாரத்தை மறைமுகமாகப் பாதித்த வண்ணமே உள்ளது.

ரஷ்ய_ உக்ரேன் போர்த் தாக்கம் தணிவதற்கிடையில், இஸ்ரேல் நாட்டுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்குமிடையில் இப்போது கடும் போர் மூண்டுள்ளது. ரஷ்ய_ உக்ரேன் யுத்தத்தைப் பார்க்கிலும், இஸ்ரேல்_ ஹமாஸ் யுத்தமானது உலக பொருளாதாரத்தில் மோசமான தாக்கத்தைச் செலுத்துமென்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். இப்பாதிப்பிலிருந்து இலங்கையும் விதிவிலக்காகப் போவதில்லை.

உலகசந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பதால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கும், சுற்றுலாப்பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படும், பங்குச்சந்தையில் வீழ்ச்சி ஏற்படும். இறக்குமதிப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கத்தான் போகின்றன.

உலகநாடுகள் மாத்திரமன்றி, இலங்கையும் இவ்வாறான பாதிப்புகளை எதிர்கொள்ளத்தான் போகின்றது. இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்குமிடையிலான யுத்தம் விரைவில் முடிவுக்கு வந்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாது. இருதரப்புமே பலம் பொருந்தியவை என்பதால் தீவிர யுத்தம் தொடரத்தான் போகின்றது.

நாளும்பொழுதும் தாக்குதல்கள் உக்கிரமடைகின்றன. உயிர்ப் பலிகள் மோசமாக அதிகரித்துச் செல்கின்றன. கட்டடங்கள் தரைமட்டமாகிப் போகின்றன. இருதரப்பு உயிர்ப்பலிகளையும் பார்த்து உலகமே அதிர்ந்து போய் நிற்கின்றது.

கொவிட் தாக்கத்தின் பின்னர் உலக பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற மூன்றாவது காரணியாக இஸ்ரேல்_ ஹமாஸ் யுத்தத்தைக் குறிப்பிடலாம்.

உலக பொருளாதாரத்தைப் பாதிக்கின்ற யுத்தம் இவ்வாறு அடுத்தடுத்து உருவெடுக்கும் போது, உலகநாடுகள் எப்போதுதான் அமைதிக்காற்றைச் சுவாசிக்கப் போகின்றன? போட்டாபோட்டிகளும் யுத்தங்களும் உலகைவிட்டு முற்றாக நீங்குவது எப்போது? அமைதியை விரும்புகின்ற உலகமக்களின் ஏக்கம் இதுதான்!

எஸ்.பி...



# தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை முன்னெடுக்கும் கருத்தாடல்கள்!

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா? அதன் மூலம் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அவசியமா? என்பது போன்ற விடயங்கள் கடந்த சில வாரங்களாக அரசியல் அரங்கத்தில் பேசுபொருளாகியுள்ளன.**

தற்போது இது வெறும் ஊகம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் சாத்தியக்கூறு குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற அரசியல் பிரமுகர்களிடையே அரசியல் விவாதங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் இது தேர்தலை ஒத்தி வைப்பதற்கான ஒரு சூழ்ச்சியென எதிர்க்கட்சியினால் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

அடுத்த வருடம் தேர்தல்கள் நடத்தப்படும் ஆண்டாக அமையும் எனக் கணிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையிலேயே இவ்வாறான கருத்தாடல்கள் முன்வைக்கப்படுகின்றன.

தேர்தலை இரத்துச் செய்யவில்லை. தேர்தல் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்த போதே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் நிதியமைச்சின் செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாதென தெரிவித்திருந்தார். தனிப்பட்ட ரீதியில் தேர்தலுக்கு செலவிடுவதற்கு நிதி கிடைக்கலாம். ஆனால், அரசாங்கம் என்ற வகையில் இதற்கான நிதியை விடுவிக்க முடியாத நிலையிலேயே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். சில பகுதிகளுக்கு பிரதிநிதிகள் இல்லாமலாகும் நிலைமை தொடர்பிலும் அனைவரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு தேர்தல் சட்டத்தைத் திருத்துவது குறித்து கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை கலப்பு முறையில் நடத்துவது தொடர்பான யோசனைகளும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பொதுத்தேர்தல் குறித்த சட்டத்தில் திருத்தங்களை முன்னெடுப்பது குறித்து கருத்தாடல்கள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கான யோசனையை நீதி அமைச்சர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருப்பதாக அரசாங்கத்தின் தரப்பில் கூறப்படுகிறது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வருட முற்பகுதியில் நடவடிக்கை எடுத்திருந்த போதும், பொருளாதார நெருக்கடிகளால் தேர்தலுக்கு நிதி ஒதுக்க முடியாது எனத் திறைசேரியினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதற்கான முயற்சிகள் கைவிடப்பட்டன.



உண்மையில் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தேர்தலுக்கு செலவு செய்யப்படும் பணம் குறித்த அக்கறை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம். இருந்த போதும், மக்களின் வாக்களிக்கும் உரிமை மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மக்களுக்குக் காணப்படும் உரிமைக்கு மதிப்பளிக்கப்படவும் வேண்டும். இது இவ்விதமிருக்க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது குறித்த கருத்தாடல்கள் மீண்டும் உருவாகியுள்ளன. கடந்த ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் கட்சிக் காலத்தில் பேசப்பட்ட விடயம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

அது மாத்திரமன்றி 2022 ஆம் ஆண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இருந்தபோதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாயின் கொள்கை ரீதியில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அப்பால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.



**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்த விடயமும் அரசியல் களத்தில் மீண்டும் பேசுபொருள்!**

இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால், அது எதிர்க்கட்சிகளை, குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருபவர்களை ஒரு கடினமான நிலைக்கும் தள்ளலாம். அதை முன்வைக்கும் போது அவர்கள் அதை எதிர்ப்பதாக பார்க்க முடியாது. அனைத்து அரசியலமைப்பு சீர்திருத்தங்களும் முடிவடையும் வரை பொதுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என்பது எதிர்க்கட்சிகளின் முக்கிய கவலையாகும்.

இருந்தாலும், எதிர்க்கட்சிகளும், ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் தம்மைத் தேர்தலுக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுத்தியிருப்பதையும் மறுக்க முடியாது. குறிப்பாக எதிர்க்கட்சிகள் பொதுக் கூட்டணிகளை அமைத்துத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முனைப்புக்களைக் காண்பித்து வருகின்றன.

ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும், பிரதான ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவும் கூட்டணி அமைக்கவிருப்பதாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றபோதும், இதுபற்றிய உறுதியான நிலைப்பாடு அறிவிக்கப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்படும் பட்சத்தில் பொதுவேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனப் பொதுஜன பெரமுனவின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்திலேயே இந்த நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. அதேபோல எதிர்க்கட்சிகளும் தமக்கிடையிலான கூட்டணிகளை அமைப்பதில் முனைப்புக் காட்டியுள்ளன.

எனினும், அடுத்த வருடம் எந்தத் தேர்தலில் முதலில் நடத்தப்படும், அதற்கான ஏற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**பி.ஹர்ஷன்...**

---

# இந்திய ஏற்றுமதியில் பெரும் தாக்கம் செலுத்தும் இஸ்ரேல்–ஹமாஸ் யுத்தம்!

**சர்வதேச பொருளாதாரத்தில் ஒரு தாக்கம் நிகழ்ந்தால், அது எல்லா நாடுகளிலும் ஏதாவது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கின்றது. அந்த வகையில், இஸ்ரேல்–ஹமாஸ் இடையிலான தற்போதைய மோசமான யுத்தம் இந்திய வர்த்தகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துமா? இல்லையா என்பது குறித்து இந்திய பொருளாதார நிபுணர்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.**

உலக பொருளாதாரத்தில் இந்தியா தற்போது பிரதானமான நாடாகத் திகழ்வதால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் ஆயுதக்குழு இடையேயான யுத்தமானது இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுதான் கணிப்பாக இருக்கின்றது. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரின் தீவிரம் அப்பிராந்தியத்தில் பல ஆண்டுகளில் இல்லாத பேரழிவை ஏற்படுத்தியுள்ளதால், உலக நாடுகள் தற்போது அதிர்ச்சியில் உறைந்துள்ளன.

இந்தச் சூழலில், இந்தியாவின் வர்த்தகத்திலும் இதன் தாக்கம் இருக்கத்தான் செய்யும் என்கின்றனர் இந்திய ஏற்றுமதியாளர்கள். முக்கியமாக வான்வழி, கடல்வழி மற்றும் நிலப்பரப்பு வழியாகவும் தாக்குதல் நடப்பதால் இந்தியாவில் இருந்து இஸ்ரேலுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதில் ஆபத்து அதிகமாக உள்ளது.

இந்திய பொருளாதாரத்தில் எவ்வாறான பாதிப்பு எதிர்நோக்கப்படுமென்று நிபுணர்கள் பலர் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இஸ்ரேல்_ ஹமாஸ் போர் காரணமாக, இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு காப்புறுதிக்கான பிரீமியம் தொகையையும், ஏற்றுமதி செய்வதற்கான செலவினங்களையும் இந்திய அரசின் கீழ் செயற்படும் ஏற்றுமதி மற்றும் கடன் உத்தரவாதத்திற்கான அமைப்பு அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது.

எனவே இஸ்ரேல் நாட்டுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்து ஈட்டுகின்ற இலாபம் கணிசமாகக் குறைவதற்கு வாய்ப்புள்ளதாக இந்திய ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த இரு நிதியாண்டுகளாக இஸ்ரேலுக்கு இந்தியா பொருட்களை ஏற்றுமதி செய்வது 75 சதவீதம் அதிகரித்துள்ளது.எனவே இந்திய ஏற்றுமதி அதிகரித்து வந்துள்ள நிலையில் தற்போது யுத்தத்தினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021_22 ஆம் நிதியாண்டில், சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஏற்றுமதி செய்த நிலையில், அது 2022_23 ஆம் நிதியாண்டில் சுமார் 68 ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை ஏற்றுமதியில் மாத்திரமன்றி இறக்குமதியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2022_2023 ஆம் நிதியாண்டில் இஸ்ரேலுக்கு சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியில் இந்தியா டீசலை ஏற்றுமதி செய்துள்ளது.

அடுத்ததாக, பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலும், சுமார் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் இஸ்ரேலுக்கு இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

இதுதவிர பொட்டாசியம் குளோரைட் 861 கோடி ரூபாய் பெறுமதியிலும், 490 கோடி ரூபாய் மதிப்பில் களைகொல்லிகளையும் இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.








**உலக பொருளாதாரத்தில் வல்லரசாக உருவெடுத்து வருகின்ற இந்தியாவின் ஏற்றுமதித்துறையில் இஸ்ரேலும் பிரதான நாடு!**

மென்பொருள் சேவையில் இஸ்ரேலுக்கு தேவையான software development, IT consulting, data processing போன்றவற்றையும் இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது.

அதேசமயம் இஸ்ரேலில் இருந்து இந்தியாவும் பல பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றது. இந்தியாவில் உள்ள பெரிய மருத்துவமனைகள் இஸ்ரேலில் இருந்து மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்கின்றன.

இதுதவிர, இஸ்ரேலில் உள்ள நிறுவனங்கள் இந்தியாவில் சுகாதாரத்துறை, மாற்று எரிசக்தித்துறை, இராணுவ தளவாடங்கள், கட்டுமானம் உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை செய்துள்ளன. இரு நாடுகளும் தடையற்ற வர்த்தகத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இது ஒருபுறமிருக்க, இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் பதற்றம் தொற்றியுள்ள நிலையில், மசகு எண்ணெய் தாறுமாறாக விலை ஏறத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் மசகு எண்ணெய்த் தேவையில் 80 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது மசகு எண்ணெய் விலை ஏற்றமானது இறக்குமதிக்கான செலவினங்களை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், உள்நாட்டில் பணவீக்கம் உயரும் சூழலும் உருவாகக் கூடும்.

அதானி குழுமத்திற்கு ஏற்படப் போகின்ற பாதிப்பும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மிகப்பெரிய இஸ்ரேலிய துறைமுகமான ஹைஃபா, தாக்குதல் நடைபெற்று வரும் காஸாவில் இருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மற்றொரு பெரிய துறைமுகமான அஷ்டோத், ஹைஃபா துறைமுகத்துக்கும் தொலைவிலேயே இருக்கிறது. இதனால் பாதிப்புகள் பெரிதாக இருக்காது என்றாலும், இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான அதானி குழுமத்தின் துறைமுகங்கள் ஹைஃபா துறைமுகத்தில் சுமார் 70 சதவீத பங்குகளைக் கொண்டுள்ளன.

எனவே, இந்தப் போரானது அதானி போர்ட்ஸ் நிறுவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இஸ்ரேலுடனான இந்தியாவின் வணிகப்பொருள் வர்த்தகமானது செங்கடலில் அமைந்துள்ள ஈலாட் துறைமுகம் மூலமாகவே நடைபெறுகிறது. துறைமுகங்களில் பாதிப்புகள் ஏற்படுமாயின் அது இருநாட்டு வர்த்தகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

1967ஆம் ஆண்டில் இஸ்ரேல் மற்றும் அரபு நாடுகளுக்கு இடையே 6 நாட்கள் தொடர்ந்த யுத்தத்தின் போது வர்த்தகத்தில் இவ்வாறான பாதிப்புகள் எதிர்நோக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் கப்பல் போக்குவரத்துக்கு முக்கிய பங்களிக்கும் சுயஸ் கால்வாயை எகிப்து சுமார் 8 ஆண்டுகள் வரை மூடுவதற்கு இந்தப் போர் முக்கிய காரணமாக அமைந்தது. மேற்காசிய நாடுகள் மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய சுயஸ் கால்வாயைத்தான் பயன்படுத்தி வந்தன.

இதற்கிடையில், 1973ஆம் ஆண்டில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் நடந்த மற்றொரு போர் காரணமாக, மசகு எண்ணெய் விலை அதிகரித்தது. இது சர்வதேச பொருளாதாரத்தை நெருக்கடியில் வைத்திருந்தது.

இஸ்ரேலில் காஸா பகுதியில் மட்டுமே தாக்குதல்கள் இடம்பெற்று வரும் நிலையில், மற்றைய பகுதிகளில் பெரிய பாதிப்பு இல்லை எனக் கூறப்படுவதால் வர்த்தகத்தில் பெரிய அளவிற்கு இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும் எவ்வளவு காலத்திற்கு போர் நீடிக்கும் என்பதை பொறுத்தே பாதிப்புகள் பற்றி கூறமுடியும் என இந்திய ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.

**எஸ்.சாரங்கன்...**

# தேசிய மீலாதுன் நபி விழா இன்று மன்னார் முசலி தேசிய பாடசாலையில்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை 9.30 க்கு தேசிய மீலாதுன் நபி விழா மன்னார் முசலி தேசிய பாடசாலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான கே. காதர் மஸ்தான், மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையில் உள்ள முஸ்லிம் வெளிநாட்டுத் தூதரகங்களின் தூதுவர்கள், பிரதேசச் செயலாளர்கள், அரச அதிகாரிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், எனப் பலர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.



## பொறுமையும் மௌனமும்தான் நபிகளாரின் கூரிய ஆயுதங்கள்

இஸ்லாம் மார்க்கத்தின் இறைத் தூதரான முஹம்மது நபி அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் இலங்கைவாழ் முஸ்லிம் மக்களுக்கும், உலக வாழ் முஸ்லிம் மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து மனிதகுலத்திற்கும் அன்பு மற்றும் அமைதியின் செய்தியைப் பரப்பிய இஸ்லாத்தின் தூதரான முஹம்மது நபி அவர்கள், அல்லாஹ்வின் கடைசி இறைதூதராவார்.

அன்றைய சமூகத்தில் இஸ்லாத்தின் தூதை முன்வைப்பதில் நபிகளார் முகங்கொடுத்த கடினமான அனுபவங்கள் கொஞ்ச நஞ்சமல்ல அப்படிப்பட்ட தருணத்திலும் பொறுமையும் மௌனமும் தான் அவரின் கூரிய ஆயுதங்களாக இருந்தன. நம்பிக்கை மற்றும் மனிதநேயத்திற்காக அவர் செய்த அளவற்ற தியாகத்தின் விளைவாக அவர் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடிந்தது.

பரஸ்பர புரிதல் சகோதரத்துவம், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல் நேர்மை என அவர் வாழ்நாள் முழுவதும் காத்து வந்த பண்புகளை, நபிகள் நாயகத்தின் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் நமது வாழ்வில் இலட்சியமாகக் கொள்ளவேண்டும். மேலும், அவரது தத்துவத்தை மேலும் சமூகமயமாக்கவும் நல்லிணக்கத்தை உருவாக்கவும் பணியாற்றுவது அவருக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த மரியாதை என்று நான் நம்புகிறேன்.

நபிகள் நாயகம் காட்டிய விழுமியங்களுக்கு ஏற்ப நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் முறியடித்து 2048 ஆம் ஆண்டளவில் வளர்ந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான பாதையை வலுப்படுத்த அனைத்து இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளையும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ரணில் விக்கிரமசிங்க**
**ஜனாதிபதி**
**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வழிகாட்டல்களை பின்பற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்



ஆதி நபி ஆதம் (அலை) அவர்கள் முதல் இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்கள் வரை சுமார் 124,000 நபிமார்களை தனது பிரதிநிதிகளாக இவ்வுலகிற்கு இறைவன் அனுப்பியுள்ளான். "ஸலாஹ்" எனும் சொல்லில் இருந்து உருவாகும் "இஸ்லாம்" என்ற மார்க்கத்ததின், வழிகாட்டலை மனித சமுதாயத்திற்கு வழங்கவே நபிமார்களை இறைவன் அனுப்பினான். இஸ்லாம் என்றால் சாந்தி, சமாதானம், ஒற்றுமை என்ற பொருள் தரும். முஸ்லிம்கள் கூறும் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்பது "உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக" எனப் பொருள்படும்.

உலகின் பல்வேறுபட்ட நாடுகளில் பல்வேறுபட்ட சமூகத்தினருக்கு பல்வேறுபட்ட காலகட்டங்களில் அனுப்பப்பட்ட தூதுவர்களில் இறுதியாக வந்தவர்தான் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார். அனைத்து நபிமார்களும் இறைவனின் கட்டளைகளையும், வழிகாட்டல்களையும் மக்களுக்கு கொண்டு சென்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டார்கள்.

பிரிவினைகள், பேதமைகள் இன்றி எவ்வாறு சமூகங்கள் ஒற்றுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் வாழ வேண்டும் என்பதை எடுத்தியம்புவதே அவர்களின் கடமையாக இருந்தது. அதேபோல் மானுட நேயம், நற்பண்புகள், ஒழுக்க விழுமிய பண்பாட்டியல் நெறிமுறைகள் என்பன அவர்களால் போதிக்கப்பட்டன. அந்த வகையில் பூரணப்படுத்தப்பட்ட புர்கான் எனும் வேதத்தை மானிடருக்கு வழங்கிட வந்த முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றுகின்ற நமக்கும் அதன் பொறுப்புகள் உண்டு.

அதேபோல் பல்லினச் சமூகங்கள் வாழ்கின்ற எமது நாட்டின் ஓர் முக்கிய தளமாக இருக்கின்ற மன்னார் மாவட்டத்தில் இவ்விழாவை நடாத்த வேண்டும் என தொடராக நான் கோரிவந்தேன். எல்லாம் வல்ல இறைவனின் அருளால் அந்த அவா இந்த 39வது மீலாத் நிகழ்வுடன் நிறைவடைகின்றது. இதற்காக சகல வழிகளிலும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கரம் தந்து இவ்விழா சிறப்புடன் நிறைவு பெற உதவிய அனைவருக்கும் இறைவனின் அருளும் ஆசியும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**கே. காதர் மஸ்தான்**
**மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர்**



## நீதி மற்றும் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப தன்னை அர்ப்பணித்தவர் நபிகளார்

தனது வாழ்க்கையை மனிதநேயம், நீதி மற்றும் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப அர்ப்பணித்த நபிகளாரின் பிறந்த நாள் உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

முஹம்மத் நபி அவர்களுக்கு 40 வயதாக இருந்த போது நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் அவர் இஸ்லாத்தின் இறுதி நபி என்று அறியப்படுகிறார். இறைகட்டளைகளை பின்பற்றி மக்களை நல்வழிப்படுத்துவது அவரின் போதனையாக இருந்தது.

இலங்கை முஸ்லிம்கள் நபிகள் நாயகத்தின் போதனைகளை பின்பற்றி நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப இனம், மதம், சாதி அல்லது வேறு எந்த வேறுபாடும் இல்லாமல் முன்னோடியாக செயற்படுவது தேசத்தின் பாக்கியம் எனலாம்.

வருடாந்தம் கொண்டாடப்படும் நபிகள் நாயகத்தின் பிறந்தநாளை முன்னிட்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், அமைதி மற்றும் தியாகத்துடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிறந்த புரிந்துணர்வுடன் பணியாற்ற வேண்டும். சகோதரத்துவத்தை அதிகப்படுத்தி நபியவர்களின் போதனைகளால் அறிமுகப்படுத்தப்பட்ட நல்ல சமுதாயத்தை உருவாக்கும் உன்னதப் பணியை நிறைவேற்றுவது தற்போதைய இலங்கை சமூகத்தின் பொறுப்பாகும்.

அதற்கு நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை மற்றுமொரு சந்தர்ப்பமாக கொண்டு செயற்படுகின்ற இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எனது இனிய மீலாதுன் நபி நல்வாழ்த்துக்கள்.

**விதுர விக்ரமநாயக்க**
**புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்**

## Northern Uni பல்கலைக்கழகமாக மாற்றப்படும் காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை





காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகை Northern Uni பல்கலைக் கழகமாகவும் தொழில்நுட்ப பூங்காவாகவும் மாற்றப்படுகின்றது. வடக்கு, கிழக்கின் கல்வித்துறை மற்றும் தொழில்வாய்ப்பு மேம்பாட்டில் புதிய அத்தியாயத்தினை ஏற்படுத்தும் நோக்கோடு பல்கலைக்கழகம் விரிவாக்கப்படுவதோடு தொழில்நுட்ப பூங்காஒன்றினையும் அமைப்பதற்காக ஜனாதிபதி மாளிகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. Northern Uni ஆனது மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட மற்றும் கனடா வாழ் தமிழ் முதலீட்டாளர் இந்திரகுமார் பத்மநாதனின் பூரணமான நிதி முதலீட்டில் வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு சிறந்த உயர்தரத்திலான கல்வி வாய்ப்பினை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. Sri Lanka Institute of Information Technology (SLIIT), University of Bedfordshire (UK), University of Curtin (Australia) மற்றும் University College of Renison affiliated with the University of Waterloo (Canada) என்பன விளங்குவதுடன், சர்வதேச ரீதியில் பிரபலமான மேலும் பல பல்கலைக்கழகங்களும் இணைய இருக்கின்றன. இலங்கையில் வருடா வருடம் நடைபெறும் க.பொ.த உயர்தர பரீட்சையின் போது சுமார் 22600 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெறுகிறார்கள். இருப்பினும் 4379 பேர் மட்டுமே பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிறார்கள். 18289 மாணவர்கள் தகுதி பெற்றும் அவர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத நிலை காணப்படுகிறது. இந்நிலையினை சரி செய்யும் நோக்கிலேயே NorthernUni உருவாக்கப்பட்டதுடன் இதற்கான ஆதரவும் வரவேற்பும் கிட்டியது அளப்பெரிய விடயமாகும். இதுவரை காலமும் வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்கள் தொழில்நுட்ப கற்கையினை கொழும்பு சென்று கற்க வேண்டிய நிலை காணப்பட்டது.

தற்போது நான்கு வருட தொழில்நுட்ப கற்கையினை யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளக் கூடிய வசதி வாய்ப்புகளுடன் கந்தர்மடம் பகுதியில் CITY CAMPUS நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசில்களும் உயர்தரத்தில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு இலவச கற்கையும், அதனோடு மாதாந்த கொடுப்பனவு வசதிகளும் வழங்கப்படவுள்ளது. மேலும் Yarl Education Support Fund (YES) ஊடாக குறைந்த மற்றும் வருமானமற்ற குடும்ப பின்னணியில் உள்ள மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் மூலம் அவர்களின் உயர் கல்வியை கற்பதற்கான வாய்ப்பினையும வழங்கவுள்ளது.

CITY CAMPUS ஆனது 2000 மாணவர்கள் கல்வி கற்க மட்டுமே போதுமான வசதியினைக்கொண்டிருப்பதால் அதனை விஸ்தரித்து 10000 மாணவர்கள் கல்விகற்கக் கூடிய உயர்ந்த தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடனான பல்கலைக்கழகத்தையும், 25000 பேருக்கு வேலை வாய்ப்புக்கு வசதியளிக்கும் முகமாக தொழில்நுட்ப பூங்காவையும் நிறுவுவதற்கான நிலப்பரப்பை பல்வேறு வகையில் ஆராய்ந்த போது UDA மூலம், முன்னாள் ஜனாதிபதியால் அரச காணிகளையும் சில தனியார் காணிகளையும் இணைத்து அதியுயர் வசதிகளுடன் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை பலகாலமாக பயன்படுத்தப்படாது காணப்படுவதாகவும், இந் நிலப்பரப்பினை வழங்குமாறு இருவேறு தரப்பினர் அணுகியுள்ளதாகவும் தகவல் கிடைத்ததால். NorthernUni நிறுவுனர் இந்திரகுமார் பத்மநாதன் கண்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தார்.

இதன்போது தனதுநோக்கத்தையும் அதனால் மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படவிருக்கும் விருத்தி குறித்தும் எடுத்துக் கூறியதால் ஜனாதிபதி, கல்வி முயற்சிக்கு இந் நிலப்பரப்பை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டார். அதனடிப்படையில் துரிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ஒக்டோபர் மாதம் 16ம் திகதி UDA தவிசாளர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஜனாதிபதி மாளிகை அமைந்திருக்கும் நிலப்பரப்பளவில் தனியார் காணிகள் சில அமைந்துள்ளன.

அதன்படி தனியார் காணிகளை சுவீகரிப்பதற்காக இழப்பீடு செலுத்துவதற்கும் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


## இலங்கை வங்கி

### பெறுமதிமிக்க ஆதனங்கள் விற்பனைக்கு

| ஆதன இல. | நகரம் | விபரமும் அமைவிடமும் | ஆதனத்தின் வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 403 | ருவான்வெல்ல | முன்னர் வரையறுக்கப்பட்ட சிறிமா நேசிங் ஹோம் (தனியார்) நிறுவனம், ருவான்வெல்ல கிராமத்தில் அமைந்துள்ள "மஹவத்த" எனப்படும் காணி. | காணியும் கட்டடமும் | 7.40 பேச் |
| 412 | கிளிகத்தேனை | முன்னர் கிறின் வியூ ஹொட்டேல், கிளிகத்தேனை, பகதலுவ என்ற முகவரியில் அமைந்துள்ள "நோரிஸ்லாண்ட்" (பகுதி) எனப்படும் காணி. | காணியும் ஹொட்டேல் கட்டடமும் | 32.0 பேச் |
| 413 | மாவனல்லை | முன்னர் வரையறுக்கப்பட்ட அல் முபாரிஸ் (தனியார்) நிறுவனம், இல. 4, ஹசன் மாவத்தை, மாவனல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள "கொடதெனிய கும்புர" இப்போது ஹைலண்ட் எனப்படும் காணி. | காணியும் கட்டடமும் | 1.0 ரூட் 8.2 பேச் |
| 428 | நுகேகொட | முன்னர் ஆ.'ஞு ருசிறு கொன்ஸ்ரக்ஷன் இல. 14, மாதிவெல வீதி, உதஹமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள "கெக்குறாகஹவத்த" எனப்படும் காணி. | காணியும் கட்டடமும் | 7.65 பேச் |
| 468 | சிலாபம் | கப்றி ஹொட்டேல் அன்ட் றிசோட் நூர்தீன்வத்த (இயவத்த), சிலாபம் என்ற முகவரியில் அமைந்துள்ள இயவத்த என அழைக்கப்படும் பறங்கித்தோட்டம் என்ற காணி. | காணியும் ஹொட்டேல் கட்டடமும் | 32.0 பேச் |
| 475 | தொம்பே | 387.'ஙூ, தெகவத்த, தொம்பே, கம்பஹா என்ற முகவரியில் அமைந்துள்ள "தொடம்கஹவத்த" எனப்படும் காணி. | காணியும் கட்டடமும் | 1.0 ரூட் பேச் 1.49 |

ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து (உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களுக்கான விலை கூறல்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மீளளிக்கப்படாக் கொடுப்பனவாக 2000 ரூபாவையும் மீளளிக்கப்படக்கூடிய கொடுப்பனவாக 50,000 ரூபாவையும் செலுத்தி 2013.11.09 வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைகூறுவோர், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தொடர்புடைய ஆதன இலக்கத்துடன் "கஙூ.'08.'2023" எனக் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையினுள் இட்டு 2023.11.10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் 2023.11.10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த அலுவலகத்தில் நடைபெறவுள்ள விலைகூறல் திறப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைகூறுவோரால் அனுப்பப்படும் விலைகூறல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி :

இலங்கை வங்கி,
பெருநிறுவன அறவிடற் பிரிவு - கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள் அலகு
3ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01

தொலைபேசி :

உதவிப்பொது முகாமையாளர் (பெருநிறுவன அறவிடல்) - 011-2386080 ∴ 011-2203410
சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 ∴ 011-2203429 ∴ 076 9627068
உதவி முகாமையாளர் - 011 220 3470 ∴ 071 8418898

மின்னஞ்சல் : அபசவுசறஉடபுளறறை;ழுஉடடம

ழுறறு.டிழஉடடம என்ற இணையதளத்தில் விசேட அறிவித்தல்களின் கீழுள்ள விற்பனைக்குள்ள ஆதனங்கள் பகுதி மற்றும் இலங்கை வங்கி முகநூற் பக்கம் என்பவற்றைப் பார்வையிடவும்.






சாலிய குணவர்த்தன ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்தில் மொழி பெயர்த்த 10 கதைகளையும் சிங்கள எழுத்தாளர்களான ஜி.பி சேனாநயக்க,தேனகம சிறிவர்த்தன, கபிலகுமார காலிங்க, காமினி நிசாந்த கருணாரத்ன ஆகியோர் சிங்கள மொழில் எழுதிய நான்கு கதைகளையும் மலரன்பன் தமிழில் மொழிபெயர்த்த 14 சிறு கதைகளையும் கொலுஷா பிறமொழி சிறு கதைகள் என்ற பெயரில் கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவு குழு வெளியிட்டுள்ளது. அதன் முதல் பிரதியை தொகுப்பாசிரியர் எச்.எச்.விக்கிரமசிங்க தமிழகத்தில் கொல்லிமலை சித்தர் ஞானபிதா டாக்டர் சௌந்தரராஜா சுவாமிகளுக்கு வழங்குவதையும் சுவாமிகள் பட்டு பீதாம்பரம் அணிவித்து முருகன் சிலை வழங்கி ஆசீர்வதிப்பதையும் படங்களில் காணலாம்.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARY

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கனேமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ரெஸ்டுரன்ட் இற்கு கொத்து/ அப்பம் பாஸ், கிச்சன் ஹெல்பர் உடன் தேவை. 07704608 53.
067225

வெலிகமையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு ரைஸ் பாஸ், ரொட்டி பாஸ், வெயிட்டர், தோசை, வடை, உளுந்து வடை, போடுவதற்கும் ஜுஸ் மேக்கர் ஒருவரும் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். நல்ல சம்பளம். தொடர்பு கொள்ளுங்கள் 0777294963, 0742767678.
067810

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கிரிந்திவெல ஏக்கர் 7ஆவது தேங்காய் தோட்டம் பார்த்து கொள்வதற்கு மற்றும் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள 50 வயதிற்குக் குறைப்பட்ட நபர் உடனடியாக தேவை. மேலதிக விபரங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தொடர்பு கொள்ளவும். 0772270003.
067504

### 325 தொழில்துறை பொது

எர் கண்டிஷனர் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பழுதுபார்க்கும் தொழிநுட்பம் வல்லுநர்கள், இப்போது முன்னணி நிறுவனத்திற்கு தேவை. தொடர்பு கொள்ளவும் விகாஷ் 0778726432
067922

## பொது

### 426 தொழில் கல்வி

கொழும்பு மாவட்டத்தில் 2024, 2025 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இரசாயனவியல் பல வருட அரச விடைத்தாள் மதிப்பீட்டு அனுபவமுள்ள ஆசிரியரால் அலகு ரீதியாக துரித மீட்டல்களுடன் கூடுதலான பயிற்சியுடன் வீடு வந்து தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும். (பின் தங்கிய மாணவர்களுக்கு விசேட பயிற்சி முறைகளுடன் கவனிப்பு) தொடர்புக்கு 0763038809.
067685

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு05, பார்க் வீதி 10 பேர்ச் வீடு விற்பனைக்கு. பிரதான வீதிக்கு முகப்பாக 5 படுக்கையறை, இணைந்த 5 குளியலறை. 0773686786.
067323

கொழும்பு, ரத்மலான, =ဟ த ர்மராம வீதியில் 8 Perch காணியுடனான வீடு விற்ப னைக்கு உண்டு. 3 Bedrooms, 2 Bathrooms, Kitchen, Hall, Store room, Parking area, Garden உடனான பெரிய வீடும் 1 Bedroom, 1 Bathroom, Kitchen, Hall உடனான Annex உம் உள்ளது. விலை 2 கோடி 40 இலட்சம். தொலைபேசி 077 1699071.
067862

வத்தளை, எண்டேரமுல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் இரு மாடி வீடு, இரு அனெக்ஸ் உடன் விற்பனைக்கு. கொழும்புக்கு அருகில். 0112 9 41115, 0775 4 70351.
067627

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

களனி, வனவாசல 240 பேர்ச் காணி (தரை மட்ட காணி) விற்பனைக்கு வத்தளை, டயர்ஹவுஸ், தொரண சந்தியி லிருந்து பிரவேசிக்க முடியும். 0272246292 0718391873 067626

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

புத்தளத்தில் சொத்து விற்பனைக்கு. புத்தளம் நகரில் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அடுத்துள்ள இணைந்த பாதையில் 60 பேர்ச் காணியுடன் கட்டிடம் விற்பனைக்கு. பிரதான வீதிக்கு 200 மீட்டர். வர்த்தக நோக்கங்கள் மற்றும் வங்கிகளுக்குப் பொருத்தமானது. 0773097803.
066886

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, மாபனாவதுர 14.5 பேர்ச் சிறந்த காணி கீல்ஸ் சுப்பர் இல் இருந்து 400m மற்றும் K.P.H. தனியார் வைத்தியசாலையில் இருந்து 300m. ஒரு பேர்ச் ரூ. 1,600,000/=. 07169733 30.
063875

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ் 0702484848.
067649

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். முழுக் காணித்துண்டும் 35 லட்சம் முதல். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ள அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ் 0702484848.
067647

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

களுபோவில இரண்டு படுக்கையறை ஆடம்பர அப்பாட்மென்ட் 1334 சதுர அடி 27 மில்லியன். 2009இல் கட்டப்பட்டது. முதலாம் மாடி. 0777037765.
067449

adz.lk
It's what you want
The Trusted Market place for Buying & Selling

வாரமஞ்சரி
திருமண சேவைகள்
600/- ரூபா

வாரமஞ்சரி BUDGET ADZ
It suits your budget










BORALESGAMUWA
Land of 20.2 P with an old building surrounded by 5 ft wall on Kanatha Road, 100m from main road (119 Bus Route), near to the playground. W/E Available on site. Lately used as a warehouse, Generating income around LKR 75,000/= Per month.
Price 17.5 Lakhs per perch for sale.
(Negotiable)
Contact Hatna
0776260203

BROKER NEEDED
BROKER IN NEEDED TO SELL 20 PERCH PROPERTY AT PIPE ROAD KOSWATTA.
WORTH 550 LAKHS
CONTACT ONLY REALLY CAPABLE PERSONS ONLY
0777 278 979










QUICK SALE
Yakkala 62.5 Perches
RESIDENTIAL / COMMERCIAL
Whole land / Partial Property for Sale.30 mts from Colombo - Kandy Road
With a Large Single Storey House
077-734 7856 siecoagri@gmail.com

THISSAMAHARAMA
IN THE TOURIST ZONE
ADJOINING A REPUTED TOURIST HOTEL,

WENNAPPUWA
an enterprising town with a wealth of Euros (€€) and Dollars ($$)
WhatsApp - 0771 930 456











பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



# தீவிரமடையும் இஸ்ரேல் ஹமாஸ் போர்

## அமெரிக்க, இஸ்ரேலிய கூட்டு உபாயத்தின் விளைவு

இஸ்ரேல், ஹமாஸ் போர் தீவிரத் தன்மையை நோக்கி நகர்வதாகவும் மீண்டும் ஒரு உலக போருக்கு தயாராவதாகவும் உரையாடப்படுகிறது. அமெரிக்கா இரு விமானம் தாங்கிய போர்க் கப்பல்களை இஸ்ரேலுக்கு ஆதரவாக அப்பிராந்தியத்திற்குள் நகர்த்தியுள்ளது. அதேநேரம் யெமனை அண்டிய கடற்பகுதியில் அமெரிக்கப் போர்க்கப்பல் ஈரானிய ஆதரவு போராளிகளால் ஏவப்பட்ட ஏவுகணையை இடைமறித்து தாக்கி அழித்ததாகவும் ஹமுத்தி போராளிகளால் தரைவழியாக வீசப்பட்ட ஏவுகணைகளையும் ஆளில்லா விமானங்களையும் சுட்டு வீழ்த்தியதாகவும் பென்டகன் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியின் இஸ்ரேலிய விஜயத்தை அடுத்து பிரித்தானியப் பிரதமரது விஜயம் இஸ்ரேல், ஹமாஸ் போரை தீவிரப்படுத்தியுள்ளது. இக்கட்டுரை போரின் நகர்வுகளை தேடுவதாக அமையவுள்ளது.

கடந்த 17.10.2023 அன்று காசாவின் அல் அஹ்லி மருத்துவமனை மீது இஸ்ரேல் விமானத் தாக்குதலை மேற்கொண்டது. அத்தாக்குதலில் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. என்னும் இடிபாடுகளில் கொல்லப்பட்ட பொது மக்கள் சிக்கியிருப்பதாக தெரியவருகிறது. அன்றைய தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் இஸ்ரேலிய விஜயம் திட்டமிடப்பட்டிருந்த போது ஏன் இஸ்ரேல் காசா மருத்துவமனை மீது தாக்கியது என்பது பிரதான கேள்வியாகும். அத்தாக்குதல் பாரிய நெருக்கடியை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தியதுடன் உலகளாவிய ரீதியில் மனிதாபிமான நெருக்கடியாக மாறியுள்ளது. அராபிய நாடுகளில் கொந்தளிப்பும் போருக்கான அறைகூவல்களும் ஏற்படத் தொடங்கியுள்ளன. இவற்றை எல்லாம் மீறிக் கொண்டு இஸ்ரேல் தாக்குதலை நிகழ்த்தியுள்ளது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கு விஜயம் செய்ய திட்டமிட்ட போதே அரபுத் தலைவர்களுடன் உச்சி மகாநாடொன்றையும் மேற்கொள்ளவும் திட்டமிட்டிருந்தார். அத்தகைய சந்திப்பில் போரை முடிவுக்கு கொண்டு வரவும் குறைந்தபட்சம் இஸ்ரேல் மீது போரை ஏனைய அராபிய நாடுகள் மேற்கொள்ளாதிருக்கவும் முயல்வதாக அமைந்திருந்தது. ஆனால் அவற்றை எல்லாம் தகர்த்து இஸ்ரேல் தனது நலனுக்கும் கட்டுப்பாட்டுக்குள்ளும் போரை நிகழ்த்துவதற்கு ஏற்பவே காசா மருத்துவமனை மீதான தாக்குதலை நடாத்தியுள்ளது. காசா மீதான தாக்குதலால் அமெரிக்க ஜனாதிபதியின் நகர்வுகள் அனைத்தும் கலாவதியாகின. அமெரிக்கா போருக்கு உதவுவதிலும் ஆயுத தளபாடங்களை வழங்குவதிலும் தொழில்நுட்ப நெருக்கடியை கையாளவும் சர்வதேச அளவில் எழுந்துள்ள நெருக்கடியை தணிக்கவும் மட்டுமே இஸ்ரேலுக்கு தேவைப்படுகிறது. அதனைக் கடந்து அமெரிக்காவின் விருப்புக்கு அல்லாது யூதர்களின் விரும்புக்கு அமைவாகவே போரை நடத்த திட்டமிடுகிறது. அல்லது அமெரிக்கா தனது உலகளாவிய முகத்தை பாதுகாத்துக் கொண்டு போரை இஸ்ரேல் நிகழ்த்த அனுமதியளித்துள்ளதாகவே விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில் இப்போர் இஸ்ரேலிய, அமெரிக்க கூட்டுத் திட்டமாகவே உள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவு செயலாளர், அமெரிக்க இராணுவத் தளபதி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி என அமெரிக்க அதிகார வர்க்கம் ஒருபுறம் அணிவகுக்க மறுபக்கத்தில் அமெரிக்க போர்க் கப்பல்களும் ஆயுத தளபாடங்களும் அணிவகுத்து இஸ்ரேலின் போரை வழிநடத்துகின்றன. இதே நேரம் மேற்குலகம் இப்போரில் இஸ்ரேலை ஆதரிப்பதென்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளது. இந்திய பூர்வீகத்தைக் கொண்ட பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் இந்தியப் பிரதமர் போன்றே இஸ்ரேலை ஆதரிக்கும் முடிவை உடனடியாக அறிவித்திருந்தார். அவரது போர்க் கப்பல்களும் தயாராவதாகவே தெரியவருகிறது. இதனால் அமெரிக்கா உட்பட மேற்குலகத்தினும் இஸ்ரேலினதும் கூட்டுத் திட்டமிடலாகவே இப்போர் காணப்படுகிறது. ஹமாஸ் அமைப்பைப் பொறுத்தவரை தீவிர ஊடுருவல் தாக்குதலை இஸ்ரேலிய மண்ணில் மேற்கொண்டாலும் அதன் நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாதமாகவே விமர்சிக்கப்படுகிறது. ஆனால் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இஸ்ரேலியர் மேற்கொள்ளும் அரச பயங்கரவாதத்தை எந்த தாராளவாதியும் கண்டு கொள்ளாத நிலையையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கடந்த 70 ஆண்டுகால பலஸ்தீனர்களது உளவியலே யூதர்கள் மீதான போராக மாறியுள்ளது. அது உலகத்தின் கண்களுக்கு பயங்கரவாதமாகவே அமையும். ஆனால் தினம் தினம் பலஸ்தீனர்கள் கொல்லப்படும் போது உலகம் அதற்கு தீர்வையோ அல்லது இஸ்ரேலிய அரச பயங்கரவாதத்தையோ கண்டுகொள்ளவில்லை. மாறாக மறைமுகத்தில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆதரித்தே நின்றது. தற்போதும் உலகத்திற்கு சமாதானம் பேசுவதாகக் கூறிக் கொண்டு போரை. இஸ்ரேலுக்கு சாதகமாக ஆக்குவதில் கவனமாக நகர்கிறது. அமெரிக்காவே போரின் நகர்வுகளை இஸ்ரேலுக்கு சாதகமாக மாற்றிவருகிறது. காரணம்

ஒன்று, அராபிய நாடுகளது அண்மைய போக்குகள் அனைத்தும் ரஷ்யாவையும், சீனாவையும் சார்ந்ததாக மாறிவருகிறது. நீண்டகால விரோதிகளான சவுதி அரேபியாவையும் ஈரானையும் ஒன்றிணைப்பதில் சீனா வெற்றிகண்டது. அவ்வாறே ஈரான், ரஷ்யாவுக்கு ஆளில்லாத விமானம் உட்பட ஆயுத தளபாடங்களை அமெரிக்க எச்சரிக்கையையும் மீறி வழங்கி நேட்டோவின் உக்ரைன் ரஷ்யப் போரை தோல்வி நிலைக்கு கொண்டு செல்ல உதவியது. ரஷ்யாவுடன் இணைந்து ஓபெக் எண்ணெய்வள நாடுகள் விலையையும் உற்பத்தியையும் தீர்மானித்துக் கொண்டமை போன்ற பல விடயங்கள் மேற்குக்கு எதிரானதாக அமைந்திருந்தன. அதனால் மேற்காசியப் பிராந்தியம் முழுவதும் ஒரு போரை நிகழ்த்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கும் மேற்குக்கும் காணப்பட்டது.

இரண்டு, உக்ரைன் ரஷ்யப் போர், மேற்குக்கு சுமையாகவும் வெல்லப்பட முடியாததாகவும் அமைந்திருந்தது. அதிலிருந்து அமெரிக்கா எப்படியாவது வெளியேற வேண்டும் எனக் கருதியது. அதற்கு தாய்வான் - சீன போர் அவசியமானதாக அமைந்த போதும், அதனை சீனா வெற்றிகரமானதாக கையாண்டிருந்தது. அதனால் அமெரிக்காவுக்கும் மேற்குலகத்துக்கும் இஸ்ரேல், ஹமாஸ் போர் அதிகம் இலாபகரமானதாக அமைந்திருக்கிறது. ஐரோப்பா பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் போது போர் மேற்குலகத்துக்கு வாய்ப்பானதாக மாறியுள்ளது.

இதில் போர் பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடியை திசை திருப்புவது என்ற அடிப்படையில் இலாபகரமானதாகும். அவ்வாறே மேற்காசியாவில் குவிந்துள்ள வளங்களை மீளவும் ஒருதடவை சுரண்டுவதற்கு வாய்ப்பான சூழலை போர் தந்திருப்பதாகவே மேற்குலகம் கருதுகிறது.

மூன்று, கீழைத்தேச நாடுகளின் எழுச்சியும் பொருளாதார பாய்ச்சலும் மேற்குலகத்திற்கு எதிரானதாக அமைந்துள்ளது. குறிப்பாக பிறிக்ஸ் விரிவாக்கம் மேற்காசியா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளதனால் மேற்குலகத்துக்கு அதிக நெருக்கடி உருவாகும் நிலை ஏற்பட்டிருந்தது. அதனை இப்போர் குழப்புவதுடன் போரின் பின்னான உலகம் மேற்கின் ஆதிக்கத்திற்குள் மீளவும் உலகத்தை நகர்த்த உதவுவதாக அமையும். அதற்கு அமைவாகவே போரை மேற்குலக நாடுகள் முழுமையாக கையாள ஆரம்பித்துள்ளன. இஸ்லாமிய நாடுகளை முழுமையாக அடிமைப்படுத்துவதும் அந்த நாடுகளின் வளங்களை கையகப்படுத்துவதுடன் ரஷ்யா, சீனாவின் எழுச்சியை முடிவுக்கு கொண்டுவர முடியுமென கருதுகின்றன. அதற்கான களமாகவே ஹமாஸ் இஸ்ரேல் போர் உள்ளது.

நான்கு, இஸ்ரேலிய, ஹமாஸ் போர் இராணுவ ரீதியான திருப்பங்களை ஏற்படுத்தக் கூடியதாகவே அமைய வாய்ப்புள்ளது. குறிப்பாக ஈரானின் அணுவாயுத கனவை மீளவும் அடியோடு தகர்த்துவிட போரை பயன்படுத்த இஸ்ரேல் திட்டமிடுகிறது. அதற்கான நகர்வுகளை அராபிய உலகம் முழுவதும் முடுக்கிவிடுவதில் காசா மருத்துவமனை மீதான தாக்குதல் முக்கியமானதாக அமைந்திருந்தது. இஸ்லாமியர்கள் கொந்தளித்து போரை தீவிரப்படுத்த முயலுவார்கள். அது இஸ்ரேலுக்கு மேற்காசியா முழுவதையும் தனது நிலப்பரப்பில் இழுத்து அழிப்பதற்கு உதவுவதாக அமையும்.

அதனையே தற்போது கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. கடந்த போர்களிலும் இஸ்ரேல் அத்தகைய உத்தியைக் கையாண்டே அராபியர்களது வலுவை முடிவுக்கு கொண்டு வந்தது. அதனை மீளவும் ஒருதடவை மேற்கொள்ள ஹமாஸ், இஸ்ரேல் போர் வாய்ப்பினைக் கொடுத்துள்ளது. இத்தகைய சூழலில் இஸ்ரேலின் மருத்துவமனைத் தாக்குதலுக்கு பின்னர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அமெரிக்காவின் நகர்வுகளை கண்டித்ததுடன் சிரியாவில் ரஷ்யா அமைத்துள்ள கடற்படைத் தளத்தை இராணுவ ரீதியில் பலப்படுத்தி வருகின்றார்.

ரஷ்யா நீண்டதூர குறுந்தூர ஏவுகணைகள் மற்றும் விமானங்கள் கடற்படைக் கப்பல்கள் என்பவற்றை அதிகம் நகர்த்தி வருகிறது. மறுபக்கத்தில் புட்டினது சீன விஜயம் அதிக முக்கியத்துவம் பெறுவதாக அமைய வாய்ப்புள்ளது. ஏற்கனவே பலஸ்தீன ஜனாதிபதி முகமட் அபாஸை (யூன்,13,2023) சீனா அழைத்து கௌரவித்ததுடன் பலஸ்தீன சுதந்திர நாடு அமைப்பதற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தது. சீனா பலஸ்தீன இஸ்ரேலிய இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளது. அத்தகைய தீர்வுத் திட்டத்தையே ஐக்கிய நாடுகள் சபை 1948ஆம் ஆண்டு முன்வைத்ததென்பது நினைவு கொள்ளத்தக்கது.

எனவே, இஸ்ரேல் தரைவழித் தாக்குதலை ஆரம்பிக்க முன்பு காசா நிலப்பரப்பை முழுமையாக தாக்கிவிட்டு நுழைய திட்டமிடுவதாகவே தெரிகிறது. தரைவழித் தாக்குதலை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியாத நிலைக்குள் இஸ்ரேலியப் படைகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அனைத்து எல்லைகளையும் நோக்கி இஸ்ரேல் தாக்குகின்றது. ஹமாஸ் அமைப்புடன் ஈரான் ஹமுத்தி மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் காணப்பட்டாலும் முழுமையாக போர் அராபிய உலகத்திடம் கருக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. சீனா, ரஷ்யாவின் நகர்வுகள் நேரடியாக போரில் ஈடுபடுவதைவிட ஆயுத தளபாடங்களை வழங்குவதிலேயே அதிக கவனம் கொண்டதாக அமையவுள்ளது. இப்போர் பிராந்தியத்திற்குள் நிகழ்வதாகவே தெரிகிறது. மேற்குலகம் தனது எல்லைக்கு போரை நகர்த்தாமல் போரின் எல்லையை நோக்கி தனது படைகளையும் ஆயுத தளபாடங்களையும் நகர்த்துகிறது. இஸ்ரேலும் IRON DOME க்குப் பதிலாக IRON BEAM I ஐ நிறுத்தியுள்ளது. போரின் எல்லைகள் இஸ்லாமியர்களது இருப்புக்கு அதிக அச்சுறுத்தலாக மாறவுள்ளன.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

# தோல்வியிலிருந்து ஒரு பாடம்

## 2023 ஆசிய கிண்ணத்தில் இலங்கையின் மோசமான தோல்வியிலிருந்து கற்றுக் கொண்டது!




நமது தேசத்தில் தற்போது ஒரு கவலைக்கிடமான போக்கைக் காண்கின்றோம். இங்கு ஒரு தோல்வி மனப்பான்மை ஏற்படுகின்றது. மேலும் எந்தவொரு சவால்களையும் சந்திப்பதற்கு முன்பே நம்மை 'தோல்வியுற்றவர்கள்' என்று முத்திரை குத்திக்கொள்கின்றோம். 2023 ஆசிய கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கையின் மோசமான தோல்வி, இழப்பு இந்த மனநிலையை அப்பட்டமாக நினைவூட்டுகின்றது. இந்திய கிரிக்கெட் அணி வலிமையானது என்று பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும் நாங்கள் தகுதியானவர்கள் என்று நாங்கள் நம்பிய ஒரு போட்டி, 2023 ஆசிய கிண்ணக் கிரிக்கெட் ஆகும். துரதிர்ஷ்டவசமாக, இலங்கை அணி இதில் வெற்றியைத் தவறியது.

இந்த நிலைமையினை கிரிக்கெட் விளையாட்டில் மட்டுமன்றி நமது தனிப்பட்ட மற்றும் முழு இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் வியாபார துறைகளுடனும் தொடர்புபடுத்தி பார்க்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். இந்த சூழ்நிலையை எப்படி சமாளிப்பது என்பது பற்றி ஆராய்வோம்.

**இங்கே சில குறிப்புகள் உள்ளன:**

**உங்கள் எதிர்மறை எண்ணங்களை அடையாளம் காணவும்:**

தோல்வியுற்ற சிந்தனையை முறியடிப்பதற்கான முதல் படி உங்களைத் தடுத்து நிறுத்தும் எதிர்மறை எண்ணங்களை அடையாளம் காண்பது. இந்த எண்ணங்களை நீங்கள் அறிந்தவுடன் அவற்றை இல்லாமல் செய்யும் படிமுறைகளை ஆரம்பிக்கலாம்.

**உங்கள் எதிர்மறை எண்ணங்களுக்கு சவால் விடுங்கள்:**

உங்கள் எதிர்மறை எண்ணங்களை ஆதரிக்க ஏதேனும் காரணம் உள்ளதா என்று நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையில் தோல்வியுற்றவரா? அல்லது நீங்கள் உங்கள் மீது மிகவும் கடினமாக இருப்பது சாத்தியமா?

உங்கள் எதிர்மறை எண்ணங்களை நேர்மறை எண்ணங்களுடன் மாற்றவும்: உங்கள் எதிர்மறை எண்ணங்களை நீங்கள் சவாலுக்குட்படுத்தியவுடன் அவற்றை மேலும் நேர்மறையான எண்ணங்களாக மாற்றுவது முக்கியம். உதாரணமாக, "நான் இந்தத் தேர்வில் தோல்வியடைவேன்" என்று நினைப்பதற்குப் பதிலாக "இந்தத் தேர்வில் என்னால் முடிந்ததைச் செய்யப் போகின்றேன்" என்று நினைத்துப் பாருங்கள். உங்கள் பலத்தில் கவனம் செலுத்துங்கள்: ஒவ்வொருவருக்கும் பலமும் பலவீனமும் உண்டு. நீங்கள் சோர்வாக இருக்கும்போது உங்கள் பலத்தில் கவனம் செலுத்துவது மிக முக்கியம். இது உங்களை அதிக நம்பிக்கையுடனும் திறமையுடனும் உணர உதவும்.

**யதார்த்தமான இலக்குகளை அமைக்கவும்:**

உங்களுக்காக யதார்த்தமான இலக்குகளை அமைப்பது முக்கியம். நீங்கள் உங்கள் இலக்குகளை மிக அதிகமாக அமைத்தால் நீங்கள் சோர்வடைந்து விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உங்கள் வெற்றிகளைக் கொண்டாடுங்கள்: நீங்கள் ஒரு இலக்கை அடையும்போது உங்கள் வெற்றியைக் கொண்டாட நேரம் ஒதுக்குங்கள். இது உங்களுக்கு நம்பி க்கையையும் வேகத்தையும் வளர்க்க உதவும்.

தோல்வியுற்ற சிந்தனையைக் கடக்க நேரமும் முயற்சியும் தேவை என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஒரே இரவில் உங்கள் மனநிலையை மாற்ற எதிர்பார்க்காதீர்கள். மேலே உள்ள உதவிக் குறிப்புகளைப் பயிற்சி செய்யுங்கள். இறுதியில் நீங்கள் ஒரு மாற்றத்தைக் காணத் தொடங்குவீர்கள். தோல்வியுற்ற சிந்தனையை நீங்களே சமாளிக்க போராடினால் உங்களுக்கு உதவ பல வழிமுறைகள் உள்ளன. நீங்கள் ஒரு ஆலோசகர் அல்லது பிற மனநல நிபுணரிடம் பேசலாம். அவர்கள் உங்களுக்கு கூடுதல் சமாளிக்கும் திறன்களைக் கற்றுக் கொடுக்கலாம் மற்றும் வாழ்க்கையில் மிகவும் நேர்மறையான கண்ணோட்டத்தை உருவாக்க உதவலாம்.

2023 ஆசிய கிண்ண கிரிக்கெட் கடைசிப் போட்டியில் இலங்கையின் மோசமான தோல்வியின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல மதிப்புமிக்க பாடங்கள் உள்ளன. முதலாவதாக, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை குழு புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். துரதிர்ஷ்டவசமாக இது இலங்கை கிரிக்கெட் அணிக்குள் இல்லை. ஏனெனில் தனிப்பட்ட கவலைகள் நாட்டின் மற்றும் அணியின் கூட்டு இலக்குகளை மறைக்கின்றது. "அர்ஜுன ரணதுங்க" மற்றும் 1996 உலகக் கோப்பையை வென்ற அவரது அணி இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட பிரிவாகச் செயற்பட்டதன் மூலம் உத்வேகம் பெற்று இலக்கினை அடைந்தனர். ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் அணியினரின் செயல்களை ஆதரித்து நிறைவு செய்தனர். அத்துடன் அணி ஒரு ஒருங்கிணைந்த சக்தியாக முன்னேற உதவியது.

எனவே, அணியின் வெற்றிக்கு ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு அவசியம். குழு உறுப்பினர்கள் ஒன்றிணைந்து திறம்பட ஒத்துழைத்தால் அவர்கள் சாதிக்க முடியும். ஒற்றுமை என்பது குழு உறுப்பினர்கள் ஒரு பொதுவான குறிக்கோளுடன் ஒன்றிணைந்து அதை நோக்கி ஒன்றாக வேலை செய்வதாகும். ஒத்துழைப்பு என்பது குழு உறுப்பினர்கள் தகவல், ஆதாரங்கள் மற்றும் யோசனைகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் முடிவுகளை எடுப்பதற்கும் ஒன்றிணைந்து வேலை செய்வதாகும்.

**அணிகளில் ஒற்றுமை இருப்பின் காணப்படும் சில நன்மைகள் பின்வருமாறு:**

அதிகரித்த உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறன்: குழு உறுப்பினர்கள் திறம்பட ஒன்றிணைந்து செயற்படும்போது குறைந்த நேரத்தில் அதிக வேலைகளைச் செய்ய முடியும். அவர்கள் முயற்சியின் தேவையற்ற செயல்க ளினை தவிர்க்கவும் மற்றும் வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தவும் முடியும். மேம்படுத்தப்பட்ட சிக்கலைத் தீர்ப்பது மற்றும் முடிவெடுப்பது: குழு உறுப்பினர்கள் வெவ்வேறு முன்னோக்குகள் மற்றும் திறன்களை கொண்டு வர முடியும். இது சிக்கல்களைத் தீர்க்கவும் சிறந்த முடிவுகளை எடுக்கவும் அவர்களுக்கு உதவும்.

**அதிகரித்த புதுமை மற்றும் படைப்பாற்றல்:**

குழு உறுப்பினர்கள் ஒத்துழைக்கும்போது அவர்கள் யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் ஒருவருக்கொருவர் வேலையில் உதவலாம். இது பல புதிய யோசனைகளுக்கு வழிவகுக்கும்.

**மேம்படுத்தப்பட்ட மன உறுதி மற்றும் வேலைத் திருப்தி:**

ஒன்றுபட்ட மற்றும் மதிப்புமிக்கதாக உணரும் குழு உறுப்பினர்கள் வேலையில் மகிழ்ச்சியாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து உங்கள் குழுவுக்கு உதவ நீங்கள்:**

குழுவாக ஒற்றுமையுடன் செயற்படுவதன் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும். குழுவின் இலக்குகளை அடைவதற்கும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் சிறந்த பணிச்சூழலை உருவாக்குவதற்கும் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு எவ்வாறு உதவும் என்பதைப் பற்றிய கருத்துக்களை முன்வையுங்கள். குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையும், முன்னோக்குகளையும் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கவும். குழு உறுப்பினர்களின் கருத்துகள் பெரும்பான்மையினரிடமிருந்து வேறுபட்டிருந்தாலும் கூட தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வசதியாக இருக்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்கவும்.

திட்டங்கள் மற்றும் பணிகளில் ஒத்துழைப்பை ஊக்குவித்தல். முடிந்தவரை, குழு உறுப்பினர்களுக்கு திட்டங்கள் மற்றும் பணிகளில் ஒன்றாக வேலை செய்ய வாய்ப்பளிக்கவும். இது ஒவ்வொருவருக்கிடையே கற்றுக் கொள்ளவும், உறவுகளை உருவாக்கவும் உதவும். குழு வெற்றிகளை அங்கீகரித்து வெகுமதி அளிக்கவும். குழு ஒரு இலக்கை அடையும் போது குழு உறுப்பினர்களின் பங்களிப்புக்களை அங்கீகரித்து அவர்களுக்கு வெகுமதி அளிக்க வேண்டும். இது குழு உணர்வை வளர்க்கவும், தொடர்ந்து ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் உதவும்.

**உங்கள் குழுவில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான சில கூடுதல் குறிப்புகள் இங்கே:**

தெளிவான இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் அமைக்கவும். அணியில் உள்ள அனைவரும் அணியின் இலக்குகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். அனைவரும் ஒரே விடயத்தை நோக்கிச் செயல்படுவதை உறுதிசெய்ய இது உதவும். திறம்பட தொடர்பு கொள்ளவும். எந்தவொரு அணியும் வெற்றி பெறுவதற்கு சிறந்த தொடர்பாடல் அவசியம். குழு உறுப்பினர்கள் வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் ஒருவருக்கொருவர் திறம்பட தொடர்பு கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தவும்.

திறந்த மற்றும் நேர்மையான கருத்துக்களை ஊக்குவிக்கவும். குழு உறுப்பினர்கள் திறந்த மற்றும் நேர்மையான கருத்துக்களை வழங்குவதற்கும் பெறுவதற்கும் வசதியாக இருக்க வேண்டும். இது பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தீர்க்க உதவும். பன்முகத்தன்மையைக் கொண்டாடுங்கள். சிந்தனை மற்றும் அனுபவத்தின் பன்முகத்தன்மை எந்தவொரு அணிக்கும் மதிப்புமிக்க சொத்து. குழு உறுப்பினர்கள் தங்கள் வேறுபாடுகளைக் கொண்டாடவும், ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கவும். இந்த உதவிக் குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் குழுவின் இலக்குகளை அடையவும், நேர்மறையான மற்றும் பயனுள்ள பணிச்சூழலை உருவாக்கவும் நீங்கள் உதவலாம். மேலும், முன்னர் விபரிக்கப்பட்ட தோல்வி மனப்பான்மையிலிருந்து அணி விடுபட வேண்டும். மனதளவில் தயாராக இல்லையெனில் வெற்றியை அடைய முடியாது. இந்த மனநிலை கிரிக்கெட்டுடன் மட்டும் நின்றுவிடாமல், பல்வேறு துறைகளிலும் ஊடுருவியுள்ளது. நாம் தடுமாறியிருந்தாலும் தொடர்ச்சியான தோல்விக்கு நாம் பின்வாங்காமல் இருப்பது முக்கியம். மாறாக, நிமிர்ந்து நிற்பதற்கான வலிமையைக் கண்டறிந்து, நமது வலிமையை மீட்டெடுக்க வேண்டும். மனதளவில் தயாராக இல்லையெனில் வெற்றியை அடைய முடியாது. வெற்றிக்கு மனத் தயாரிப்பு ஏன் அவசியம் மற்றும் இந்த இலக்கை எவ்வாறு அடைவது?

வெற்றிக்கு மனரீதியான தயார்நிலை அவசியம். ஏனெனில் இது உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்தவும் உந்துதலாக இருக்கவும் சவால்களை சமாளிக்கவும் அனுமதிக்கின்றது.

நீங்கள் மனதளவில் தயாராக இருக்கும்போது எதை அடைய விரும்புகிறீர்கள், ஏன் அடைய விரும்புகிறீர்கள் என்பது பற்றிய தெளிவான புரிதல் உங்களுக்கு இருக்கும். இது உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்தவும், திசைதிருப்பப்படாமல் இருக்கவும் உதவுகின்றது. சவால்களை எதிர்கொள்வதில் கடினமாக உழைக்கவும் விடாமுயற்சியுடன் செயற்படவும் நீங்கள் உந்துதல் பெறுவீர்கள். மனத் தயாரிப்பு உங்கள் உணர்ச்சிகளை நிர்வகிக்க உதவுகின்றது. நீங்கள் ஒரு கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது, அமைதியாகவும் ஒன்றாகவும் இருக்க முடியும். இதன் மூலம் தெளிவாக சிந்தித்து நல்ல முடிவுகளை எடுக்க முடியும்.

**வெற்றிக்கான உங்கள் மனத் தயாரிப்பை மேம்படுத்த நீங்கள் செய்யக்கூடிய பல விடயங்கள் உள்ளன. இங்கே சில குறிப்புகள் உள்ளன:**

உங்கள் வெற்றியை மனக்கண்முன்னால் கொண்டு வாருங்கள். உங்கள் இலக்குகளை அடைவதையும் வெற்றியின் திருப்தியை உணர்வதையும் கற்பனை செய்து பாருங்கள். இது உந்துதல் மற்றும் கவனத்துடன் இருக்க உதவும்.

உங்கள் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும். நீங்கள் எதில் சிறந்தவர் மற்றும் எதை மேம்படுத்த வேண்டும் என்பதை நீங்கள் அறிந்தவுடன் உங்கள் பலத்தை அதிகரிக்கவும் உங்கள் பலவீனங்களைக் குறைக்கவும் ஒரு திட்டத்தை உருவாக்கலாம். யதார்த்தமான இலக்குகளை அமைக்கவும். நம்பத்தகாத இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் தோல்விக்கு உங்களை வழிவகுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் இலக்குகளை சிறிய, நிர்வகிக்கக்கூடிய படிகளாக உடைக்கவும். நேர்மறையான அணுகுமுறையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மீதும், உங்கள் வெற்றியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். ஒரு நேர்மறையான அணுகுமுறை, உந்துதலாக இருக்கவும் சவால்களை சமாளிக்கவும் உதவும்.

தவறாமல் பயிற்சி செய்யுங்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக பயிற்சி செய்கிறீர்களோ, அவ்வளவு நம்பிக்கையுடனும் தயாராகவும் இருப்பீர்கள். வெற்றி என்பது பாராட்டுகளுக்கும் எண்களுக்கும் அப்பாற்பட்டது. உடல் ரீதியான தயாரிப்பைப் போலவே மனத் தயாரிப்பும் முக்கியமானது. மனதளவில் தயாராவதற்கு நேரத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் உங்கள் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கலாம்.

# அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நாம் 200 மாநாடு



இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்க வேண்டும், அவர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற குரல் மலையகத்தில் பல தசாப்தங்களாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த இலக்கை அடைவதற்காகவும், மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் ஒரு இளம் அரசியல் தலைவராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'நாம் 200' திட்டம் மூலம் மலையகத்துக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளை நவீன யுகத்துக்கேற்ற வகையில் கட்டமைத்து, பழமையையும், பாராம்பரியத்தையும் பாதுகாத்து, புதுமைகளுக்கு வழிவிட்டு ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்டுவரும் நகர்வுகளில் இந்த நாம் 200 வேலைத்திட்டம் மலையக மறுமலர்ச்சியில் முக்கிய திருப்புமுனையாக அமையும் என மலையக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாம் 200 ஏன் முக்கியம் பெறுகின்றது ?

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வருகைந்து (1823 – 2023) 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அம்மக்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கும், நாட்டுக்கும் வழங்கிய பங்களிப்பை கருத்திற்கொண்டு அவர்களை பாராட்டி, கௌரவிக்கும் வகையில் அரச அங்கீகாரத்துடன் நிகழ்வை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி அரச அங்கீகாரத்துடன் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை முக்கியத்துவமிக்கதாகும். இதற்கு முன்னரும் மலையகம் தொடர்பில் பல நிகழ்வுகளை அரசுகள் முன்னெடுத்திருந்தாலும் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி உரிய அரச அங்கீகாரத்துடன் நடத்தப்படும் முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் கடந்தாலும், மலையகத்தின் இருப்பை நிர்ணயிக்கின்ற பெருந்தோட்டத்துறையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களாக உள்ளவர்களின் வாழ்க்கை நிலை இன்னும் மேம்படவில்லை எனவும், நாம்200 திட்டமெல்லாம் தேவையற்ற நிகழ்வு எனவும் விமர்சனக் கணைகளைத் தொடுப்பவர்களும், அது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் கேலி செய்பவர்களும் எம் சமூகத்தில் வாழவே செய்கின்றனர். முதலில் இது கொண்டாட்டம் அல்ல, மலையகத் தமிழர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் நிகழ்வு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் எனப் பலரின் பங்கேற்புடன்தான் நவம்பர் 02 ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நாம் 200 நிகழ்வு பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

'காழ்ப்புணர்ச்சி' என்ற கண்ணாடியை கழற்றிவைத்துவிட்டு இந் நிகழ்வு தொடர்பில் பார்வையை செலுத்தினால் அதன் முக்கியத்துவம் தென்படும் என்பது வெள்ளிடைமலை.

இலங்கையில் மலையகத் தமிழர்கள் என ஒரு இனம் வாழ்கின்றது, அந்த இனத்துக்காக ஒரு நாள் ஒதுக்கப்பட்டு நிகழ்வு நடத்தப்பட வேண்டும் என்பது இதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்துவரும் வருடங்களில் மலையகத்துக்காக ஒரு நாள் ஒதுக்கப்பட்டு அரச அங்கீகாரத்துடன் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

வரலாறு தெரியாதவன் வாழத் தகுதியற்றவன், அந்தவகையில் மலையகம் தொடர்பில் கட்டுரை, கவிதை, குறுந்திரைப்படம், புகைப்படம் போன்ற போட்டிகளை நடத்திய மலையகம் தொடர்பான கருத்தாடல் எமது சமூகத்தில் இன்றைய தலைமுறையின் மத்தியில் விதைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் உட்பட பலர் வரலாற்றை தேடி அறியவும், கற்றுக்கொள்ளவும் நாம் 200 ஏதோவொரு வகையில் உதவியது என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். இந்தப் போட்டியில் வெற்றிபெறுபவர்களை அடுத்தக்கட்டம் நோக்கி கொண்டு செல்லவும் இது வழிவகுக்கும். நாம் 200 ஏற்பாட்டு குழுவினரின் கோரிக்கையை ஏற்று இதுவரை 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையானது நாம் 200 எனும் வேலைத்திட்டமானது சமூகத்தில் எவ்வாறு தாக்கம் செய்துள்ளது என்பதற்கு ஒரு சான்றாகும்.

மாநாட்டில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களும் கலந்துகொள்கின்றனர், அவர்களின் கவனம் மலையகம் மீது திருப்பும். இதன்மூலமும் எமது சமூகத்துக்கு நிச்சயம் சாதகமான பிரதிபலன்கள் கிடைக்கப்பெறும். மலையகத்தில் சுற்றுலாத்துறை மேம்பாடு, வெளிநாட்டு முதலீடுகள் வரும், எமது இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

நாம் 200 தொடர்பில் எமது சிங்கள மக்களும் கதைக்க ஆரம்பித்துள்ளனர், அனைவரும் மலையக மக்களுக்கான அங்கீகாரத்துக்கு ஏகோபித்த ஆதரவு வழங்கியுள்ளனர். மலையக எழுச்சிக்கு எல்லா இன மக்களின் ஆசியும் அவசியம். அந்த விடயமும் நாம்200 மூலம் நிறைவேற்றப்படுகின்றது. இப்படி பல விடயங்களை பட்டியலிட்டுக்கொண்டே செல்லாம். ஆக ஒதுங்கி நின்று விமர்சனங்களை முன்வைப்பதைவிட, நாம் 200ஐ நமக்கானதாக மாற்ற நேசக்கரம் நீட்டுவோம். இது ஒவ்வொரு மலையகத் தமிழர்களினதும் சமூகப்பொறுப்பாகும்.




நாம் 200 ஆல் நம் சமூகத்துக்கு என்ன நன்மை?

இலங்கையில் உள்ள பிரதான தொழில்துறைகளில் முதன்மையானதும் முக்கியமானதும்தான் இந்த பெருந்தோட்டத் துறை. எனினும், அத் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தொழிலின்போது விபத்துகள் ஏற்பட்டால்கூட இழப்பீடுகளை பெறுவதற்கு ஆயிரம் போராட்டங்கள். தொழிற்சங்கங்கள் தலையிட்டால்தான் அதுவும் கிடைக்கின்றது.

இந்நிலைமையை மாற்ற வேண்டும் எனச் சிந்தித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கை காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான காப்புறுதி திட்டத்தை உருவாக்கினார். மாதம் 99 ரூபாவில் இருந்து காப்புறுதி திட்டங்கள் உள்ளன.

நோய்வாய்ப்பட்டாலோ, வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றாலோ, தொழிலின்போது உடல் உறுப்புகளை இழந்தாலோ நிதி நிவாரணத்தை பெறக்கூடியதாக இருக்கும். சிலவேளை உயிரிழப்பு ஏற்பட்டால் கூட அவர்களின் குடும்பத்துக்கு ஏதேவொரு வகையில் இந்த காப்புறுதி திட்டம் கைகொடுக்கும். அதுமட்டுமல்ல பெருந்தோட்டத்துறையை நவீன மயப்படுத்துவதற்கான வியூகங்களில் இதுவும் ஒன்று.

காணி உரிமை

மலையகத் தமிழர்களுக்கு காணி உரிமை என்பதே இன்னும் எட்டாக்கனியாக உள்ளது. மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் தனி வீடுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் ஏனைய தனியார் காணிகளுக்குபோல் உறுதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. ஆனால் உரிய உறுதிப்பத்திரத்துடன் காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக காணி அமைச்சர், பெருந்தோட்டத் துறை அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார். இதன்பயனாக அமைச்சரவைக்கு கூட்டு அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட்டு, மலையக மக்களுக்கு காணி உரிமையும் நவம்பர் 2ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. மலையக வரலாற்றில் இது மகத்தான வெற்றியாகும்.

அதேபோல தோட்டத்தில் வேலைசெய்பவர்களுக்கு மட்டுமல்லாமல் பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ளவர்களுக்கும் வீடுகள் கிடைக்கப்பெறவுள்ளன. உரிய தேர்வுகளின் அடிப்படையில் அவை வழங்கப்படும். தோட்ட அதிகாரிகளும் இதன்மூலம் பயன் பெறலாம். மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை கிடைக்கப்பெற்றமை முக்கிய மைல்கல்லாக அமைந்ததுபோல வீட்டுரிமை, காணி உரிமையும் வரலாற்று முக்கியத்துவமிக்க காரணிகளாக அமையவுள்ளன.

அதேபோல மலையக தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் விசேட முத்திரையொன்றும் வெளியிடப்படவுள்ளது. இது எமது பாராம்பரிய அடையாளத்துக்கு கிடைக்கும் அங்கீகாரமாகும்.

மலையக தாய்

மலையகத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களின் தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் எடுத்து காட்டும் வகையில் தலைநகர் கொழும்பில் 'மலையக தாய்' சிலையொன்றை வைப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



க.கிஷாந்தன்
ஊடக செயலாளர்
நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் – 09

# மலேசியாவின் சொக்கலேட் நகரம் கோலாலம்பூர்

"சொக்கலேட்" மிக நீண்ட காலமாக உலகை ஆளுகைக்குட்படுத்தி கொண்டிருக்கும் செல்வாக்குமிக்க சொல்லாகும். சொக்கலேட்டின் பூர்வீகம் அமெரிக்காவாகும். ஆம் மத்திய கால அமெரிக்காவில் தோற்றம் பெற்று புழக்கத்திற்குள்ளாகி பிரபல்யம் பெற்ற சொல்லாகிறது. சொக்கலேட் உற்பத்திக்கு மூலாதாரமாக விளங்கும் கொக்கோ மரங்கள் பொதுவாக எல்லா கண்டங்களிலும் வளரக் கூடிய தன்மையை பெற்றிருக்கிறது. வயது வித்தியாசமின்றி எல்லா வயதையுடையவர்களும் சொக்கலேட்டின்



மீது ஆர்வம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர்களுடைய வருகையைத் தொடர்ந்து இலங்கையில் கொக்கோ உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

கொக்கோ மரத்தில் உருவாகும் காய்களில் இருந்து பெறப்படும் கொட்டைகளை கிருமி நீக்கம் செய்தல் வேண்டும். பின்னர் அக் கொட்டைகளை வறுத்து அரைத்து பெறப்படும் தூளுடன் பால், சக்கரை சேர்ப்பதன் ஊடாகவே சொக்கலேட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. கொக்கோ என்பது கொட்டையின் திடமான நிலையைக் குறிப்பதாகும். கொக்கோ வெண்ணெய் அல்லது கொக்கோ எண்ணெய் என்பது கொக்கோ கொட்டைகளில் காணப்படும் கொழுப்புப் பகுதியை குறித்து நிற்கிறது. பருகும் பானங்களாகவும் காணப்படுகின்ற நிலையில் அச்சுகளில் வார்க்கப்படுகின்ற சொக்கலேட்டுக்கள் அதிக புழக்கத்தில் உள்ளமையும் கவனத்திற்குரியது. சொக்கலேட் கூழ் என வடிவமைக்கப்படும் பதார்த்தம் பேக்கிங் பவுடராகவும் நிலைமாற்றம் செய்யப்படுகின்றது. ஈஸ்டர், கிறிஸ்மஸ் ஆகிய பண்டிகைகளில் அதிகம் இச் சொக்கலேட்டுகள் பயன்படுத்தப் படுகின்றமையையும் அறிய முடிகிறது.

சுற்றுலாத்துறையின் விருத்தியில் முன்னேற்றகரமான நாடு என்ற வகையில் மலேசியா அதற்கேற்ற ஒழுங்கமைப்பை தன்னகத்தே கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும். அவ்வாறே அவ் ஓட்டத்துக்கு ஈடு கொடுக்கும் வகையிலேயே மலேசிய பிரஜைகளும் இயைபாக்கம் பெற்றுள்ளமையும் கவனிக்கத்தக்கது. முதலாளித்துவ நெறிமுறையின் வேகத்தை அறிந்து குடும்ப செலவீனத்தை ஈடுசெய்யும் வகையில் கணவன், மனைவி இருபாலாரும், மற்றும் குடும்ப உறுப்பினர்களும் தொழில் செய்கின்றமையையும் அறிய முடிகிறது. இந் நிலைமை மலேசியாவின் ஒட்டு மொத்த சனத்தொகையில் தங்கி வாழும் எண்ணிக்கையில் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்துகிறது எனலாம்.

பொதுவாக மலேசியாவில் பரவலாக எல்லா தளங்களிலும் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பெண்கள் அதிகமாக தொழிலுக்கு செல்கின்ற நிலை காணப்படுகிறது. இரு பாலாருக்குமான வித்தியாசங்களை ஒப்பிடுகின்றபோது ஆண்களை விட பெண்களின் தொகை இந் நாடுகளில் அதிகமாக காணப்படுவதும் முக்கிய காரணமாகிறது.

தென் கிழக்காசியாவில் தமிழர் தொன்மங்களை கொண்ட மிக முக்கிய நாடாக கம்போடியா விளங்குகிறது. அங்கு பெரும்பாலும் ஆண்கள் டுக் டுக் வண்டி ஓட்டுவதைத் தான் அவதானிக்கலாம். மாறாக அனைத்து தளங்களிலும், பெண்களே தொழில் புரிவார்கள். தொடர்ச்சியாக அந்த நாட்டில் காணப்பட்ட அரசியல் ஸ்திரமின்மை, வியட்நாம் படையெடுப்பு, கம்யூனிஸ்ட் என சொல்லிக்கொண்ட பொல்பொட்டின் சரவாதிகாரமிக்க மிலேட்ச்சத்தன ஆட்சி என்பனவெல்லாம் காரணமாகின. கொலைக்களங்களும், சித்திரவதை முகாம்களும் காட்சிக் கூடங்களாக ஆக்கப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது. இத் துன்பியல் நகர்வுகளில் ஆண்கள் பெரும்பாலும் பலியாகினார்கள். குடும்ப பெண்கள் விதவைகளாக்கப்பட்டார்கள். அதன் தொடர்ச்சி நிலையில்தான் பெண்கள் தொழிலில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் கணவன், மனைவி பிரிந்தே இருப்பார்கள். குடும்ப சூழலுக்கு ஏற்ற வகையிலேயே அங்கு கல்வித்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்கள் உட்பட உயர் கல்வி நிறுவனங்களும் பிள்ளைகளுக்கு தொழில் புரிவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையிலேயே நேர அட்டவணையை தயார் செய்திருக்கும். காலை வேளையில் வேலைக்கு செல்ல வேண்டுமானால் மாலையில் கற்கும் வாய்ப்பு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். அவ்வாறே காலையில் வகுப்புகளில் இணைந்து விட்டு மாலையில் தொழிலுக்கு செல்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கும். கம்போடியாவில் அமுலில் இருக்கும் கல்வித் திட்டத்தில் தொழில் கல்விக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவமும் சிறப்புக்குரியது. பாடசாலைகளோடு இணைந்தே தொழில் வழிகாட்டல் பயிற்சி நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கும். கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கு தொழிலுக்கான வழிகாட்டல் வழங்கப்படும். அவ்வாறே கல்வியில் ஆர்வமிக்க மாணவர்களுக்கும் பகுதி நேர தொழிலில் ஈடுபடுவதற்கான தொழில் பயிற்சி வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆம் கோலாலம்பூரில் பிரபலமான "சொக்கலேட்" விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்படுகிறோம். விதவிதமான சொக்கலேட்டுகள் விற்பனை செய்வதற்காக முறையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. "சொக்கலேட் கடல்" என்று சொல்லும் அளவுக்கு சொக்கலேட் நிறைந்திருந்தது. சொக்கலேட் கண்காட்சியை முதல்முதலாக பார்த்துக்கொண்டிருக்கும் அனுபவம். நுழைவாயிலிலேயே சொக்கலேட் வரலாறு, உற்பத்தி முறை, கொக்கோ மரங்கள் என்பன விபரங்களோடு காட்சிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கே கொக்கோ மரங்கள் மேலும் அச் சூழலை மெருகூட்டியது. காவல் உத்தியோகத்தர்கள் உட்பட நிலையத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான ஊழியர்களில் தொண்ணூறு சதவீதமானவர்கள் பெண்களாகவே காணப்பட்டார்கள். வரிசையாக நகர்ந்த எமக்கு ஒவ்வொரு தளத்திலும் அச் சொக்கலேட்டுகள் தொடர்பான விளக்கத்தை அனைவருக்கும் விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்தினார்கள்.

இங்கு காணப்பட்ட பெண்களில் பெரும்பாலும் சீன வம்சாவளியை சேர்ந்த பெண்களே கடமையில் இருந்தார்கள். அருமையான விளக்கங்களோடு அவ்வப்போது சொக்கலேட் மாதிரிகளையும் இலவசமாக தந்தார்கள். சொக்கலேட் "பார்வையும் சுவைத்தலுமாக" களம் விரிந்தது. எம்மோடு வருகை தந்தவர்கள் சொக்கலேட்டை வாங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். எனது பட்ஜட்டுக்கு ஏற்ற வகையில் பக்குவமாக நடந்து கொண்டேன். மனிதகுல விருத்தியில் நெருப்பை மனிதன் கண்டுபிடித்ததன் பின்னர்தான் அக் குழுமத்தினுள் எழுச்சி கலந்த விருத்தி ஏற்படுகிறது. அதன் பின்னர் சில்லின் அறிமுகத்தின் பின்னர்தான் மனித குழுமத்தின் புலம்பெயர்வு வேகத்துடன் கூடிய விருத்தி நிலை விரைவாக தூண்டப்படுகிறது.

மனித நாகரீகத்தின் முதிர்ந்த நிலையின் அடுத்த கட்டத்தை கடிகாரம் கண்டுப்பிடிக்கப்பட்டதன் பின்னர்தான் அளவிட முடியும். சுமேரிய நாகரீகத்திற்கு உரித்தானவர்களாலேயே கடிகாரம் தொடர்பான எண்ணக்கரு விருத்தியடையத் தொடங்கியது. "சூரியமணிக் கடிகாரம்" சுமேரியர்களின் தொடக்கத்தால் உருப்பெறுகிறது. அரேபியர்கள் "ஒளியும் நிழலும்" என்ற வரையறைக்குள்ளும் அதனை விருத்தி செய்யும் வகையில் சூரிய ஒளி இல்லாத இரவு வேளையில் சீராக எரியும் விளக்கின் துணைகொண்டு நேரத்தை அளப்பதில் வெற்றி ்ண்டுள்ளார்கள். கிரேக்கர்கள் நீரை பயன்படுத்தி கடிகாரத்தை உருவாக்குகிறார்கள். அதனை விருத்தி செய்து மாற்றம் செய்ததில் ரோமானியர்கள் வெற்றி காண்கிறார்கள்.

கி.பி 1510இல் பீட்டர் ஹென்சீன் நின்ற நிலையில் கடிகாரத்தை உருவாக்கியதன் பின்னர் படிமுறை வளர்ச்சியோடு வாரன் மோரின், அலெக்சாண்டர் பெயின் ஆகிய நாமங்களுக்குரியவர்கள் நவீன கடிகார உற்பத்தி வரை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். இன்று நவீன கடிகாரத்தின் செயற்பாடுகள் உலக இயக்கத்தோடு இரண்டற கலந்த தன்மையை பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

கடிகார கண்காட்சி நோக்கி நகர்கிறோம். பிரமாண்ட வளாகம். வகை வகையான கடிகாரங்கள். ஆங்காங்கே கடிகார எண்ணக் கருவின் விருத்தி நிலைகள் பற்றியும், கடிகார வடிவமைப்பு நிறுவனங்கள், அவ் உற்பத்தி நாமங்கள் பற்றியெல்லாம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இங்கு நூற்றுக் கணக்கில் சேவையாளர்கள் ஆண்கள், பெண்கள் சம அளவுகளில் கடமையாற்றுவதை காண முடிந்தது. வாடிக்கையாளர்களுடன் சிறந்த வகையில் உறவைப் பேணிய நிலையில் ஊழியர் கட்டமைப்பு தயார்ப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. டைட்டான், டைமெகஸ், சிட்டிசன் ஆகிய கடிகார உற்பத்தி நிறுவனங்களின்



தயாரிப்புகளும், ஏனைய நிறுவனங்களின் தயாரிப்புகளும் விற்பனை நோக்கம் கருதிய நோக்கத்திற்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. எம்மோடு வருகைத்தந்த பலர் அவற்றை வாங்குவதில் மிகுந்த ஆர்வம் காடடினார்கள். நான் பார்வை ஒன்றே போதும் என்ற வரையறைக்குள் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

இம் மாநாட்டிற்கு இந்தியாவில் இருந்து ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க வருகை தந்தவர்களுள் பெண்களே அதிகமாக பங்கேற்றார்கள். இப் பயணத்தில் அவ்வாறு வருகை தந்த பெண் ஆய்வாளர்களுடனும் கலந்துரையாடல் தொடர்ந்தது. அவ்வாறு ஒரு குழுவாக இருந்தவர்களிடம் "ஏன் ஆண்களின் பங்கேற்பு குறைவாக உள்ளது?" என வினவிய போது " ஏன் சேர் பெரும்பாலும் ஆண்கள் தற்போதெல்லாம் குடிப்பதற்கு வழங்கும் முக்கியத்துவத்தை முக்கியமான விடயங்களுக்கு வழங்குவதில்லை" என கவலையோடு தெரிவித்தார். அவரின் அக் கூற்றை ஒட்டு மொத்த தமிழர்களின் வாழ்வியலோடு ஒப்பிட்டு பார்க்க தூண்டியது.

பயணம் தொடரும் ....




# நீதி விழுங்கும் நிதி

நிதியை வாங்கி
நீதியை விழுங்கி
பொய்மையைச் சாசனமாய்த்
துப்பிவிடும் உலகமடா
மெய்மை மறைக்க
ஓரடியில் ஒருதுண்டு
கண்கள் திறந்திருந்தாலும்
காசில்லாமல்
காசினியில் காரியம்
முடிவதுண்டோ?
கறுப்புப் பெட்டியில்
கைமாறும் காகிதங்கள்தான்
நீதிக்கு
நியதி எழுதி விடுகின்றன.
இனியென்ன
இயம்ப வேண்டியிருக்கு
நீயும் ஓடு
நிதி நித்திரையின்றி
உனக்காகக் காத்திருக்கிறது
நீதிதான் உறங்கியாயிற்றே.

தமிழ்க்கீரன்
கல்மடு, கல்குடா.



# வெற்றிக்கு வழி

மெய்யன் நடராஜ்

திக்குத் தவறிய திற்குத் திணறிய
திக்திக் மனிதரைத் திட்டத் தகுமோ
சிக்கிச் சிதறிய சிற்பச் சிலையினைச்
செத்துத் தொலையெனச் செப்பற்றறிவோ
துக்கத் தொருவரைத் துட்டுக்கொடுவெனத்
துச்சத் தனமொடு தொத்தச் சுகமோ
தக்கத் தகுவழி தட்டுப் படுமதை
தட்டிக் கழியுமத் தப்புச் சரியோ
கொத்திக் குதறியக் குட்டிக் கயலது
கொக்கிற் குணவுறற் கொப்பக் கெடவே
கத்திக் கதறிடக் கத்திக் குயிரினைக்
கப்பப் பொருளெனக் கட்டத் தகுமோ
குத்திக் கிளறிடக் குப்பைப் பொருளெனக்
குத்தக் குருதியைக் கொட்டச் சுகமோ
சுத்தப் படவுளச் சுற்றுப் புறமதைச்
சுற்றிக் கழிவிடச் சுத்தப் படுமோ?
துச்சப் படுகிறத் துட்டத் தனமதைத்
தொட்டுத் தொடருறத் துட்டுக் கெடுமே
இச்சைக் கெனவித ழெட்டச் சதிவர
இச்சைப் படு'மது' எட்டிக் கனியே
அச்சக் கனியதற் கச்சப் படுமுனை
அச்ச மெதிரிடற் கச்சப் படுமே
உச்சிக் கிளைகளி லுற்றக் கனிதர
ஒத்தத் தருவதற் கொப்பச் சுகமே
பட்டப் படிப்புறப் பட்டப் படிப்பினைப்
பக்கத் துணையெனப் பற்றிக் கொளவே
திட்டப் படுவெனத் திட்டிப் புகட்டிய
திற்குப் பொருளெனத் தித்தித் திடுமே
கெட்டப் படிப்பினைக்
கற்றுக்கொடுத்ததைக்
கெட்டிப் படுத்திடக் குட்டிச் சுவரே
கட்டப் படுத்திடற் கொப்பக்
கெடுப்பவைக்
கற்கத் தடுப்பிடக் கற்கைச் சிறகே
உப்புக் கொருவழி யற்றுக் கிடப்பரை
உற்றக் கவனமு முற்றற் றறமே
தப்புத் தப்பெனத் தப்பிப் பிழைப்பதை
தப்புத் தப்பெனத் தப்பற் பிழையே
ஒப்புக் கொருமுறை ஒப்பப் படுவதை
ஒப்புக் கொளுவது ஒப்பத் திழிவே
சப்பக் கழிகிறச் சக்கைக் குளுமுள
சத்திற் றெழுவிதைச் சக்திக் குரிதே
சுற்றித் திரிகிற சுட்டித் தனமுனை
சொட்டுத் துளிவிழி சொட்டற் குறுமே
பற்றிப் பிடிநமை பற்றற் கரியவை
பக்கப் பலமுனை பத்திக் கொளுமே
உற்றத் துணையவை ஒட்டிக் கொளுவதை
ஒத்துக் குடியமை உச்சத் திரவே!
வெற்றிக் கொருவழி வெட்டிச் சமையதை
விட்டுத் திரிவது வெட்டித் தனமே



# யதார்த்தத்தின் நிழல்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

அதிகாரங்களின் சதிகளில்
அநாதரவாகிப் போகும்
வெள்ளை மொட்டுக்கள்
நிலவெறியின் சர்வாதிகாரத்தில்
நசுக்கப்பட்ட விதைகள்
ஏகாதிபத்தியத்தின்
ஏவுகணை ஏவல்களில்
சிதறிப்போயின எங்கள்
சின்னஞ் சிறுகூடுகள்

கோடுகள் போட முன்னரே எம்
எழுத்தாணிகளைப்
பிடுங்கி வைத்துக்கொண்டு
எக்காளமிடுகின்றன
ஏப்பம்விட்டபடி
பல பெருச்சாலிகள்
நாசகார வேலைகளில்
நியாயங்கள் விலைபோன
நிலையில்
அஸ்தமனங்களே எங்கள்
வாழ்வில் நொடிக்கு
நூறு முறை பூக்கின்றன
இதயங்கள் வெந்து உருகிய நெடியில்
நாசியிலும் கண்களிலும்
ஒரு சொட்டு நீர் கூட வரவில்லை
எரி சாம்பலில் எங்குமே
ஆன்மாக்களின் ஓலங்கள்
காதுகளைச் சிரைத்தபடி...

மருந்துக்கும் கூட
மனிதாபிமானம் இன்றிய
அநீதியின் காட்டில்
தலைக்கனங்கள் வென்று
சமாதி முகடுகள் முளைத்த
பாலைவனத்தில்
அவர்கள் பொய்யான வெற்றிக்
கம்பங்களை நடட்டும்
உள்ளங்களின்
கைவிரல்களை ஒவ்வொன்றாய்க்
கூறு போட்டுவிட்டு
போலி விதானங்களில்
பொன்னாடை போர்த்தும்
பொய் முகங்களே
உங்கள் முகத்திரை கிழித்து
கோரப்பற்களை உடைத்து
பச்சோந்தித்தனத்தைப் புறந்தள்ளி
நரமாமிசப் பட்சணிகளின்
கழுத்தை நெரித்து
உண்மையை உரக்கச் சொல்லும்
நீதத்தின் சத்திரியங்கள்
வெல்லும்
ஒருநாளைச் சந்திக்க..

உரிமைகளை உயிராய் விதைக்கும்
துணிவை அணுக்களில்
ஏந்தி
நாளும் வாள்
முனைகளாவோம்
நெஞ்சுரம் வழியும்
சமுத்திரமாய் வளர்வோம்
மனித உயிரின் மகத்துவம்
உணர்த்த
தொலைந்த வாழ்க்கை
மொத்தத்தையும்
திருப்பிவிட ஏகனின்
மறுமொழி என்றுதான்
எங்களை அடையும்?
இன்றைய
யதார்த்தத்தின் நிழல்கள்
நாங்கள்...

நாளைய நந்தவனத்தின்
விதைகளாய் ஆவோம்...
சிதைகளுக்குள் கரம் கோர்த்து
செந்தீயில் யாகம்
வளர்க்கிறோம்
யுத்தபூமியில்!



# நினைவலைகளை மீட்டிய அந்நாள்

றிப்ஹா ஸத்தார்
வெலிகம

நீண்ட இடைவெளிக்குப் பின்
உம் கரத்துடன்
எம் கரம் இணைய....
தொலைதூர நினைவலைகளை
தொடமுடியாதென்றிருந்த எமக்கு
தொட்டுப்பார்க்க
இறைவனின் அன்புப் பரிசே இந்நாள்....
வெள்ளைநிற ஆடையுடன்
வெண்மையாய் இருந்த இதயத்துடன்
சுற்றித் திரிந்த நம் கல்லூரியை .......
"கறுப்பு நிற ஆடையுடன்
இளமையை கொஞ்சம்
தொலைத்த போதிலும்
கல்லூரி என்ற போது நாம்
குழந்தையாய் மாறிப்போகிறோம்"
கனநாள் காணாத கல்லூரியையும்....
நாம் களைத்த போதிலும்
இளைப்பாற நேரம் இல்லாத
நம் நட்புக்களையும்.....
சிறுபொழுதேனும்
ஒன்றாய் சந்திக்கக் கிடைத்த
பொன்நாள் அதுவல்லவா!!
எத்தனையோ முறை திரும்பிப் பார்த்த
நம் வாழ்க்கைப் புத்தகத்தில் இம்முறை
நம் கல்விக்கூடத்தை
திரும்பிப் பார்த்தோம்
காலைக்கூட்டம் முதல்...
பல நினைவலைகளை சுமந்து வந்த
எம் வகுப்பறை தொடக்கம்
பக்கத்தில அமர்ந்த தோழியின் முகம்,
ஒன்றாய் சுற்றித் திரிந்த
நம் நட்புக்கள் "அத்தனையும்
மொத்தமாய் ஒரேநாளில்
திரும்பிப் பார்த்தோம்"
கலாமன்றத்தில் நட்புக்களின்
கலைவித்தைகளையும்,
அறபா செய்தியில்
பல சுவாரஷ்யங்களையும்
சுமந்து சென்றோமே!!
இந்நாளில் நிமிடத்தின் பெறுமதியையும்
அறிந்து கொண்டோம்



# இனிப்பாக வந்து இன்னல் தாராய்....

தோப்பூ ஊரான்
பிறவியில் ஊனமில்லை
வளர்கையில் பழுதில்லை
வலுவாய் பேணி
வந்த உறுப்பை
பல தசாப்தம்
கழித்து பறிகொடுத்து
ஊனமாய் வீட்டில்
அடைக்கலமானாயே
சீனி என்றும் சக்கரை என்றும்
நீரிழிவு என்றும் அழைக்க
பொருத்தமில்லா நாமம் சூடி
வாழ்வில் இன்பம் என்னும்
இனிப்பே இல்லாமல் செய்த
வியாதி நீ
எல்லோர் உதிரத்திலும்
நீ தேவை
இல்லாவிடில்
பாரிசவாதமாக்குவாய்
என்று விரட்டுவதனாலேயே
இனிப்பு என்னும் உன்னை
உணவில் சேர்த்தோம்
எங்களை அறியாமலே
உதிரத்தில் நீ கூடியது
கவலையும்
ஆழ்ந்த சிந்தையும்
பரம்பரை என்றும்
முறையில்லா உணவு என்றும்
வந்த சிறு காயம்
ஆறவிடாமல்
உன் வித்தை பல செய்து
வலிதாங்க முடியாமல்
காலை எடுக்க மன்றாட
வைத்த அரக்கனாய் மாறினாயே
நீரிழிவு நீ நோயல்ல
நோய்த்தொகுதி
மக்கள் இன்னும்
விழிப்படையாமல்
கோதுமை மா என்னும்
ஊட்டச்சத்தில்லா
உணவால் உன்னை
கூவி அழைக்கிறார்களே!
எப்போது திருந்தும்
எம் உறவுகள்
மனித பிறவிக்கும்
நான்கு கால்கள் தேவைப்படும்..

முகம்மது முகைதீன் நௌபீக்

# பாதுகாப்பாக மீளும்

அமீன் எம் றிலான்

படுக்கைகளையும் பறிகொடுத்து
பரபரப்பு பரிதவிப்புடன் வீதியில்
பட்டினியாக யாசித்தவர்களுக்குப்
பசியினைப் போக்கினீர்கள்
பாகுபாடு இன்றி வாழ்வதற்கான
பாதையை அமைத்துக் கொடுத்தீர்கள்
பண்பாட்டு மிக்க நிலத்தை
படிப்படியாக பறித்துக்கொண்டார்கள்
பாசிச வாதிகளின் இழிவான
படுபாதக செயற்பாடுகளால்
பாவமரியா குழந்தைகள் முதல்
பாசமிக்க மனிதர்கள் வரை
கொன்று குவிக்கப்படும் அவலம்
பாவக்கறைகள் போக்கி அபயமளித்த
பரிசுத்த பூமியில்
பக்குவமாக நிலைகொண்ட
பலமிக்க ஈமானியர்களின்
பக்திமிக்கப் போராட்டத்தில்
பக்கச் சார்பாக செயல்படுகிறது
பச்சோந்தி மேற்குலகம்.
பாரினில் பறந்திருக்கும் முஸ்லிம்கள்
பல முனையில் ஒன்றிணைவதனால்
பாவிகள் நிலை தடுமாறிக் கொண்டு
படுதோல்வியைக் காண்பர்
பாதுகாப்பாக மீளும்
பாக்கியம் பெற்ற அக்ஸா
படைப்பாளிடமிருந்து சுவனத்தை
பரிசாக பெற்றுக் கொள்வார்கள்
பலஸ்தீனியர்கள்
மஹ்ஷரில்





# மறுஜென்மம் வேண்டாம்

பாரதி மைந்தன்

புதுக்குடியிருப்பு
வலிகளை கடந்து
மகிழ்ந்திடப் பழகிவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
துரோகத்தை கண்டும்
பழகியே விட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
அன்பை கொடுத்தும்
நடுத்தெருவில் நின்றுவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
உதவி செய்தும்
வசைகள் கேட்டுவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
சாதிக்க எண்ணியே
தடைகளையும் கண்டுவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
பாசம் என்றே
பிரிவையும் உணர்ந்துவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
நம்பிக்கை வைத்தே
அவமானத்தை அடைத்துவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
கனவுகள் கண்டே
பலதையும் இழந்துவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
வேலையின்றி வாழ்வில்
துன்பத்தையும் கண்டுவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
அன்பைக் கொடுத்தே
அடியையும் வாங்கிவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
தவறுகள் செய்தே
மனதால் வாடிவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
உறவை மதித்தேன்
உதறியே தள்ளிவிட்டது
மறுஜென்மம் வேண்டாம்
வறுமையில் வாடி
வாழ்க்கையை உணர்ந்துவிட்டேன்
மறுஜென்மம் வேண்டாம்
ஒரு ஜென்மம்
எனக்குப் போதும்
மறுஜென்மம் வேண்டாம்



# வாழ்வென்றால் அப்படித்தான்

நீண்ட இப்பிரபஞ்சத்தில்
நான் நானாகவே இருந்து விடுகிறேன்
நீல வானத்தில் கோடையும் மாரியும் வருவதுபோல
நீண்ட வாழ்க்கைபயணத்தில்
எதுவும் நடக்கலாம்
இன்றைய நாளைப்போன்று
நாளைய நாள் இல்லாமலிருக்கலாம்
கடலில் எழும் பூகம்பம் போல
அகத்தில் அலைகள் தோன்றலாம்
சிறு தூரலும் பெருமழையும்போல
வாழ்விலும் எதுவும் நடக்கலாம்
அது அப்படித்தான்
வாழ்வென்றால் அப்படித்தான்

நான் நானாகவே இருந்து விடுகிறேன்
எனது வாழ்வை நானே வாழ்ந்து
என்னை நான் செதுக்கிக் கொள்கிறேன்
என்னால் விரும்பப்படாத நாவுகளில்
வரும் சொற்களை பொறுக்கி
கவிதைகளை விதைத்துக் கொள்வேன்
பார்க்கும் பார்வைகளை பிடித்து விழி
அம்பாய் மாற்றிக்கொள்வேன்
எனக்காக விடியும் பொழுதுகளை
நானாகவே வாழ்ந்து விடுகிறேன்
யாரைப்போலும் வாழ்ந்து என்னை நான்
கண்டுகொள்ளாமல் வாழ
ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்
என்னை என்னைப்போல வாழ விடுங்கள்
என்னை உங்கள் விருப்பம்போல் செதுக்க
சொற்களை உருவாக்காதீர்கள்
அதை ஓரமாய் ஒதுக்கி விட்டுச்
செல்பவளல்ல நான்
ஒவ்வொன்றையும் உரமாய் சேகரித்து
வெற்றிக்கு விதை போடுபவள்
எனது சொற்களில் என் வாழ்வை தேடாதீர்கள்
எனது சொற்கள் என்னைவிட
பிறருக்காகத்தான் அதிகம்
பேசிக்கொண்டிருக்கும்.



மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி.

# அசட்லைனின் 'தேசத்துக்கு சக்தி' குருநாகலில்



மத்திய வங்கியினால் பட்டிய லிடப்பட்ட பைனான்ஸ் கம்பனியான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம், 'தேசத்துக்கு சக்தி' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி பற்றிய அறிவு மற்றும் குருநாகல் மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு நிலைபேறான எதிர்காலத்தை ஏற்படுத்துவதை சரியாக முகாமைத்துவம் செய்வது தொடர்பில் செயலமர்வொன்றை நடத்தியது. பட்டய கணக்காளர் சமிந்த குமாரசிறியினால் நடத்தப்பட்ட இந்தக் குருநாகல் நிகழ்ச்சியில், 50% க்கும் அதிகமான பெண்களைக் கொண்ட 100க்கும் மேற்பட்ட தொழில்முயற்சியாளர்கள் பங்கேற்றிருந்தனர். பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவது மற்றும் பெண்களைப் பலப்படுத்தும் உற்பத்தியில் கவனம் செலுத்தும் 'லிய திரிய' நிகழ்ச்சித் திட்டத்தில் அசட்லைன் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும் வகையில் இது அமைந்தது. ஊடாட்டம் நிறைந்ததாக அமைந்த இந்த செயலமர்வில் சிறந்த அனுபவம் கொண்ட சில வர்த்தகர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், இது வளர்ந்துவரும் தொழில்முயற்சியாளர்களுக்கு உத்வேகம் அளிப்பதாகவும் காணப்பட்டது.

'தேசத்துக்கு சக்தி' என்பது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆட்சி ஆகியவற்றின் வணிக முன்னேற்றத்தில் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களின் திறன்களை வளர்ப்பது மற்றும் தற்போதைய பொருளாதார சூழல், புதிய தொழில்நுட்பத்தின் செல்வாக்கு ஆகியவற்றினால் வர்த்தகத் துறையில் காணப்படும் வாய்ப்புக்கள், சவால்களை அடையாளம் காண்பதை நோக்காகக் கொண்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் இதற்கு முன்னர் மாத்தறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

# 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மிகவும் புதுமையான டிஜிட்டல் வங்கியாக NDB




ஐக்கிய இராச்சியத்தின் 'Global Brands சஞ்சிகை', 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மிகவும் புதுமையான டிஜிட்டல் வங்கி வர்த்தக நாமமாக, NDB வங்கியை தரவரிசைப்படுத்தியுள்ளது.

மேலும், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முன்னணி வங்கியாகவும், பெண்களை மேம்படுத்துவதற்கான சிறந்த வங்கியாகவும், NDB வங்கி அடையாளம் காணப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து விருதுகளை வழங்கும் நோக்கில் 'Global Brands' விருது வழங்கும் விழா ஆரம்பிக்கப்பட்டது. நிதி, கல்வி, விருந்தோம்பல், அன்றாட தேவைகள், ஆட்டோமொபைல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சிறந்த சேவை வழங்குநர்களை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன.

தனித்துவமான சேவைகளை வழங்கும் நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, அத்தகைய நிறுவனங்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறவும் இந்த விருதுகள் செயல்படுகின்றன.

NDB வங்கியின் டிஜிட்டல் மாற்றப் பயணத்தின் ஒரு பகுதியாக, NEOS ஆனது பயன்படுத்த எளிமையான வகையில் தொடர்ந்தும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது வாடிக்கையாளர்களின் தனிப்பயனாக்கத்திற்கான தேவையை எளிதான முறையில் பூர்த்தி செய்யவதற்காக டிஜிட்டல் தளங்களை புதுப்பிக்கும் வங்கியின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

NEOS அறிமுகத்திற்குப் பிறகு, NDB வங்கி தனது NEOS ஆன்லைன் வங்கி தளத்தை ஏப்ரல் 2020 இல் அறிமுகப்படுத்தியது. NDB வங்கியின் அனைத்து சேவைகளையும் அணுகக்கூடிய டிஜிட்டல் வங்கித் தளமாக இது இப்போது மாறியுள்ளது.

# புதிய தலைமுறை விருதுகள் 2023 : சூரியா அனுசரணை

4ஆவது புதிய தலைமுறை விருதுகள் 2023 நிகழ்வின் அனுசரணையாளராக சன்மட்ச் கம்பனியின் முன்னணி உற்பத்தியான சூரியா இணைந்துள்ளது.

இளம் நபர்களின் சிறந்த சாதனைகளை கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களின் புத்தாக்கம், சிறப்பு மற்றும் திறமைகள் போன்றன கௌரவிக்கப்பட்டிருந்தன.

2020ஆம் ஆண்டில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது முதல், இலங்கையின் புதிய தலைமுறைக்கான தமது அர்ப்பணிப்பின் அங்கமாக, சூரியா அனுசரணை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு, நிகழ்வின் பிளாட்டினம் அனுசரணையாளராகவும், பிரதான பங்காளராகவும் சூரியா இணைந்திருந்தது. அடுத்த தலைமுறை வியாபார தலைவர்களின் ஆக்கத்திறனை




ஊக்குவித்து அவர்களுக்கு வலுவூட்டுவதற்கான சூரியாவின் உறுதிமொழியை இந்த பங்காண்மை மேலும் உறுதி செய்திருந்தது.

புதிய தலைமுறை விருதுகள் 2023ஐ, WIM புதிய தலைமுறை பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனத்துடன் (NYSC) இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வு 2023 ஒக்டோபர் 3ஆம் திகதி கொழும்பு கோல் ஃபேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த ஆண்டின் விருதுகளின் தொனிப்பொருளாக 'Daring to be Different' என்பது அமைந்திருந்ததுடன், இளைஞர்களை பிரத்தியேகத்தன்மையை பின்பற்றுவதற்கு சவாலுக்குட்படுத்தும் வகையில் அமைந்திருப்பது மாத்திரமன்றி, சூரியாவின் பயணமான வழமையை மாற்றியமைப்பதில் தைரியமாக முன்வந்திருந்த நிறுவனம் என்பதை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இலங்கை சந்தையில் மரத்தினாலான தீக் குச்சிகள் பயன்பாடு ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியில், சூரியாவின் ஸ்தாபகர் முதன் முறையாக மெழுகினால் பூசப்பட்ட தீக் குச்சிகளை அறிமுகம் செய்திருந்தார்.

## SATA விருதுகள் 2023:

# முன்னணி ஹெரிடேஜ் ஹோட்டல்/ரிசோர்ட்டுக்கான விருதை வென்றது ஃபாக்ஸ் யாழ்ப்பாணம்




இந்தியாவின் பெங்களூரில் 2023 ஒக்டோபர் 10 அன்று நடைபெற்ற 7வது வருடாந்த தெற்காசிய பயண விருதுகள் (SATA) விழாவில், யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஒரு அற்புதமான பாரம்பரிய ஹோட்டலான ஃபாக்ஸ் யாழ்ப்பாணம், தெற்காசியாவின் முன்னணி ஹெரிடேஜ் ஹோட்டல்/ரிசோர்ட்டுக்கான மதிப்புமிக்க விருதைப் பெற்றது.

1908 ஆம் ஆண்டு முதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற குடும்பத்தினதால் கட்டப்பட்ட ஃபாக்ஸ் யாழ்ப்பாணம், அதன் கடந்த காலத்தை நவீன ஆடம்பரத்தின் நேர்த்தியுடன் தடையின்றி ஒருங்கிணைத்துள்ளது, மேலும் பிராந்தியத்தின் வளமான கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கான ஒரு வாழும் சான்றாக மாறியுள்ளது. கெபிட்டல் மஹாராஜா குழுமத்தினால் நடத்தப்படும் இந்த ரிசோர்ட், யாழ்ப்பாணத்தின் வரலாற்றை உள்ளடக்கி, அதன் பெருமைமிகு நாட்களின் சாட்சியாக விளங்குகின்றது, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டோர் இக்கட்டடத்தில் பதுங்கு குழிகளை நிறுவிய போர்ச் சகாப்தத்தின் பின்னடைவுகளிலிருந்து அது மீண்டுள்ளது. இலங்கையின் புகழ்பெற்ற '43 குழுவின் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட தலைசிறந்த படைப்புகளை காட்சிப்படுத்தும் ஆடம்பர பூட்டிக் ரிசோர்ட், மற்றும் கலைக் கண்காட்சிக்கூடமாகவும் அது மாற்றப்பட்டுள்ளது.

"இந்த மதிப்பிற்குரிய SATA 2023 அங்கீகாரம், ஃபாக்ஸ் ரிசோர்ட்ஸில் உள்ள அனைவரும் பகிர்ந்து கொள்ளும் மிகச் சிறந்த அர்ப்பணிப்புக்குச் சான்றாகும், இது எங்கள் ஹோட்டலை எங்கள் விருந்தினர்களுக்கு இது மறக்க முடியாத அனுபவத்தைத் தருகின்றது.

# விளையாட்டு ஒளிபரப்பில் 5G தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் SLT–MOBITEL முன்னிலை



86 ஆவது நுவரெலியா கொல்ஃப் கழக சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு SLTMOBITEL, தனது நவீன பரீட்சார்த்த 5G தொழில்நுட்பத்தினூடாக வலுச்சேர்த்திருந்தது. இந்நிகழ்வு அண்மையில் வெற்றிகரமாக நிறைவுற்றது. கொல்ஃப் விளையாட்டு வீரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் அசல்நேர விளையாட்டு ஒளிபரப்பினூடாக 5G தொழில்நுட்பம் சிறந்த அனுபவத்தை வழங்கியிருந்தது.

NEGC சம்பியன்ஷிப் கொல்ஃப் போட்டித் தொடர் என்பது, இலங்கையின் கொல்ஃப் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் பெருமைக்குரிய விளையாட்டு நிகழ்வாக அமைந்துள்ளது. கொல்ஃப் ஆர்வலர்களுக்கு, சிறந்த திறன்கள் மற்றும் விளையாட்டு பண்புகளை கண்டுகளிப்பதற்கான சிறந்த போட்டித் தொடராக இது அமைந்துள்ளது. NEGC சம்பியன்ஷிப் உடன் SLTMOBITEL கைகோர்த்து, தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டு ஆகியவற்றுக்கிடையிலான இடைவெளியை சீர் செய்து, 5G தொழில்நுட்பத்தின் வலிமையில் தங்கியிருக்கும் விளையாட்டு ஒளிபரப்பை மேற்கொள்ளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை ஏற்படுத்தியிருந்தது. நேரலை 5G வலுவூட்டப்பட்ட ஒளிபரப்பை கொல்ஃப் திடலின் ஒவ்வொரு சுவாரஸ்யமான தருணங்களையும் highdefinition இல் கண்டு களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. கொல்ஃப் ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்களின் பார்வை அனுபவத்தை மேம்படுத்துவதாக மாத்திரம் இந்த வழிமுறை அமைந்திராமல், விளையாட்டு ஒளிபரப்பில் எதிர்கால மேம்படுத்தல்களுக்கான திறவுகோலாகவும் அமைந்திருந்தது.

# எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரோனிக் என்ஜினியரிங் பட்டக் கற்கைநெறியை இலங்கையில் ஆரம்பித்துள்ள UCL



எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் துறையில் 4 வருட பிரிட்டிஷ் பட்டப்படிப்பை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தியது UCL. அதன் மத்திய லங்காஷயர் பல்கலைக்கழகத்தில் இக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் தொழில்துறையின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வல்லுநர்க ளை உருவாக்குவது இதன் நோக்கமாகும்

இக் கற்கைநெறியின் மூலம் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு 75% வரை புலமைப்பரிசில்களைப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

பிரதம நிறைவேற்று அதிகாரி கிஹான் சில்வா, கருத்துத்தெரிவிக்கையில். "இலங்கையின் மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையானது ஏற்றுமதித் துறையில் பங்களிக்கும் முக்கிய துறையாக அடையாளம் காணப்பட்டது, எலெக்ட்ரானிக் இன்ஜினியரிங் துறையானது அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கவும், பெரிய அளவில் உருவாக்கவும் அதிக ஆற்றலைக் கொண்டுள்ளது" என்றார்.

# Serendib Flour Mills இன் "உத்தம தலதா" செயற்றிட்டம்



"தேசத்தை வளப்படுத்துவோம்" என்பதற்கு அமைவாக செயற்படும் Serendib Flour Mills முதியோருக்கு மகிழ்ச்சியை அளிக்கும் "உத்தம தலதா" செயற்றிட்டத்தை இரண்டாவது வருடமாகவும் முன்னெடுத்தது.

Serendib Flour Mills ஆனது மாவனெல்லை குருநாகல் மற்றும் கம்பளையைச் சேர்ந்த முதியோர் இல்லங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு தலதா மாளிகைக்கு விஜயம் செய்து பிரார்த்தனையை மேற்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் மறக்க முடியாத பயணம் ஒன்றை ஒழுங்கமைத்திருந்தது.

அத்தோடு இந்த சிறப்பு அதிதிகள் எசல பெரஹராவின் அழகினை விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்து பார்வையிட முடிந்ததோடு அங்கு அவர்களுக்கு விசேட சௌகரியமான முன்வரிசை இருக்கை ஒழுங்கமைப்புகள் அத்துடன் உணவு மற்றும் சிற்றுண்டிகள் என்பனவும் வழங்கப்பட்டு அத்தருணத்தை மேலும் மகிழ்ச்சியாக்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

உத்தம தலதா செயற்றிட்டத்தின் ஊடாக Serendib Flour Mills சமூகத்திற்கு விசேடமாக வயது முதிர்ந்த மற்றும் ஆதரவற்றோருக்கு மரபினைத் தொடர்வதற்கும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் அடுத்த தலைமுறையுடன் ஒன்றிணைப்பதற்கும் உதவுகிறது.

# Ex–Pack Corrugated Cartons PLCக்கு மீண்டும் காபன் நடுநிலை சான்றிதழ்



அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமும், இலங்கையின் அலைவு நெளிவுள்ள பொதிகள் உற்பத்தித் துறையில் புகழ்பெற்ற நாமமுமான ExPack Corrugated Cartons PLC, இரண்டாவது வருடமாகவும் காபன் நடுநிலை சான்றிதழைப் பெற்றுள்ளது. அதனூடாக, காலநிலை மாற்றத்தை தடுப்பதற்கு அவசியமான செயற்பாடுகள் மீதான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்துள்ளது.

தான் இயங்கும் தொழிற்துறையில் வரவேற்கத்தக்க அம்சமாக இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த ஆண்டில் 22.3 சதவீதத்தினால் தனது காபன் வெளியீட்டை குறைத்துக் கொள்ள ExPack இனால் முடிந்திருந்தது. நிறுவனத்தின் சகல அம்சங்களையும் இலக்கு வைத்து, தனது வருடாந்த பச்சைஇல்ல வாயு (GHG) வெளியேற்றங்களை குறைத்திருந்தது.

பச்சைஇல்ல வாயு (GHG) மதிப்பீடுகள் அதன் வலு மற்றும் நீர் நுகர்வு, கழிமுகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களிலிருந்து பெறப்பட்டதுடன், தேசிய தூய்புரவாக்கல் தயாரிப்பு நிலையத்தினால் (National Cleaner Production Centre (NCPC)) உறுதி செய்யப்பட்டிருந்தன. தொழிநுட்ப வழிகாட்டல்களை முன்னணி பசுமை கட்டட, MEP வடிவமைப்பு மற்றும் காபன் நடுநிலை ஆலோசனை ஆகியவற்றில் முன்னோடியாக அமைந்துள்ள coenergi இனால் வழங்கப்பட்டிருந்தது. ExPackக்கு இந்த சான்றிதழைப் பெற்றுக் கொள்வதில் இது முக்கிய பங்கை ஆற்றியிருந்தது.

காபன் வெளியீடுகளை தணிப்பது மற்றும் பிரதியீடு செய்வது மற்றும் நிலைபேறாண்மை தொடர்பில் தொழிற்துறையின் சிறந்த செயன்முறைகளை பின்பற்றுவது போன்றவற்றை களத்திலுள்ள நிபுணர்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளும் செயற்பாடுகளை ExPack முன்னெடுக்கின்றது.



# கெம்பஸ் காதல்

அன்று அதிகாலையில் அகிலனின் போன் அலறியது. போனைக் கையில் எடுத்த அகிலன் வெளிநாட்டில் இருந்துதான் என்பதை புரிந்து கொண்டார். "ஹலோ.. நான் யூ.கே யில் இருந்து கதைக்கிறன். நீங்க அகிலன்தானே என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ தெரியல்ல..". போனில் இனிமையாக ஒலித்த பெண்ணின் குரல் அது.. அதுவும் உரிமையோடு ஒருமையில் அழைப்பு வேறு. திடீரென வந்த அழைப்பால் சில வினாடிகள் எதுவும் புரியாது குழம்பிப் போன அகிலன் தன்னை சுதாரித்துக் கொண்டார்.

"நான் அகிலன்தான் கதைக்கிறன்". "என்ன அகிலன் குழப்பமாக இருக்கா. சரி நானே சொல்கிறன் .. பூரணி கதைக்கிறன்". அகிலன் இதனை சற்றும் எதிர்பார்க்கவில்லை. இது கனவில்லை.. நிஜந்தான் உறுதிப் படுதிக்கொண்டார். "பூரணியா.. என்னால் நம்பவே முடியவில்லை முதுமையிலும் இளமையான குரல்". "நம்புங்கள் நான் பூரணிதான்.. நாற்பது வருடங்களுங்களுக்கு பின் கதைக்கிறன்". "பூரணி நலமா.. எப்படி இருக்கிறீர்கள்.. "நலமாக இருக்கிறேன். அன்பான கணவன்.. ஆசைக்கு ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாக இரு பிள்ளைகள் நீங்கள் சொல்லுங்கள் அகிலன் ". "மகிழ்வாக இருக்கு.. பூரணி. எனக்கும் பாசமான மனைவி. இரு பெண் மகவுகள்.. மகிழ்வான வாழ்வு. என்னை நீங்கள் மறந்து போய் இருப்பீர் என நான் நினைத்தேன் பூரணி ". "எப்படி மறக்க முடியும் அகிலன் அது சாகும் வரை நினைவிருக்கும்". "உண்மைதான் பூரணி".

அகிலன் பூரணியை பல்கலையில் முதலாம் வருட ராக்கிங் காலத்தில் கண்டது முதல் அவனுள் முகிழ்ந்த காதல் அவனை என்னவோ செய்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. "தன் விருப்பத்தை எப்படி அவளிடம் சொல்வது. பூரணியின் விருப்பத்தை அறிவது.. அவளோடு கதைப்பது..". அவனுள் எழுந்த கேள்விகளுக்கு அவனிடம் விடை ஏதும் இல்லை. தன் ஆசையை வெளிப்படுத்த வழி தெரியாது திக்கித் திணறினான் அகிலன். பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பெரிய கனவுகளுடன் வந்தவன் அகிலன். கனவுகளோடு சேர்ந்து காதலும் வந்தது அவனுக்கு. காதலில் மனதை பறிகொடுத்த அகிலனுக்கு பல்கலைக்கழகத்தில் ஆறு மாதங்கள் கழிந்து போனதே தெரியல்ல. இயல்பாகவே அழகுணர்வு நிரம்பப் பெற்ற அகிலன் தன் கண் முன் விரிந்து கிடந்த பேராதனையின் இயற்கை அழகில் தன்னைப் பறி கொடுத்தவனாக பூரணியின் நினைவுகளோடு நூலகத்திலிருந்து தன்னம் தனியனாக தான் தங்கி இருக்கும் கில்டா விடுதிக்கு போய்க் கொண்டிருந்தான்.

"எனக்குள் நீ..இருக்கிறாய்
பூரணி..
உனக்குள் நான் வருவேனா"

அகிலனின் மனதில் ஆயிரம் கவித்துளிகள்.. வந்து வந்து முட்டின. அகிலன் அழகந்தான். படிப்பிலும் கெட்டிக்காரன். ஆனாலும் காதல் விடயத்தில் துணிவு அவனுக்கு சற்று கம்மிதான். ஐந்து அடிக்கு சற்று குறைந்த உயரம்.. அழகான அரும்பு மீசை.. அகிலனுக்கு எடுப்பாக இருந்தது. மீசையை எப்போதும் தடவிய படியே இருப்பான். அரைக்கை சேட் அணிந்தால் அவன் இன்னும் அழகாக இருப்பான். அகிலனின் அழகும்.. அறிவும்.. கூடவே பயிலும் பலரை திரும்பி பார்க்க வைத்தாலும் அகிலனுக்கு பூரணியைத்தான் மிகவும் பிடித்திருந்தது.

பூரணியோடு பல்கலை வளாகத்தில் கைகோர்த்தபடி எப்போதும் சுற்றி வர கொள்ளை ஆசையோடு இருந்தான். அது நடக்குமா என தெரியவில்லை அகிலனுக்கு. பூரணி இயல்பிலேயே அழகானவள். அவளது சாந்தமான முகம். அழகான குழி விழும் கன்னங்கள் அவளது அழகுக்கு கட்டியம் கூறின. பூரணியின் மிருதுவான கூந்தல் தென்றலில் புரண்டு வதனத்தில் வந்து வந்து விழும் போதெல்லாம் தன் மிருதுவான விரல்களினால் நீவி விடும் நளினம் அற்புதமானது. பூரணியின் கழுத்தில் மின்னும் மெல்லிய தங்கச் செயின் அவள் சங்குக் கழுத்துக்கு தனியழகு தந்தது. இந்த அழகுகள்தான் அகிலன் பூரணி மேல் காதலாகிக் கசிய காரணமாகியதோ தெரியவில்லை.

நாளுக்கு நாள் அகிலன் பூரணியை பார்த்து மகிழ்ந்து மனதில் இருத்தி அழகு பார்த்தானே தவிர.. அவனால் ஒரு வார்த்தை கூட பூரணியிடம் கதைக்க அவனால் முடியவில்லை. அகிலனின் உள்ளத்தில் முகிழ்ந்த காதல் சங்கதி.. நண்பர்கள் எவருக்கும் தெரியா விட்டாலும் அவனது றூம் நண்பன் யோகனுக்கு முதலில் சொன்னது அகிலன்தான். "என்னடா இவ்வளவு நேரமும் நீ நூலகத்திலா இருந்தாய். இப்போது நீ என்னோடும் எதுவும் கதைக்காமல் தனியாக யோசித்துக் கொண்டு திரிவது எனக்கு புரியல்ல. என்னடா.. ஏதாவது பிரச்சினையா". யோகன் அவனது மௌனம் அறிந்து கேட்டான். "மச்சான் எனக்கு பூரணியை பிடிக்கும் ஆனா அவள் விருப்பத்தை என்னால அறிய முடியல்ல. அதுதாண்டா.. பிரச்சினையே". "நீ அவளிடம் உன் காதல சொல்லி கதைச்சுப் பாரன்". "இன்றைக்குத்தான் பூரணியிடம் கதைக்க நான் முயற்சி செய்தேன். ஆனாலும் பூரணி திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விட்டாள். அதுதான் நூலகத்தில் கொஞ்ச நேரம் இருந்து விட்டு வாறன்". "டேய் அகிலா.. நீ பூரணியை விரும்புவது அவளுக்கு தெரியுமாடா".

"நான் அவள் பின்னால் திரிவதையும், அவளைப் பார்ப்பதையும் அறிந்த அவளது றூம்மேற் கவிதாவும் என்னிடம் அன்றும் பகிடி விட்டவள். அதனால.. நான் விரும்புவதும் பூரணிக்குத் தெரிந்திருக்கும்". "பூரணியின் றூம்மேற்றுக்கு தெரியும் எனில் பூரணிக்கும் தெரிய வாய்ப்பு இருக்கு". யோகன் உறுதிப் படுத்தினான். "மச்சான் கவிதாவும் பூரணியின் நல்ல நண்பி.. அவளிடம் சொல்லிப் பாரன்". "அதுவும் நல்ல ஐடியா தான் மச்சான். எதுக்கும் நான் கொஞ்சம் பொறுத்து அவளோடு கதைக்கிறன்".

"பேராதனை பல்கலையில் சிங்கள சகோதரங்களின் காதல் இலகுவாக கைகூடுவதும் பின் அவர்களாகவே கை விடுவதும் சாதாரணமாகவே நிகழ்ந்து விடும். ஆனால் அகிலன் பூரணி காதல் அவை போல் சாதாரணமாக நிகழக் கூடியதா. "நானாவது இதற்கு ஒரு வழி செய்தால் என்ன.. யோகனும் யோசித்தான்.

அன்று இரவு நீண்ட நேரமாக யோசித்துக் கொண்டிருந்த அகிலன் பின்னர் ஏதோ முடிவுக்கு வந்தவனாக ஏதோ எழுதிக் கொண்டு இருந்தான். "பத்து மணியாச்சு என்னடா தூக்கம் இன்னும் வரல்லையா உனக்கு. நான் தூங்கப்போறன். எனக்கு தூக்கம் வருது.." "சரிடா யோகு.. தூங்குவோம்". "என்னடா.. நீ ஏதோ எழுதிக் கொண்டு இருந்தாய். பூரணியிடம் கதைக்கப் பயத்தில 'லவ் லெற்றர்'எழுதி கொடுக்க முடிவே செய்து விட்டாயா". "அப்படி இல்லடா.. இதை நீயும் பாரு.. இதுதான் எழுதினேன்".

"நித்தம் உனக்கு ஒரு கவிதை
சித்தம் மகிழ்ந்து செதுக்கிட..
பித்தன் ஆகினேன் நான்
உனை.. கண்ட நாள் முதல்".

அகிலனின் புதுக் கவிதையை கண்ட யோகனும் கலங்கினான். "பூரணியிடம் அவ்வளவு காதலாடா உனக்கு. பூரணிக்கு கொடுக்கவா இது. கவிதை நல்லா இருக்குடா..". "இல்லடா.. தோணிச்சு எழுதினேன்". "சரி வந்து தூங்கு. எல்லாம் சரி வரும்".

"நாளைக்கு கடைசி லெக்ஸர் குணசிங்கம் சேர் எடுப்பார். அது முடிய கட்டாயம் கவிதா மூலம் தூதுவிடவேணும். அவள்தான் பூரணியிடம் என் காதலை சொல்வாள்". கவிதா மூலம் தூது விட தீர்மானித்த மகிழ்வில் நன்றாக தூங்கினான் அகிலன். அடுத்த நாள் கலாநிதி குணசிங்கம் சேருடைய கடைசி லெக்ஸர். அவர் விரிவுரை என்றால் அனைவருக்கும் கொஞ்சம் பயந்தான். அன்று விரிவுரையின் போது வாமனை அவதானித்தவர் எழுப்பி விட்டார். "நான் என்ன சொன்னன்". நா.. வறண்டு உளறினான் வாமன். "பண்..டை..ய ஈழ..ம்.." என தடுமாற.. அவர் எழுப்பிய அடுத்த வினாவில் வகுப்பு.. சற்று அதிர்ந்து அடங்கியது. அவர் அடுத்து அன்ரனியை எழுப்ப அவன் தடுமாறி நின்றான். "போர்த்துக்கேயர் இலங்கை வந்தது போல இங்கு வந்தவர்களா நீங்கள்". அவர் தொடுத்த வினாவோடு அன்றைய விரிவுரைகள் முடிந்தது. அன்ரனி அதை ஒரு போதும் மறக்கவில்லை அடிக்கடி சொல்லிக் காட்டுவான் அவர் பாணியில்.

அகிலனும் தான்.. நினைத்தவாறு அன்று விரிவுரை முடிய கவிதாவை சந்தித்தான். "உம்மோட கொஞ்சம் கதைக்க வேணும்.." அருகில் இருந்த பெஞ்சில் அமர்ந்தாள் கவிதா. "என்ன.. ஒருநாளும் இல்லாதவாறு.. சரி சொலுங்க அகிலன்". "பூரணியை நான்..". "ஓ.. அதுவா முன்பே தெரியுமே எனக்கு". "தெரியுமா.. உமக்கும்". "பின்ன.. பூரணிக்கு முன்னும் பின்னும் திரிவது தெரியாதா.. நான் விட்ட பகிடி கூட தெரியவில்லையா அகிலன்.. ஆனா வேறு யாருக்கு தெரியுமோ.. அது தெரியாது". "பூரணிக்கும் தெரியுமா.. கவிதா". "அவள்தானே எனக்கு இதுபற்றி சொன்னவள்". "ஓ.. அப்படியா சரி..". "ஏன்.. அகிலன் என்ன.. தடுமாறுகிறீர்". "அப்படியில்ல.. கவிதா.. பூரணிக்கும் என் விருப்பம் தெரியாது என நான் நினைத்தன். என்னோட விருப்பத்த சொல்ல எனக்கு சற்று யோசனையா இருக்கு.. ஆனாலும் நான் பூரணியிடம் என் விருப்பத்தை சொல்லப் போறன்". "அகிலன் நீங்க கதையுங்க.. அவளுக்கு உங்கள் மேல விருப்பம் இருக்கா.. இல்லையா என்பது எனக்கு தெரியாது. ஆனால்.. நீங்க விரும்புவது அவளுக்கு நன்றாக தெரியும்". " ஓ.. அதுதான் போல.. என்னைக் கண்டதும் பூரணி தலைய குனிந்த படி கடந்து போய் விடுகிறாள். என்னால் கதைக்க முடியல்ல. ஆனால் நான் கட்டாயம் என் காதல பூரணியிடம் சொல்ல வேணும்". "அது சரி.. அகிலன் நான் என்ன செய்ய வேணும் அத முதலில் சொல்லுங்க". "நான் நாளைக்கு கண்டிப்பாக என் காதலை பூரணியிடம் சொல்ல வேணும். கவிதா நீங்க கொஞ்சம் பூரணியிடம் எனக்காக கதைக்க வேணும். நான் நூலகத்தில் பூரணிக்காக காத்துக் கொண்டு இருப்பன். சரிதானே..". "சரி.. அகிலன் நான் இரவுக்கு பூரணியோடு கதைக்கன். காலையில் இதை பற்றி உம்மிடம் சொல்றன் ஓகே யா ".

நூலகத்தின் முன்னால் நண்பர்கள் சூழ்ந்து நிற்க கதைத்துக் கொண்டு இருந்தான் அகிலன். கவிதா கூடவே பூரணி வருவதை கண்டு யோகனின் காலை மிதித்து கண் ஜாடை காட்ட யோகனும் பாலாவும் கெம்பா கன்ரீன் பக்கமாக போயினர். "கவிதாவிடம் விட்ட தூது வெற்றியளித்து விட்டது உள்ளம் மகிழ்ந்தான் அகிலன்.

"அதோ பார்டீ.. அகிலன் உனக்காக நூலகம் முன்னால் நிற்கிறான்" பூரணி கவிதாவுக்கு முன்னமே அகிலனைக் கண்டு விட்டாள். கவிதா அகிலனைப் பார்த்து ஜாடை காட்டிவிட்டு நூலகத்தினுள் நுழைய பூரணி தலை குனிந்தவாறு பின்னால் போனாள். அகிலன் அவர்களை பின் தொடர்ந்தான். "பூரணி நீ அகிலனுடன் கதைத்துக் கொண்டு இரு. நான் மேல போய் புத்தகம் எடுக்க வேணும்". கவிதா அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்காது போய் விட்டாள். பூரணி கீழ் பகுதியில் பத்திரிகை வாசிப்புப் பகுதியில் அமர்ந்தாள். "நான் வந்து அருகில் இருக்க தக்கதாய் பூரணி போய் இருக்கிறாள்.." மனதில் எண்ணி மகிழ்ந்த அகிலன் பூரணிக்கு அருகே காலியாய் இருந்த கதிரையில் அமர்ந்தான். அகிலன் மனதில் தைரியம் எங்கிருந்து வந்ததோ தெரியாது. "பூர.. ணீ.. " காதலோடு அழைத்தான். இயல்பாகவே வெட்கம் நிரம்பிய பூரணிக்கு அகிலன் அழைப்பும் அவன் அருகாமையும் அவளுக்கு என்னவோ செய்தது. குனிந்த தலை நிமிரவே இல்லை அவள். "பூரணி.. கொஞ்சம் நிமிர்ந்து பாரேன்" கெஞ்சினான் அகிலன். "சொல்லுங்க.." நிமிர்ந்து பார்க்கவில்லை பூரணி. "நான் கம்பஸில உங்கள கண்ட நாளில் இருந்து எத்தனையோ நாட்கள் தனியாக கதைப்பதற்கு எத்தனித்தேன் பூரணி தெரியுமா". "நீங்க என்னிடம் கதைக்க இருந்தது எனக்கு எப்படி தெரியும்". "பூரணி நீங்கதான் என்னைக் கண்டால் விலத்திக் கொண்டு ஓடும் போது நான்தான் எப்படி கதைக்க முடியும்". "அப்படி இல்லை.. அகிலன் எல்லாம் சூழ்நிலைதான்.. சரி இப்போ சொல்லுங்க".

"கவிதா சொல்லி இருக்காது விட்டால் இன்றும் கதைத்திருக்க முடியாமல் போய் இருக்குமோ தெரியல்ல". "அதுதான் நான் வந்து விட்டேனே சொல்லுங்க ". "சரி சொல்றன் பூரணி உங்கள நான் விரும்புவது உங்களுக்கும் தெரியும் என்பது எனக்கு தெரியும்.. ஐ லவ் யூ பூரணி. இப்போ நீங்க சொல்லுங்க உங்களுக்கும் விருப்பந்தானே". "நான் உங்கள் மேல் விருப்பம் இல்லாமலா கவிதாவுடன் வந்து உங்களுடன் கதைத்துக் கொண்டு இருக்கிறன்.. இப்போ உங்களுடன் கதைத்துக் கொண்டு இருப்பது விருப்பம் இல்லாமலா.. சொல்லுங்க". அகிலன் இன்ப வானில் சிறகடித்து பறந்தான்.

"பூரணி.. இன்றைக்குத்தான் நான் மிக மகிழ்ச்சியாய் இருக்கிறன்.. இந்தக் கணமே நான் இறந்து போனாலும் கவலைப்படமாட்டேன்". அதே கணம் அவளையும் அறியாது அகிலனின் வாயை பொத்தினாள். "என்ன அகிலன் இப்படியா கதைப்பது" தன் செய்கையை நினைத்து அவளுக்கே வெட்கம் வந்தது. உள்ளம் உவகையால் பொங்கியது அகிலனுக்கு."வாங்க பூரணி கன்ரீனில் போய் டீ எடுப்பம்". "நான் வரல்ல.. அகிலன் எனக்கு கூடவே வர வெக்கமாக இருக்கு". "என்ன பூரணி இப்படிச் சொன்னா.." "இல்லை.. நாம இருவரும் ஒண்ணாப் போனா எல்லாரும் பார்ப்பினம். இன்றைக்கு வேண்டாமே அகிலன்". அவ் வேளை.. கவிதாவும் வந்து பூரணிக்கும் அகிலனுக்கும் வாழ்த்துச் சொல்ல பூரணியின் முகம் வெட்கத்தால் சிவந்து போனது. "நாணமோ..இன்னும் நாணமோ... அந்த ஜாடை நாடகம் என்ன.. அந்த பார்வை கூறுவதென்ன நாணமோ.." குனிந்த படி இருந்த பூரணியின் தலையை தடவிய படி கவிதா மெல்லிய குரலில் பாடினாள். "போதும்.. போதும்.. வாங்க நாம் கன்ரீனுக்கு போவோம்". அவர்களை அழைத்துக்கொண்டு அகிலன் வூஸ் கன்ரீன் பக்கமாக போனான். "காதல் கை கூடிய பார்ட்டியா இது அகிலன்". அப்படியே வைத்துக் கொள்ளுங்க கவிதா". "இது சரிவராது இன்னும் பெரிசாக வைக்க வேணும்". "பிறகு பாக்கலாம் கவிதா.. இப்ப வாங்க ". அன்று மூவரும் கன்ரீனில் சிற்றுண்டி முடிந்த பின் நேரே சங்கமித்தா விடுதி வரை சிரிப்பும் கதையுமாக வந்து சேர்ந்த பின்னரே அகிலன் விடை பெற்றான். அகிலனுக்கு முன்னமே விடுதிக்கு வந்த யோகனும் பாலாவும் அகிலன் வரவுக்காக காத்திருந்தனர். "மச்சான் அகிலன்.. காதல் கை கூடிய சந்தோஷம் உன் முகத்திலும் தெரியுது". "டேய் பாலா நீ சொல்வதும் சரிதான் மச்சான்..". அகிலா நீ காத்திருந்தது வீண் போகல்லடா பார்ட்டி ஏதாவது.. உண்டா"." மச்சான் அதை இன்னுமொரு நாள் பாப்போம்". "இல்லடா நாளை இரவுக்கு ஒழுங்கு செய்மாடா". "சரிடா பாலா.. நீயே ஒழுங்கு செய். நான் காசு தாறன்".

அகிலன் பூரணி காதலர், விரிவுரை முடிந்த மறுகணமே நூலகத்தில் சந்திப்பதை வழக்கமாக்கிக் கொண்டனர். வெளியில் ஒன்றாக செல்வதை தவிர்த்தாள் பூரணி. காலமும் வேகமாக சுழன்றது. ஒரு வருடம் உருண்டு போயிருந்தது. அன்றும் வழமை போல் நூலகத்தில் பூரணியைச் சந்தித்தான் அகிலன். "என்ன.. பூரணி நாம் இருவரும் கன்ரீனிக்காவது சேர்ந்து போகாமல் இருக்கோம். வாங்க இன்றைக்காவது போவோம்". "இல்லை அகிலன் வேணாம். எனக்கு சேர்ந்து வர ஏதோ ஒன்று தடுக்குது இன்னொரு நாள் போவோமே". "சரி.. அதை விடுங்க.. பூரணி இன்றைக்கு நானும் வாறன் விடுதி வரைக்கும். நாம் சேர்ந்தே போவோம்". "றூமேற் கவிதா வருவாள் என்ன". " கவிதாவை விடுதிக்கு முன்னுக்கு அனுப்பிவிடு பூரணி பின்னால் நாம போவம் ". "இல்லை அகிலன்.. கவிதா எனக்காக வெளியே பார்த்துக் கொண்டு நிற்கிறாள்". "சரி.. நான் கவிதாவோடு கதைக்கிறன்". "வேணாம் அகிலன்". சொன்ன வேகத்தில் பூரணி எழுந்து விட்டாள். "கொஞ்சம் இருங்க.. பூரணி கொஞ்சம் கதைக்க வேணும்". "அகிலன் நாளைக்கு கதைப்பம் நேரம் போயிற்று வாறன்".

அடுத்தநாள் நூலகத்தில் பூரணியை சந்தித்த அகிலன் கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான். "என்ன அகிலன் கோபமா". "இல்லை பூரணி". "அப்போ ஏன் கதைக்காமல் எங்கோ பார்த்தபடி இருக்கிறீர்கள்..". "இல்ல சும்மாதான் நேற்று நான் சொல்ல வந்ததை கூட கேட்காமல் போய் விட்டீர்கள்". "சரி, அத விடுங்கள் இப்போ சொல்லுங்க". "சரி, நாம் இன்றைக்கு பின்னேரம் வெளியில போய் வருவோம். நான் விடுதிக்கு ஆறு மணிக்கு வாறன். ஏழு மணிக்குள் திரும்ப விடுதிக்கு போயிடலாம்".

நிமிர்ந்து அகிலனைப் பார்த்தாள் பூரணி. "இப்ப வேணாம் அகிலன். எனக்கு பயமாகவும் இருக்கு அதே நேரம் எனக்கு ரியூட் எழுதும் வேலையும் இருக்கு". "அப்போ என் கூடவே வரமாட்டீங்க அப்படித் தானே பூரணி". "அப்படி இல்லை அகிலன் பிறகு போவோம் இப்போ.. வேணாம்". "விடுதிக்கு நான் வருவதை பூரணி விரும்ப வில்லை போலும்". அகிலன் புரிந்து கொண்டான். "இன்றைக்கு விடுதிக்கு வர வேணாம் அகிலன். பிறகு நாம் வெளியில் போகலாம். நூலகத்தில் நாம் ஒவ்வொரு நாளும் சந்தித்து கதைக்கும் போது வெளியிலும் போக வேணுமா அகிலன்". பூரணியின் கேள்விக்கு பதில் சொல்லாது புழுங்கினான் அகிலன். எல்லாக் காதலர்களையும் போல் பல்கலை வளாகம் முழுவதும் பூரணியுடன் கைகோர்த்தபடி உலாவர ஆசைப்பட்ட அகிலனுக்கு இது ஏமாற்றமாகவே இருந்தது. விரிவுரைகள் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெற்றதால் அந்த நாட்களில் நூலகத்தில் கூட அகிலன் பூரணியை சந்திப்பது தள்ளித்தான் போனது.

அகிலனின் தமையன் சிவலிங்கம் அகிலனின் காதல் செய்தியை அறிந்து விட்டார். அகிலனின் ஊரவன் மயூரன் மூலமாகத்தான் செய்தி போயிருக்க வேணும் என அகிலன் ஊகித்தான். காதல் செய்தி போன மறுநாளே விடுதிக்கு வந்த தமையன் சிவலிங்கம் றூம்மேற் யோகன் இருக்கும் போதே அகிலனுடன் சற்று காரசாரமாகவே கதைத்தார். முன்பும் இரு தடவைகள் வந்து போனதால் யோகனுக்கும் நன்கு பழக்கமானவர். றூமேற் யோகன் பயந்தே போனான். அவரது கண்டிப்பு அப்படி இருந்தது. "இந்த காதல் சங்கதியை நீ இத்தோடு விட்டுத் தொலைத்து விடு. இல்லையா.. பெட்டியை எடுத்துக் கொண்டு உடனே வீட்டுக்கு வந்துவிடு. இது தொடரும் என்றால் நல்லா இருக்காது". திக்கு முக்காடிப் போனானான் அகிலன். அன்று விடியலில் சிவலிங்கம் ஊர் கிளம்பி போன பின் நடந்ததை பாலாவிடம் போய்ச் சொன்னான் யோகன். ஒரு வருடமாக தொடர்ந்த காதலை ஒரு நொடியில் அவர் நொறுக்கிய போது உறுதி குலைந்து போனான் அகிலன். ஆனாலும் அகிலன் மனம் தளரவில்லை. பார்த்துப் பார்த்து பூரணியை காதலித்தவனல்லவா அவன். இருந்தும் அவனது குடும்பத்தின் நிலையும், எதிர்பார்ப்பும் அவனை சங்கடப்படுத்தியது என்னவோ உண்மைதான்.

(17ஆம் பக்கம் பார்க்க)

வெல்லாவெளி விவேகானந்தம்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 92

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 | 06 | 07 |
| 08 | | | | | ■ | 09 | |
| 10 | | | | ■ | 11 | ■ | ■ |
| 12 | | ■ | ■ | 13 | | | |
| | ■ | 14 | 15 | | | ■ | ■ |
| ■ | 16 | | | | ■ | 17 | 18 |
| 19 | | | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

திரு/திருமதி.செல்வி ............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ............................................
............................................
............................................
............................ ............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 92
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 92

### இடமிருந்து வலம்

1. தானாகத் தோற்றம் பெறுவது
5. ரத்தம்
8. திரைப்படத்தில் அல்லது நாடகத்தில் வரும் பிரதான பெண் பாத்திரம்
9. தண்டனைக் கைதியை அடைத்து வைத்திருக்கும் இடம்.
10. கிழிந்த துணியைக் குறிக்கும் (குழம்பியுள்ளது)
12. உள்ளிழுக்கும் மூச்சு
13. நாடோடி பிச்சைக்காரன்
14. பணியாளர்களை வைத்து சொந்தத் தொழில் அல்லது வியாபாரம் செய்பவர் குழம்பிவிட்டார்.
16. இது ஒரு கறிச்சரக்கு
17. பணம்
19. இருக்கும் நிலையிலிருந்து பெறும் உயர்வு
20. பொருள் கொள்வனவுக்கு முன்பாக அதன் விலைக்குறைப்பு பற்றிய பேச்சு
21. வலி நிவாரணத்துக்காக உடலில் பூசும் திரவ மருந்து
22. தாய் மாமனை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. நறுமணம்
2. பிறந்த அல்லது சொந்த நாடு (குழம்பியுள்ளது)
3. இசைக் கருவிகள் அல்லது ஆலய மணியிலிருந்து எழும் ஓசை (குழம்பியுள்ளது)
4. வேகம் மிகுந்த காற்று
6. சுவை
7. பழங்காலத்தில் சிற்றரசர்கள் பேரரசருக்குச் செலுத்திய வரி
11. ஒருவகை மலர்ச் செடி
13. முதலீட்டுக்கு அதிகப்படியாக கிடைக்கும் வருமானம் (குழம்பியுள்ளது)
14. இந்தியாவுக்கு இப்படியும் ஒரு பெயர்
15. வீட்டினது உட்கூரையின் உச்சிப் பகுதி
16. உயர்ந்த பண்பு (குழம்பியுள்ளது)
17. உறைப்புத்தன்மை
18. நோக்கம், பிரதிபலன் இல்லாததைக் குறிப்பது
19. பேரறிஞர்
20. சிலரின் தலைமுடிக்குள் காணப்படும் சிறு உயிரினம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 91

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. சத்திரம்
4. விசை
6. வசை
7. பயறு
8. கிலி
10. உரல்
11. காவாலி
13. திடம்
14. பசி
16. மான்
17. சரம்
19. பதக்கம்
21. புன்னகை
22. பாரி

**மேலிருந்து கீழ்**

1. சங்கிலி
2. திசை
3. வரகு
4. விபரம்
5. தையல்
7. உறுதி
9. வாலிபன்
12. காசி
13. டமாரம்
15. கன்னி
16. மாண்பு
17. சக்கை
18. பாதம்
20. பரி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 91

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **எஸ், செல்வராஜ்,** 91/1,பிரதான வீதி, கொழும்பு 11 | **மாஹி** 366, நங்கல்ல, துல்ஹிரிய | **ஏ.எச்எம். இல்ஹாஸ்,** இல 128, ஹிஜ்ராபுர, திகன, ரஜவெல்ல |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். தமிழ் மலர்,** கல்முனை
2. **எஸ் கபிதூரிகா** மட்டக்களப்பு
3. **பி.ஆர்.ஏ. ஷக்கூர்,** மடவள பஸார்
4. **செ.ஞானராசா** அன்புவழிபுரம்
5. **என்.கே. வேணி** பலாங்கொடை
6. **எஸ். மஹசூன்** கொழும்பு 11
7. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
8. **எம்.ஏ. அத்தாஸ்,** மாத்தறை
9. **கே. கந்தசாமி,** புசல்லாவை
10. **சாஹிராபானு லியாவுத்தீன்** புத்தளம்

## கெம்பஸ் காதல்... *(16ஆம் பக்க தொடர்)*

அதற்காக தன் காதலை தியாகம் செய்ய ஒரு போதும் நினைக்க வில்லை அகிலன். பாலா, யோகனுக்கு மட்டும் தெரிந்த செய்தியை பூரணிக்கு அகிலன் சொல்லவில்லை. பூரணியை அடுத்து வந்த நாள் விரிவுரைகள் முடிந்த பின் நூலகத்தில் சந்தித்தான் அகிலன்.

"விரிவுரை முடிந்தும் கன்ரீனிக்கு நான் போகாமல் இருக்கன் பூரணி. வாங்க நாம வூஸ் கன்ரீனிக்கு போவம்". "வேண்டாம் நான் வரல்ல அகிலன். நீங்க போய் வாங்க.. நான் உங்களுக்காக இருக்கன் நீங்க வரும் மட்டும்". "ஒகே நான் வாறன்". பூரணி மாட்டன் என்றதால் அகிலனுக்கு வருத்தம் இருந்தது. "பூரணி எப்பவும் இப்படித்தான்" என நினைத்தவாறு கெம்பா கன்ரீன் வந்த அகிலன் நண்பர்களோடு இணைந்து டீ எடுத்த படி ஒரு சிகரெட் பற்ற வைத்தவன் புகையை ஆழமாக உள்ளிழுத்து விட்டான். அவனுக்கும் அப்போது அது இதமாக இருந்தது.

ஒருபக்கம் தமையனின் கண்டிப்பான வார்த்தைகள் வந்து போனது. இன்னொரு பக்கம் பூரணி தன்னுடன் நடந்து கொள்ளும் விதமும் அகிலனுக்கு மனதில் சங்கடம் தந்தது. மனக் குழப்பத்தில் சிகரட் புகையை உள்ளிழுத்து ஊதித் தள்ளினான். "என்னடா அகிலன்.. நீ குழப்பத்தில் இருப்பது போல தெரியுது". "ஒண்ணுமில்லடா யோகு.. வாங்கடா றூமுக்கு போவம்". நூலகத்தில் பூரணியப் பார்க்கப் போகவும் விரும்பல்ல அகிலன். "மச்சான் என்னடா.. அண்ணே வந்து போனதால குழம்பி போனாயா..". "அதுவுந்தான் மச்சான்.. வாங்கடா கதைத்துக் கொண்டு போவம்". "வேறு என்னதான் பிரச்சினை சொல்லன்". யோகன் விடவில்லை கேட்டபடி வந்தான். "இல்லை மச்சான் அண்ணை வந்து பேசிப்போட்டு போனது வருத்தந்தான். வீட்டில் என்ன பிரச்சினையோ தெரியல்ல. அதிருக்க பூரணியும் பெரிசா பிகு பண்ணுறா. அதுவும் எனக்குப் பிடிக்கல்ல". "நீ என்னடா சொல்றா எனக்கு விளங்கல்ல". பாலாதான் கேட்டான். "கன்ரீனிக்கு பூரணியை பல தடவை டீ குடிக்க அழைத்துப் பார்த்துவிட்டன். இன்றும் அழைத்து விட்டுத்தான் நான் தனியே வந்தன்". "ஏன்டா.. பூரணி அப்படி இருக்காள்". "யாருக்குத் தெரியும். என் கூட வர வெக்கமாம். நமது பண்பாடு இடம் கொடுக்கல்ல போல". அகிலன் அலுத்துக் கொண்டான். "சரிடா அதை விடுடா.. இதுக்கு போய்.."

நூலகத்தில் இருந்த பூரணி அகிலன் வருவான் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தவளாய் கோகிலா வர விடுதிக்கு கிளம்பினாள். "என்ன பூரணி.. அமைதியாக வாறா. ஏன் அகிலன் வரல்லையா". "லெக்ஸர் முடிய அகிலன் வந்து கன்ரீன் போக அழைத்தும் நான் போகல்ல. அகிலனை கன்ரீனிக்கு போய்விட்டு பிறகு வரச் சொன்னன். அகிலன் கன்ரீன் போன பின்னர் திரும்ப வரல்ல. அகிலனுக்கு கோபம் போல". "நீயும் ஏன்டி அப்படி இருக்கா.. இதில் என்ன இருக்கு பூரணி. தவறு இல்லத்தான்". "நான்தான் அகிலனிடம் சொன்னன். ஏனோ அகிலன் என்னை புரிந்து கொள்ளவில்லை". அடுத்த வந்த சனிக்கிழமை அகிலனுக்கு இருக்க முடியவில்லை. பூரணியை சந்திக்கும் முனைப்பும் இருந்தது. அன்று நூலகத்தில் வைத்து பூரணியை கன்ரீனிக்கு அழைத்தும் வராதது அகிலனுக்கு வருத்தமாக இருந்தது. இருந்தும் அன்று மாலையில் பூரணியை சந்திக்க விடுதிக்கே போயிருந்தான். பூரணிக்கு செய்திஅனுப்பி விட்டு காத்திருந்தான் நேரம் கடந்து கொண்டிருந்தது. பூரணி வரவில்லை. கவிதா.. தான் வந்தாள்.

"நான் வந்து அரைமணிநேரம் ஆச்சு. என்றான். "தெரியும் அகிலன். பூரணி வரமாட்டாள் போல. நான் அவளிடம் சொல்லிப் பார்த்தன். அவள் வருவதாக இல்லை அதுதான் நான் வந்தன். நேற்றும் உங்களுக்கிடையில் ஏதோ பிரச்சினை போல". "அப்படி இல்ல கவிதா நடந்ததை பூரணி சொல்லி இருப்பாள்தானே.. சரி அதை விடுங்க நான் வாறன்". தன் காதலால் வீட்டில் நெருக்கடி. இங்கு காதலியின் உதாசீனம். வெறுத்துப் போனான் அகிலன். "போதும் இந்தக் காதல் வாழ்வு.. என் எதிர்காலம் இதனால் பாதிக்கக் கூடாது. இனி படிப்பில் கவனம் முழுவதையும் நான் செலுத்துவேன்" மனதில் உறுதி பூண்ட அகிலன் தெளிந்த மனதுடன் கில்டா விடுதியை அன்று போய் சேர்ந்தான். அதன் பின் என்னவோ எல்லாம் நடந்து முடிந்து போனது.

"என்ன அகிலன் அமைதியாகி விட்டீர்கள்.. கடந்த கால நிகழ்வுகள் வந்து போனதா". "அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள் பூரணி". "அகிலன் அன்று நீங்கள் சங்கமித்தா வந்த போது நான் உங்களை வந்து பார்க்காமல் இருந்தது உங்களை உதாசீனம் செய்வதற்கில்லை. உங்களது தமையன் வந்து உங்களை கண்டித்துவிட்டு போனதை உங்களின் றூம்மேற் யோகன் சொன்ன போது எனக்கு அது பெரும் வேதனையை தந்தது. நம் காதல் உங்களது படிப்புக்கோ.. உங்களது வீட்டாருக்கோ.. இடைஞ்சலாக இருந்து விடக் கூடாது என்பதனால் நான் அன்று எடுத்த உறுதியான முடிவு அது அகிலன்". அகிலனுக்கு சுள்ளென மனதில் தைத்தது. அவர் எதுவும் பேசவில்லை. பூரணியே தொடர்ந்தாள். "நீங்கள் வெளியே சேர்ந்து போக என்னை அழைக்கும் போதெல்லாம் உள்ளூர விருப்பம் எனக்கும் இருந்தது அகிலன். ஆனாலும் ஏதோ ஒன்று என்னைத் தடுத்தது அதுதான் உண்மை அகிலன். எனக்கும் நிறைய கனவுகள் ஆசைகள் இருந்தது என்னை இப்பவாது நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நினைக்கிறன். முதன் முதலாக முகிழ்ந்த காதல் அல்லவா அகிலன்". "பூரணி.. குழப்பமான மன நிலையில் அன்று தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை.. காதலியின் உதாசீனம் என்னை காயப்படுத்தியது. தமையனின் கண்டிப்பு வேறு.. ஆனால் உங்களுக்கு பெரிய மனசு.. மிக்க நன்றி பூரணி..". "போதும்.. போதும்.. நீங்கள் புகழ்ந்தது". அவளே தொடர்ந்தாள்.

"அகிலன் அறுபத்தைந்து வருடங்களை தொட்டு நிற்கும் உங்களுக்கு எனது வாழ்த்துகள். உங்கள் பிறந்த நாளுக்கு பரிசு பொதி ஒன்றை உங்கள் பல்கலைக்கழக விலாசத்துக்கு அனுப்பி வைத்துள்ளேன் ஏற்றுக் கொள்ளுங்கள்". "நன்றி பூரணி". விடை பெற்றுக் கொண்டனர். அகிலன் கண்களில் கண்ணீர் கசிந்தது. "முதற் காதல் அல்லவா.. அதுவும் கம்பஸ் காதல்" முணுமுணுத்தார் அகிலன்.


CAR CARRIER FOR HIRE



Colombo City Limit:
Rs. 7,250.00
Outside City Limit:
Rs 105.00 Per Km

AA CEYLON
The Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha,
Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 210)
Web: www.aaceylon.lk



National Lotteries Board — வியாழன் 2023.10.19 — www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — 5272 — ரூ - 34,777,416.00
Z — 0 9 3 5 3 8

3514 — 2023.10.19 — ரூ - 64,683,362.00
D — 07 11 17 34 — D — 24758

Mega POWER — 1620 — 2023.10.19 — 56988 — ரூ - 411,457,728.00
N — 04 — 06 10 62 63 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

Lucky 7 — 2023.10.19 — 0098 — கன்னி — 6 3 0 6 7 8 — LT 0 2 — ரூ 11,738,503.52

ராசி ஜய மங்கள — 2023.10.19 — 581 — ரூ. 3,165,158.40
சிம்மம் — 15 21 37 48 — சிம்மம்

தன நிதானய — 1302 — 2023.10.19 — ரூ - 116,044,923.20
B — 49 73 78 82 — B — 18216


# இலங்கை இராணுவம்

# விலைமனு கோரல்

## மருந்துகள்/மருத்துவ நுகர்வுப் பொருட்கள் /மருத்துவ வாயுக்கள் / எலும்பியல் சத்திர சிகிச்சை உபகரணங்கள் / சத்திர சிகிச்சை உபகரணங்கள் / பற்சத்திர சிகிச்சை உபகரணங்கள்/ பற் மருந்துக்கள், மருத்துவ நுகர்வுப் மற்றும் ஏனைய மருத்துவ பொருட்களை கொள்வனவு செய்தல்

1. 2024ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்குத் தேவையான பின்வரும் விடயங்களை நிலையான விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் இராணுவ கேள்விச் சபைத் தலைவரினால் விலைமனு கோரப்படுகின்றன.

| விபரங்கள் | கோவை இல. | பெறுமதி (ரூபா மில்லியன்) | கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் திகதி / விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் திகதி |
|---|---|---|---|---|
| • மருந்துகள் மற்றும் மருத்துவ நுகர்வுப்பொருட்கள்) (Pharmaceutical & Medical Consumables) | DAMPS/ TENDER/2024/01 முதல் 78 வரை | 684.64 | கோவை இல. 01 முதல் 20 வரை 2023-11-22ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 21 முதல் 40 வரை 2023-11-29ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 41 முதல் 60 வரை 2023-12-13ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 61 முதல் 78 வரை 2023-12-27ஆம் திகதி 1100 மணி | 2023-10-30ஆம் திகதி முதல் திகதி வரை கேள்விப் பத்திரம் திறக்கப்படும்.<br>(சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து) 0900 மணி முதல் 1530 மணி வரை) |
| • ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பரிகாரங்கள் (Laboratory Chemicals & Reagents) | DAMPS/TENDER/2024/79 முதல் 132 வரை | 346.37 | கோவை இல. 79 முதல் 96 வரை 2024-01-03ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 97 முதல் 114 வரை 2024-01-17ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 115 முதல் 132 வரை 2024-01-24ஆம் திகதி 1100 மணி | |
| • சத்திரசிகிச்சையகப் பொருட்கள் (Items for Operation Theatres) | DAMPS/TENDER/2024/133 முதல் 146 வரை | 146.52 | கோவை இல. 133 முதல் 152 வரை 2024-01-31ஆம் திகதி 1100 மணி | |
| • அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் ( Items for Incentive Care Unit) | DAMPS/TENDER/2024/147 முதல் 150 வரை | | | |
| • இரத்தமாற்று பிரிவுக்குத் தேவான பொருட்கள் (Requirements for Dialysis Unit) | DAMPS/TENDER/2024/151 முதல் 152 வரை | | | |
| • பற்சிகிச்சை நுகர்வுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் (Dental Consumables & Pharmaceuticals) | DAMPS/DEN/CONS/2024/01 முதல் 68 வரை | 102.65 | கோவை இல. 01 முதல் 23 வரை 2023-12-06ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 24 முதல் 46 வரை 2023-12-20ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 47 முதல் 68 வரை 2024-01-10ஆம் திகதி 1100 மணி | |
| • ECG பிரிவுகளுக்குத் தேவையான பொருட்கள் (Items Required for ECG Sections) | DAMPS/TENDER/2024/153 | 84.98 | கோவை இல. 153 முதல் 169 வரை 2024-02-07ஆம் திகதி 1100 மணி | |
| • உடற்கூறியல் / தொழில்சார் சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பொருட்கள் (Items for Physiotherapy /Occupational Therapy Sections) | DAMPS/TENDER/2024/154 முதல் 155 வரை | | | |
| • மத்திய தொற்றுநீக்கி வழங்கல் திணைக்களத்திற்கான பொருட்கள் (Items for Central Sterilization Supply Department) | DAMPS/TENDER/2024/156 முதல் 160 வரை | | | |
| • விளையாட்டு மருத்துவத்திற்குத் தேவையான பொருட்கள் (Sports Medical Requirements) | DAMPS/TENDER/2024/161 முதல் 165 வரை | | | |
| • மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகளுக்கான மருந்துகள் (Medicines for Tracker Dogs & Horses) | DAMPS/TENDER/2024/166 முதல் 167 வரை | | | |
| • மருத்துவ வாயுக்கள் (Medical Gases) | DAMPS/TENDER/2024/168 முதல் 169 வரை | | | |
| • பல் சத்திரசிகிச்சை உபகரணங்கள் (Dental Surgery Accessories) | DAMPS/DEN/ACCE/2024/69 முதல் 80 வரை | 10.06 | கோவை இல. 69 முதல் 80 வரை 2024-02-09ஆம் திகதி 1100 மணி | |
| • மருத்துவ புனருத்தாபனப் பொருட்கள் (Items for Medical Rehabilitation) | DAMPS/TENDER/2024/170 முதல் 177 வரை | 196.41 | கோவை இல. 170 முதல் 185 வரை 2024-02-14ஆம் திகதி 1100 மணி | |
| • எக்ஸ்ரே படச் சுருள்கள், பரிகாரப் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் (X-ray Films, Reagents & Consumables for Radiology) | DAMPS/TENDER/2024/178 முதல் 185 வரை | | | |
| • எலும்பு பொது சத்திரசிகிச்சை பொருட்கள் (Items for Orthopedic and General Surgery) | DAMPS/TENDER/2024/186 முதல் 211 வரை | 118.10 | கோவை இல. 186 முதல் 211 வரை 2024-02-21ஆம் திகதி 1100 மணி | |
| • தடுப்பு மருந்துகளுக்கான பொருட்கள் (Items for Preventive Medicine) | DAMPS/TENDER/2024/212 முதல் 224 வரை | 168.08 | கோவை இல. 212 முதல் 218 வரை 2024-02-09ஆம் திகதி 1100 மணி<br>கோவை இல. 219 முதல் 224 வரை 2024-02-14ஆம் திகதி 1100 மணி | |

2. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களினாலும் NMRA பதிவுச் சான்றிதழ் (NMRA பதிவுச் சான்றிதழ் தேவைப்படாத பொருட்களுக்கு அதற்குச் சமமான நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். செல்லுபடியாகும் NMRA பதிவுச் சான்றிதழின் பிரதி விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கட்டளைகள் வழங்கும்போது NMRA சான்றிதழ் காலாவதியாகியிருந்தால் விலைமனுதாரரினால் NMRA சான்றிதழ் காலாவதியாவதற்கு 06 மாதங்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக ஆவணங்கள் அல்லது மீண்டும் பதிவு செய்வதற்கான கடிதம் / ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. சமர்ப்பிக்கப்படும் உருப்படிகளுக்காக Bio-equivalence Studies/ Bio-efficacy அறிக்கை இருக்குமானால் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. விலைக்கோரல் அறிவித்தல் மற்றும் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் மாதிரிகளை (Samples) சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

5. கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் 2023 ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி வரையில் சகல கேள்விக் கோவைகளையும் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் https://www.army.lk/tender. எனும் இணையதளத்தில் இணைப்பைப் பெற்று (Link) கேள்விக் கோவைகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கான சேவைகளை கேள்விதாரரினால் வழங்க முடியுமென்பதற்கான செயலாற்றுகை மற்றும் வருமானம் தொடர்பான நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வதற்கு கடந்த ஆறு மாதங்களினுள் பேணப்பட்டு வந்த வங்கிக் கூற்றுக்களின் புகைப்படப் பிரதி சகிதம் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். வழங்குநர்களுக்கான கேள்விப் படிவங்கள் குறித்த ஆவணங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் மட்டுமே விநியோகிக்கப்படும். ஆனால் இந்த நிபந்தனை 2023ஆம் வருடத்தில் அரச பாதுகாப்பு அமைச்சில் இந்த வகைப்படுத்தலின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

7. கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயங்களின் கீழ் தேவையானவை மற்றும் அளவுகள் தொடர்பான முழுமையான விபரங்கள் இலங்கை இராணுவ மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் வழங்குநர்கள் அது சார்ந்த தாம் வழங்க உத்தேசிக்கும் விடயங்கள் மற்றும் கோவைகளைத் தெரிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்காகவும் 02 மில்லியன் ரூபா முதல் 10 மில்லியன் ரூபா பெறுமதியான கோவையொன்றுக்கு 1,000.00 ரூபாவும் 10 மில்லியன் ரூபா முதல் 50 மில்லியன் ரூபா பெறுமதியான கோவைகளுக்கு 3,500.00 ரூபாவும் 50 மில்லியன் ரூபா முதல் 100 மில்லியன் ரூபா பெறுமதியான கோவையொன்றுக்கு 12,500.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக நிதிப் பணிப்பாளர் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையக மருத்துவ பெறுகை சேவைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதன் பேரில் இயைபுடைய கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

8. கேள்விகளை திறத்தலானது இயைபுடைய விடயங்களின் எதிரில் தரப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 11.00 இராணுவ தலைமையகத்தின் இராணுவ யுத்தோபகரண பணிப்பாளர் நாயக கிளையின் ஊடாக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவ தலைமையம், இராணுவ தலைமையக வாகனத் தரிப்பிடத்தில் இடம்பெறும்.

9. மேலதிக விபரங்களுக்கு: மருத்துவ பெறுகைகள் பிரிவு - 0112-553256 - 011-4051175

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

SPC

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# பெறுகை அறிவித்தல்

### வாடகை/குத்தகைக்கு கட்டிட வசதியைப் பெற்றுக்கொள்ளல்

### முடிவுறுத்தல்: 2023 நவம்பர் 08ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு

பின்வரும் இடங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அரச ஒசுசல விற்பனை நிலையங்களை நிறுவுவதற்காக வாடகை/குத்தகை அடிப்படையில் கட்டிட இடவசதியைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் இத்தால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**01. அம்பலாங்கொட 02. தெஹிவளை 03. மொரட்டுவ 04. நுவரெலியா**

உத்தேச அமைவிடங்களில் பின்வரும் மூலப்பிரமாணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன:

- கட்டிடம் 750 - 1500 சதுர அடி தரைப் பரப்பளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வர்த்தக பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும் (நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்)
- பொதுமக்களுக்கான சிறந்த அணுகல் பாதையுடன்
- மிகச் சிறந்த முகப்பு தோற்றத்துடன்
- மூன்று நிலை மின்சாரம், நீர், தொலைபேசி, வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் வொஷ் பேசின் அல்லது சிங்க் வசதியுடன் மலசலகூட வசதிகள்
- உட்புற தரைப் பரப்பிற்கு தரையோடு பதித்திருத்தல்
- குளிரூட்டப்பட்ட கட்டிடம் $25^0C$ க்கும் குறைவான உட்புற வெப்பநிலையை பராமரிக்க ஏதுவாகவிருத்தல் மேலதிக தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும்.

**முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்**

- உரிமையாளரின் பெயர்
- உரிமையாளரின் முகவரி:
- அமைவிட முகவரி:
- தொடர்பிலக்கம் (செயற்பாட்டில் உள்ள)
- சதுர அடி அளவு
- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை
- பாதுகாப்பு வைப்பு எதிர்பார்ப்பதானால்

மேற்கூறப்பட்ட விபரங்களுடன் அமைவிட வரைபடம், கட்டிட வரைபடம், உறுதியின் பிரதி என்பவற்றை "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு'' என முகவரியிட்டு பின்வரும் முகவரிக்கு 2023 நவம்பர் 08ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் நிபந்தனைகளை திட்டவட்டமாக கடைபிடித்தல் வேண்டும் என்பதுடன் கேள்விகள் கட்டிடத்தின் உரிமையாளரால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

1. விலைமனுக்கள் நகல் பிரதிகள் சகிதம் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (ஸ்டெப்ளர் பின்கள் பயன்படுத்துதல் கூடாது)
2. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கேள்வி இலக்கம், முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்'' என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.
3. மாற்று விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் முடிவுறுத்தப்பட்டதும் உடனயாக திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியஸ'', 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, கொழும்பு 05.**
**தொலைபேசி: 0112 320356-9**

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விளையாட்டுத்துறை அமைச்சு
## சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

# வெற்றிடங்கள்

### சட்ட உத்தியோகத்தர் (MM 1 -3) - 01

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் கௌரவ உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் மற்றும் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் பதவிக்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

உள்ளக விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரிகளின் பொருட்டான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. 'கனிஷ்ட முகாமைத்துவ' JM சேவை வகுதியில் இயைபுடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி** : MM 1-3 – 2016 - ரூபா 55,925 – 10x1,375 – 15x1,910 – 98,325.00

**வயதெல்லை** : 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

### உதவிப் பணிப்பாளர் (நிதி) (MM 1 -3) - 01

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் உட்பட வர்த்தகமாணி ஆரம்பப் பட்டம் அல்லது CIMA (UK) இறுதிக் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது ACCA (UK) இறுதிக் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தின் இறுதிக் கட்டத்தில் சித்தியடைந்ததன் பின்னர் பதவிக்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

உள்ளக விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளி விண்ணப்பதாரிகளின் பொருட்டான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. 'கனிஷ்ட முகாமைத்துவ' JM சேவை வகுதியில் இயைபுடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி** : MM 1-3 – 2016 - ரூபா 55,925 – 10x1,375 – 15x1,910 – 98,325.00

**வயதெல்லை** : 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**பொது நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு மேலே கேட்கப்படும் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- விண்ணப்பங்களை 2023-11-04ம் திகதி அல்லது அதற்கு முன் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.
- உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் தற்போது அரச சேவையில் இருப்பவர்கள் நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**த.பெ. இல. 2211,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கொழும்பு பல்கலைக்கழகம்

## பட்டதாரி கற்கைகள் பீடம்

# அனைத்து விரிவுரையாளர் மண்டபங்கள் மற்றும் பரீட்சை மண்டபங்களின் வளிச்சீராக்கியமைத்தல்

### (ஒப்பந்த இல.: MD/MR/B/25/2023)

கொழும்பு பல்கலைக்கழக, பட்டதாரி கற்கைகள் பீட, அனைத்து விரிவுரையாளர் மண்டபங்கள் மற்றும் பரீட்சை மண்டபங்களின் முன்மொழியப்பட்ட வளிச் சீராக்கியமைத்தல் திட்டத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு பல்கலைக்கழக, உப வேந்தரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பொறியியலாளரின் மதிப்பீடு எதிர்பாரா செலவுகள் மற்றும் வரிகள் உட்பட ரூபா 142,000,000.00 என்பதோடு நிர்மாணக் காலம் 182 நாட்களாகும்.

1. **பணிகள் பின்வருமாறு,**
   i. கொழும்பு பல்கலைக்கழகம், பட்டதாரி கற்கைகள் பீட, அனைத்து விரிவுரையாளர் மண்டபங்கள் மற்றும் பரீட்சை மண்டபங்களின் வளிச்சீராக்கியமைத்தல்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோலை கொண்டிருத்தல் வேண்டும்.
   i. செல்லுபடியான வர்த்தகப் பதிவு.
   ii. பொறிமுறை காற்றோட்டம் மற்றும் வளிச்சீராக்கிக்கான (MVAC) EM 1 இன் ICTAD பதிவு.
   iii. கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதான ஒப்பந்ததாரராக ஒதுக்கப்பட்ட காலத்திற்குள் வெட் இன்றி நூற்று ஐம்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூபா 150 மில்.) குறையாத இதனையொத்த பண்பு மற்றும் சிக்கற்பாடு மற்றும் செலவின் திட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்.
   iv. கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது இருநூற்று எண்பத்து நான்கு மில்லியன் ரூபா (ரூபா 284 மில்.) பெறுமதியின் ஆண்டு புரள்வு பணியைப்பூர்த்தி செய்திருத்தல்.
4. கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு 25,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஒக்டோபர் 22 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் கொழும்பு-07, கொழும்பு பல்கலைக்கழகம், பட்டதாரி கற்கைகள் பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு பல்கலைக்கழகம், பட்டதாரி கற்கைகள் பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
6. முத்திரைப் பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 நவம்பர் 16 ஆம் திகதி 14.30 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கொழும்பு 03, குமாரதுங்க முனிதாச மாவத்தை, இல. 94, கொழும்பு பல்கலைக்கழக, பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மூடப்பட்ட பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு-07, கொழும்பு பல்கலைக்கழக, பட்டதாரி கற்கைகள் பீடத்தின் சபை அறை II (முதல் மாடி) இல் 2023 நவம்பர் 1 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. 2024 மார்ச் 15 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனு பிணைக்கான படிவத்தை (நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெறத்தக்க உத்தரவாதம்) பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் எந்த ஒரு வர்த்தக வங்கியில் இருந்தும் பெறப்பட்ட கொழும்பு பல்கலைக்கழக, உப வேந்தரின் பெயருக்கு 2,130,000.00 ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக விலைமனுக்கள் இருத்தல் வேண்டும்.
10. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு-07, கொழும்பு பல்கலைக்கழகம், பட்டதாரி கற்கைகள் பீடம், சிரேஷ்ட உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**இல. 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை**
**கொழும்பு 03**
**2023 ஒக்டோபர் 22**

SPMC

## அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

## சுகாதார அமைச்சு

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

# தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறையை பின்பற்றி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்காக (SPMC) தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்தலுக்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கை

01. SPMC இற்காக தர முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு ஆலோசனை சேவையை வழங்குவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் சார்பில் அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழுவினால் (MCPC) முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

02. பின்வரும் வழிகாட்டல்களின் புதிய பதிப்பில் விபரிக்கப்பட்ட கொள்கைக்கு அமைய இந்த முன்மொழிவுகளுக்கான கோரிக்கையில் (RFP) விபரிக்கப்பட்ட தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறை மற்றும் நடைமுறைகளின் கீழ் ஆலோசகர்/ ஆலோசனை நிறுவனம் ஒன்று தேர்வு செய்யப்படும்:
    - தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஆலோசகர்களின் தெரிவு மற்றும் பணியமர்த்தல்

03. ஆலோசனை சேவை தனிநபர் ஆலோசனை/ ஆலோசனை நிறுவனம்/ கூட்டு முயற்சி ஒன்றினால் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு இதன் பின்னர் ஆலோசகராக அடையாளப்படுத்தப்படும்.

04. 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 13 ஆம் திகதி வரை பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் திட்டமிடல் மற்றும் பெறுகை பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றுடன் 8,000 இ. ரூபாவை செலுத்திய பின் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் SPMC இன் அலுவலகத்தில் இருந்து ஆர்வமுடைய ஆலோசகர்கள் மேற்கூறிய ஆலோசனை சேவைக்காக RFP மற்றும் குறிப்பு விதிமுறைகளை (TOR) வாங்க முடியும். வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு (இலங்கையில் வசிக்காதவர்கள்); SPMC இற்கு ஒன்லைனில் 25.00 அமெரிக்க டொலர்களைச் செலுத்துவதன் மூலம் கூறப்பட்ட RFP மற்றும் குறிப்பு விதிமுறைகளை (TOR) வாங்க முடியும். (விபரங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சலுக்கு உங்கள் கோரிக்கையை அனுப்பவும்)

05. ஆலோசகர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை 2023 நவம்பர் 14 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் மென் பிரதி (CD/DVD/Pen Drive) ஒன்றுடன் சேர்த்து வெவ்வேறாக அசல் மற்றும் நகலுடன் இரு கடித உறைகளில் தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளுடன் முன்மொழிவுகளின் முழுமையான தொகுதி ஒன்றைத் தலைவர், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11, சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல தோட்டம், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் தரைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும் (தொலைபேசி + 94 11 2635353, தொலைநகல் + 94 11 2637574, மின்னஞ்சல் - chairman@spmc.gov.lk).

06. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கீழுள்ள முகவரியில் 2023 நவம்பர் 01 ஆம் திகதி மு.ப. 10.00க்கு நடைபெறும் என்பதோடு ஒன்லைன் (சூம் வழி) சந்திப்பில் பங்கேற்க யாரேனும் ஆர்வம் காட்டினால் கோரிக்கை அடிப்படையில் சூம் சந்திப்புக்கான இணைப்பு பகிரப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல தோட்டம்,**
**இரத்மலானை, இலங்கை.**

**தொ.: + 94 11 2635353/ + 94-112637574/ +94-11 2623298**
**தொலைநகல்: + 94 11 2634771/ + 94 11 2626621**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmc.gov.lk**

# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

### தொழில்நுட்ப அமைச்சு

### சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவி - சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவு (HM 1- 1)

## சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவி (நிர்வாகம்) — 01

**தகைமைகள்**

**வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தகம், மனித வள முகாமைத்துவம் அல்லது வர்த்தக நிர்வாக விசேட பட்டத்தில் (நான்கு ஆண்டுகள்) இளமாணிப் பட்டம் அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுப் பட்டம் (மூன்று ஆண்டுகள்)

**அத்துடன்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

**மற்றும்**

கூட்டு நிறுவனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது பெயர்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்தில்" முதல் பட்டத்தின் பின்னர் குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

01) மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர் தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

02) பதவிக்கு தொடர்புடைய முகாமைத்துவப் பிரிவில் 13 ஆண்டுகள் அனுபவத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர் இந்தப் பிரிவின் மேற்பார்வை பணியை மேற்கொள்வார். விண்ணப்பதாரர் அனைத்து மட்டங்களிலும் ஊழியர்களுடன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு அவர் சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு**

**இ.ரூபா 80,295.00 – 15 x 2 270.00 - இ.ரூபா 114,345.00**

**வயது**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**ஏனைய நன்மைகள்**

1. PED 1/2015 & PED 1/2015 (i) ஆம் இலக்க பொது நிறுவன சுற்றுநிருபத்தின்படி போக்குவரத்து வசதி வழங்கப்படும்
2. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்குதல்
3. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
4. வரம்புக்கு உட்பட்ட செலவு செய்த மருத்துவ செலவுகளை ஈடுசெய்தல்.
5. பொது திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்கத் தொகை
6. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம்
7. தொழில்முறை கொடுப்பனவு
8. தொடர்பாடல் கொடுப்பனவு

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏனைய தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை 2023.11.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

**தொ.: 011-2671567 - 72**

# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

### தொழில்நுட்ப அமைச்சு

### பணிப்பாளர் பதவி - சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவு (HM 1- 3)

## பணிப்பாளர் பதவி (நிர்வாகம்) — 01

**தகைமைகள்**

**வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம் அல்லது மனித வள முகாமைத்துவத்தில் (நான்கு ஆண்டுகள்) இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவம்.

**மேலுள்ள பதவிக்கான அனுபவம்**

கூட்டு நிறுவனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது பெயர்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனை ஒன்றுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் முதல் பட்டத்திற்குப் பின் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம் பெற்றிருப்பதோடு அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 02 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

மனித மற்றும் ஏனைய வளங்களின் முறையான பணியமர்த்தல் மற்றும் செயல்திறன் மிக்க முகாமைத்துவத்தில் அனுபவத்துடன் தலைமைத்துவம் மற்றும் பல் துறைகளை வழிநடத்திய திறமை.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

01) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

02) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் பட்டய அங்கத்துவத்துடன் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**மற்றும்**

மனித மற்றும் ஏனைய வளங்களின் முறையான பணியமர்த்தல் மற்றும் செயல்திறன் மிக்க முகாமைத்துவத்தில் அனுபவத்துடன் தலைமைத்துவம் மற்றும் பல் துறைகளை வழிநடத்திய திறமை.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பாக இருப்பார் என்பதோடு நிறுவனத்தின் நிர்வாக செயற்பாடுகளுக்கு பொறுப்பாவார். விண்ணப்பதாரர் அனைத்து மட்டங்களிலும் ஊழியர்களுடன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு அவர் சிறந்த தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு**

இ.ரூபா 86,865.00 – 15 x 2 270.00 - இ.ரூபா 120,915.00

**வயது**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**ஏனைய நன்மைகள்**

1. குறிப்பிட்ட தூரத்திற்குள் வசிப்பிடம் மற்றும் அலுவலகத்திற்கு இடையே பயணத்திற்கு போக்குவரத்துக் கொடுப்பனவு
2. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்குதல்
3. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
4. வரம்புக்கு உட்பட்ட செலவு செய்த மருத்துவ செலவுகளை ஈடுசெய்தல்
5. பொது திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்கத் தொகை
6. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம்
7. தொழில்முறை கொடுப்பனவு
8. தொடர்பாடல் கொடுப்பனவு

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏனைய தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை 2023.11.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

**தொ.: 011-2671567 - 72**

# கல்வி அமைச்சு

## NAITA

National Apprentice & Industrial Training Authority

***இந்த நிர்வாகத்தின் பின்வரும் பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.***

**01. பயிற்சி அதிகாரி பதவி GR.II (15 பதவிகள்)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:** (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 அல்லது 5)

01. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் ப.மா.ஆ.மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ தொழில்நுட்பம்/ கல்வி/ விவசாயம்/ விஞ்ஞானம்/ கணிதம்/ முகாமைத்துவம்/ சமூகவியல் துறைகளில் இளமாணி பட்டம்.

02. தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனம் ஒன்றில் இருந்து இடைநிலை மட்ட தகுதி.

03. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 07 க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

04. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஆறு (06) ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட பொறியியல் தொழில்நுட்பம் (NDT/NDES/ HNDE/D.Tech) அல்லது துறைகளில் டிப்ளோமா ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்பயிற்சி கல்வித் துறைகளில் தேசிய தொழில் தகைமை தரம் 06 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

05. அரச திணைக்களம/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது பதினொரு (11) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் மூன்றாம்நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்பயிற்சி கல்வித் துறைகளில் தேசிய தொழில் தகைமை தரம் 05 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**உள்ளக:** (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

02. தொடர்புடைய துறையில் செயற்பாட்டு பயிற்றுவிப்பு பிரிவின் (MA-4) பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

03. தொடர்புடைய துறையில் தொழில்நுட்ப - உதவி முகாமையாளர் பிரிவின் (MA 2-2) தரம் II பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளம்:** 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி
ரூபா 42,600 - 10 x 755 – 18 x 1,135 – 70,580 (JM 1-1)
(தவிர, அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**நிர்வாக அதிகாரி பதவி GR.III (04 பதவிகள்)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம் (மனித வளங்கள் முகாமைத்துவம், பொது நிர்வாகம் அல்லது வர்த்தக நிர்வாகம்)

**அத்துடன்**

அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்ளக: (கீழுள்ள 1 அல்லது 2)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

02. தொடர்புடைய துறையில் தொழில்நுட்பம் அல்லாத - உதவி முகாமையாளர் (MA 4-2) தரம் II பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளம்:** 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி
ரூபா 42,600 - 10 x 755 – 18 x 1,135 – 70,580 (JM 1-1)
(தவிர, அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**கணக்கு அதிகாரி பதவி GR.III (02 பதவிகள்)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி: (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)**

01. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகத்தில் பட்டம்.

02. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

03. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் அரச தொழில்நுட்ப கல்லூரியில் HNDA/ HNDC

**உள்ளக: (கீழுள்ள 1 அல்லது 2)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

02. தொடர்புடைய துறையில் தொழில்நுட்ப - உதவி முகாமையாளர் (MA 2-2)/ தொழில்நுட்பம் அல்லாத - உதவி முகாமையாளர் (MA 1-2) தரம் II பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளம்:** 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி
ரூபா 42,600 - 10 x 755 – 18 x 1,135 – 70,580 (JM 1-1)
(தவிர, அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**உள்ளக கணக்காய்வு அதிகாரி பதவி GR.III (01 பதவி)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி: (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)**

01. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம் / சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம்/ துறைகளில் பட்டம்.

02. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம் / சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

03. அரச திணைக்களம்/ கூட்டு நிறுவனம் / சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்குப் பின்னரான அனுபவத்துடன் அரச தொழில்நுட்ப கல்லூரியில் HNDA/ HNDC

**உள்ளக: (கீழுள்ள 1 அல்லது 2)**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

02. தொடர்புடைய துறையில் தொழில்நுட்ப - உதவி முகாமையாளர் (MA 2-2)/ தொழில்நுட்பம் அல்லாத - உதவி முகாமையாளர் (MA 1-2) தரம் II பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளம்:** 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின்படி
ரூபா 42,600 - 10 x 755 – 18 x 1,135 – 70,580 (JM 1-1)
(தவிர, அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**வயதெல்லை:** பயிற்சி அதிகாரி பதவி, நிர்வாக அதிகாரி பதவி, கணக்கு அதிகாரி பதவி மற்றும் உள்ளக கணக்காய்வு அதிகாரி பதவி

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.)

**பொது நிபந்தனைகள்:**

அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் மற்றும் அரச திணைக்களங்களின் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

உறவினர் அல்லாத உங்களைப் பற்றி கேட்டறிய முடியுமான இருவர் உட்பட முழு விபரங்களுடனான விண்ணப்பங்களை தம்மால் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023 நவம்பர் மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, ராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும் என்பதோடு குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

www.naita.gov.lk

தலைவர்,
தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி
அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, ராஜகிரிய
தொலைபேசி: 011 2888782-5

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை**

### வெற்றிடங்கள்

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கீழ் குறிப்பிட்டுள்ள வெற்றிடங்களுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இந்த அலுவலகம் நாரஹேன்பிட்ட, கொழும்பு 05 எனும் முகவரியில் மட்டும் அமைந்துள்ளது.

*** பணிப்பாளர் - 01 பதவி**
*** ஆய்வு உத்தியோகத்தர் - 02 பதவிகள்**

விண்ணப்பதாரர் இணையதளத்தில் வழங்கப்பட்ட மாதிரிக்கு அமைவாக விண்ணப்பத்தைத் தயாரித்து உரிய சான்றிதழ்களுடன், 05/11/2023ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை இலக்கம் 354/2, 7ம் மாடி, "நிபுணதா பியச", எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(* மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.nurdc.gov.lk எனும் இணையதளத்தில் உள்ளது.)

**தலைவர்,**
**இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை,**
**இலக்கம் 354/2, 7ம் மாடி, "நிபுணதா பியச",**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05**

**தொலைபேசி : 0112-595680**




## பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை விமானப்படை

# விலைமனுக் கோரல்

## இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சிறய விமானங்களில் முழுமையாக புதுப்பித்தல் மற்றும் பாவனை கால எல்லையினை நீடித்தல்

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு "இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சிறய விமானங்களில் முழுமையான புதுப்பித்தல் மற்றும் பாவனை காலஎல்லையிகை நீடித்தல். செய்வதற்கு தகுதி மற்றும் தகைமைகளைக்கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. கொள்முதல் விபரங்கள் பின்வருமாறு.

| கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | காலம் | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| AHQ/21/FR/M17/1014 | Capital Overhaul and Service Life Extension of SMH 588 MI-17-IV Helicopter | 2023 ஒக்டோபர் 23 - 2023 டிசம்பர் 06 | 2023 டிசம்பர் 06 1100 மணி | 70,000.00 |
| AHQ/23/FR/M17/1004 | Capital Overhaul of SMH-599 MI-171 Helicopter | 2023 ஒக்டோபர் 23 - 2023 டிசம்பர் 06 | 2023 டிசம்பர் 06 1400 மணி | 100,000.00 |
| AHQ/23/FR/M17/1003 | Capital Overhaul and Service Life Extension of SMH-596 , MI-171 Helicopter | 2023 ஒக்டோபர் 23 - 2023 டிசம்பர் 06 | 2023 டிசம்பர் 07 1100 மணி | 100,000.00 |
| AHQ/23/FR/M17/1005 | Capital Overhaul of SMH-4416 MI-171SH Helicopter | 2023 ஒக்டோபர் 23 - 2023 டிசம்பர் 06 | 2023 டிசம்பர் 07 1400 மணி | 70,000.00 |

2. மனுக்கோரலானது **சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB)** இடம்பெறும். மற்றும் ஒற்றை நிலை இரண்டு (02) கடித உறை ஏல முறைக்கு உட்பட்டது.
3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பணி முகவரினால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் (180 நாட்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்). சிறிய விமானத்தினை புதுப்பிப்பதுடன் அக்காலப்பகுதியினை மனுவில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. சேவை வழங்கும் நிறுவனம் / சேவை வழங்குனர்களின் தகுதிவாய்ந்த ஆய்வுக் குழு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆய்வை மேற்கொள்வது கட்டாயமாகும்

| விபரம் | இடம் | ஆய்வு காலம் |
|---|---|---|
| Capital Overhaul and Service Life Extension of SMH- 588 MI-17-IV Helicopter | இலங்கை விமானப்படை கட்டுநாயக்க தளம் | 2023 ஒக்டோபர் 23 முதல் 2023 நவம்பர் 22 0900 மணி முதல் 1500 மணி வரை |
| Capital Overhaul of SMH-599 MI-171 Helicopter | | |
| Capital Overhaul and Service Life Extension of SMH-596 MI-171 Helicopter | | |
| Capital Overhaul of SMH-4416 MI-171SH Helicopter | | |

5. ஆர்வமுள்ள மனுதாரர்கள், **கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சகம், பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே (தொலைபேசி: +94112390719, தொலைநகல்: +94112390720, மின்னஞ்சல்: (procurement@defence.lk)** மூலமாக மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்முதலுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **2023.10.23**ஆம் திகதி முதல் மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் **தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத்தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். **மேலும் 0900 மணி முதல் 1500 மணிவரை கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டேயில்** இலவசமாகப் பரீட்சித்துக்கொள்ள முடியும். மனுக்கள் **2024.03.31** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட மனு முன்மொழிவுகள் டெண்டர் அடையாள எண்ணைக் குறிப்பிட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கூரியர் முறை மூலமாக கையளிக்கப்படுதல் வேண்டும் தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளத் தேர்வுசெய்யும் மனுதாரர்கள் / மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் நேரத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். நேரிலோ அல்லது நிகல்நிலை மூலமாக ஏலங்கள் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். கால எல்லை முடிவடைந்த பின்னர மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்திட்கு பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   **கொள்முதல் கிளை,**
   **2ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை.**

7. மனுதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு இலங்கை விமானப்படையின் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

   பிரதான கொள்முதல் அதிகாரி,
   கொள்முதல் பிரிவு,
   இலங்கை விமானப்படை,
   இல.140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
   கொழும்பு 02,
   இலங்கை.
   தொலைபேசி: **+94112347694, +9411-2441044** (நீட்டிப்பு **23550**)
   தொலைநகல்: **112441553,** மினனஞ்சல்: **cpd@slaf.gov.lk, acpot@slaf.gov.lk**

**விமானப்படை தளபதி**

SELACINE

## இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை
## கல்வி அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையானது நாட்டில் அரச துறை விஞ்ஞானிகளுக்கு நிதி உதவி அளிக்கும் அரசாங்க நிதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றாகும்.

தேசிய ஆராய்ச்சி சபையில் (NRC) பின்வரும் பதவிக்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விஞ்ஞான/ஆராய்ச்சி அதிகாரி - AR 1 - பதவி 02

தொழில் விபரம்: சபைக்காக மானிய முகாமைத்துவம், அரச மானிய தகவல், தரவுகளை பராமரித்தல், புள்ளிவிபர ஆய்வுகள், அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறைகள் போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தலுக்கு பொறுப்பாக இருப்பார்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 அல்லது 2)**

01. இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், விவசாயம், பொருளியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம்.

**அல்லது**

02. தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு பின்னரான டிப்ளோமாவுடன் இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், விவசாயம், பொருளியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் பொதுப் பட்டம்.

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு** : AR 1-2016 [ரூபா 53,150/- 10 x 1,375/- 15 x 1,910/– 95,550]

### கணக்கு அதிகாரி - JM 1-1 - பதவி 01

**தொழில் விபரம்** : நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகள், வரவு செலவு திட்ட அறிக்கை தயாரித்தல், கணக்குத் தரவுத்தளத்தை இற்றைப்படுத்தல் மற்றும் கணக்காய்வு குழுவை ஒருங்கிணைத்தலுக்கு பொறுப்பாக இருப்பார்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 அல்லது 2)**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம், கணக்கியல், முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் இளமாணிப் பட்டம்.

**அல்லது**

02. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்

**மற்றும்**

கூட்டு நிறுவனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

01. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்

**அல்லது**

02. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் II தொழில்நுட்பம் அல்லாத (MA 1) உதவி முகாமையாளர் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு** : JM 1-1-2016 [ரூபா 42,600/- 10 x 755/- 15 x 1,135/– 70,580]

**மேலுள்ள அனைத்து பதவிகளுக்கும் பொருந்துகின்ற ஏனைய நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரர்கள் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.
03. விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
04. எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
05. ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக (ETF) உரித்துடையதான இந்தப் பதவி நிரந்தரமானதாகும்.
06. விண்ணப்பதாரர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் பிரதிகள், ஏனைய தொடர்புடைய சான்றிதழ்கள், இரு உறவினர்கள் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து தமது கையொப்பமிடப்பட்ட விண்ணப்பங்களை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2023 நவம்பர் 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்தியா மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால்/ விரைதூதரில் அனுப்புதல் வேண்டும்.
07. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்கள் தமது குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
08. மேலுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரம் www.nrc.gov.lk என்ற தேசிய ஆராய்ச்சி சபை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
**தேசிய ஆராய்ச்சி சபை**
**120/7, வித்தியா மாவத்தை**
**கொழும்பு 7**
**தொ.: 011-2675176**
**தொலைநகல்: 011-2675136**









## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

இராசியில் குரு இருக்கிறார். அவர் 5 ஆம் இடத்தில் உள்ள தன குடும்பாதிபதி சுக்கிரனைப் பார்க்கிறார். 6இல் சூரியன் பலம் பெற்று இருக்கிறார். 7இல் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கேது 6 க்கு வந்து விட்டது நல்ல அதிர்ஷ்டகரமான அமைப்பு. குரு 5, 7, 9 ஆம் இடங்களை சுப பார்வையாகப் பார்வையிடுவது சிறப்பு. அவர்கள் சம்பந்தமான கவலை தீரும். 9ஆம் இடத்தில் சனி சாதகமாக இருப்பதால் தொழில் மேன்மையாக இலாபகரமாக நடைபெறும்.

எந்த வேலையும் கடின உழைப்புக்குப் பின்தான் பலம் தரும். அதிர்ஷ்டத்தை இப்போதைக்கு நம்ப வேண்டாம் பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் உண்டு. நேரத்திற்கு தூங்க முடியாத நிலை வரலாம்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கலைத்துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். வண்டி வாகன யோகம் உண்டு. 5ஆம் இடம் வலுவாக இருக்கிறது. பிள்ளைகளால் ஏற்றமும் மகிழ்ச்சியும் உண்டு. புத்திக் கூர்மையுடன் செயலாற்றுவீர்கள். பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து தேவையான உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமை ஓங்கும். குல தெய்வ தரிசனம் பூஜை சிறப்பாக நடக்கும். கோயில் தரிசனம் கிடைக்கும். சகோதர உறவுகளில் உரசலும் மனக் கசப்பும் ஏற்படும் வாய்ப்பு உண்டு. பதற்றமும் மனக்கவலையும் ஏற்படலாம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

செவ்வாய் வலுவோடு இருந்து உங்கள் இலாபஸ்தானத்தைப் பார்ப்பதால் வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். புதிய மனை, வீடு வாங்கும் யோகம் ஏற்படும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள். 10இல் இராகுவும் 11இல் குருவும் உங்கள் வேகத்தையும் ஆற்றலையும் அதிகப்படுத்தும். எந்தப் போட்டி வந்தாலும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். கேந்திரத்தில் இராசிநாதன் ஆட்சி உச்சம் பெற்று இருக்கிறார். முக்கியஸ்தர்கள் நட்புக் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளுக்கான வாசல் திறக்கும். எதிர்பாராத நற்செய்திகள் மனதை நிறைக்கும். குரு 11ஆம் இடத்தில் இருக்கிறார். மனைவி வழியில் சிறப்பு உண்டு.

கேது 4ஆம் வீட்டில் இருப்பதால் வீட்டில் அவ்வப் பொழுது நிம்மதிக் குறைவு ஏற்படும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சூரியன் வாரத்தின் முற்பகுதியில் 3ஆம் வீட்டில் இருக்கிறார். 2ஆம் இடத்தில் சுக்கிரன் இருக்க தொழில் ஸ்தானத்தில் இருக்கும் குரு சுக்கிரனை பார்ப்பதும் சுகஸ்தானத்தைப் பார்ப்பதும் நல்ல அமைப்புகள். அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். பேச்சில் துணிச்சல் இருக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்புக்கள் கிடைக்கும். செவ்வாய் குரு பார்வையும் செவ்வாய் நான்காம் வீட்டில் இருப்பதாலும் வீடு வாங்கும் யோகம் நிச்சயம் உண்டு. 3இல் உள்ள கேது தடைப்பட்ட காரியங்களை நடத்தும் வாய்ப்பினைத் தரும். யோகஸ்தானத்தில் இராகு இருப்பதால் தொட்டது துலங்கும் கௌரவம் அதிகரிக்கும். தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. அஷ்டமச்சனி இப்பொழுது கண்டச் சனியாக மாறி இருந்தாலும் சில தடைகளையும் தாமதத்தையும் தந்து கொண்டே இருக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

பத்துக்குரிய சுக்கிரன், இராசியில் இருப்பதும் இராசிநாதன் வார முற்பகுதியில் 2ஆம் இடத்தில் புதனோடு இணைந்திருப்பதும், குரு இராசியைப் பார்ப்பதும் சாதகமான அமைப்புகள். உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகள் உதவுவார்கள். புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. மிகவும் நுட்பமாக, கண்ணியமாக பேசி, காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். பிள்ளைகள் மகிழ்ச்சி தருவார்கள். ஐ.டி தொழில், பத்திரிக்கைத் தொழில், ஆடிட்டர் தொழில், ஆசிரியர் தொழில் செய்பவர்கள் நல்வாய்ப்பு பெறுவார்கள். பேச்சில் நிதானம் தேவை. 2 இல் நெருப்பு கிரகமான சூரியன் இருக்கிறார். எனவே பேச்சு சூடாக வரும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

குரு உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஓரளவு வருமானமும் கிடைத்துவிடும். சுக்கிரன் 12 இல் இருப்பது உங்கள் சந்தோசத்தை அதிகரிக்கவே செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும். தொழில், வணிகம் நன்றாக நடக்கும். தடைப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். கலைத்துறை நண்பர்களுக்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரம் சிறு தடைகளை மீறி வெற்றிகரமான பாதைக்கு திரும்பும். இராசியில் கேது இருப்பதும், ஏழில் ராகு இருப்பதும் குடும்பத்தில் ஏற்படும் சிலச் சில கருத்து உரசல்களையும் கணவன் அல்லது மனைவியின் ஆரோக்கிய குறைவையும் காட்டுகிறது.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

இலாபாதிபதி சூரியன் வாரத்தின் பிற்பகுதியில் இராசியில் பிரவேசிக்கப் போகிறார். அவர் நீசம் அடைந்தாலும்கூட சுக்கிரனோடு பரிவர்த்தனை யோகத்தில் இருப்பதால் பெரும் பலக் குறைவு ஏற்படாது. குரு அவரைப் பார்ப்பதும் நல்ல அமைப்பு. பண வரவு தாராளமாக இருக்கும். தொழில்கள் நன்றாக நடக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. தெய்வ தரிசனம் உண்டு. தர்ம காரியங்களுக்கு உதவுவீர்கள். கடன்கள் அடைபடும். பிள்ளைகளின் ஆசைகள் நிறைவேறும். இராசிக்கு 6ஆம் இடத்தில் இராகு இருப்பதால் தொட்டதெல்லாம் துலங்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் சிறப்பாக இருக்கும். புது வாகனங்களை வாங்கும் வாய்ப்பு உண்டு. கலைத்துறைகளில் திறமைகள் வெளிப்படுவதால் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

வாரத்தின் துவக்கத்தில் சூரியன் 12இல் இருக்கிறார். எனவே அலைச்சல் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

இராசிநாதன் செவ்வாய் 12 இல் இருக்கிறார். மிக விரைவில் அங்கே சூரியனும் வர இருக்கின்றார். வார ஆரம்பத்தில் சூரியன் பலமாக இருப்பதால், அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு வேலை திருப்தியாக இருக்கும். வழக்குகள் சாதகமாகும். முக்கியஸ்தர்கள் நண்பர்கள் ஆவார்கள். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். கலைஞர்களுக்கு சுக்கிரனுடைய பலத்தால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் தீர்ந்து லாபம் கிடைக்கும். அரசியல் துறை நன்றாக இருக்கும். குரு 6இல் இருப்பதையும் ராகு 5 இல் இருப்பதையும் மறந்துவிட வேண்டாம். பிள்ளைகளால் சில நெருக்கடிகளோ விரும்பத்தகாத விஷயங்களோ நடக்கலாம்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

பாக்கியஸ்தானத்தில் சுக்கிரன் இருக்கிறார். அவர் இலாபாதிபதியும் கூட. இலாபஸ்தானத்தில் விரைவில் சூரியன் வரப்போகிறார். ஐந்துக்குரிய செவ்வாய் துலா இராசியில் இருப்பதும் குருவின் பார்வை பெறுவதும் நல்ல யோகத்தைக் குறிக்கிறது. பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும் வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் நல்லவிதமாக இருக்கும். விலகிச் சென்ற உறவுகள் வந்து சேரும். சொந்த பந்தங்களால் ஆதாயம் உண்டு. நட்பு வட்டாரம் விரிவாகும். அவர்களால் நன்மை உண்டு. குரு சாதகமான நிலைகளில் உள்ளதால் புதிய முயற்சிகள் பலிக்கும். செவ்வாய் 11 இல் இருப்பதால் தொழில் உத்தியோகம் முதலியவற்றில் முன்னேற்றம் உண்டு. இராகு சுகஸ்தானத்தில் இருக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் சனி இருக்கிறார் என்பதை மறக்க வேண்டாம்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

9ஆம் இடத்தில் இருந்த சூரியன் 10ஆம் இடம் வரப்போகிறார். அங்கே ஏற்கனவே செவ்வாய் இருக்க, குரு இவர்களைப் பார்க்கின்றார். புதன் பாக்கியஸ்தானத்தில் இருப்பதால் தகவல் தொழில்நுட்பம், பத்திரிகைதுறை நண்பர்கள் நல்ல வாய்ப்பைப் பெறுவார்கள். குழப்பங்கள் தீரும். 3ஆம் வீட்டில் ராகு இருப்பதால் ஒரு பெரிய பலம் கிடைத்தது போல, இதுவரை இருந்த தாமதங்களும் தடைகளும் நீங்கும். உங்கள் எண்ணம் போல் திட்டங்கள் வெற்றியாகும்.

கேது 9ஆம் வீட்டில் இருப்பதால் ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். கோயில் தரிசனமும் கிடைக்கும். பணச் சிக்கல்கள் இருக்காது. தொழில், வணிகம் நல்லபடியாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். செல்வாக்கும் சொல்வாக்கும் உயரும்.

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

7ஆம் இடத்தில் சுக்கிரன் அமர்ந்து இராசியைப் பார்க்கின்றார். அவர் சுகாதிபதி. அது மட்டுமல்ல. சுக்கிரனுக்கு தன் குடும்ப அதிபதியான குருவின் பார்வையும் கிடைக்கிறது. பாக்யாதிபதி வலுப்பெற்று இருப்பதால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. எந்தக் காரியத்தையும் கவனமாகச் செய்யும் பொழுது வெற்றிகரமாக அமையும். கோயில் புண்ணியஸ்தலம் தரிசனம் அமையும். உறவினர்கள் வருகை தருவார்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. இராகு 2இல் இருப்பதாலும், கேது 8இல் இருப்பதாலும் சில தடைகள் உண்டு. தேவையற்ற செலவுகள் அவ்வப் பொழுது ஏற்படும்.

அஷ்டமச் சூரியன், வார இறுதியில் விலகுவதால் அரசாங்க காரியங்கள் சாதகமான நிலையை அடைய சற்று பொறுத்து இருக்க வேண்டும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

இராசிநாதன் நன்றாக இருக்கிறார். ஆழ்ந்து உங்கள் மனது சொல்வதைக் கேளுங்கள் அவசரமோ படபடப்போ வேண்டாம். பணப் பற்றாக்குறை இருக்காது. கேட்ட இடத்தில் பணம் கிடைத்துவிடும். வீடு முதலியவற்றை வாங்குவதற்காக வங்கிகளில் விண்ணப்பித்திருந்தால் கிடைத்துவிடும். கணவன் மனைவி உறவுகள் சுமுகமாக இருக்கும். முக்கியஸ்தர்களின் உதவிகள் கிடைக்கும். சமூகத்தில் கௌரவம் அதிகரிக்கும்.

இராசி அதிபதி தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால், தொழில், குறிப்பாக கலை வர்த்தகம், பண முதலீடுகள் மற்றும் ஆசிரியர் பணி, கல்விப் பணி இவற்றில் உள்ளவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் உண்டு. சூரியன் 7இல் இருப்பதும், 8ஆம் இடத்தில் நீசமடைந்து இருப்பதும், இராசிக்குள் ராகு இருப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

# அன்றாட வாழ்வை நெறிப்படுத்தும் பஞ்சாங்கம்

பஞ்சாங்கமென்பது இந்துக்களைப் பொறுத்தவரை அத்தியாவசியமான ஒன்று. சித்திரைப் புத்தாண்டுப் பிறப்புக்கு ஆளுக்கொரு புத்தாடை வாங்குகிறார்களோ இல்லையோ, கட்டாயம் வீட்டுக்கொரு பஞ்சாங்கம் வாங்கிவிடுவார்கள். இன்றைக்கும் நம் வீடுகளிலுள்ள பெரியவர்களுக்கு தினமும் பஞ்சாங்கம் பார்க்காவிட்டால் உறக்கமே வராது. கிராமப்புறங்கள் என்றால் சொல்லவே வேண்டாம். குடும்பத் தலைவர்கள் ஒவ்வொருவரினதும் தலைமாட்டில் அல்லது தலையணையின் கீழ் பஞ்சாங்கம் இருக்கும். பிறப்பு முதல் இறப்பு வரை எது நடந்தாலும் பஞ்சாங்கத்தை விரித்து வைத்துக்கொண்டு ஆராய்ந்து பலன் சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். கிராமத்தவர்களின் ஜீவனோபாயம் பெரும்பாலும் விவசாயமே. அதன் ஒவ்வொரு நகர்வும் பஞ்சாங்கம் பார்க்காமல் நடக்காது. அதனால் பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து விளைச்சல் காண்கின்றனவோ இல்லையோ, பஞ்சாங்கம் பார்த்து செய்தால் ஓர் அலாதியான திருப்தி! போட்ட முதலுக்கு மோசம் வராதென்ற நம்பிக்கை!

நமது பெரியவர்கள் சிலர் இன்றைக்கும் அன்றாடம் சவரம் செய்வது முதல் சாப்பிடுவது வரை பஞ்சாங்கம் பார்த்துச்செய்வது தான் வேடிக்கை! இராகுகாலம் தவிர்க்காமல் காரியங்கள் செய்யமாட்டார்கள். கலண்டரில் அன்றையதினம் மரணயோகம் என்று போட்டிருந்தால் தங்களுக்கு ஏதோ மரணமே வந்துவிட்டது போல் கலங்குவார்கள்.

கிராமங்களில் மாத்திரமல்ல; நகரங்களிலும் இன்னமும் ஆலய உற்சவங்கள் பஞ்சாங்கத்தின் கூற்றுப்படி பௌர்ணமி அல்லது அமாவாசையை இலக்கு வைத்து நாளாந்தம் நடந்தேறுகின்றன. வீட்டில் பெண்ணொருத்தி ருதுவானால் முதலில் பஞ்சாங்கத்திற்குத்தான் வேலை. கல்யாணம் நடந்தாலும் பிள்ளை பிறந்தாலும் அப்படித்தான். பிறந்த குறிப்பு எழுதவும் ஒரு சாதகப் பொருத்தம் பார்க்கவும் சோதிடர்களையே நாடியலைவர்.

**இவ்விதமாக ஒவ்வொருவரினதும் தினசரி வாழ்க்கையைத் தீர்மானிக்கிற அளவுக்கு முக்கியத்துவம் கொண்ட பஞ்சாங்கத்தில் அப்படி என்னதான் இருக்கிறது?**

பஞ்சாங்கம் என்பது வெறும் கணிப்பு இல்லை. ஞானத்திருஷ்டி மிகுந்த முக்காலமும் உணர்ந்த ரிஷிகள் சொல்லியும் எழுதியும் வைத்த கணிதம். கிரகங்களின் சுற்றுப்பாதையின் அடிப்படையில் கணிக்கப்படுகிற கால அட்டவணை. ஒரு நாள் என்பது திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்கிற ஐந்தையும் உள்ளடக்கியது. இந்த ஐந்தும் இயற்கையாகவே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இந்த ஐந்தையும் கண்டு பிடித்து கணக்குப்போட்டு பலன் கணிப்பதுதான் பஞ்சாங்கம்! அதாவது ஐந்தின் அங்கம்!

ஆங்கிலேயர்கள் நம் நாட்டுக்கு வந்த பின்னரே கடிகாரமும் கலண்டரும் பாவனைக்கு வந்தன. அதற்கு முற்பட்ட காலங்களில் மனிதவாழ்வின் அன்றாட நடவடிக்கைகளை தீர்மானித்தது பஞ்சாங்கம்தான். அச்சு இயந்திரங்கள் வருவதற்கு முன்னால் ஓலைச்சுவடிகளில் கணித்தார்கள். அப்போதெல்லாம் மழைத்துளி பூமியில் விழும் நேரம், போன்ற இயற்கை நிகழ்வுகளை வைத்துத்தான் நேரத்தைக் கணித்துக் கணக்குப் போட்டார்கள். இன்று கம்பியூட்டர்கள் வந்து கணிப்பை இலகுவாக்கியும் நவீனமாக்கியும் விட்டன.

பஞ்சாங்கங்களில் வாக்கியம், திருக்கணிதம் என்று இருவகையுண்டு. அந்நாளில் ரிஷிகள் சொன்ன சுலோகங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவது வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் நமது பழைய கணக்கீட்டு முறைப்படி உருவாக்கப்படுவது. அதாவது சந்திரனது வட்டப் பாதையில் ஏற்படுகிற இயக்க வித்தியாசங்களைக் கணக்கிட்டு உருவாக்கப்படுகிறது.




தமிழ் வருடங்கள் மொத்தம் 60. ஒவ்வொருவருடத்திற்கும் ஒவ்வொரு வெண்பா இருக்கிறது. கடந்த 60 வருடங்களுக்கு முன்னால் வந்த சோபகிருது வருடத்தின் பலன்கள் இப்போது நிகழ்கிற சோபகிருது வருடத்திற்குப் பொருந்தாது. கிரகங்களின் மாற்றம் மற்றும் லீப் வருட மாற்றங்களை யெல்லாம் கணக்கிலெடுத்துத்தான் கணிப்புச் செய்யப்படுகிறது. உதாரணமாக ஒரு குழந்தை இன்று காலை 6.10 க்கு பிறக்கிறதென்று வைத்துக் கொண்டால், இன்று என்ன திதி, என்ன கிழமை, என்ன நாழிகை, என்ன நட்சத்திரமென்று கணக்குப்போட்டு அதன் மூலமாக யோகத்தை தீர்மானிக்க வேண்டும். அந்த யோகத்தின் அடிப்படையில் கரணத்தை கண்டுபிடிக்க வேண்டும். இதனைக்கொண்டு தொடர்ந்து செய்யப்படுகிற விஸ்தாரமான கணக்கீடே சாதகமாக உருப்பெற்று ஒருவரது முக்காலங்களையும் தீர்மானிக்கிறது.

தமிழகத்திலும் சரி, இலங்கையிலும் சரி, பஞ்சாங்கம் தயாரிப்பதற்கு "வருஷாதிநூல்" என்ற பழம்பெரும் சுவடிகள் தான் அடிப்படையென்று சொல்லப்படுகிறது. சுலோகங்களையும் கணக்கீடுகளுக்கான ஏகப்பட்ட சூத்திரங்களையும் உள்ளடக்கிய நூல் இது, பயணம் செய்வதிலிருந்து பயிர் செய்வது வரை எல்லாவற்றையும் இதனை வைத்துக் கணிக்கலாம். இதில் என்ன கிழமையில் என்ன நாழிகையில் மழை வரும், எந்த நொடியில் சூரியன் உதிக்கத் தொடங்குமென்றும் கூட கணக்கு இருக்கிறது. தமிழக கலண்டர்கள் பலவற்றிலும் இன்ன திகதியில் இன்ன பொழுதில் மழை வருமெனக் குறிப்பிடப்பட்டிருப்பது இந்த வருஷாதி நூல் கணிப்பின் பிரகாரம்தான்.

வானியல் சாத்திரத்தில் இல்லாத விடயமே இல்லையென்று சொல்லப்படுகிறது. இன்று விண்வெளி ஆய்வுக் கலங்களை அனுப்பி கிரகங்களை ஆராய்கிறார்கள். ஆனால் இதொன்றுமில்லாத அந்தக்காலத்தில் வெறும் கண்களால்தான் விண்வெளியை ஆராய்ந்தார்கள். ஒவ்வொரு கிரகத்துக்குமிடையே எவ்வளவு தூர இடைவெளி? எந்த நேரத்தில் எங்கே போகும்? எது எதுக்கு ஈர்ப்பு சக்தியுண்டு? என்றெல்லாம் கண்டுபிடித்து அதன் மூலம் மனித வாழ்வில் நடக்கப்போகிற சம்பவங்களைக் கணித்தவர்கள் நம்முன்னோர்கள். அந்த அடிப்படையில் தான் இன்றுவரை பஞ்சாங்கம் எழுதப்படுகிறது. அவர்களது மொழியிலும் எழுத்து நடையிலும் ஒரு தொன்மையிருக்கலாம். ஆனால் விடயங்கள் பழமையானவையல்ல.

**"பாம்புப் பஞ்சாங்கம்"**

இதேவேளை தமிழகத்தில் இன்றுவரை வருடாந்தம் மூன்று இலட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகி பெரும்பாலானவர்களின் அன்றாட வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் மூன்று நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த "பாம்புப் பஞ்சாங்கம்" பற்றி இங்கு குறிப்பிடாவிட்டால் இக்கட்டுரை நிறைவு பெற்றதாகாது.

"அசல் 28நெ. சுத்தவாக்கிய பஞ்சாங்கம்" என்ற இந்தப் பஞ்சாங்கம் தமிழகத்தில் பங்களாக்களிலிருந்து பட்டிதொட்டி வரை எங்கும் பிரசித்தம். அது அச்சியற்ற தொடங்கிய காலம் முதல் இன்று வரை 28 பக்கங்களைத் தாண்டியதில்லையாம். அது தான் இந்த அசல் 28நெ. என்பதன் அர்த்தம் (நெ என்றால நம்பர்) அப்பஞ்சாங்கப் புத்தகத்தின் அடியில் நெளிந்து கிடக்கும் பாம்பு, இரு புறமும் சிறகு விரித்து நிற்கும் கந்தருவர்கள், நடுவில் ஏரோட்டும் உழவன் என்பவைதான் பாம்புப் பஞ்சாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அடையாளங்கள். கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அப்படங்களுக்குப் பின்னாலிருக்கும் சங்கதிகள் விளங்கும்!

ஏர் உழவன் படத்தினுள்ளே சில எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. எப்போது உழவு தொடங்கவேண்டும், எங்கிருந்து ஆரம்பிக்கவேண்டும் என்பன போன்ற விபரங்கள் அதனுள்ளே அடங்கியிருக்கின்றன. நடுவில் நெளியும் பாம்புக்குள் இருக்கும் புள்ளிகள் விதை விதைக்கத் தகுந்த நேரத்தைக் குறிப்பிடுவதோடு அவ்வாண்டு விளைச்சலின் ஏற்ற இறக்கங்களை குறிப்பால் உணர்த்துகின்றன.

நெல்விளைந்து நெடுவயல்கள் நிறைந்து காணுமா அல்லது வானம் பொய்த்து வயல்கள் வரண்டு மக்கள் வறுமையில் வாடுவார்களா என்ற சங்கதிகளை தமக்கேயுரித்தான சங்கேத மொழியில் சொல்கின்றன. கர்நாடகத்தால் காவிரியும் கேரளத்தால் முல்லைப்பெரியாறும் வழிமறிக்கப்பட்டதால் அவற்றின் பாசனத்தை நம்பியிருந்த தமிழகத்தின் பெரும்பகுதியில் நெற்சாகுபடிக்கு ஏற்பட்ட பெரு நஷ்டம் இப்பஞ்சாங்கம் முன்னரே சூசகமாக உணர்த்திய ஒரு விடயம்!

அதனால் ஏற்பட்ட நஷ்டத்தைத் தாங்க முடியாமலும் இங்கு தங்களுக்கு எதிர்காலமேயில்லையென்ற விரக்தியாலும் உந்தப்பட்டு அந்நதி நீர்ப்பாசனத்தை நம்பிப் பயிர் செய்து வந்த பல்லாயிரம் விவசாயக் குடும்பங்கள் தற்கொலை செய்து கொண்டது கடந்த 2010ஆம் 11ஆம் ஆண்டுகாலப் பகுதியில் ஊடகங்கள் மூலம் உலகறிந்த செய்திகளாகும்.

மதுரை மாவட்டத்திலுள்ள கொண்ணூர் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்க முதலியார் என்பவரின் பரம்பரைதான் இந்தப் பாம்புப் பஞ்சாங்கத்தின் ஏழு தலைமுறையான உரிமையாளர்கள். இவர்களது மனோன்மணி அச்சுக்கூடத்தில் இப்பஞ்சாங்கம் தவிர வேறெதுவும் அச்சிடுவதில்லையாம். அச்சியந்திரம் வருவதற்கு முன்னால் பல்லாண்டுகள் ஓலைச்சுவடிகளில் எழுதி வெளியிட்டு சாதனை படைத்துள்ளனர். மதுரை மாவட்டத்திலுள்ள பழம்பெரும் சோதிட மேதைகளான அந்தணர்களின் பங்களிப்பு இதன் ஒவ்வொரு வருடத் தயாரிப்பிலும் உண்டாம்!

> "அசல் 28நெ. சுத்தவாக்கிய பஞ்சாங்கம்" என்ற இந்தப் பஞ்சாங்கம் தமிழகத்தில் பங்களாக்களிலிருந்து பட்டிதொட்டி வரை எங்கும் பிரசித்தம். அது அச்சியற்ற தொடங்கிய காலம் முதல் இன்று வரை 28 பக்கங்களைத் தாண்டியதில்லையாம். அது தான் இந்த அசல் 28நெ. என்பதன் அர்த்தம் (நெ என்றால நம்பர்) அப்பஞ்சாங்கப் புத்தகத்தின் அடியில் நெளிந்து கிடக்கும் பாம்பு, இரு புறமும் சிறகு விரித்து நிற்கும் கந்தருவர்கள், நடுவில் ஏரோட்டும் உழவன் என்பவைதான் பாம்புப் பஞ்சாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அடையாளங்கள். கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அப்படங்களுக்குப் பின்னாலிருக்கும் சங்கதிகள் விளங்கும்! ஏர் உழவன் படத்தினுள்ளே சில எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. எப்போது உழவு தொடங்கவேண்டும், எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பன போன்ற விபரங்கள் அதனுள்ளே அடங்கியிருக்கின்றன. நடுவில் நெளியும் பாம்புக்குள் இருக்கும் புள்ளிகள் விதை விதைக்கத் தகுந்த நேரத்தைக் குறிப்பிடுவதோடு அவ்வாண்டு விளைச்சலின் ஏற்ற இறக்கங்களை குறிப்பால் உணர்த்துகின்றன.

**திருவோணம்**

# படித்ததும் பகர்வதும் 163



**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### மனிதம் மரிக்கிறதா?



உலகளாவிய ரீதியில் தற்போது நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது, உலகில் 'மனிதம்' அழிந்து கொண்டிருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகிறது. உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் இவ்வாறு சிந்திப்பதை நியாயப்படுத்துகின்றன என்றால் மிகையல்ல.

இஸ்ரேலிய அரசு, பாலஸ்தீன நாட்டின் மீது தொடுத்துள்ள, அநீதியான, அராஜகமான தாக்குதல், இத்தகைய நிகழ்வுகளில், இன்று முக்கியமாக பேசப்படுகின்ற ஒரு நிகழ்வாக இருக்கின்றது. நாடற்றிருந்த யூதர்களுக்கு அரபு மண்ணில் வழங்கப்பட்ட சிறிய இடப்பரப்பில் தோன்றிய இஸ்ரேலிய அரசு, இன்று முழு பாலஸ்தீனத்தையும் ஆக்கிரமித்து, தனதாக்கிக் கொள்ளும் செயற்பாட்டில் இறங்கியுள்ளது. அன்றிலிருந்து இன்று வரை பல்வேறு தாக்குதல்களை நடத்தி, பாலஸ்தீனின் பெரும் பகுதியை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ள இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் எஞ்சியிருக்கும் பகுதியில் ஒன்றான காஸா பகுதியையும் தனதாக்கிக் கொள்ளும் அடாவடித்தனத்தில் இறங்கியுள்ளது.

இஸ்ரேல் உருவாக்கப்பட்டதிலிருந்து, அது படிப்படியாக அநீதியான அராஜக முறையிலேயே பாலஸ்தீனின் பகுதிகளை ஆக்கிரமித்து வந்துள்ளது. இஸ்ரேலின் இத்தகைய நீதியற்ற செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் எண்ணற்ற தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் ஐக்கிய அமெரிக்காவின் 'வீட்டோ' பலத்தினால் அவை அனைத்துமே செயலற்றதாக மாற்றப்பட்டதை முழு உலகும் வெறுமனே பார்த்துக் கொண்டு தான் இருந்தது.

இஸ்ரேல் இப்போது பாலஸ்தீனத்தின் மீது தொடுத்துள்ள மனிதாபிமானமற்ற யுத்தத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பாவி பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்; சிறிய பெரிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்; மற்றும் பலர் இடம் பெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர்; முதியோரும், பெண்களும், சிறார்களும் பலதரப்பட்ட சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவற்றுக்கிடையில் எவருமே செய்யத்தகாத, எந்தவொரு தீவிரவாத இயக்கம் கூட செய்யத் துணியாத மிக மோசமான, மிகப் பயங்கரமான செயலை இஸ்ரேல் செய்துள்ளது. வைத்தியசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக ஐநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. எந்த வகையிலும் யுத்தத்தில் ஈடுபடாத யுத்தத்துக்கு சம்பந்தமே இல்லாத, நோய்களுக்கு சிகிச்சை பெற்று வந்துள்ளவர்களும், அவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்தவர்களுமாக, பெண்கள், சிறார்கள் உட்பட கொல்லப்பட்டிருப்பது மிலேச்சத்தனமான, காட்டு மிராண்டித்தனமான, கேவலமான செயல் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இஸ்ரேலின் இத்தகைய மனிதாபிமானமற்ற, அராஜக செயற்பாட்டை உலகின் ஜாம்பவான்களான பிரதான நாடுகள் கண்டிப்பதாகவோ, கண்டனம் தெரிவிப்பதாகவோ, எதிராக குரல் கொடுப்பதாகவோ இல்லை. மாறாக ஆதரவு தெரிவிப்பதாகவே தெரிகிறது. இது 'அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்வதெல்லாம் சரியே' என்பதை பலப்படுத்தும் வகையில் இருப்பதாக தோன்றுகிறது. இவற்றை நோக்கும்போது உலகின் 'மனிதம் அழிக்கப்படுகின்றது' என்ற எண்ணக் கருவை எவராலும் மறுக்க முடியாதுள்ளது.

இத்தகைய சூழலில் இவற்றுக்கெதிராக 'அப்பாவிகளான, பலமற்ற நாங்கள் என்ன செய்யலாம்?' என்று ஒவ்வொருவரும் சிந்திக்கலாம். உண்மையில் எங்களால் இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனருக்கு ஆதரவாக யுத்தம் செய்யவோ, போரில் பங்கு பற்றவோ இயலாது என்பதை எல்லோரும் அறிவர். ஆனால் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகள் எதனையேனும் செய்தல் அவசியம்.

இஸ்ரேலுக்கு எதிராக குரல் கொடுத்தல், இஸ்ரேலின் செயற்பாடுகளை கண்டித்தல், கண்டன அறிக்கைகளை வெளியிடுதல், கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்துதல், இஸ்ரேல் உற்பத்திகளைப் புறக்கணித்தல் போன்ற சாத்வீக ரீதியான விடயங்களை செய்ய முடியும். அத்துடன் ஒவ்வொருவரும் தத்தமது சமய நம்பிக்கையின் அடிப்படையில் நீதி நிலைக்கவும், சத்தியம் வெல்லவும், பாலஸ்தீனர்களுக்கு நியாயம் கிடைக்கவும், இஸ்ரேலின் அராஜகம் அழியவும் பிரார்த்தனை செய்ய வேண்டியதும் அவசியம். இவற்றை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து மனிதம் அழிவதிலிருந்து, அல்லது மரிப்பதிலிருந்து பாதுகாக்கவும், மனிதமே உலகை ஆளவும் செயற்பட முன்வருவோம்.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### பொன்விழா காணும் சம்மேளனம்

இலங்கையின் இஸ்லாமிய சமூக சேவை இயக்கங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இயக்கமாக திகழும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தினது, ஐம்பதாவது வருட பொன்விழா மாநாடு இம்மாதம் 29ஆம் திகதி கொழும்பு 7ல் அமைந்துள்ள, விளையாட்டு அமைச்சின் 'டங்கன் வைட்' மண்டபத்தில் நடைபெற உள்ளது. 'ஒற்றுமை, சேவை, அபிவிருத்தி' என்பவற்றை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் மக்கள் சேவையை இவ்வியக்கம் மேற்கொண்டு வருகின்றது.




வீடமைப்பு, வெள்ள நிவாரணம், இடர்கால உதவி வழங்கல், பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள், பொதிகள் வழங்கல், சுய தொழில் முயற்சிக்கான உதவிகள், தலைமைத்துவப் பயிற்சி முகாம்கள், இளைஞர்களின் ஆற்றல் விருத்திக்கான போட்டி நிகழ்சிகள், விளையாட்டுப் போட்டிகள், அரசியல் விழிப்புணர்வுத் திட்டங்கள் போன்ற இன்னோரன்ன, பல்வேறு துறைசார் பணிகளை இச்சம்மேளனம் நாடு தழுவிய ரீதியில் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றது.

வட மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம், எல்லை நிர்ணயம், இன முரண்பாடுகளை நீக்குதல், அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பவற்றில் சம்மேளனத்தின் காத்திரமான பங்களிப்புகள் ஈண்டு குறிப்பிடத்தக்கவை.

இளைஞர்களின் திறன் விருத்தி, தலைமைத்துவ பயிற்சி என்பதே இதன் முக்கியமான இலக்காக இருந்து வந்துள்ளது. கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திலான தலைமைத்துவத்துக்கு இளைஞர்களை கொண்டு வருவதில் இச்சம்மேளனம் பெரு வெற்றி பெற்றுள்ளது என்றால் மிகையல்ல.

முன்னாள் சபாநாயகர் எம். ஏ. பாக்கிர் மார்க்காரை ஸ்தாபக தலைவராகக் கொண்டு ஐம்பது ஆண்டுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவர்களாக மட்டக்களப்பு ரிஸ்வி சின்ன லெப்பை, களுத்துறை மாவட்ட பேருவளையின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார், அனுராதபுர மாவட்ட நாச்சியா தீவைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி என். எம். சஹீத், கேகாலை மாவட்ட தல்கஸ்பிட்டியவைச் சேர்ந்த சிரேஷ்ட பத்திரிகையாளர் என். எம். அமீன், கண்டி மாவட்ட உடுதெனியவைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், அம்பாறை மாவட்ட அக்கரைபற்றைச் சேர்ந்த எம் .ஐ. உதுமாலெப்பை, குருநாகல் மாவட்ட பொத்துஹர பி. எம். பாரூக், மன்னார் மாவட்ட எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த லுக்மான் சஹாப்தீன் என பல்வேறு மாவட்டங்களின் சிறிய கிராமங்களைச் சேர்ந்தவர்களை இவ்வியக்கம் தேசிய தலைவர்களாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் அடுத்த தலைவராக தேர்வாகி இருக்கும் ஷாம் நவாஸ் கொழும்பு மாவட்டத்தின் மாளிகாவத்தையைச் சேர்ந்தவராவார்.

2025ஆம் ஆண்டுக்குள் பத்தாயிரம் இளைஞர்களுக்கு சிறப்பான தலைமைத்துவ பயிற்சியை வழங்கி அவர்களை நாட்டுக்குப் பொருத்தமான பிரஜைகளாக, நல்ல தலைவர்களாக உருவாக்கும் இலக்கை நோக்கிய செயல் திட்டத்தை இப்போது இச்சம்மேளனம் முன்னெடுத்துள்ளது. இதன் கீழ் களுத்துறை, கொழும்பு, கண்டி, புத்தளம், அனுராதபுரம், மன்னார் மாவட்டங்களுக்கான முதற்கட்ட பயிற்சி முகாம்கள் நிறைவடைந்துள்ளன. ஏனைய மாவட்டங்களுக்கான பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. பல்லின மக்கள் வாழும் இலங்கையின் சமூக நல்லுறவை மேம்படுத்தும் வகையில், பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்கும் இந்த பாரிய முயற்சி சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இவ்வாறு பல்வேறு நற்பணிகளைத் தொடருகின்ற, மக்கள் சேவையில் பொன் விழாவைக் கொண்டாடுகின்ற அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தை பாராட்டுவதோடு அதன் எதிர்கால நலத்திட்டங்கள் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

## பிரிந்தார் பெருமை

### ஆ மு சி வேலழகன்

ஆதிநாராயணன், முத்து, சின்னத்தம்பி ஆகிய பெயர்களிள் எழுதிவந்த, கவிஞரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான்ன ஆ மு சி வேலழகன் தனது 84வது அகவையில் இவ்வுலகைப் பிரிந்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஓர் பஸ் சாரதியாக 32 வருடங்கள் கடமையாற்றிய இவர், பின்னர் சாரதிப் பயிற்றுனர் பதவி வகித்தார். எந்தவொரு பஸ்டிப்போக்களிலும் இல்லாத வகையில் மட்டக்களப்பு பஸ்சாலையில் ஓர் படிப்பகத்தினை ஆரம்பிக்க காரண கர்த்தாவாக இருந்தார். அத்துடன் 'செண்பகம்' எனும் கையெழுத்துப் பத்திரிகையினையும் மாதாமாதம் நடத்தி வந்தார்.

1972ம் ஆண்டிலிருந்து எழுத்துத்துறையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த இவர் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கவிதை, சிறுகதை, உரைச்சித்திரம் மற்றும் நாவல்களை எழுதியுள்ளார். "தீயும் தென்றலும்", "உருவங்கள் மானிடராய்", "வேலழகன் அரங்கக் கவிதைகள்", "விழியும் வழியும்", "செங்காந்தள்" எனும் கவிதை நூல்கள், "கமக நிலா", "மூங்கில் காடு" "கேட்டுப் பெற்ற வரம்", "தேரான் தெளிவு" எனும் சிறுகதைத் தொகுப்புகள், "சில்லிக்கொடி ஆற்றங்கரை", "கோடாமை சான்றோர்க்கனி" எனும் வரலாற்று நாவல்கள், "இவர்கள் மத்தியிலே" எனும் குறுநாவல், "திருப்பழுகாமம் வரலாறு" எனும் வரலாற்று நூல் உட்பட பல நூல்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் சில சாகித்திய, மாகாண, தேசிய, இலக்கியவட்ட விருதுகளை வென்றுள்ளன.



சமூக சீர்த்திருத்தப் பணிக்கென அர்ப்பணிப்போடு செயல்பட்ட இவர், 'திருப் பழுகாமம் கண்ணகி கலைக் கழகம்', 'முரசொலி நாடக மன்றம்', 'திருக்குறள் முன்னணிக் கழகத்தினையும்', 'தமிழர் கலாசார மன்றம்', 'கிழக்குப் போக்குவரத்து கலாசார மன்றம்', 'படுவான்கரை விவசாயிகள் அபிவிருத்திக் கழகம்', 'மட். மாவட்டத் தமிழ் எழுத்தாளர் பேரவை', போன்ற பல அமைப்புகளை பல்வேறு பிரதேசங்களில் தொடங்கி பல இளைஞர்களை இலக்கியத்துறையில் ஈடுபட வைத்தும் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிஞர்களைக் கௌரவித்தும் உள்ளார்.

2006ல் இலங்கை அரசின் கலாபூஷணம் விருது பெற்ற ஆ மு சி வேலழகன், தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பல்வேறு அமைப்புகளினால் பொன்னாடை போர்த்தியும், பட்டங்கள், விருதுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஆ மு சி வேலழகன், தென்னிந்தியாவின் புகழ் பெற்ற மேடை, பட்டிமன்ற, தொலைகாட்சி பேச்சாளர் பேராசிரியர் பர்வீன் சுல்தானாவின் மாமனார் என்பது பலரும் அறியாத விடயமாகும்.

## வாசித்ததில் வசீகரித்தது

### சுஜாதாவின் 'சிறு'கதை

ஒரு வீட்டு வாசலில், 'இங்கு நாய்க் குட்டிகள் விற்கப்படும்' என்ற அறிவிப்பு இருந்தது.

கேட் வழியாக ஒரு குட்டிப் பையன் எட்டிப் பார்த்து, வீட்டுக்காரரைக் கூப்பிட்டான். அவர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

'அங்கிள்! எனக்கு ஒரு நாய்க் குட்டி தருவீங்களா?'

'இதெல்லாம் ஒஸ்தி நாய். உன்னிடம் அத்தனை காசு இருக்குமா?'

'என்னிடம் எட்டணா இருக்கிறது!' என்றான்.

'போதாதே' என்றார் ஓனர்.

'சரி, நாய்க்குட்டிகளை நான் பார்க்கவாவது செய்யலாமா?' என்றான்.

அவர் வீட்டுக் கதவைத் திறந்து விசில் அடிக்க, சந்தோஷப் பந்துகளாக மூன்று நாய்க்குட்டிகள் சிறுவனை நோக்கி ஓடி வந்தன. அவனைப் பார்த்து வாலாட்டி, அவன் முகத்தை நக்கிக் கொடுத்தன.

சற்று தூரத்தில் நான்காவது நாய்க் குட்டி, இதைச் சோகமாகப் பார்த்துக் கொண்டு இருந்தது.

'நீயும் வா குட்டி' என்று சிறுவன் அழைக்க, 'அது பிறந்ததிலிருந்தே ஓட முடியாது. யாரும் வாங்க மாட்டார்கள்' என்றார் வீட்டுக்காரர்.

'எனக்கு அதுதான் அங்கிள் வேண்டும். என்னாலும் ஓட முடியாது' என்றான் சிறுவன், தன் சக்கர நாற்காலியில் இருந்து!

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

---



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



**கே. பத்மானந்தன்** 58

# திருவள்ளுவத்தில் செயற்றிட்ட முகாமைத்துவம்

பொதுவாக செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முன் செயற்றிட்ட முகாமையாளர்கள் கணிசமான அளவு நேரத்தையும் சக்தியையும் பணத்தையும் முதலீடு செய்வதற்கு முன் அந்தத் திட்டத்தின் சாத்தியமான நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளைத் தீர்மானிக்கச் சாத்தியக்கூறு ஆய்வுகளைப் (Feasibility Study) பயன்படுத்துகின்றனர். ஒரு சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வது திட்டத்திற்கு எப்போதும் பயனுள்ளதாக இருக்கும், ஏனெனில் இது முதலீட்டாளர்களுக்கும் பிற பங்குதாரர்களுக்கும் திட்டம் தொடர்பான தெளிவான விளக்கத்தை அளிக்கிறது.

சாத்தியக்கூறு ஆய்வானது திட்டத்தினை நிறைவேற்றும் குழுக்களுக்கு போதுமான பொருத்தமான தகவல்களை வழங்கி, மாற்று வழிகளைக் கோடிட்டுக் காட்டி, திட்டத்தை மேற்கொள்வதற்கான சரியான காரணத்தை அடையாளம் காட்டுவதுடன், திட்டம் தொடர்பாக முடிவெடுக்க உதவி, திட்டமானது வெற்றி பெறுவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கின்றது. அத்தோடு சாத்தியக்கூறு ஆய்வானது உள் திட்டக் கட்டுப்பாடுகள், உள் நிறுவனக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்புறக் கட்டுப்பாடுகள் போன்ற கட்டுப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்யவும் உதவுகிறது. உண்மையில் திட்ட நோக்கங்கள், ஏற்படக்கூடிய இடர்கள், அதற்கான செலவு, திட்ட அணுகுமுறை போன்றவை பற்றிய தெளிவு இருத்தலானது ஒரு திட்டத்தை வெற்றிகரமாக முகாமை செய்வதற்குத் தேவையான மிக முக்கியமான அம்சங்களாகும். இவ்வாறு திட்டத்தை வெற்றிகரமாக முகாமைசெய்வதற்கு சாத்தியக்கூறு ஆய்வானது உதவுகின்றது.

இக்கருத்துகளைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்" (குறள் 472)**

தனக்குப் பொருந்தகூடிய திட்டத்தினையும் அதற்காக அறிய வேண்டிய சகல விடயங்களையும் அறிந்து அத்திட்டத்தில் தங்களை முழுமையாகப் பயன்படுத்தி நிலைத்து முயல்கின்றவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். அதாவது ஒரு திட்டத்தில் ஈடுபடும்போது அத்திட்டத்தைப் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்தறிந்து முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை. ஒரு முகாமையாளராலோ அல்லது ஒரு நிறுவனத்தாலோ எல்லாச் செயலையும் செய்ய இயலாது. ஒவ்வொருவருடைய ஆற்றலுக்கும் வரம்பு உண்டு என்பதனால் தம்மால் எவ்வளவு முடியும் என்பதையும் அதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டும் என்பதையும் தெரிந்து அதற்கு ஏற்ற வகையில் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். எனவே திட்டத்தை நிறைவேற்றத் தேவையான திறன்கள் என்ன என்பதனை அறிந்து அது தம்மிடம் உள்ளதா அல்லது அவற்றைப் பெறமுடியுமா என்பதையும் முகாமையாளர் அறிய வேண்டும். அதன்பின் திட்டத்தில் கண்ணும் கருத்துமாக சோர்வில்லாமல் முழு மூச்சுடன் செயல்படும் போது அந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும் என்பது திருவள்ளுவரின் எண்ணமாகும்.



இவ்வாறு சாத்தியக்கூறு ஆய்வானது செய்யப்படும் போது பல பலவீன ஆய்வும் செய்யப்பட வேண்டும் அப்போதுதான் செயற்றிட்டத்தின் பலம் பலவீனங்கள் மற்றும் அதன் வெளிப்புற வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காண ஒரு முகாமையாளரினால் இயலுமாக இருக்கும். இந்த பகுப்பாய்வின் அவசியத்தினை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்" (குறள்.471)**

அதாவது செயற்றிட்டத்தின் வலிமையும், அதனை செயற்படுத்தும் நிறுவனத்தின் வலிமையும், போட்டி நிறுவனத்தின் வலிமையும், துணையாக இருப்பவர்களின் வலிமையும் ஆராய்ந்து செயற்றிட்டத்தைச் செய்யவேண்டும் என்கிறார் திருவள்ளுவர். வினைவலியும் அதாவது திட்டத்தின் சாத்தியம் மற்றும் பலவீனத்தையும், தன்வலியும் அதாவது நிறுவனத்தின் வலிமையையும், மாற்றான் வலியும் அதாவது எதிர் நிறுவனத்தின் வலிமையையும், துணைவலியும் அதாவது பங்காளரின் வலிமையையும் தூக்கிச்செயல் அதாவது மதிப்பீடு செய்து செயற்றிட்டத்தைத் தொடரவும் என்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு செயற்றிட்டத்தை அமுல்படுத்தும்போது கிடைக்கக்கூடிய தெரிவுகளில் இருந்து தர்க்கரீதியான முடிவினைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆற்றலை செயற்றிட்ட முகாமையாளர் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு முடிவுகளை எடுக்கும்போது ஒவ்வொரு தெரிவோடும் தொடர்புடைய நேர்மறை மற்றும் எதிர்மறைக் காரணிகளை எடைபோடுதுவதுடன் அனைத்து மாற்றுத் தெரிவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனைக் கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு". (குறள் .467)**

செயற்றிட்டம் தொடர்பாக செய்யத் தகுந்த செயலையும் வழிகளையும் எண்ணிய பிறகே துணிந்து முடிவெடுத்துத் தொடங்க வேண்டும். செயற்றிட்டத்தைத் தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும் என்கிறார் திருவள்ளுவர். எண்ணித் துணிக கருமம் அதாவது முகாமையாளர்கள் திட்டத்தைத் தொடர யோசித்து தைரியமான முடிவை எடுங்கள் ஆனால் துணிந்தபின் எண்ணுவமென்ப திழுக்கு. அதாவது திட்டத்தை தொடங்கிய பின் முடிவுகள் எடுப்பீர்கள் ஆயின் திட்டத்தை தோல்வி அடையைச் செய்யும் என்கிறார் திருவள்ளுவர்.

செயற்றிட்ட முகாமையாளரினால் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவுக்கும் அதன் சொந்த விளைவுகள் உண்டு. பிரச்சினைகளைத் தைரியமாக எதிர்கொண்டு புத்திசாலித்தனமாகத் தீர்க்க அவர் முயல வேண்டும். செயற்றிட்ட முகாமையாளர் ஏதாவது ஒரு முடிவை எடுத்தவுடன் அவர் எக்காரணத்திற்காகவும் பின்வாங்கக் கூடாது. அவ்வாறு அவர் பின்வாங்குவாராயின் அது அந்தச் செயற்றிட்டத்துக்கு தீங்கு விளைவிக்கும் என்பதனை அவர் விளங்கிக்கொள்ள வேண்டும். இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது".( குறள் .671)**

அதாவது ஆராய்ந்து எண்ணி முடிவெடுப்பதற்கு எல்லை துணிவு கொள்வதே ஆகும். அவ்வாறு கொண்ட துணிவு காலந் தாழ்த்தி நிற்பது குற்றமாகும் என்கிறார் திருவள்ளுவர். செயற்றிட்டம் தொடர்பாக முடிவெடுப்பது என்பது செயற்றிட்ட முகாமையாளரின் கடமையாகும். அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவினை நிறைவேற்றுவதில் தாமதங்கள் ஏற்படுமாக இருந்தால் அல்லது அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அது கடுமையான தவறு என்கிறார் திருவள்ளுவர். எனவே ஆராய்ந்து முடிவெடுத்தபின் செய்யவேண்டியதைக் காலந் தாழ்த்தாது செய்யவேண்டியது செயற்றிட்ட முகாமையாளரின் கடமையாகும்.

ஒரு பெரிய செயற்றிட்டத்தைத் தொடங்குவதற்கு முன் அதனோடு தொடர்புடையவர்கள் அனைவருடனும் அது பற்றி நன்கு கலந்தாலோசித்து உறுதியான முடிவு எட்டப்படவேண்டும். அம்முடிவு திட்டம் தொடங்குவதாகவும் இருக்கலாம் அல்லது கைவிடுவதாகவும் இருக்கலாம். எது எப்படியிருந்தாலும் அந்த முடிவை செயல்படுத்துவதில் காலம் தாழ்த்தினால் எதிர் நோக்காத விளைவுகள் உண்டாகி தீமைகள் விளைவிக்கும். எடுத்த முடிவினை நிறைவேற்ற எடுக்கும் காலம் நீடிக்கப்படுமாயின் ஏற்படக்கூடிய சூழ்நிலை மாற்றங்கள் சிலவேளைகளில் காலப்போக்கில் அந்த முடிவினைக் கடைசி வரையும் அமுல்படுத்த முடியாத நிலைமையினை ஏற்படுத்தும்.

இவ்வாறு முடிவு எடுக்கும்போது செயற்றிட்ட முகாமையாளர் பல முடிவுகளை எடுக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டால் அவர் முக்கியமில்லாத முடிவுகளை அமுல்படுத்துவதனைத் தாமதப்படுத்த முயற்சி செய்யலாம். ஆனால் அதேவேளை அவசரமான முக்கியமான முடிவுகளை அமுல்படுத்துவதைத் தாமதப்படுத்தக் கூடாத. இக் கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை". (குறள். 672)**

அதாவது காலந்தாழ்த்திச் செய்யத் தக்கவற்றைக் காலந் தாழ்த்திச் செய்யவேண்டும். அதேபோன்று காலந்தாழ்க்காமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக் கூடாது என்கிறார் திருவள்ளுவர். சில முடிவுகளை நன்றாக எண்ணி நிதானமாகவே அமுல்படுத்த வேண்டும். அத்தகைய செயல்களை காலம் தாழ்த்தியே செய்யலாம். ஆனால் உடனே அமுல்படுத்த வேண்டியவை என்றும் சில முடிவுகள் உண்டு. அவற்றைச் செய்வதில் சிறிதும் கால தாமதம் கூடாது என்பதனை செயற்றிட்ட முகாமையாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

(தொடரும்)

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 85

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 04 | | 07 | 08 | 09 |
| 10 | | | 11 | 12 | |
| 13 | 14 | 15 | | 16 | 17 |
| | | 18 | 19 | | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) வேட்டையாடி இரைபிடிக்கும் கொடிய பறவை இது. ஆகாயத்தில் மிக உயரத்தில் வட்டமிட்டவாறே தரையில் நடமாடும் பிராணிகளைக் கண்டறிந்து, வேகமாகக் கீழிறங்கி வந்து பிடித்துச் சென்று உணவாகக் கொள்ளும் பறவை.

(7) எமது நாட்டில் நாம் சாதாரணமாக எங்குமே காணக்கூடிய பறவை. ஒற்றுமையான வாழ்வுமுறைக்கும், உணவைப் பகிர்ந்துண்பதிலும் முன்னுதாரணமாகக் கூறப்படுகின்ற பறவை. (தலைகீழான சொல்)

(11) பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களில், உயிரினங்கள் வாழ்கின்ற கிரகம் இதுவொன்று மட்டுமே என்பதுதான் அறிவியலாளர்களின் இதுவரையான கண்டுபிடிப்பு. நாம் வாழ்கின்ற அவ்வாறான அற்புதமான கிரகம் இது.

(13) மற்றவரிடம் இருந்தோ அல்லது நிதிநிறுவனம் ஒன்றிடமிருந்தோ உதவியாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை இவ்வாறு குறிப்பிடலாம். இது மீளளிக்கப்பட வேண்டிய பணம். (தலைகீழான சொல்)

(16) பயணம் செய்வதற்கான வழி இது. தெரு, வீதி என்றெல்லாம் கூறலாம். (தலைகீழான சொல்)

(18) ஒவ்வொரு பொருளுக்குமுரிய பெறுமதியைக் குறிப்பது இது. கடைகளில் இப்பெறுமதி அவ்வப்போது மாற்றமடைவதுண்டு.

(21) அன்றைய காலத்தில் நாட்டுக்குத் தலைவன் இவன்தான். ஜனநாயகம் நடைமுறைக்கு வந்த பின்னர் மக்களால் தெரிவு செய்யப்படுபவரே தலைவர். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(2) அறிவைப் புகட்டும் ஆசிரியர் இவர். (தலைகீழான சொல்)

(4) தேங்காயில் வித்துப்பகுதியைச் சூழ்ந்திருப்பது இது. கயிறு, கால்துடைப்பம் போன்ற பொருட்களைத் தயாரிக்க உதவுகிறது.

(5) ஒலியை உணருகின்ற புலனங்கம். (தலைகீழான சொல்)

(8) கவிஞர்கள் படைக்கின்ற இலக்கிய ஆக்கம்.

(10) நீரில் வாழ்வதற்கு நன்கு இசைவாக்கமடைந்த உயிரினம். மனிதனின் உணவாகப் பயன்படுகின்ற புரதம் நிறைந்த உணவு.

(15) அழகு, வனப்பு என்றெல்லாம் இச்சொல்லை ஒத்தபொருள் சொற்களால் குறிப்பிடலாம்.

(17) ஆறு, நீரோடை போன்றவற்றைக் கடந்து செல்வதற்காக நிர்மாணிக்கப்படுவது.

(19) கண்டி, நுவரெலியா, மாத்தளை போன்ற மலையகப் பிரதேசங்கள் பலவற்றில் காணக் கூடியது. அதாவது மலையகத்துக்கு இயற்கை அழகு தருவது இது. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 84

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தமிழ் 04. ஆசை 06. தந்தம் 10. இஞ்சி 14. முதலை 17. காய்கறி 24. இலை

**மேலிருந்து கீழ்**

01. இதழ் 04. தசை 05. ஆம் 10. குறிஞ்சி 14. காலை 16. முதலை 22. குறிஞ்சி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 83

### பாராட்டு பெறுவோர்

**1. பஹ்மா ருஷ்டி**
தரம் 9A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**2. வை.ஏ.எப். ஜாசி**
தரம் 07E. முஸ்லிம் தேசிய பாடசாலை,
பொலன்னறுவை.

**3. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E. தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கன.

**4. பி.எம். பாத்திமா மித்ஹா**
தரம் 10, தி/ கிண்ணியா மு.ம.ம. வித்தியாலயம்,
இல. 9/23, பெரியாலிம்ஸா ஒழுங்கை, கிண்ணியா.

**5. ஐ. ஸைத்**
தரம் 06, கே/மா ஸாஹிரா தேசிய கல்லூரி,
மாவனல்ல.

**6. கு. துவாரகன்**
தரம் 06C, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரிய நீலாவணை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 85
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல்: அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு...**

**தெளிவுரை :**

ஒரு வருடைய வாழ்கைக்கு அறத்தை விட நன்மையானதும் இல்லை: அறத்தை போற்றாமல் மறப்பதை விடக்கொடியதும் இல்லை....

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



கோவில் கோபுரத்தில் சில நீல நிறப்புறாக்களும் சில வெள்ளை நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன. கோபுரத்தில் கும்பாபிஷேக வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக் கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறொரு இடம் தேடி புறப்பட்டன. செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காக பரப்பப்பட்ட தானியங்களை கண்டதும் அனைத்தும் ஒன்று கூடி தானியங்களை தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.

தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பி விட்டு சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான். நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் தயார் செய்து வலை விரித்தான்.

அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன. சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் புறாக்கள் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க, வலையோடு புறாக்கள் பறக்க ஆரம்பித்தன.

உடனே வேடன், "அய்யய்யோ புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே" என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான். பறந்து செல்லும் போதே, அதில் இருந்த வெள்ளைப் புறாக்கள் கர்வத்தோடு, "எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால் அவ்வளவுதான்" என்று கூறின.

உடனே நீல நிறப் புறாக்களும் தன் பங்குக்கு, "நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக் கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால், அதன் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக்கிளையில் வலை சிக்கிக் கொண்டது.

இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கேற்ப இப்புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்லவேளையாக "ஒற்றுமை நீங்கினால் அனை வருக்கும் தாழ்வு" என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி" என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.

## இவ்வார மழலை



தாவிஷினா



நீருக்கடியில் கட்டப்பட்ட முதல் டென்னிஸ் ஸ்டேடியம் – டுபாய்

## கற்பூரம் எப்படி கிடைக்கிறது?

உலகத்திலேயே கற்பூரத்தை அதிகம் பயன்படுத்தும் நாடு இந்தியாதான் என்றாலும் ஜப்பான், சீனாவில்தான்




கற்பூர மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

கற்பூர மரங்கள் நன்கு வளர்ந்து, முற்றவேண்டும். ஒரு கற்பூர மரம் முற்றுவதற்கு 70 ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறது. 1938ஆம் ஆண்டு பயிரிடப்பட்ட கற்பூர மரங்கள் இப்போது தான் கற்பூரம் தயாரிக்கக்கூடிய பக்குவத்தில் இருக்கும். இந்த கற்பூர மரங்களில் இருந்து எப்படி கற்பூரம் கிடைக்கிறது? 70 வயதான முற்றிய கற்பூர மரத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி தண்ணீரோடு சேர்த்து, 36 மணி நேரம் கொதிக்கவைத்து, அதனுடைய ஆவியைக் குளிரவைக்கிறார்கள். பிறகு அதன் மூலம் கிடைக்கக்கூடிய உப்பு போன்ற வெண்மைநிற படிவங்கள்தான் கற்பூரம்.

இது ஒரு பூஜைப் பொருள் மட்டுமல்ல, ஒரு கிருமிநாசினியும்கூட. போட்டோ பிலிம், சினிமா பிலிம் தயாரிக்க கற்பூரம் பயன்படுகிறது. இயற்கையான முறையில் கிடைக்கக்கூடிய கற்பூரம் விலை அதிகம் என்பதால். சில நிறுவனங்கள் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி செயற்கை கற்பூரம் தயாரித்து விற்பனை செய்கின்றன.

## நீதி

பச்சை
மஞ்சள் என்று
சிவப்பு நீலம் என்று
வெள்ளை கறுப்பு என்று
குதிரை கழுதை என்று
சிங்கம் புலி என்று
முயல் பூனை என்று
யானை மாடு என்று
பசு நாம்பன் என்று
காய் பழம் என்று
பள்ளம் மேடு என்று
சரி பிழை என்று
தராசைப் போல நின்று
நீதி செய்வோம்

இக்பால் அலி....






**சி. ஹரேன் விஷால்**
தரம் 7D, பம்பலபிட்டி இந்து கல்லூரி, கொழும்பு 04.



**சி. வைஷாலி**
தரம் 11, சைவ மகளிர் வித்தியாலயம், கொழும்பு 06.

## ஆண்டுகளும் விழாக்களும்

| | | | |
|---|---|---|---|
| 01 வது ஆண்டு - | கடதாசி விழா | 15வது ஆண்டு - | படிக விழா |
| 02வது ஆண்டு - | பருத்தி ஃ பஞ்சு விழா | 20வது ஆண்டு - | பீங்கான் விழா |
| 03வது ஆண்டு - | தோல் விழா | 25வது ஆண்டு - | வெள்ளி விழா |
| 04வது ஆண்டு - | பூ விழா | 30வது ஆண்டு - | முத்து விழா |
| 05வது ஆண்டு - | மர விழா | 40வது ஆண்டு - | மாணிக்க விழா |
| 06வது ஆண்டு - | சர்க்கரை / கற்கண்டு விழா | 45வது ஆண்டு - | நீலக்கல் / இரத்தின விழா |
| 07வது ஆண்டு - | கம்பளி /செம்பு விழா | 50வது ஆண்டு - | பொன் விழா |
| 08வது ஆண்டு - | வெண்கல விழா | 55வது ஆண்டு - | மரகத விழா |
| 09வது ஆண்டு - | மண்கல விழா | 60வது ஆண்டு - | மணி / வைர விழா |
| 10வது ஆண்டு - | தகரம் /அலுமினிய விழா | 75வது ஆண்டு - | பவள விழா |
| 11வது ஆண்டு - | எஃகு விழா | 80வது ஆண்டு - | அமுத விழா |
| 12வது ஆண்டு - | லினன் விழா | 100வது ஆண்டு - | நூற்றாண்டு /தசரத /சகாப்த விழா |
| 13வது ஆண்டு - | பின்னல் விழா | | |
| 14வது ஆண்டு - | தந்த விழா | | |

## சக்கரத்தைக் கண்டுபிடித்தது ஒரு அறிவியல் வெளிப்பாடா

காலச்சக்கரம் ஒரு புறம் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தாலும், மற்றொரு புறம் உலகமும் மனித வாழ்க்கையும் சுற்றிச் சுழன்றுகொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது சக்கரம்.

சக்கரத்தைக் கண்டுபிடித்தது ஒரு அறிவியல் வெளிப்பாடா, ஒரு விபத்தா அல்லது எண்ணற்ற பயன்களைத் தரக்கூடிய ஒற்றை மந்திரமா? இந்தக் கேள்விகளுக்கு உறுதியான பதில் கிடைக்காமல் போகலாம். தீயை உருவாக்குவது எப்படி என்பதைக் கண்டுபிடித்த பிறகு, மனிதனின் மிகப் பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு சந்தேகமில்லாமல் சக்கரம்தான். சக்கரத்திற்குக் கண்டுபிடிப்புகளின் தொட்டில் என்றொரு பெயரும் உண்டு.

உலகின் எந்த மூலையிலோ இருந்த ஒரு குகை மனிதன் ஒருவன்தான் முதன்முதலில் சக்கரத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அல்லது ஏற்கனவே பானை செய்யப் பயன்பட்ட சக்கரத்தை மேட்டிலிருந்து அந்த நபர் கீழே உருட்டி விட்டிருக்க வேண்டும். அது உருண்டு ஓடிய அந்தத் தருணம், ஒரு மாபெரும் கண்டுபிடிப்பு உருக்கொண்டது. அது அளவிட முடியாத வகையில் இந்த உலகைப் புரட்டிப் போட்டிருக்கிறது.

சக்கரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் பொருள்களை உருட்டி விடுவதற்கு உருளையான மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த உருளைகளுக்குப் பதிலாக, அச்சு இல்லாத சக்கரங்கள் வந்தன, பிறகு ஒரு அச்சில் சுழலும் சக்கரங்கள் வந்தன. உலகின் பண்டைய நாகரிகங்களான மெசபடோமியா நாகரிகத்தில் கி.மு. 3,500ஆவது ஆண்டில் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏர், சூரிய விளக்கு போன்ற கண்டுபிடிப்புகள் இயற்கையில் உள்ள பொருட்கள் அளித்த உத்வேகத்தின் அடிப்படையில் உருவானவை. ஆனால், சக்கரம் இயற்கையின் எந்த முன்மாதிரியையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை. சக்கரம் உருவான காலம் குறித்துத் தொல்லியல் ஆராய்ச்சியாளர்களிடையே விவாதம் இருந்தது. அமெரிக்காவில் உள்ள ஸ்மித்சோனியன் பல்கலைக்கழகம் மேற்கண்ட காலத்தைக் குறிப்பிட்டுள்ளது.

சக்கரம் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாக, மண்ணைக் குழைத்துப் பானை செய்வதற்குப் பயன்பட்டிருக்கிறது. ஆரம்ப கால மண் பாத்திரங்கள் கையால் வனையப்பட்டுக்கொண்டிருந்தபோது, அவற்றைத் தெளிவான வட்ட வடிவத்தில் உருவாக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் மண்பாண்டக் கலைக்கு அடிப்படையான சக்கரம்



கண்டுபிடிக்கப்பட்டது. சுழலும் சக்கரம் மூலம் பாத்திரத்தின் அனைத்துப் பகுதிகளையும், ஒரு மண்பாண்டக் கலைஞர் இருந்த இடத்திலேயே சமமான அளவில் வடிக்க முடிந்தது.

அந்த வகையில் நாகரிக வளர்ச்சியில் சமையலுக்கான மண்பாத்திரங்களின் உருவாக்கத்திலும் சக்கரங்கள் பெரும் பங்காற்றியிருக்கின்றன. பண்டைய நாகரிகங்களில் சக்கரங்கள் மூலம் மண் பாத்திரங்கள் செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் புதைபடிமங்களாகக் கிடைத்துள்ளன. மண்பாண்டங்கள் செய்ய ஆரம்பித்துக் கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்குப் பிறகு, மெசபடோமியர்கள் சக்கரங்களைக் கொண்டு ஒரு பொருளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுசெல்லவும் பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டுகொண்டனர். அந்தக் காலத்தில் சக்கரங்கள் மரத்தினாலேயே செய்யப்பட்டன. இன்றைக்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய சக்கரங்களில் பல ஐரோப்பாவின் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குள் கிடைத்துள்ளன.

கி.மு. 2000 அளவில் பண்டைய எகிப்தில் சக்கரங்கள் கொண்ட தேர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அந்தக் காலத்தில்தான் சக்கரங்களில் ஆரங்கள் சேர்க்கப்பட்டுச் சக்கரங்களின் வலு அதிகரித்தது, எடையும் குறைந்தது. உலகில் இதுவரையிலான இயந்திரவியல் கண்டுபிடிப்புகளில் சக்கரமே மிகப் பெரிய கண்டுபிடிப்பு.

அன்றைய தேர் தொடங்கி, இன்றைய கார், பஸ், சைக்கிள், தொழிற்சாலை இயந்திரங்கள், கைக்கடிகாரங்கள், திரைப்பட புரொஜெக்டர்கள், ஏன் கீ கொடுக்கும் பொம்மைகள்வரை சக்கரங்கள் இன்றி எதுவும் அசையாது. அன்று முதல் இன்று வரை மண்பாண்ட உருவாக்கத்திலும், பொதியைச் சுமந்து செல்லும் வண்டிகளிலும் சக்கரங்கள் பயன்பட்டுவருகின்றன.

# விளையாட்டு



# இலங்கைக்கு முதல் வெற்றி

நெதர்லாந்தை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி மூன்று தொடர் தோல்விகளுக்குப் பின்னர் இம்முறை உலகக் கிண்ணத்தில் முதல் வெற்றியை பெற்றுக்கொண்டது.

லக்னோவில் நேற்று (21) நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி சில மாற்றங்களுடன் களமிறங்கியிருந்தது. குறிப்பாக துனித் வெல்லாளகே நீக்கப்பட்டு துஷான் ஹேமன்த அழைக்கப்பட்டதோடு லஹிரு குமாரவுக்கு பதில் கசுன் ராஜித்த இடம்பெற்றார்.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த நெதர்லாந்தின் முதல் 6 விக்கெட்டுகளையும் 91 ஓட்டங்களுக்கு வீழ்த்த இலங்கையால் முடிந்தது. எனினும் மத்திய ஓவர்களில் இலங்கை மீண்டும் ஒருமுறை பலவீனமான பந்துவீச்சை வெளிப்படுத்தியது.

7ஆவது விக்கெட்டுக்கு சிறப்பாக ஆடிய சிப்ரன்ட் எங்கல்பிரட்ச் (70) மற்றும் லோகன் வான் பீக் (59) 130 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டதால் இலங்கை அணிக்கு சவாலான இலக்கு ஒன்றை நிர்ணயிக்க நெதர்லாந்தால் முடிந்தது. குறிப்பாக இந்த இருவரதும் இணைப்பாட்டம் உலகக் கிண்ணத்தில் 7ஆவது விக்கெட்டுக்கு பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டமாக சாதனை படைத்தது.

இதன்மூலம் நெதர்லாந்து அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 262 ஓட்டங்களை பெற்றது. இலங்கை சார்பில் தொடர்ந்து பந்துவீச்சில் சோபித்து வரும் தில்ஷான் மதுஷங்கவுடன் கசுன் ராஜித்தவும் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலெடுத்தாட வந்த இலங்கை அணி குசல் பெரேரா மற்றும் குசல் மெண்டிஸின் விக்கெட்டை ஆரம்பத்திலேயே பறிகொடுத்தபோதும் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க தொடர்ச்சியாக மூன்றாவது அரைச் சதத்தை பெற்றதோடு சதீர சமரவிக்ரம இலங்கை அணியை வெற்றிவரை அழைத்துச் சென்றார். சமரவிக்ரம, பத்தும் நிசங்கவுடன் சேர்ந்து 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டதோடு சரித் அசலங்கவுடன் 4ஆவது விக்கெட்டுக்காக 77 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார்.

சரித் அசலங்க சிறப்பாக ஆடியபோதும் 44 ஓட்டங்களை பெற்றிருந்தபோது தனக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வந்த நெதர்லாந்து சுழல் வீரர் ஆறியன் தத்தின் பந்துக்கு அநாவசியமாக சுவிப் முறையில் ஆட முயன்று விக்கெட்டை தாரைவார்த்தார்.




எனினும் கடந்த போட்டிகளில் இலங்கையின் மத்திய வரிசை தடுமாற்றம் கண்ட நிலையில் சமரவிக்ரம தனது வழக்கமான ஆட்ட பாணியை மாற்றிக்கொண்டு நிதானமாக ஆடி இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்போது 5ஆவது விக்கெட்டுக்கு தனஞ்சய டி சில்வாவுடன் (30) இணைந்த அவர் 76 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

இலங்கை அணி 48.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 263 ஓட்டங்களை எட்டியது. அபாரமாக ஆடிய சதீர சமரவிக்ரம 107 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களை பெற்றார்.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் தனது முதல் புள்ளிகளை பெற்றுக் கொண்டது. அடுத்து இலங்கை அணி எதிர்வரும் வியாழக்கிழமை (26) இங்கிலாந்து அணியை எதிர் கொள்ளவுள்ளது.









# முடிவுகளை தீர்மானிக்கும் காயங்கள்

இம்முறை உலகக் கிண்ணத்தில் வேறு எந்த அணிகளை விடவும் உபாதைகளால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் அணி இலங்கை தான். அதன் விளைவை போட்டி முடிவுகளில் பார்க்க முடியும். முதல் மூன்று போட்டிகளில் அடுத்தடுத்து தோல்வி அடைந்த இலங்கை அணியின் உபாதைப் பட்டியல் நீண்டது.

உலகக் கிண்ணத்திற்காக இந்தியா வரும்போதே, தனது முன்னணி சுழற் பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க மற்றும் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீரவை உபாதை காரணமாக விட்டுவிட்டு சென்ற இலங்கை அணி வந்த விரைவிலேயே அணித் தலைவர் தசுன் ஷானக்கவை உபாதையால் இழந்துவிட்டது.

அணித் தலைமை பொறுப்பை குசல் மெண்டிஸ் ஏற்ற நிலையில் தசுனுக்கு பதில் அணியுடன் மேலதிக வீரராக அழைத்துச் செல்லப்பட்ட சாமிக்க கருணாரத்ன தசுனுக்கு பதில் அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். போதாக் குறைக்கு வேகப் பந்து வீச்சாளர் மதீஷ பதிரணவுக்கு தோள் பட்டையில் சிறு அசௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. அவர் அணியில் நீடிப்பதிலும் சற்று சந்தேகம் இருக்கிறது.

தசுன் ஷானக்கவின் முன் தொடை பகுதியில் உபாதை ஏற்பட்டிருக்கும் நிலையில் உடல் தகுதி பெற இரண்டு தொடக்கம் மூன்று வாரங்கள் எடுத்துக் கொள்வதாலே அணியில் இருந்து நீக்கப்பட்டார். என்றாலும் அவர் இலங்கை அணியின் மருத்தவ குழுவுடன் இணைந்து சிகிச்சைகளை பெற்று வரும் அதே நேரம் அணியுடன் தொடர்ந்து இருந்து வருகிறார்.

அவர் உடல் தகுதி பெற்று, அணியில் மற்றொரு வீரருக்கு காயம் ஏற்படும் பட்சத்தில் அந்த இடத்தை நிரப்ப வசதியாகவே அவர் தொடர்ந்து அணியுடன் இருக்கிறார்.

தசுன் ஷானக்க அணித் தலைவருக்கு அப்பால் வீரர் என்ற வகையில் அண்மைக் காலமாக சோபிக்கத் தவறி வரும் நிலையிலேயே இந்த உபாதைக்கு முகம்கொடுத்தார். குறிப்பாக அவரின் துடுப்பாட்டம் தடுமாற்றம் கண்டிருப்பது இலங்கை அணியின் மத்திய பின் வரிசை பலவீனப்படுவதற்கு முக்கிய காரணியாக மாறியிருக்கிறது. முதல் மூன்று போட்டிகளையும் பார்த்தால் அது நன்றாகத் தெரியும்.

தனது துடுப்பாட்டம் சோபிக்காத நிலையில் பந்துவீச்சில் அவர் சற்று உதவுகிறார். பொதுவாக வேகப் பந்து வீச்சாளர்களுக்கே முன் தொடை பகுதியில் காயம் ஏற்படும். எனவே, தசுனின் காயத்தை பார்க்கும்போது அவர் பந்துவீச்சில் அதிக அவதானம் செலுத்தி இருப்பதாக புரிகிறது.

இலங்கை அணியில் பந்து வீச்சு பலவீனப்பட்டிருக்கும் நிலையில், அதனை தன்னளவில் சரிசெய்ய முயன்றதன் விளைவாகக் கூட அவரது இந்தக் காயம் இருக்கக் கூடும். எப்படி இருந்தபோதும் தசுன் ஷானக்க ஒரு துடுப்பாட்ட சகலதுறை வீரர் என்ற வகையில் அவரது ஆட்டம் தொடர்வது தான் ஆரோக்கியமானது.



தசுன் ஷானக்கவுக்கு பதில் சேர்க்கப்பட்டிருக்கும் சாமிக்க கருணாரத்ன ஒரு பந்து வீச்சு சகலதுறை வீரர். தற்போதைய சுழலில் அப்படி ஒருவர் தான் அணிக்குத் தேவை என்றபோதும், கருணாரத்ன அண்மைக் காலமாக போதிய அளவு சோபிக்காத நிலையில் அணியில் இடம்பெறாமல் இருந்து வந்தவர். எனவே, அவர் திடுதிடுப்பென்று அணியில் தற்போது இருக்கும் ஓட்டைகளை நிரப்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. தசுனுக்கு பதில் தற்போதைய சூழலில் கருணாரத்ன தான் பொருத்தமானவர் என்று தேர்வுக் குழுவினர் கருதி இருக்கக் கூடும்.

தசுன் இல்லாத நிலையில் குசல் மெண்டிஸிடன் தலைமை பொறுப்பு கொடுக்கப்பட்டது எதிர்பார்த்ததே. அண்மைக் காலமாக உப தலைவராக செயற்பட்டு வந்த அவர் சர்வதேச கிரிக்கெட்டில் முதல் முறை தலைமை பொறுப்பை உலகக் கிண்ணத்தில் ஏற்றிருப்பதன் சாதக, பாதகங்கள் பற்றி இப்போது கூறமுடியாது.

என்றாலும் இலங்கை துடுப்பாட்ட வரிசையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தவர் குசல் மெண்டிஸ். இந்த நிலையில் அவரிடம் தலைமை பொறுப்பை கொடுத்திருப்பது அவரது துடுப்பாட்டத்தில் ஏதோ ஒரு வகையில் பாதிப்பை செலுத்தும் என்பதை மறுக்க முடியாது.

இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பதிரண முதல் இரு போட்டிகளிலும் 90க்கும் அதிகமான ஓட்டங்களை விட்டுக் கொடுத்து அடுத்த போட்டியில் அணியில் சேர்க்கப்படுவதில் சந்தேகம் இருந்தபோது அவருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது.

அவரது பந்துவீச்சு பாணி, நீண்ட ஓவர்கள் பந்து வீசியது, போதாக் குறைக்கு மோசமாக பந்துவீசியது எல்லாம் சேர்த்து மதீஷவுக்கு அழுத்தத்தை கொடுத்த நிலையிலேயே உபாதைக்கும் உள்ளாகி இருக்கிறார். தோள்பட்டையில் ஏற்பட்ட அந்தக் காயத்திற்கு பத்து நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டால் போதும் என்கிறார்கள்.

என்றாலும் உலகக் கிண்ணத்திற்கு மத்தியில் உபாதை ஏற்படாத வகையில் அவரை பயன்படுத்துவது என்பது தேவையற்ற சுமைதான். எனவே, திடீர் திருப்பமாக மேலதிக வீரர்களாக துஷ்மன்த சமீர மற்றும் அஞ்சலோ மத்தியுஸ் அழைக்கப்பட்டிருக்கிறார். ஆரம்பத்தில் பிரமோத் மதுஷங்கவையே இந்தியா அனுப்புவதாக இருந்த சூழலிலேயே இவர்கள் இந்தியா சென்றிருக்கிறார்கள்.

இந்த அறிவிப்பே அணிக்குள் இருக்கும் தேர்வுக் குழப்பங்களுக்கு நல்ல உதாரணம். இலங்கையின் அத்தியாவசியமான வீரராக இருக்கும் சமீர காயத்தாலேயே அணியில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவர் இப்போது உடல் தகுதி பெற்றிருப்பதாக தேர்வுக் குழுவினர் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வளவு விரைவில் அவர் உடல் தகுதி பெறுவதாக இருந்தார் முன்கூட்டியே உலகக் கிண்ண குழாத்தில் சேர்த்திருக்கலாமே என்ற கேள்வி எழுகிறது.

மற்றது மத்தியூஸை அவசர அவசரமாக அணிக்கு அழைக்கப்பட்டிருப்பது காலம் கடந்த ஞானமாக வாய்ப்பு இருக்கிறது. இப்போதைய சூழலில் இலங்கையில் இருக்கும் அனுபவம் மிக்க வீரர் மத்தியூஸ் தான். ஆனால் இலங்கை அணியில் மத்திய வரிசை அனுபவம் இன்றி பலவீனப்பட்டிருப்பது முதல் மூன்று போட்டிகளை பார்த்தாலே புரிகிறது. எனவே, மத்தியூஸை மேலதிக வீரராகவேனும் அழைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது தேர்வு குழுவினருக்கு இப்போது புரிந்திருக்கிறது.

வேறு எந்தப் போட்டிகளை விடவும் உலகக் கிண்ணப் போட்டிகளில் அனுபவ வீரர்கள் இருப்பது அவசியம். மற்ற அணிகள் அதிகம் அனுபவத்தை பார்த்தே அணியை தேர்வு செய்யும்.

என்றாலும் 15 பேர் கொண்ட குழாத்தில் இருக்கும் ஒரு வீரரை நினைத்தபடி மாற்ற முடியாது. ஒருவருக்கு காயம் ஏற்பட்டு அதனை மருத்துவக் குழு உறுதி செய்து பின்னர் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் தொழில்நுட்பக் குழு ஒப்புதல் அளித்தாலேயே அந்த வீரருக்கு பதில் மற்றொரு வீரரை அழைக்க முடியும்.

என்றாலும் அண்மைக் காலத்தில் இலங்கை அணி கட்டியெழுப்பப்பட்டு வரும் சூழலில் அதற்கு இந்த காயங்கள் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த டி20 உலகக் கிண்ணத்திலும் இதே கதை தான். டில்ஷான் மதுஷங்க காயத்தால் அவுஸ்திரேலியா செல்லவே இல்லை. போட்டியின் பாதியில் பினுர பெர்னாண்டோவுக்கு காயம் ஏற்பட அவருக்கு பதில் அசித்த பெர்னாண்டோ அழைக்கப்பட்டார். துஷ்மன்த சமீரவும் பாதியில் நீக்கப்பட்டார். பிரமோத் மதுஷானுக்கும் காயம் ஏற்பட்டது.

தனுஷ்க குணதிலக்கவுக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டு வெளியேறியது, பின்னர் ஒரு பாலியல் பிரச்சினையை அணிக்குள் இழுத்து வரும் அளவுக்கு மோசமடைந்தது.

மஹேல ஜயவர்தன மற்றும் குமார் சங்கக்காரவின் ஓய்வுக்குப் பின்னர் அந்த இடத்தை நிரப்புவதில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா உபாதைகளால் இன்னும் தனது முழுமையான திறமையை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறுகிறார். துஷ்மன்த சமீரவின் நிலைமையும் இது தான். அவர் அணிக்காக ஒன்று, இரண்டு போட்டிகளில் ஆடிவிட்டு மருத்துமனைக்குச் செல்வதையே வழக்கமாக வைத்திருக்கிறார்.

அடிப்படையில் இலங்கை அணியின் பொதுவான பிரச்சினையாக மாறி இருக்கும் இந்தக் காயங்களுக்கு காரணம் பற்றியும் அணி நிர்வாகம் ஆராய வேண்டி இருக்கிறது. அது போட்டிக்கான பயிற்சி முறை, வீரர்களுக்கான உடற்பயிற்சி முறை, வீரர்களை பயன்படுத்தும் முறை எதுவாகவும் இருக்கலாம்.

வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மன்த சமீரவின் காயத்திற்குக் காரணம் உலகக் கிண்ணம் நெருங்கி இருந்தபோது நடத்தப்பட்ட லங்கா பிரீமியர் லீக் தொடர் மீது பரவலாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இதன் பின்னணியில் இருக்கும் அரசியலை தவிர்த்துவிட்டு பார்த்தாலும் அதில் ஓரளவுக்கு உண்மையும் இருக்கிறது.

உலகக் கிண்ணம் இன்னும் பாதியைக் கூட தொடவில்லை. இலங்கைக்கு இன்னும் ஐந்து போட்டிகள் எஞ்சி இருக்கின்றன. யாருடைய தயவும் இன்றி அரையிறுதிக்கு முன்னேற வேண்டுமானால் கிட்டத்தட்ட அனைத்து போட்டிகளிலும் வெல்ல வேண்டும். என்றாலும், இலங்கை அணியின் தலையெழுத்தை காயங்களே தீர்மானிக்கப்போகிறது என்பது தான் இப்போதை நிலைமை.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2023 ஒக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை



கலையுலக வாழ்வில்
பொன்விழா காணும்
ஜனரஞ்சக எழுத்தாளன்
மொழிவாணன்

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# பூமிக்கு அடியில் எம்மால் எவ்வளவு தூரம் போகலாம்?





**விண்–வெளிக்கெல்லாம் போகிறோமே, ஆனால் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்ய பெரிதாக யாரும் ஆர்வம் காட்டுவதாக தெரி–யவில்லை. அவ்வாறு தோண்டி மனிதன் எவ்வளவு தூரம் பூமிக்கு அடியில் சென்றிருக்கிறான் என்று பார்ப்போமா!**

**2.30 அடி:** இங்கேதான் எலி போன்ற தோற்றம் உடைய கிரொப்பம் என்ற விலங்குகள் வாழ்கின்றன.

**6.00 அடி:** மனித உடல்கள் இந்த ஆழத்தில் தான் புதைக்கப்படுகின்றன.

**20 அடி:** உலோகங்களை கண்டுபிடிக்கும் கரு. இந்த ஆழம் வரைதான் உலோகங்கள் இருந்தால் கண்டுபிடிக்க முடியும்.

**66 அடி:** இந்த ஆழத்தில்தான் பாரிஸ் கட்டகொம் இருக்கிறது. அதாவது பாரிஸ் நகரில் ஆறு மில்லியன் மக்களின் உடல் எச்சங்கள் இங்கேதான் வைக்கப்பட்டிருக்கின்றன.

**131 அடி:** உலகின் மிக ஆழமான நீச்சல் தடாகம் இந்த ஆழத்தைத் தொடும்

**280 அடி:** துருக்கியின் டரிகுயு நிலத்தடி நகரம் இந்த ஆழத்தில் தான் இருக்கிறது. இங்கே 1,200 அறைகள் இருப்பதோடு 20 ஆயிரம் பேர் தங்க முடியும்.

**346 அடி:** இங்கேதான் உக்ரைனின் ஆர்சனல்னா மெட்ரோ ரயில் நிலையம் இருக்கிறது. உலகின் மிக ஆழமான ரயில் நிலையம் இதுதான்.

**377 அடி:** இங்கிலாந்து மற்றும் பிரான்ஸை இணைக்கும் ஆங்கில கால்வாய் சுரங்கப் பாதை இந்த ஆழத்தில்தான் இருக்கிறது. இது 50 கிலோமீற்றர் தூரம் கொண்டது.

**400 அடி:** மரத்தின் வேர் சென்ற ஆழமான தூரம் இதுதான்.

**508 அடி:** சுவீடனில் உள்ள சாலா வெள்ளிச் சுரங்க ஹோட்டல் இங்கு தான் இருக்கும். தங்குவதென்றால் அதிக செலவுதான்.

**695 அடி:** உலகின் மிக ஆழமான மரதன் போட்டி இங்கு தான் நடந்தது.

**942 அடி:** ஜப்பானின் செய்கான் சுரங்கப்பாதையின் ஆழம் இதுதான்.

**1286 அடி:** இங்கிலாந்தில் தோண்டப்பட்ட வூடிங்டின் கிணற்றின் ஆழம். கிணற்றை தோண்டி முடிக்க எடுத்துக்கொண்ட காலம் நான்கு ஆண்டுகள். அதாவது மனிதன் கைகளால் தோண்டிய மிக ஆழமான கிணறு இதுதான். தவறியேனும் இதற்குள் விழுந்தால் விழுந்து முடிவதற்கு 11 வினாடிகள் எடுத்துக்கொள்ளும்.

**2297:** சிலியில் இருக்கும் சான் ஜோசே சுரங்கத்தின் ஆழம் இது. இங்கு 2010 ஆம் ஆண்டு 33 சுரங்கத் தொழிலாளர்கள் 69 நாட்கள் சிக்கி இருந்த நிலையில் காப்பற்றப்பட்டமை பிரபலமானது.

**3800 அடி:** உலகின் மிக ஆழமான வெளவால் குகை இங்குதான் இருக்கும். இங்கே பல நாடுகள் தமது அணு ஆயுதக் கழிவுகளையும் சேமித்து வைத்திருக்கின்றன.

**4166 அடி:** பின்லாந்து சுரங்கம் அமைந்திருக்கும் இங்கே 2007இல் இசை நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதாவது உலகில் அதிக ஆழ்த்தில் நடந்த இசை நிகழ்ச்சி இது தான்.

**7677 அடி:** உலகின் மிக ஆழமான ஏரி இங்கே தான் இருக்கும்.

**8202 அடி:** சீனாவில் இருக்கும் ஜின்பிங் நிலத்தடி ஆய்வு கூடாத்தின் ஆழம் இது. கரும்பொருள் ஆய்வு இங்கே நடக்கிறது.



10203 அடி: உலகின் மிக ஆழத்தில் வாழும் விலங்கு இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. அதனை பிசாசுப் புழு என்று அழைப்பார்கள்.

**12801 அடி:** நுண்ணுயிர்கள் உயிர்வாழ முடியுமான ஆழம் இதுதான்.

**36000 அடி:** மரியான அகழியின் ஆழம் இது. அதாவது சமுத்திரத்தின் ஆழமான இடம் இது.

**40355 அடி:** பூமியின் மிக ஆழத்தை தோண்ட வேண்டும் என்று ரஷ்ய விஞ்ஞானிகளால் தோண்டப்பட்ட கோலா துளையின் ஆழம் இது.

**40604 அடி:** ரஷ்யாவில் அமைந்திருக்கும் உலகின் மிக ஆழமான எண்ணெய் கிணறான சி44 கிணறு இந்த ஆழம் வரை செல்கிறது. இதுதான் தற்போதை வரை மனிதன் அடைந்த மிக ஆழமான இடம்.

பூமியின் ஆழம் என்பது 6371 கிலோமீற்றர்கள். ஆனால் மனிதன் அடைந்த அதிகபட்ச ஆழம் 12 கிலோமீற்றர்கள். அது பூமியின் ஆழத்தில் 0.2 வீதம் மாத்திரமே. பூமியின் மையத்தின் அதிக வெப்பம் மற்றும் ஆழத்தை கருதும்போது தற்போதைய தொழிநுட்பத்திலோ அல்லது எதிர்வரும் பல்லாயிரம் ஆண்டுகளின் தொழில்நுட்பத்திலோ அந்த மையத்தை அடைவது சாத்தியமாகும் என்று நம்ப முடியவில்லை. அப்படி அடைய முடியுமாக இருந்தாலும் அவ்வாறான ஒரு முயற்சி என்பது பூமியையே அழித்து விடும் அபாயம் இருக்கிறது.

அதனாலேயே மனிதன் வானத்திற்கு மேல் எவ்வளவு தூரம் போக முடியும் என்று தீவிரமாக ஆராய்ந்தபோதும் பூமியின் ஆழத்திற்கு போக முயற்சிப்பதில்லை.





# கலை, இலக்கிய வாழ்வில் பொன்விழா காணும் ஜனரஞ்சக எழுத்தாளன் மொழிவாணன்

நாட்டில் எந்த ஒரு மூலையில் கலை நிகழ்வுகள் எது நடந்தாலும் உள்ளதோ இல்லையோ, அதாவது, அதில் இவரது பங்களிப்பு உள்ளதோ, இல்லையோ, அவர் தாம் அறிந்தவர் என்றால், அதில் இவர் தவறாது கலந்து கொள்வார். இது பொன்விழா கலைஞன் ஜனரஞ்சக எழுத்தாளன் மொழிவாணனின் சிறப்பு.

அது, நல்லதோ, கெட்டதோ அது பற்றி பாராட்டி, புகழ்ந்து தள்ளுவார். இது கலைஞர்களுக்கு அவர் அளிக்கும் நல்லதொரு விருந்து. அதுவே அவர்களை உற்சாகப்படுத்தும் அதி மருந்து. கொழும்பில் இருந்து மிக தொலை தூரத்தில் உள்ள ஒரு இடம் மன்னார், பேசாலை. அங்கு நமது கலைஞன் ஒருவரின் படமாளிகை திறப்பு விழா நடைபெற்றது. அங்கு நேரில் சென்று கலந்து கொண்டு பாராட்டி பரவசப்படுத்தியவர் இந்த ஜனரஞ்சக எழுத்தாளனின் சிறப்பு.

எழுத்தை ஆள்பவன் எவனோ அவனே எழுத்தாளன். இந்த மொழிவாணன் என்பவன் சிறந்த எழுத்தாளன் என்பதற்கு இதோ ஒரு சான்று. யார் யார்? எங்கெங்கு? எப்படி, எப்படி எல்லாம் கருத்துக்களை கூறினாலும், அவரவருக்கு, அங்கங்கு, அப்படி அப்படி, அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் பதில்களை எடுத்துரைப்பவன் மொழிவாணன்.

இந்த பதில்கள், கவிநடையிலும் அடுக்குமொழியிலும் மிடுக்காக வந்து விழும். சலசல வென ஓடும் குளிரோடையின் சங்கீதம் போல்....... சிலுசிலு வென வீசும் பனிவாடையின் சந்தோஷத்தை அள்ளி வழங்கும் இவரது தமிழ் மணம் ததும்பும் வார்த்தைப் பிரயோகங்கள்.

துப்பறியும் தொடர்கள், இளமை ஊஞ்சலாடும் தொடர் கதைகள், சினிமா கேள்வி பதில்கள், நவரசம் ஊட்டும் நகைச்சுவை நாடகங்கள், எண்ணற்ற கருத்துக்களை பரிமாறும் எண் சோதிட கணிப்புகள், பார்ப்பவர்களின் இதயங்களைப் பரவசப்படுத்தும் சினிமாப் பாடல்களைக் கொண்ட ஒளி, ஒலி வடிவிலான தொலைக்காட்சி நிகழ்வுகள், சிந்தனைகளை சிறகடித்துப் பறக்க வைக்கும் தொலைக்காட்சி நேர்காணல்கள் என இன்னொரன்ன கலையாற்றல்களை தன்னகத்தே கொண்ட ஒரு மாபெரும் கலைஞன் மொழிவாணன்.

நவீன எண் சொல்லிட நிபுணரும் வாஸ்து ஆலோசகரும்

ஜனரஞ்சக எழுத்தாளருமான கலாபூஷணம் மொழிவாணனுக்கு இன்று 22-10-2023ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.31க்கு கொழும்பு, மருதானை டவர் மண்டபத்தில் பொன்விழா நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனின் ஏற்பாட்டில் டவர் மண்டபத்தில் இப்பொன் விழா நிகழ்வு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பிரபா கணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். சிவாஜி சாஹிட் மௌலானா முன்னிலை வகிக்கின்றார். இவ் விழாவில், இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹான் கௌரவ அதிதியாக கலந்து கொள்வார். இவ்விழாவில், பொன்விழா நாயகன் மொழிவாணன் தடம் பதித்த பல்வேறு துறைகளைப்பற்றி பல பேச்சாளர்களும் பேச உள்ளார்கள்.

'நவீன எண்சோதிடமும் மொழிவாணனும்' என்ற தொனிப்பொருளில் உடுவை தில்லை நடராஜாவும், 'கடி ஜோக்ஸ்சும் 'மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் சமூக ஜோதி ரபீக்கும், 'கிரைம் சிறுகதைகளும் மொழி வாணனும்'என்ற தொனிப்பொருளில் திருமதி வாசுகி P வாசும், 'கவிதையும் மொழிவாணனும்' என்ற தொனிப் பொருளில்கிண்ணியா அமிர் அலியும், 'சிறுகதைகளும் மொழிவாணனும்' என்ற தொனிப்பொருளில் வைத்யமாநிதியும் , 'நடன பாடல்கள் ஒளிப்பதிவும் மொழிவாணனும் என்ற தொனிப் பொருளில் செல்வி நிவேதா ஜெகநாதனும், வாஸ்துவும் மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் திருமதி தாமரைச்செல்வியும் தொலைக் காட்சி நாடகங்களும் மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் தம்பி ஐயா தேவதாஸும் உரையாற்ற உள்ளார்கள்.

பல பிரபலங்கள் கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக கலந்து நிகழ்ச்சியை சிறப்பிக்க உள்ளார்கள். அத்தோடு நந்த குமார், டிஸ்கோ ராஜா, பேராசிரியை பாலிகா சமந்தி குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் முனிவர், காளி, நந்த குமார்மாகிரட் குழுவினரின் நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறும்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543


















மாத்தளை வடிவேலனின் 'வல்லமைதாராயோ' சிறுகதைத் தொகுதி கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் ஞாயிறன்று பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் நடைபெற்றபோது முன்னாள் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் மங்கள விளக்கேற்றுவதையும், தமிழக 'தாய்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், எம்.ஜீ.ஆர் ஜானகி அம்மாள் கலைக் கல்லூரி முதல்வருமான டாக்டர் குமார் இரா ஜேந்திரன் வழங்கிய ஒரு இலட்சம் (100,000) ரூபா பணப்பரிசினை, ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவன முகாமைத்துவ நிர்வாக பணிப்பாளர் தெய்வநாயகம் வீரபாகு வழங்குவதையும், நூலின் பதிப்பாசிரியர் எச்.எச். விக்கிரமசிங்க தொகுதியை வெளியிட்டு வைத்து, புரவலர் ஹாசிம் உமருக்கு முதற் பிரதியை வழங்குவதையும், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர், சிவலிங்கம் சதீஸ் குமார் மற்றும் உடுவை எஸ். தில்லைநடராஜா ஆகியோரையும் படங்களில் காண்க.

பட உதவி: விஜயபாலன் மாத்தளை வடிவேலன்

# ஸாஹிரா கல்லூரி இஸ்லாமிய சங்கத்தின் மீலாதுந் நபி பரிசளிப்பு











கொழும்பு ஸாஹிரா கல்லூரி இஸ்லாமிய சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த மீலாதுந் நபி பரிசளிப்பு வைபவம் சனிக்கிழமை காலை கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் றிஸ்வி மரைக்கார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவின் கல்விப் பணிப்பாளர் மேஜர் என். ரி. நஸுமுத்தீன் கலந்துகொண்டதுடன், சிறப்புப் பேச்சாளராக ஸாஹிரா கல்லூரி ஆசிரியருமான அஷ்ஷெய்க் எஸ்.ஏ.அப்துல் ஹலீம் கலந்து கொண்டதுடன் மீலாதுந்நபியை முன்னிட்டு கிராஅத், பேச்சு, எழுத்தணி, விவாதம், கஸீதா, வினாவிடை போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கான சான்றிதழ்கள், பரிசில்களை பிரதம அதிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வழங்கி வைத்தனர்.

படங்கள் : ருஸைக் பாரூக்

# கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரை சந்தித்த ஸ்கை தமிழ் விருது குழு



கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் மற்றும் 2023 ஸ்கை தமிழ் விருது குழுவினருக்கிடையிலான சந்திப்பு (15) கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தில் இடம்பெற்றது. தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸ் (நளீமி), ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, தொழிலதிபர், சமூக செயல்பாட்டாளர் யாழினி குமார், என்.சி. நிகழ்வு திட்டமிடல் நிறுவனத்தின் பணிப்பளார் நிர்மலா சண்முகபாண்டியன் ஆகியோர் சந்தித்தனர்.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஸ்கை தமிழ் ஏற்பாட்டில் அடுத்த மாதம் நவம்பர் 30ஆம் திகதி இந்திய கலாசார மையம் அசோகா ஹோலில் ஸ்கை தமிழ் விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது. ஸ்கை தமிழ் விருது விழாவிற்கு பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீனை அழைப்பதற்கு இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பில் விருது விழா சம்பந்தமாக ஆலோசனைகளை தூதுவர் வழங்கியிருந்தார். இன, மத வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தி கூறினார்.

# சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்திய மாதாந்தம் ஆளுமைகளை கௌரவிக்கும் விழா












தினகரன், தினகரன் வார மஞ்சரியுடன் இணைந்து சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்திய மாதாந்தம் ஆளுமைகளை கௌரவிக்கும் விழா வத்தளை, நகர சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.







வெள்ளவத்தை Base 1 Consultancy Pvt. Ltd., அனுசரணையில் கொழும்பு 14 மஹாவத்த வீதி புனித அந்தோணியார் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மனவளக்கலை பேராசிரியர்கள் இந்திரகுமார், தெரேசா புஷ்பம் மற்றும் துணைப் பேராசிரியர்கள் ஜெகதாம்பாள், வசந்தா சோமசுந்தரம் ஆகியோரால் நடத்தப்பட்ட பயிற்சிகளின் நிறைவு நாளான 16.10.2023 அன்று பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் துணைத் தலைவர் அருள்நிதி பி.எஸ். செல்வரட்ணமும் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி சாந்தனாவும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

# பல்துறை ஆற்றல்களை கொண்ட சிறந்த இலக்கிய படைப்பாளி ராஜகவி ராகில்

இவ்வருடம் பிரமாண்டமாக நடாத்தப்பட்ட கலாநிதி மர்ஹூம் ஏ ஆர் மன்சூர் ஞாபகார்த்த கவிதைப் போட்டியில் பிறை வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளரும், கவிஞரும், தென்னிந்தியத் திரைப்படப் பாடலாசிரியரும், பிரபல எழுத்தாளருமான ராஜகவி ராகில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ராஜகவி இதுவரை நாவல், சிறுகதை, கவிதை, பிரயாணக் கட்டுரை என தமிழ் நாட்டின் புகழ் பெற்ற பதிப்பகங்கள் ஊடாக 18 நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். ஒளிப் பேழைகள் 15 வெளியிட்டுள்ளார். நிலா முற்றம் என்ற இந்தியாவில் இயங்கும் சர்வதேச அமைப்பு உலகளவில் நடாத்திய பாடல் எழுதும் பத்துப் போட்டிகளிலும் முதல் இடம்



பெற்று தங்கக் கோப்பையினைப் பரிசாகப் பெற்று சாதனை நிகழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜகவியின் 2000 மாம் ஆண்டு இன்னுமொரு சுவாசம் சிறுகதை நூலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

தமிழ்நாடு ஓவியாப் பதிப்பகம் வெளியிட்ட ஓவியனை வாசித்த புல்லாங்குழலில் வடிந்த வர்ண இசை என்ற கவிதை நூல் இந்தியாவின் மகாகவி பாரதியார் விருதினைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இவ்வருட ஆரம்பத்தில் தமிழ் நாடு மகாகவி பாரதியார் கலை இலக்கிய மன்றம் ராஜகவிக்கு இலக்கிய இமயம் விருது வழங்கி ராஜகவியைப் பெருமைப் படுத்தியது.







கல்வி : கலைமாணி பேராதனைப் பல்கலைக்கழகம்

தொழில் 01 : ஆசிரியர் கமு/ அல் மினா மகாவித்தியாலயம், அல் அக்ஸா மகா வித்தியாலயம், மாவனல்லை சாகிரா தேசிய பாடசாலை, ஹமீட் அல் ஹுசைனி தேசிய கல்லூரி, கொழும்பு விரிவுரையாளர் மாலைதீவு கல்வி அமைச்சு. சீசல்ஸ் கல்வி அமைச்சு

தொழில் :02 சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் & ஒளிபரப்பாளர்( ஸ்டார் ரி வி, நிதம் ரிவி, செல்லம்மா ரிவி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆசிய சேவை, கொழும்பு சர்வதேசவானொலி, மலையக சேவை, வர்த்தக சேவை, தென்றல் சேவை, பிறை எப் எம்

தொழில்:03 தென் இந்தியத் திரைப் படப் பாடல் ஆசிரியர் தோழன் கலை இலக்கிய இதழ் ஆசிரியர் ஆர் கே மீடியா பணிப்பாளர் ( சர்வதேச ஊடக அமைப்பு)

சர்வதேச பட்டங்கள்: ராஜகவி (தென் இந்தியத் திரைப்பட இயக்குனர் சங்கம் ) தமிழ் நயாக்கரா ( சர்வதேச நன்னூல் நிறுவனம்) பன்னாட்டுக் கவிஞர் ( அம்பாறை மாவட்ட ஊடகக் கண்கணிப்புக் குழு) இலக்கிய இமயம் (தமிழ் நாடு மகாகவி பாரதி இலக்கிய மன்றம் )கலாபூஷணம் (இலங்கை அரச விருது )வாழும் பாட்டரசர் விருது ( சர்வதேச பாட்டு மன்றம் )

பிள்ளைகள்: பெயர்: பாத்திமாஹனீக்கா ராகில் மகள்கல்வி: எல் எல் பி, எல் எல் எம்தொழில்: கொமன் வெல்த் நாடுகளுக்கான இளைஞர் விவகாரத் தலைவி இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்திலுள்ளஅம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளஅழகிய கிராமம் நிந்தவூர்.

கடல், குளம், ஆறு நீரோடைகள் நெல் வயல்வெளிகள் என வளம் கொழிக்கும் எழில் மிக்க கிராமம் இந்த இயற்கை சூழலில் தான்கவிஞர் ராஜகவி ராகில் பிறந்து வளர்ந்துகல்வி பயின்று பல்துறை ஆற்றல்களை வளர்த்துக்கொண்டு சிறந்த இலக்கியப் படைப்பாளியாக பிரபல்யமானார். சிறுவயதிலேயே கலை இலக்கிய உலகில் பிரவேசித்து கவிதைகள், பாடல்கள் ,கட்டுரைகள், சிறுகதைகள் என எழுத ஆரம்பித்திருக்கின்றார்.

உயர்தர வகுப்பில் படிக்கும் காலத்தில், தனது 19 வது வயதில் தூய்மை தெவீகமாகிறது, நித்யா அவள் வித்தியாசமா என்னும் நாவல்களை எழுதியுள்ளார்.இந்நாவல்கள் இலங்கையில் தினகரன் பத்திரிகையில் தொடராகவெளிவந்து எல்லோரின் பாராட்டுக்களையும் பெற்றது இன்னும் கலாசாலைக்கிளிகள், ஒரு காலை புலர்கிறதுநனைகின்ற கைகுட்டைகள்... போன்ற பல நாவல்கள் எழுதியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டபின் பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளார். கவிஞர், கலைஞர், எழுத்தாளர், ஆசிரியர், வானொலி அறிவிப்பாளர், தயாரிப்பாளர்திரைப்படப் பாடலாசிரியர், இதழாசிரியர்எனப் பல்வேறு துறைகளில் பணியாற்றிதற்போது அழகிய சீசெல்சு தீவில்பணியாற்றிக்கொண்டுதமிழ்ப்பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.





இவரது கல்வியறிவும், தமிழ் ஆர்வமும், தமிழ் இலக்கிய அறிவும் சிந்தனை ஆற்றலும், கற்பனை வளமும், ஆளுமைத் திறன்களும் ஆயிரக்கணக்கான கவிதைகளையும் நூற்றுக்கணக்கான சிறுகதைகள் தொடர் நாவல்களையும் படைப்பதற்கு காரணமாய் அமைந்திருக்கின்றன.தனது எழுத்தாற்றலினால் இனிய தமிழுக்கும் உலகிற்கும் நற்பணியாற்றி வருகின்றார்.

இவரது இலக்கிய படைப்புகள் பல்வேறு வடிவங்களில்; நவீன கவிதைகள் மரபுக்கவிதைகள் புதுக் கவிதைகள் உரைக் கவிதைகள் ஆன்மீகக் கவிதைகள்குறுந்தொகை கவிதைகள்நவீன குறள்கள்ஒற்றைவரிக் கவிதைகள்ஹைக்கூக் கவிதைகள்சூழல் வரிகள் கவிதைகள்குறியீட்டுக் கவிதைகள்தொடர் கவிதைகள் பயணக்கட்டுரைகள்நாடகங்கள்திரைப் படங்களுக்கு பாடல்கள்தனிப்பாடல்கள் நாவல்கள், தொடர் கதைகள், ஒரு பக்கக் கதைகள்சில வரிக் கதைகள், நிமிடக் கதைகள், மின்சாரக் கதைகள் தனது வானொலி வாழ்க்கை பற்றிய அனுபவத் தொடர்இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் கிராமியம்....... எனதனது சொந்த வாழ்வின் அனுபவங்களையும் இனிய தமிழில் அழகாக ரசனையோடு உணர்வுகளோடு உயிரோட்டமாக எழுதி சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கின்றார்.

தனக்கென்றே ஒரு தமிழ் நடையை உருவாக்கிதனித்துவம் வாய்ந்தஇலக்கிய படைப்பாளியாக இன்று உலகம் கொண்டாடுகின்ற மகாகவியாகத் திகழ்கின்றார்.

சமூக, மனித நேய நலன்களில்அக்கறையும் ஆர்வமும் கொண்டு, முகநூலில் ஆயிரக்கணக்கான கவிதைகள், சிறுகதைகள், தொடர் நாவல்கள் கவிதைகள் படைத்து வருகிறார்.

தன்னுடைய சொந்த வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை, வெற்றிகளை, சமூக நோக்கு சிந்தனைகளை, கற்பனையில் உதிக்கின்ற காட்சிகளை, உள்ளத்து உணர்வுகளை தனது எழுத்தாற்றலினால்துல்லியமாக காட்சிப்படுத்துகின்றார்.

கடலும் அலைகளும், நதிகளும் ,மலைகளும், குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் காடுகளும் கழனிகளும், தேன் சொரியும் மலர்களும், வண்டினங்களும், கவிபாடும் குயில்களும், குருவிகளும், சிறகுகளும் அழகிய பட்டாம் பூச்சிகளும்ராஜகவிக்கு இலக்கியச் செல்வங்களை வாரி வழங்குகின்றன

7.ஆம் பக்கம் பார்க்க...

## இஸ்லாமியச் செல்வி அரபாவுக்கு
# கலாபூசணம் விருது



இஸ்லாமியச் செல்வி அரபா கலை இலக்கியத் துறையில் கவிதை, சிறுகதை, சிறுவர் பாடல்கள் என நீண்ட எழுதி வரும் ஒருவர். இவர் கண்டியில் நீண்ட காலமாக ஆசிரியர் பணியாற்றி விட்டு சமீபத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியையும் கூட. இவர் இத்துறையில் பல போட்டிகளில் கலந்து கொண்டு விருதுகளையும் சான்றுகளையும் பெற்றுள்ளார். இம்முறை கலை இலக்கியத்துறைக்காக கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# "விஷாரத" எனும் அதி உயர் விருது பெற்ற ஒரே தமிழ் தாள வாத்திய கலைஞர்



இசை மக்களை வயப்படுத்த கூடியது. இலங்கையில் தமிழ், சிங்கள ரசிகர்களால் நன்கு அறியப்பட்ட இலங்கையின் மூத்த கலைஞர் தான் " விஷாரத" ரட்ணம் ரட்ணதுரை. நான்கு தசாப்தங்கள் 40 வருடங்கள் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் எத்தனையோ இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். தபேலா, மிருதங்கம், கடம், உடுக்கை, மேளம், கொங்கோ, கஞ்சரா, ஒக்டபேட், ட்ரம்ஸ் என சகல தாள வாத்திய இசை கருவிகளை முறையாக கற்று மிக நேர்த்தியாக வாசிக்க கூடியவர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தில் தாள வாத்திய ஆசனாகவும் இருக்கும் இவர் தனியார் வகுப்புகளையும் கொழும்பில் நடாத்தி வருகின்றார். இலங்கையில் எத்தனையோ தமிழ், சிங்கள முன்னணி இசை குழுவில் இணைந்து இசை வழங்கி இருந்தாலும்த னக்கு என்று ஓர் இசை குழுவை வைத்துள்ளார். தென் இந்தியாவில் பல முன்னணி இசையமைப்பாளர்களுடன் நெருங்கிய தொடர்புடைவர். இலங்கையில் தமிழ், சிங்கள ஊடகங்கள் இவருடைய கலைப் பயணத்தை சிகரம் தொட வைத்துள்ளது எனலாம். இலங்கையில் ஒரே ஒரு "விஷாரத" எனும் அதி உயர் விருது பெற்ற ஒரே தமிழ் தாள வாத்திய கலைஞர் இவர் மட்டுமே. பெருமை கொள்வோம். எத்தனையோ நம் நாட்டில் வெளியான பாடல்களுக்கு இசை வழங்கியுள்ளார். இவருடைய அப்பாவும் சிறந்த தாளவாத்திய கலைஞர். இவருடைய மகனும் சிறந்த தாளவாத்திய கலைஞர் என்பது குறிப்பிட்டதக்கது. இசை குடும்பம் என்று சொன்னால் மிகையாகாது. சங்கீத சாகரம் ரட்ணம் மிக அமைதியாக இருப்பார். சிறிய புன்னகை இவர் அடையாளம். நகைச்சுவையாக கதைப்பார். இவரைப் பற்றி எவ்வளவோ எழுதலாம், பேசலாம், கூறலாம்.

இலங்கை மண் தந்த கலை பொக்கிஷம் இவர்!

இராமன் கேதீஸ்வரன்






புகைப்படக் கலைஞர்களுக்கான தேசிய அமைப்பான விஷன் டி மிஷன் தனது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வை அண்மையில் கொழும்பு 10 இல் அமைந்துள்ள சீநோர் விடுதியில் நடத்தியபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.




# நவராத்திரி



தெஹிவளை டேபிரிட்ஜ் சர்வதேச பாடசாலையில் முதன்முறையாக நவராத்திரி பூஜையுடன் மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றது, பாடசாலையின் பணிப்பாளர் இரோமி வீரசிங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் முதல்வர் டில்ருக்சி வீரசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு தலைமை அதிதியாக அகில இலங்கை இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவாகம கலாநிதி கு. வை. க. வைத்தீஸ்வர குருக்கள் கலந்து கொண்டதுடன் பிள்ளைகளுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

## பல்துறை ஆற்றல்களை...

6ஆம் பக்கத் தொடர்ச்சி...

கவிஞரின் கவிதைகளில் ...இயற்கைஎழில் பொங்க,மண் வாசனை வீச,வானும் மேகங்களும், நிலவும் தாரகைகளும் ,மழையும் குளிர் பனியும், மாரியும் வசந்தமும் கோடையும் முகம் காட்டிச் செல்லுகின்றன. கவியின் சிந்தனைக்கருக்கள் ஒவ்வொன்றும்தமிழ் முத்துக்கள் புத்துணர்ச்சியை தருபவை. தன்னம்பிக்கை ஏற்படுத்தக் கூடியவை உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற தமிழ் வாசகர்கள் அவற்றை ஆர்வத்தோடு படிப்பதும் பின்னூட்டங்கள் எழுதி கவிஞரைப் பாராட்டிவாழ்த்துக்கள் தெரிவித்துமலர்க்கொத்துக்களால் முகநூல்பக்கத்தைஅலங்கரித்தும் வருவதும் குறிப்பிடத்தக்கது.

கவிஞரின் கவியெழுதும் திறமையை ஆற்றலை பாராட்டியோர் பலர். இசையமைப்பாளர் ஏ.ஆர் ரஹ்மானை சந்திக்க நேர்ந்த ஒருமணி நேரத்தில் ஐந்து பாடல்களை எழுதிக்கொடுத்து அவரது பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றார்.

வாசக நெஞ்சங்களை கவர்ந்திழுக்கும் இவரது சிறந்த படைப்புகள் உலக நாடுகளில் பிரபல பத்திரிகைகள், சஞ்சிகைகளில்... குறிப்பாக ... கல்கி வார இதழ், மகாகவி மாத இதழ்தமிழ் நெஞ்சம் மாத இதழ், காற்றுவெளி மாத இதழ்பரணி மாத இதழ்வல்லமை வார இதழ், இனிய உதயம் மாத இதழ்தினமணி வாரப் பத்திரிகை..... பல உட்பட இன்னும் பலசஞ்சிகைகளில்....வெளிவந்துக்கொண்டிருப்பதுதையும் கண்கூடாக பார்க்க முடிகிறது அவை உடனுக்குடன் முகநூல் வாசகர்களுக்காகபகிரப்பட்டும் வருகின்றது

பக்திப்பாடல்கள், தமிழ் மொழி, அன்பு, அழகு, காதல் பாசம், நட்பு, தாய்மை ,நம்பிக்கை இயற்கை,......பற்றிய ராஜகவியின் பாடல்களை கருத்தாழம் மிக்கவை கவிஞர் ராஜகவி ராகில் அவர்களின்இலக்கியப்படைப்புக்களைமுகநூல் பக்கத்திலும் இணையத்தளங்களிலும்படிக்கும் வாய்ப்பு பல்லாயிரம் வாசகர்களுக்குக் கிடைக்கிறது

ராஜகவி ராகில் அவர்கள் ★தீ குளிர்ச்சி★ என்ற கவிதைத் தலைப்பில் எழுதிய ஆன்மீக கருத்துக்கள் நிறைத்த கவிதை வரிகளைப் படித்தால் இறை அன்பு, இறை பக்தி, இறை நம்பிக்கை, இறை வல்லமை, இறை மாண்பு.... துலங்கும் கவிவரிகள் ஒவ்வொன்றும் மனங்களை ஈர்க்கக்கூடிய தன்மை கொண்டவையாக அமைந்திருந்தன. இலங்கை வானொலியில் 25 வருடங்களுக்கு மேலாக சிரேஸ்ட அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

மெல்லிசைப் பாடல்கள் நூற்றுக்கும் மேல் இயற்றியுள்ளார் .வானொலி நாடகங்கள் பல எழுதியும் நடித்தும் இருக்கிறார்

மூன்று திரைப்படங்களுக்கு கதை , திரைக்கதை, வசனம், பாடல்கள் எனகையெழுத்துப் பிரதிகள் எழுதியுள்ளார் இவை இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பாதுகாப்பாக உள்ளன . இப்பொழுது சென்னையில் தயாரிக்கப்படுகின்ற பல திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதிவருகிறார். பல்துறை ஆற்றல்களை கொண்ட சிறந்த இலக்கிய படைப்பாளி.

# லியோ படத்தில் த்ரிஷாவை ஹீரோயினாக நடிக்க வைத்தது ஏன்?



லியோ படத்தில் த்ரிஷாவை ஹீரோயினாக நடிக்க வைத்தது ஏன் என இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தெரிவித்துள்ளார். அவர் சொல்வதும் சரி தான் என்கிறார்கள் விஜய் ரசிகர்கள்.

விஜய் இரண்டு வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் லியோ படத்தின் ஹீரோயினாக த்ரிஷாவை தேர்வு செய்தது ஏன் என இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தெரிவித்துள்ளார். விஜய்யை வைத்து லோகேஷ் கனகராஜ் இயக்கியிருக்கும் லியோ படம் தியேட்டர்களில் ரிலீஸாகியிருக்கிறது.

லோகேஷ் படத்தில் விஜய்யின் மனைவியாக நடித்திருக்கிறார் த்ரிஷா. தன் படத்திற்கு த்ரிஷாவை தேர்வு செய்தது ஏன் என தற்போது தெரிவித்துள்ளார் லோகேஷ் கனகராஜ். விஜய்க்கு ராசியான ஹீரோயின்களில் ஒருவர் த்ரிஷா என்பது நாங்கள் சொல்லி உங்களுக்கு தெரிய வேண்டியது இல்லை. அவர்களின் கெமிஸ்ட்ரி ரசிகர்களுக்கு மிகவும் பிடிக்கும். அந்த கெமிஸ்ட்ரிக்காக தான் விஜய்க்கு ஜோடியாக த்ரிஷாவை நடிக்க வைக்கலாம் என முடிவு செய்ததாக லோகேஷ் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

விஜய், த்ரிஷா இடையேயான கெமிஸ்ட்ரி யாருக்கு தான் பிடிக்காது. அப்படி இருக்கும்போது லோகேஷ் கனகராஜ் மட்டும் விதிவிலக்கா என்ன? லியோ படத்தில் வரும் அன்பெனும் ஆயுதம் பாடலின் லிரிக்கல் வீடியோவை பார்த்த அனைவரும் கில்லி படம் பற்றி பேசுகிறார்கள். கில்லி படத்தில் காதலித்து வந்த சரவண வேலுவும், தனலட்சுமியும் திருமணம் செய்து கொண்டு இரண்டு பிள்ளைகளுக்கு பெற்றோர் ஆகிவிட்டார்கள். முத்து பாண்டி போய் புது வில்லன் வர அவரை எப்படி தொம்சம் செய்து குடும்பத்தை காப்பாற்றுகிறார் விஜய் என்பதே லியோ படத்தின் கதை என ரசிகர்கள் பேசி வருகிறார்கள்.

லியோ படத்திற்காக த்ரிஷாவின் போஸ்டரை பார்த்தபோதே பலருக்கும் கில்லி தனலட்சுமி தான் நினைவுக்கு வந்தார். அன்பெனும் ஆயுதம் பாடலை பார்த்ததுமே இது வேலுவும், தனலட்சுமியும் தான் என அனைவரும் கூறினார்கள். இந்நிலையில் லியோ படம் எல்.சி.யு.வில் வருவது உறுதியாகிவிட்டது. லியோவில் ஃபஹத் ஃபாசில் நடித்திருப்பதை விஜய்யின் மகனாக நடித்திருக்கும் மேத்யூ தாமஸ் தெரிவித்துள்ளார்.

# 64 வாரத்திற்கு பிறகு மீண்டும் வந்திருக்கும் லக்ஷ்மி மேனன்



மலையாளத்திலிருந்து தமிழ் சினிமாவில் நடிக்க வந்த நடிகை லட்சுமி மேனன். சமீபத்தில் இயக்குனர் பி. வாசுவின் சந்திரமுகி 2 படத்தில் நடித்து கம் பேக் கொடுத்திருக்கிறார். அவர் சினிமா மட்டுமல்லாது அவரது சமூக வலைத்தளத்திலும் கம் பேக் கொடுத்திருக்கிறார். சுந்தரபாண்டியன் மற்றும் கும்கி படத்தில் நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகமானார் நடிகை லக்ஷ்மி மேனன். அவரது முதல் படமான சுந்தர பாண்டியன் நல்ல வரவேற்பை பெற்றது. கும்கி படமும் நல்ல வெற்றி படமாக அமைந்தது. தனது 8ஆம் வகுப்பில் சினிமாவில் நடிக்க தொடங்கினார் லக்ஷ்மி மேனன். தொடர்ந்து படங்களில் நடித்து வந்தார்.

சசிகுமாருடன் இரண்டாவது முறையாக குட்டி புலி படத்தில் நடித்தார். அதன் பிறகு தொடர்ந்து மஞ்சப்பை, பாண்டியநாடு, நான் சிகப்பு மனிதன், ஜிகர்தண்டா, கொம்பன், மிருதன், றெக்க, வேதாளம், புலிக்குத்தி பாண்டி போன்ற படங்களில் நடித்தார். வேதாளம் படத்தில் அஜித்துக்கு தங்கச்சியாக நடித்தார். தொடக்கத்தில் அடுத்தடுத்த பட வாய்ப்புகள் கிடைத்த இந்த நடிகைக்கு அதன் பிறகு வாய்ப்பு மிகவும் குறைந்தது.அவ்வப்போது சமூக வலைதள பக்கத்தில் நடன வீடியோ, போட்டோஸ் என பதிவிட்டு வந்தாலும் அவருக்கான கவனம் சினிமாவில் கிடைக்கவில்லை. அதனால் புலிக்குத்தி பாண்டி படத்திற்கு பிறகு ஆள் அட்ரஸே இல்லாமல் இருந்துவிட்டார் நடிகை லக்ஷ்மி மேனன். மேலும், சினிமா வாய்ப்பு அதிகமாக கிடைக்கப்பெறாததால் இவர் பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு செல்லுவார் எனவும் முந்தய சீசன் போது கூறப்பட்டது. அதற்கும் பதிலளிக்கும் விதமாக வீடியோ வெளியிட்டார் லக்ஷ்மி மேனன்.இந்நிலையில், ஜோதிகாவின் மார்க்கெட்டை உயர்த்திய சந்திரமுகி படத்தின் இரண்டாவது பாகத்தில் நடிக்கும் வாய்ப்பு லக்ஷ்மி மேனனுக்கு கிடைத்தது. ஆரம்பத்தில், எதற்கு லக்ஷ்மி மேனன் இப்படியொரு சின்ன மற்றும் முக்கியத்துவம் இல்லாத கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் என நினைக்கும்போதுதான், இவர்தான் அந்த சந்திரமுகி என்னும் காட்சி வந்திருக்கும். சந்திரமுகி 2 படத்தில் இவரின் உடம்பில் தான் அந்த ஆவி இருக்கும். நடிப்பில் சிறப்பாக செய்திருப்பார் லக்ஷ்மி மேனன். அந்த வகையில், சினிமாவில் கம் பேக் கொடுத்துவிட்டார் என ரசிகர்கள் கூறிவந்தார்.இந்நிலையில், சமூக வலைத்தளத்திலிருந்து விலகியிருந்த இவர் இன்ஸ்டாகிராம் DPயும் வைக்காமலேயே இருந்தார். ஆனால், இப்போது லக்ஷ்மி மேனன் மீண்டும் ஆக்டிவாகியிருக்கிறார். கிட்டத்தட்ட 64 வாரங்களுக்கு பிறகு அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு போட்டோவை பகிர்ந்திருக்கிறார். அதுவும் அழகான சேலையில் அந்த போட்டோவை பார்த்ததும் ரசிகர்கள் குஷியாகியிருக்கிறார்கள். ஒரு வேலை, சந்திரமுகி 2 படத்தின்மூலம் மீண்டும் சினிமாவில் வாய்ப்பு கிடைத்ததால் அந்த பதிவோடு கம் பேக்கை ஆரம்பித்திருக்கிறாரோ எனவும் கெலியெழுப்பி வருகிறார்கள் ரசிகர்கள்.64 வாரத்திற்கு பிறகு மீண்டும் வந்திருக்கும் லக்ஷ்மி மேனன்.

# கீர்த்தி சுரேஷின் சொத்து மதிப்பு



நடிகை கீர்த்தி சுரேஷ் தமிழ், தெலுங்கு மற்றும் மலையாள படங்களில் நடித்து வருகிறார். இவரது குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவருமே சினிமாத்துறையில் இருப்பவர்கள்தான். 2000ங்களில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான கீர்த்தி சில படங்களில் நடித்து விட்டு படிப்பதற்காக சென்றுவிட்டார். அதன் பிறகு, மலையாளத்தில் கீதாஞ்சலி என்னும் படத்தில் நடித்து கதாநாயகியாக அறிமுகமானார். தமிழில், இது என்ன மாயம் என்னும் படத்தில் நடித்து அறிமுகமானார்.

நடிகை கீர்த்தி சுரேஷ் தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு மற்றும் மலையாள சினிமாக்களிலும் அதிக ரசிகர்களை பெற்றிருக்கிறார். தொடக்கத்தில் கீர்த்தி சுரேஷ் அதிகமான விமர்சனங்களை எதிர்நோக்கினார். நடிகையர் திலகம் படத்திற்கு பிறகு இவருக்கு இருந்த விமர்சனங்களும் விருப்பமாக மாறியது. அந்த வகையில், இன்ஸ்டாகிராமில் இவருக்கு 16.3 மில்லியன் ஃபாலோயர்ஸ் இருக்கிறார்கள்.

முன்னணி நடிகையான கீர்த்தி சுரேஷின் தற்போதைய மதிப்பு 41 கோடி ரூபாய். அந்த வகையில் ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட 35 லட்ச ரூபாய் சம்பாதிக்கிறார். ஒரு வருடத்திற்கு 4 கோடி ருபாய் வருமானம் வருகிறதாம். இவரின் வருமானம் பிரதானமாக சினிமா மற்றும் தொலைக்காட்சியின் மூலம் வருகிறது. ஒரு படத்திற்கு கிட்டத்தட்ட மூன்றிலிருந்து நான்கு கோடி ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறாராம் கீர்த்தி சுரேஷ்.

சினிமாவில் நடிப்பதுமட்டுமில்லாமல், விளம்பர படங்களிலும் நடித்து வருகிறார். அந்த வகையில், விளம்பர படங்களின் ஒரு ஒப்பந்தத்திற்கு கிட்டத்தட்ட 31 லட்சம் சம்பளம் வாங்குகிறார் கீர்த்தி சுரேஷ். முன்னணி கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ப்ராண்ட் அம்பாசிடராகவும் இருக்கிறார். அவரது சமூக வலைதள பக்கத்தில் விளம்பரப்படுத்த 25 லட்சம் கேட்கிறாராம் கீர்த்தி சுரேஷ்.

நடிகை கீர்த்தி சுரேஷிற்கு கார்கள் என்றால் அவ்வளவு பிரியமாம். அந்த வகையில், பல கார்களை ட்ரை செய்து பார்த்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். தற்போது இவர் சில பல கார்களை வைத்திருக்கிறார். 60 லட்ச ரூபாய் மதிப்பிலான வோல்வா 690, 1.38 கோடி ரூபாய் மதிப்பிலான BMW 7 சீரிஸ் 730 ld, 81 லட்ச ரூபாய் மதிப்பிலான மெர்சிடீஸ் பென்ஸ், 25 லட்ச ரூபாய் மதிப்பிலான டொயட்டா இன்னோவா க்ரிஸ்ட்டா போன்ற பல கார்களை வைத்திருக்கிறாராம் கீர்த்தி. அடுத்தடுத்த லைன் அப்பில் படங்கள் வரவிருக்கின்றன. தமிழில் 4 படங்களில் நடித்து வருகிறார் கீர்த்தி சுரேஷ். சிரேன், ரகுத்தாத்தா, ரிவால்வர் ரீட்டா, கண்ணிவெடி போன்ற படங்கள் படமாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

# அடுத்தடுத்த அதிரடியில் இறங்கிய தனுஷ்



சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகவுள்ள இப்படத்தில் எஸ்ஜே. சூர்யா, சந்தீப் கிஷன், துஷாரா விஜயன் உள்ளிட்டோர் இணைந்து நடிக்கின்றனர். வட சென்னையை மையமாக வைத்து உருவாகும் இப்படத்திற்காக மொட்டை தலை லுக்குடன் வலம் வருகிறார் தனுஷ். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கவுள்ள இப்படத்திற்கு 'ராயன்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

'மார்க் ஆண்டனி' கொடுத்த பிரம்மாண்ட வெற்றி.. 'லியோ' பிரபலத்துடன் இணைந்த விஷால்: அடுத்த சம்பவம்.!

இந்நிலையில் இப்படத்தின் ஷூட்டிங் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனையடுத்து 'தனுஷ் 50' படப்பிடிப்பு முழுவதுமாக நிறைவடையவுள்ள நிலையில், தனது அடுத்த படத்தில் நடிப்பதற்காக தயார் ஆகி வருகிறார் தனுஷ். தேசிய விருது பெற்ற சேகர் கம்முலா இப்படத்தை இயக்கவிருக்கிறார். மேலும் இப்படத்தில் ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது .

தனுஷ் 51 படம் தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் உருவாக உள்ளது. பான் இந்திய அளவில் உருவாகவுள்ள இப்படத்தில் பிரபல நடிகர் நாகர்ஜுனா முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறாரார். இந்நிலையில் இப்படம் குறித்த லேட்டஸ்ட் தகவலாக 'D51' படப்பிடிப்பு அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் துவங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. மேலும், 'கேப்டன் மில்லர்' படம் வரும் டிசம்பர் 15 ஆம் தேதி ரிலீசாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# என் பிள்ளைகளை கூட சரியா பார்க்க முடியாது.. அவ்ளோ கஷ்டம்..



ரஜினி ஜெயிலர் படத்தை தொடர்ந்து அடுத்தடுத்து படங்களில் நடித்து வருகின்றார். ஐஸ்வர்யாவின் இயக்கத்தில் லால் சலாம், ஞானவேலின் படம் , லோகேஷ் கனகராஜின் படம் என பிசியாக இருக்கின்றார் ரஜினி . இப்போதே இப்படி என்றால் 80 காலகட்டங்களில் ரஜினி நிற்கக்கூட நேரமில்லாமல் படங்களில் நடித்து வந்தார். அந்த காலகட்டங்களில் தன்னால் குடும்பத்தின் நேரம் செலவிட முடியாமல் போனதை எண்ணி ரஜினி வருந்துவாராம். இதனை அவருடன் லால் சலாம் படத்தில் இணைந்து நடித்த லிவிங்ஸ்டன் கூறியுள்ளார்.ரஜினி இன்றும் தொடர்ந்து படங்களில் பிசியாக நடித்து வருகின்றார். கடந்த பார்த்து ஆண்டுகாலமாக தமிழ் சினிமாவில் முன்னணியில் இருக்கும் ரஜினி அந்த இடத்தை இன்றுவரை தக்கவைத்து வருகின்றார். அதற்கு மிக முக்கிய காரணம் அவரின் கடுமையான உழைப்பு தான்.என்னதான் 72 வயதானாலும் இன்றளவும் இளைஞர்களுக்கு சவால் விடும் வகையில் ரஜினி அடுத்தடுத்து படங்களில் பிசியாக நடித்து வருகின்றார். சமீபத்தில் இவரின் நடிப்பில் வெளியான ஜெயிலர் திரைப்படம் மாஸ் ஹிட்டடித்தது. இதையடுத்து தன்னை விமர்சித்தவர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தார் ரஜினி. கடந்த சில ஆண்டுகளாக ரஜினியின் நடிப்பில் வெளியான படங்கள் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு வெற்றியை பெறவில்லை. எனவே ரஜினியின் படங்கள் இனி ஓடாது என விமர்சித்த சிலருக்கு ஜெயிலர் படத்தின் வெற்றியின் மூலம் ரஜினி பதிலடி கொடுத்தார். இதையடுத்து ஞானவேலின் இயக்கத்தில் தலைவர் 170 படப்பிடிப்பில் தற்போது ரஜினி பிசியாக நடித்து வருகின்றார். இப்படத்தை முடித்துவிட்டு லோகேஷ் கனகராஜின் தலைவர் 171 திரைப்படத்திலும் நடிக்க இருக்கின்றார். இதற்கிடையில் ஐஸ்வர்யாவின் இயக்கத்தில் உருவாகும் லால் சலாம் திரைப்படத்தில் மொய்தீன் பாய் என்ற ரோலில் சிறப்பு தோற்றத்திலும் நடித்துள்ளார் ரஜினி.

இவ்வாறு அடுத்தடுத்து படங்களில் நடித்து வரும் ரஜினியை பற்றி பிரபல நடிகர் லிவிங்ஸ்டன் ஒரு பெட்டியில் பேசியுள்ளார். வீரா, சிவாஜி என ரஜினியுடன் இணைந்து பல படங்களில் நடித்துள்ளார் லிவிங்ஸ்டன் லால் சலாம் படத்திலும் நடித்துள்ளார். அந்த படத்தின் படப்பிடிப்பின் போது லிவிங்ஸ்டனிடம் ரஜினி பல விஷயங்களை மனம்விட்டு பேசியுள்ளார். என்னவென்றால் தற்போது தான் ரஜினி வருடத்திற்கு ஒரு படம் என நடித்து வருகின்றார்.

ஆனால் 80 மற்றும் 90 காலகட்டங்களில் ஒரு வருடத்திற்கு குறைந்தது ரஜினியின் இரண்டு படங்களாவது வெளியாகும். குறிப்பாக 80 காலகட்டங்களில் ரஜினியின் ஐந்து படங்கள் வரை ஒரே வருடத்தில் வெளியானது. தொடர்ந்து படப்பிடிப்பில் கலந்துகொண்டு பிசியாக நடித்து வந்தார் ரஜினி. அந்த காலகட்டங்களில் ரஜினி பொதுவாக அவுட்டோர் ஷூட்டில் தான் இருப்பாராம். வீட்டில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் நேரம் செலவிடவே முடியாதாம்.தொடர்ந்து படப்பிடிப்பு இருந்து வந்ததால் ஒரு நாள் கூட தன் பிள்ளைகளுடனும் மனைவிடையுடனும் ரஜினியால் இருக்க முடியாதாம். மேலும் ரஜினியின் மகள்களான ஐஸ்வர்யா மற்றும் சௌந்தர்யாவை லதா தான் வளர்த்தாராம். என்னதான் பணம் காசு புகழை சம்பாதித்தாலும் இளம் வயதில் பிள்ளைகளுடன் தன்னால் இருக்கமுடியவில்லையே என கூறி வருத்தப்பட்டதாக லிவிங்ஸ்டன் பேசினார்.இவ்வாறு வெளியில் இருப்பவர்கள் முன்னணி நட்சத்திரங்களை பார்த்து அவர்களுக்கு என்ன கார், பங்களா என வசதியா இருக்காங்க என பேசுவாங்க. ஆனா அவங்களுக்கு தான் கஷ்டம் தெரியும். தன் குடும்பத்தை விட்டு பிரிந்து படப்பிடிப்பே கதி என இருப்பது அவ்வளவு கஷ்டமான விஷயமாகும் என பேசினார் லிவிங்ஸ்டன் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹீரோ மடியில் உட்கார மாட்டேன்



ஹீரோ மடியில் உட்கார மாட்டேன் என சுஹாசினி கூறியதை கேட்டு டான்ஸ் மாஸ்டர் அதிர்ச்சி அடைந்தாராம். அந்த காலத்தில் ஹீரோயின் ஒருவர் முடியாது, மாட்டேன் என சொல்வது எல்லாம் அரிது என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் தான் அந்த அதிர்ச்சி.

கமல் ஹாசனின் அண்ணன் மகளான சுஹாசினி ஒரு பிரபலமான நடிகை. அவர் ஹீரோயினாக நடித்த படங்கள் இன்றளவும் பிரபலம். அழகோடு அறிவும், நல்ல நடிப்புத் திறமையும் கொண்டவர் சுஹாசினி.இயக்குநர் மணிரத்னத்தை திருமணம் செய்து கொண்ட அவருக்கு ஒரு மகன் இருக்கிறார். அவரும் தன் பெற்றோரை போன்றே சினிமா துறையில் தான் இருக்கிறார்.சுஹாசினி படங்களில் நடிப்பதுடன் டிவி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகிறார். அவர் சுவராஸ்யமாக பேசுவது பலருக்கும் பிடிக்கும்.இந்நிலையில் தான் ஹீரோயினாக நடித்த காலத்தில் நடந்த சம்பவம் குறித்து பேசியிருக்கிறார் சுஹாசினி. அவர் கூறியிருப்பதாவது,

ஹீரோவின் மடியில் என்னை உட்காரச் சொன்னார்கள். நான் முடியவே முடியாது என கூறிவிட்டேன். இது இந்தியா, நாம் இருப்பது ஒரு பூங்காவில். 1981ல் எந்த பெண்ணும் பூங்காவில் ஒரு ஆணின் மடியில் உட்கார மாட்டார். அதனால் நானும் ஹீரோ மடியில் உட்கார மாட்டேன் என கூறினேன்.

இன்னொரு ஷாட்டில் ஹீரோ சாப்பிட்ட அதே ஐஸ் கிரீமை நானும் சாப்பிட வேண்டும். அவர் சாப்பிட்ட ஐஸ்கிரீமை நான் தொடக் கூட மாட்டேன். எனக்கு வேறு ஐஸ்கிரீம் வேண்டும் என கேட்டேன். நான் சொன்னதை கேட்டு டான்ஸ் மாஸ்டருக்கு ஒரே ஆச்சரியம். முடியாது என்று சொல்லக் கூடாது. அப்படி இருக்கும்போது நான் நோ சொன்னதால் ஆச்சரியம்.ஒரு காட்சியில் நடிக்க ஷோபனா மறுத்திருக்கிறார். இதையடுத்து நீ யார் என்று நினைக்கிறாய், நீ என்ன சுஹாசினியா என இயக்குநர் அவரிடம் கேட்டிருக்கிறார். உடனே அவர் என்னை தொடர்பு கொண்டு, நீ என்ன சுஹாசினியானு இயக்குநர் கேட்டார். என்ன செய்தீர்கள் என கேட்டார் ஷோபனா.நிறைய சுஹாசினிக்கள், ஷோபனாக்கள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் முடியாது என்கிற வார்த்தையை கேட்டு யாரும் ஆச்சரியப்பட மாட்டார்கள்.

ஒரு முறை பாடல் காட்சியை ஷூட் செய்தார்கள். அந்த பாடல் வரிகளை கேட்டதும் நான் காரில் இருந்து வெளியே வர மாட்டேன் என கூறினேன். அந்த காலத்தில் இப்படி முடியாது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் நான் சொன்னேன் என்றார்.பொன்னியின் செல்வன் படம் குறித்து சுஹாசினி பேசியதாவது,

பொன்னியின் செல்வன் படம் வேண்டாம், வேண்டாம் என மணிரத்னத்திடம் கூறி வந்தேன். அந்த படத்தை எடுக்க அவருக்கு நான் தான் தடையாக இருந்தேன். தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் அரசியல் பற்றி நாங்கள் எடுத்த இருவர் படத்திற்கு நடந்ததை பார்த்து நான் அதிருப்தி அடைந்தேன். அந்த படத்திற்கு கிடைத்த வரவேற்பை பார்த்து ரொம்ப அதிருப்தியாக இருந்தது.

நான் தான் படத்திற்கு ரைட்டர். நான் தான் வசனம் எழுதினேன். நம் மக்களுக்கு பாரம்பரியமும், வரலாறும் தேவையில்லை போன்று. பேசாமல் காதல் கதைகளை கொடுத்துவிடுங்கள் என்றேன். இருவருக்கு நடந்தது பொன்னியின் செல்வனுக்கும் நடந்துவிடுமோ என பயந்தேன். ஆனால் நான் நினைத்தது தவறு என்றார்.

# தினமும் இத்தனை கிளாஸ் தண்ணி குடிச்சா போதுமாம்... சருமத்துல எந்த பிரச்சினையும் வராதாம் தெரியுமா?



தினமும் இத்தனை கிளாஸ் தண்ணி குடிச்சா போதுமாம்... சருமத்துல எந்த பிரச்சினையும் வராதாம் தெரியுமா? முகப்பரு, தேமல், பொலிவிழந்த சருமம் என எந்த சரும பிரச்சனையையும் ஏற்பட யாரும் விரும்ப மாட்டார்கள். எந்த பிரச்சினையும் குறைபாடும் இல்லாத சருமத்தை பெறுவது என்பது பெரும்பாலான மக்களின் கனவு. மேலும் நன்கு நீரேற்றமாக இருப்பது இந்த நோக்கத்தின் ஒரு அடிப்படை படியாகும்.

உங்களை நீரேற்றமாக வைத்திருப்பது, உங்கள் சருமத்தை நீரேற்றமாக வைத்திருக்க உதவும். மேலும், அதிகமாக தண்ணீர் குடிப்பதால் உங்கள் சருமத்தை ஈரப்பதமாக வைத்திருப்பதோடு, பொலிவான, பளபளப்பான சருமத்தையும் பெறலாம்.

குறைபாடற்ற சருமத்தை பெற நீங்கள் எத்தனை கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதற்கு அனைவருக்கும் பொருந்தக்கூடிய பதில் இல்லை என்றாலும், ஆரோக்கியமான மற்றும் கதிரியக்க சருமத்தை பராமரிக்க உதவும் வழிகாட்டுதல்கள் உள்ளன. குறைபாடற்ற சருமத்திற்குத் தேவையான நீரின் அளவு நபருக்கு நபர் மாறுபடும்.

வயது, பாலினம், செயல்பாட்டு நிலை மற்றும் காலநிலை போன்ற காரணிகள் அனைத்தும் உங்கள் நீரேற்றம் தேவைகளை பாதிக்கலாம். பெரும்பாலான மக்களுக்கு, ஒரு நாளைக்கு சுமார் 8 முதல் 10 கிளாஸ் தண்ணீர் குடிக்க பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் சிலருக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தேவைப்படலாம். குறைபாடற்ற சருமத்தை பெற ஒருவர் எத்தனை கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று இக்கட்டுரையில் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒரு நாளைக்கு எட்டு கிளாஸ் தண்ணீர் உட்கொள்ளுதலுக்கான பொதுவாக மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டியாகும். இது ஒரு நாளைக்கு தோராயமாக 2 லிட்டர் அல்லது அரை கேலன் தண்ணீருக்கு சமம். இருப்பினும், இது ஒரு பொதுவான பரிந்துரை மற்றும் அனைவருக்கும் உகந்ததாக இருக்காது.

உங்கள் உடலைக் கேளுங்கள் உங்கள் உடல் கூறும் சமிக்ஞைகளுக்கு கவனம் செலுத்துங்கள். தாகம் என்பது நீங்கள் நீரேற்றம் செய்ய வேண்டும் என்பதற்கான தெளிவான அறிகுறிகாட்டியாகும். கூடுதலாக, உங்கள் சிறுநீரின் நிறம் நீரேற்றத்தின் ஒரு நல்ல குறிகாட்டியாக இருக்கலாம். வெளிர் மஞ்சள் சிறுநீர் பொதுவாக நல்ல நீரேற்றத்தைக் குறிக்கிறது. உங்கள் செயல்பாட்டின் அளவைக் கவனியுங்கள் நீங்கள் உடல் ரீதியாக மிகவும் சுறுசுறுப்பாக இருந்தால் அல்லது வெப்பமான காலநிலையில் வாழ்ந்தால், வியர்வையின் மூலம் இழக்கப்படும் கூடுதல் திரவங்களை ஈடுசெய்ய உங்கள் நீர் உட்கொள்ளலை அதிகரிக்க வேண்டியிருக்கும். பொதுவாக கோடை காலங்களில் அதிக நீர் உட்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

சமச்சீர் உணவு முக்கியமானது நினைவில் கொள்ளுங்கள், நீர் நீரேற்றத்தின் ஒரே ஆதாரம் அல்ல. பழங்கள், காய்கறிகள் மற்றும் சில பால் பொருட்களில் அதிக நீர் உள்ளடக்கம் உள்ளது. இது உங்கள் ஒட்டுமொத்த திரவ உட்கொள்ளலுக்கு பங்களிக்கிறது. நீரேற்றம் மற்றும் தோல் ஆரோக்கியம் சரும ஆரோக்கியத்தை பராமரிக்க சரியான நீரேற்றம் அவசியம். இது நச்சுகளை வெளியேற்றவும், சரும செல்களுக்கு ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லவும், சருமத்தின் இயற்கையான நெகிழ்ச்சி மற்றும் நெகிழ்ச்சித்தன்மையை பராமரிக்கவும் உதவுகிறது. முகப்பரு மற்றும் பிரேக் அவுட்கள் மீதான விளைவுகள் நீர் முக்கியமானது என்றாலும், இது ஒரு நேரடி முகப்பரு சிகிச்சை அல்ல. இருப்பினும், நன்கு நீரேற்றமாக இருப்பது உங்கள் சருமத்தின் இயற்கையான செயல்பாடுகளை ஆதரிக்கும். இது பிரேக்அவுட்களின் வாய்ப்பைக் குறைக்கும். அதிகப்படியான நீரேற்றம் கவலைகள் நீரேற்றமாக இருப்பது முக்கியம் என்றாலும், அதிக ஹைட்ரேட் செய்வதும் சாத்தியமாகும். ஒரு குறுகிய காலத்தில் அதிகளவு தண்ணீர் குடிப்பது ஹைபோநெட்ரீமியா எனப்படும் ஒரு நிலைக்கு வழிவகுக்கும். அங்கு உங்கள் உடலில் உள்ள எலக்ட்ரோலைட்டுகளின் சமநிலை சீர்குலைந்துவிடும். இது ஆபத்தானது மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில் உயிருக்கு கூட ஆபத்தானது. தண்ணீரின் தரம் முக்கியமானது முடிந்தவரை சுத்தமான, வடிகட்டிய தண்ணீரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கூடுதல் அசுத்தங்கள் இல்லாமல் சிறந்த தரமான நீரேற்றத்தைப் பெறுவதை இது உறுதி செய்கிறது.

நிலைத்தன்மை முக்கியமானது ஒரே நாளில் நீங்கள் எவ்வளவு தண்ணீர் குடிக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல, காலப்போக்கில் சீரான உட்கொள்ளலைப் பராமரிப்பதும் ஆகும்.

வழக்கமான நீரேற்றம் வழக்கத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொள்ளுங்கள். ஒரு நிபுணரை அணுக வேண்டும் உங்களுக்கு குறிப்பிட்ட உடல்நலக் கவலைகள் அல்லது நிபந்தனைகள் இருந்தால், அல்லது உங்கள் நீரேற்றம் தேவைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியாவிட்டால், சுகாதார நிபுணரை அணுகுவது எப்போதும் சிறந்தது. உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் அவர்கள் தனிப்பயனாக்கப்பட்ட பரிந்துரைகளை வழங்க முடியும்.

# பிரச்சினைகளுக்கு முடிவு தற்கொலையா?



பிறந்த ஒவ்வொரு உயிரினமும் இறப்பது நிச்சயம். ஆனால் தான் சாவு இருக்க வீண் சாவு எதற்கென இந்த தற்கொலை மரணங்கள் நம்மை சிந்திக்க வைக்கின்றன. அண்மையில் இந்தியாவில் நடிகர் விஜய் ஆண்டனியின் மகளின் தற்கொலை செய்தி இன்னும் மனதில் அதிர்வை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. இரவு உறங்க சென்றப்பிள்ளை அதிகாலை வேளையில் உயிரிழந்தப் பிணமாக மீட்பு!

கொஞ்சமும் கற்பனை செய்து பார்க்க முடியாத செயல் மட்டுமல்ல காரணமும் தெரியாமல் தத்தளிக்கும் நிலை.

இன்றைய காலத்தில் எந்தளவு தொழில்நுட்ப வளர்ச்சி வளர்ந்து நிற்கின்றதோ அதேயளவு விபரீதங்களும் மண்டிக்கிடக்கின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏதோ ஒரு மீள முடியாப் பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பதற்கு இந்த தொழில்நுட்ப வளர்ச்சியும் அதிக காரணமாக இருக்கிறது.

தற்கொலைகள் பெருமளவில் வறுமையால் நடப்பதாக ஆரம்ப நாட்களில் புள்ளிவிவரங்கள் கூறினாலும் காலப்போக்கில் தற்கொலைக்கான காரணங்கள் மாறி வருகின்றன. கல்வியில் தோல்வி, காதலில் விரக்தி என ஆரம்பித்து ஆசிரியரின் கண்டிப்பு, வீடியோ கேம் விளையாடத் தடை, வீட்டில், பாடசாலைகளில் கண்டித்தால், நினைத்த காரியம் கைகூடாமை போன்றவற்றிக்கும் தற்கொலைகள் காரணமாகின்றன. அதுவும் குறிப்பாக பதின்ம வயதினர் தற்கொலை செய்து கொள்வதும் அதிகரித்து வருகிறது.

அதிலும் எதுவும் இலகுவாக கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்ற பருவமாக இன்றைய இளம் வயதினர் இருக்கின்றனர். இதனால் பொறுமையின் எல்லைவரை செல்ல பொறுமையும் இல்லை. ஒரு சில தோல்விகள் அவர்களின் வாழ்வின் எல்லையாக நினைக்க அவர்கள் மனதில் எழும் தீர்மானமே காரணம். இவர்களின் மனதில் தற்கொலையே சிறந்த இறுதி முடிவென மாறுகிறது.

வாழ்வதற்கு ஆயிரமாயிரம் வழிகள் இருந்தும் சாவதற்கான வழியை தேடுவது நியாயமா என்பதே இக் கட்டுரையின் ஆய்வாகும்.

முதலில் தற்கொலை செய்ய காரணங்கள் என்ன என்று சிந்தித்துப் பாரத்தால், மற்றவர்களால் பிரச்சினைகளில் சிக்கி மீள முடியாமல் தற்கொலை செய்து கொள்ளல்.

முதலில் மற்றவர்களால் ஏற்படும் பிரச்சினையில் சிக்கித் தவிப்பது ஏன் என்பது பற்றி ஆராய்ந்தால்,

பத்து வருடங்களுக்கு முன்பு கூட இந்த பழக்கம் இருந்தது. அதாவது சிறு பிள்ளைகள் காலில் கார் கொலுசினை மாட்டிவிடுதல். அந்தக் குழந்தை வீடே சுற்றி சுற்றி திரிய வீட்டில் உள்ள உறவுகள் குழந்தை எந்த அறையில் இருக்கிறாள், எந்த பக்கம் செல்கிறாள் என்பதை கொலுசு சத்தத்தை வைத்தே கண்டு பிடித்து விடுவார்கள். இன்று குழந்தைக்கு மூச்சி இருக்கிறதா என்பது கூட தெரியாமல் குழந்தை ஓரிடத்தில் அமைதியாக இருக்கிறது. காரணம் கையில் கைபேசி, அதை கொடுத்தால் தான் உணவே ஊட்ட முடிகிறது. தங்கள் காரியம் நடக்க கைபேசியை கொடுத்து வளர்க்கும் பிள்ளைகள் அதுவே உலகம் என்று நம்பி உலா வருகிறது.

சமூக வலைத்தளங்களில் உலவும் போலி முகமூடி மனிதர்களை நல்லவர்கள் என்கிற எண்ணத்தில் பழகி தங்களையும் அறியாமல் புதை மண்ணுக்குள் விழுந்து விடுகின்றனர். சிறுவர்கள் மட்டுமல்ல அனைத்து வயதினரும் இதற்குள் அடங்குவர். பாரிய பிரச்சினைகளில் விழும் போதே இந்த சமூகத்திற்கு உறவுகளுக்கும் பயந்து தற்கொலையை நாடுகின்றனர்.

மற்றவர்களால் பிரச்சினைகளில் சிக்கித் தற்கொலை செய்து கொள்வதற்கு காரணங்கள் பல இருந்தாலும், முதன்மையான காரணமாக இருப்பது வெளிநபர்களுக்கு உதவுதலே ஆகும். இதுவே பிரதான பிரச்சினை எனலாம். பிணைக்கு துணை போகாதே என்ற பழமொழியொன்று உள்ளது. அது நூறு வீதம் உண்மை எனலாம்.

அடுத்தவர்களுக்கு உதவிடப் போய் சிலர் தாங்களே சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். குறிப்பாக இந்தப் பணம் என்கிற உதவியை செய்யும் போது வாங்குபவர்கள் வாங்கும் வரை அமைதியாகி இருந்து விட்டு அதற்கு பின் வாங்கிய நபர்களை அலைய விடுவார்கள். இப்படி தான் மற்றவர்களால் பிரச்சினைகளை தேடிக் கொள்வார்கள்.

அதிலும் இந்தக் கொடுக்கல் வாங்கல் என்பது தீராத தலைவலி எனலாம்....

என் வீட்டருகில் நடந்த உண்மை சம்பவமொன்று. மூன்று பெண் குழந்தைகளில் தந்தை. தொழில் செய்து தானுண்டு தன் குடும்பம் உண்டென கௌரவமாக குடும்பம் நடத்தி கொண்டிருந்த நபரிடம் நண்பன் ஒருவன் உதவி கேட்கிறார். "மச்சான் எனக்கு வியாபாரம் நட்டம். தெரிந்தவர் ஒருவர் பணம் தருகிறேன் என்கிறார். நீ சொன்னால் தருவதாக கூறினார். ஒரு வார்த்தை நீ என்னைப் பற்றி கூறு. அது போதும் "என்ற போது மறுக்காமல் யோசிக்காமல் பால்ய வயது நண்பன் என்கிற பாசத்தில் பணம் கொடுப்பவரிடம் "என் நல்ல நண்பன்தான் நீங்கள் நம்பி பணம் கொடுக்கலாம்" என்கிற வார்த்தையை விட்டு விட்டு தன் வேலையை தொடர்ந்தார்.

நண்பனும் பணத்தை வாங்கிய பின் வேலை விடயமாக அலைந்து திரிய இருவரும் சந்தித்துக் கொள்ள வில்லை.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...










கொழும்பு டாம் வீதி பொலிசாரும் கொச்சிக்கடை தெற்கு சமூக பொலிஸ் குழுவும் இணைந்து நடத்திய மீலாத் விழாவும் பரிசளிப்பு நிகழ்ச்சியும் டாம் வீதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆரச்சி தலைமையில் சனிக்கிழமை மாலை கொழும்பு 12. ரிபாய் தங்கள், ஒழுங்கையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட சங்கைக்குரிய முஹம்மத் ஆஷிக் தங்களுக்கு பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி நினைவு சின்னம் ஒன்றை வழங்குவதையும் சமூக பொலிஸ் குழு உறுப்பினர் எம்.எஸ். எம்.ஷபீக் அருகில் நிற்பதையும் காணலாம். படங்கள். எஸ்.ராமதாஸ்

# பொன் விழா நாயகனுக்கு தமிழகத்தில் இருந்து ஒரு கவி வாழ்த்து!

மொழிக்கொரு
வாழ்த்தெழுத
மொழி கிடைக்காது
தவித்தேன்!
வழி தெரியாது
விழி பிதுங்கி
நின்றேன்!
ஒளி ஒன்று
கண்ணில் தெரிந்தது
ஒளிக்காது அதனை
உற்று நோக்கினேன்!
தமிழ் வாணன்
தந்த
தம்பி
இவன் என்றது!
வாணன் என்றால்
செழிப்பானவன்
என்றது!
கதை, கட்டுரை
தருவதில்
செழிப்பானவன்!
காணொளி நிகழ்ச்சி
தருவதில்
செழிப்பானவன்!
காலை வணக்கம்
தருவதில்
செழிப்பானவன்!
காசை ஓசையின்றி
விடுவதிலும்
செழிப்பானவன்!
ஆசை விடாது
அழகு தமிழை
எழுதி எழுதி
பேசவிட்டு
ரசிப்பதிலும்
செழிப்பானவன்!
பொன்விழா
காணுகின்ற
மென் மனச்
செம்மலே!
என்மனம் உன்னை
வாழ்த்துவதில்
எல்லையில்லா
மணம் பெறுகிறது!
ஐம்பதாண்டுகள்
பைந்தமிழை
அழகுபடுத்திய
வாணனே!
உன்போல் ஒருவனை
இனிநான் காணேனே!

மந்திரதேவர்
ஸ்ரீ முருகன்
இலங்கை, இந்திய
சிரேஷ்ட பத்திரிகை
யாளர்











சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தையும் மற்றும் விலங்குகள் தினம், ஆசிரியர் தினம், வாசிப்பு மாதம் என விஷேட தினங்களை முன்னிட்டு முகத்துவாரம் "Miracle kids' pre school" ஆசிரியர் மாணவர்களின் நிகழ்வு அண் மையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிள்ளைகளை ஆசிரியர்களும் ஆசிரியர்களை பிள்ளைகளும் பெற்றொர்களும் இணைந்து கௌரவித்ததுடன் பல விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## நிறம் தீட்டுங்கள்



## கூட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்




## 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## விடுகதைகள் ?

இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்? **தேள்**

பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன? **தலைமுடி**

உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்?
அவன் யார்? **வெங்காயம்**

கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான்.
அவன் யார்? **கரும்பு**

மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல
அது என்ன? **விழுது**

இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது
அது என்ன? **பட்டாசு**



# யதார்த்தத்தினால் உலகை வென்ற புரட்சிநாயகன் "சேகுவேரா"

புரட்சிநாயகன் என்று பலராலும் அழைக்கப்பட்ட ஒருவர்,

கொரில்லா போராளி என்பதை அதிகம் விரும்புகிறேன் என்றார் சேகுவேரா. ஆம் சேகுவேராவை பற்றித் தான் பார்க்கப் போகிறோம்.

"சே" என்று பெயர் வரக்காரணம்."சே" என்பது வியப்பு சொல்லாகும்.

இச் சொல்லை அர்ஜடீனர்கள், குவேரனி இந்தியர்களிடமிருந்து பழகினர் என கருதப்படுகிறது.

அவரது உண்மையான பெயர் "எர்னெஸ்டோ குவேரா".

இச்சொல்லின் மீதுள்ள பற்றால் கியூபா புரட்சியாளர்கள்,

"சே" என்று செல்லமாக அழைத்தனர். அவரது பெற்றோர் 'டேட்டி' என்று செல்லமாக அழைத்தார்கள்.

எல்லோராலும் நேசிக்கப்பட்ட சே வலிமையான முகம், சுருண்ட களைந்த தாடி, உறுதியான தோற்றம், குழந்தைத்தனமான புன்னகை, பச்சை நிறத்திலான காற்சட்டை, காலணிகள், கறுப்புத் தொப்பியும் அதில் சிவப்பு நட்சத்திரமும் என அவருடைய அடையாளங்களும், ஆளுமை மூலம் மக்களிடம் பிரபலமானவர் தான் சே அவருடைய செயல் எம்மை ஈர்க்கும்.

மக்களின் மனதுக்குள்ளும் எழுதும் எனக்குள்ளும் கலக்கப்பட்ட திரவமாகவும் சக்தி வாய்ந்த பாணமாகவும் உட்புகுத்தப்பட்டது.

1928 ஜுன் 14 ஆம் நாள் அர்ஜென்டினா ரோசரியோ நகரில் நடுத்தர வசதியான குடும்பத்தைச் சேர்ந்த எர்னெஸ்டோ குவேரா லின்சுக்கும் சிலியா டி லா செர்னாவுக்கும் என்பவருக்கும் முதற் குழந்தையாய் பிறந்தார். மண்ணுக்கும் விண்ணுக்கும் அறிமுகமாகி மெல்ல மெல்ல நடக்கத் தொடங்குகிறார். தோற்றமடைய தொடங்கும் போதே முடங்கி விட்டார் இரண்டு வயதில் ஆஸ்துமா அவரை சுருக்கிக் கொண்டது.

தொடக்க பள்ளியில் கல்வி கற்க முடியவில்லை.

இதனால் அவரது தாயே அவருக்கு ஆசிரியராக மாறினார் வெறும் கல்வி மட்டும் போதாது என இலக்கியங்கள் தொழிநுட்பம் கற்றுக்கொடுத்தார்.

இவரது தாய் இடதுசாரி தத்துவங்களை தந்தை புத்தக காதலர் குடும்பத்தினராக இருந்தார்கள். இவரதுவீட்டில் 3,000 நூல்களுக்கு மேல் இருந்தன. மிக இளம் வயதிலேயே அரசியல் தொடர்பான பரந்த நோக்கு இவருக்குக் கிடைத்தது. இவரது தந்தை, சோசலிசத்தினதும், ஜுவான் பெரோனினதும் ஆதரவாளராக இருந்தார். இதனால், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட குடியரசு வாதிகள் இவர் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. இது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது.

பொறியியல் படிக்க வேண்டும் என்று இருந்த இவர் மருத்துவத்தின் பக்கம் சென்றார்,(19461953) ஆம் ஆண்டு ப்யூனஸ் அயர்ஸில் தேசியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றார்.

மருத்துவம் படித்துக்கொண்டே கிளினிக்கில் வேலை செய்து கொண்டிருந்தபோது தங்களது உறவினரின் திருமணத்துக்கு குடும்பத்தினருடன் 'கொரடோபா'வுக்கு சென்றார். அங்கு தான் முதன் முதலில், சிசினாவைப் பார்த்தார் சே . அழகிய மங்கையாகிய சிசினாவும், அழகான உருவமும், வெகுளியான பேச்சில் இதயங்களும் இடம் மாறியதில் ஐயமொன்றும் இல்லையே!

'சே தோற்றத்தைப் பார்த்தவர்கள் அவரை யாராவது காதலிக்க முடியுமா?' என்று தான் யோசிப்பார்கள். ஏனென்றால், சே தான் அணியும் ஆடை பற்றியும், சிறிதளவும் கவலை இல்லை. பலருக்கு இவரின் புறத்தோற்றம் இதனாலேயே பிடிக்காமல் போனது.

ஆனால், அவரின் அகத் தோற்றம் கள்ளமில்லா மனமும் கம்பீரமானவருமாவார். காதலால் சுதந்திரம் பறிபோவதை எண்ணி வாழ்க்கையிலும் சலிப்பு ஏற்பட்டு மருத்துவம் படிப்பு பரீட்சை தொடர்ச்சியான நடைமுறைகளால் சோர்வடைந்தார்.

பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்ற ஒரு மருத்துவ மாணவர். ஒவ்வாமை குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டார்.

நண்பர்களிடம் அதிகம் பேசியது அமெரிக்க ஏகாதிபத்தியம் குறித்தும் லத்தீன் அமெரிக்கா நாடுகளின் அவல நிலை பற்றியும் பேசினார்.

1953 ஜுலையில் பொலீவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டூரோஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

அதே ஆண்டு டிசம்பரில் சேகுவேரா கவுதமாலாவுக்குச் சென்றார். அங்கே மக்களாட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய குடியரசுத் தலைவர் ஜாக்கோபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவர் நிலச் சீர்திருத்தங்களின் மூலமும் பிற நடவடிக்கைகளாலும் பெருந்தோட்ட (latifundia) முறையை ஒழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்.









உண்மையான புரட்சியாளனாக ஆவதற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சேகுவேரா, கவுத்தமாலாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார்.

கவுத்தமாலா நகரில் பிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களும், கியூபாவைவிட்டு வெளியேறி வாழ்ந்துவந்தவர்களுமான தொடர்புகளும் சேகுவேராவுக்குக் கிடைத்தன. இக் காலத்திலேயே "சே" என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. "சே" என்பது நண்பர் அல்லது தோழர் என்னும் பொருள் கொண்ட ஆர்ஜெண்டினச் சொல்லாகும்.



1955 ஆம் ஆண்டு மெக்சிகோ செல்ல கிடைத்த அனுமதியில் கியூபா நண்பரின் மூலம் ராவுல் காஸ்ட்ரோவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சிலநாட்களில் பிடல் கஸ்ட்ரோவையும் சந்தித்தார்.பிடலை தலைவராக எடுத்து கொண்ட சே கியூபாவை ஆட்சி செய்து வந்த சர்வாதிகார அரசை கவிழ்க்க போராடி வந்த புரட்சி படையில் இணைந்து செயல்பட்டார்.

1956 இல் சேகுவேரா, காஸ்ட்ரோ சகோதரர்கள் உட்பட 82 புரட்சி படையினர் கியூபாவை அடைந்த போது தாக்குதலுக்கு ஆளாகினர்.

இதில், சேகுவேரா, காஸ்ட்ரோ சகோதரர்கள் மற்றும் சிலர் மட்டுமே உயிர் பிழைத்தனர்1958 ஆம் ஆண்டு, சேகுவேரா, காஸ்ட்ரோ சகோதரர்கள், கியூபாவில் நடந்து வந்த சர்வாதிகார ஆட்சியை கவிழ்த்தனர்.1959 இல் அர்ஜெண்டினாவில் பிறந்த சே, கியூபாவின் குடியுரிமை பெற்றார்.கியூபாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதன் பின்னர், சியூபாவின் மத்திய வங்கித் தலைவராக 14 ஆண்டுகள் பணியாற்றினார்.

1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி இளைஞர் விவகாரத்தையும், விவசாயத்துறையையும் கையிலெடுத்து சேவையாற்றினார்.

1960 இல் கியூபாவில் நடந்த புரட்சி மார்க்ஸிஸ்ட் புரட்சி என முழக்கமிட்டார் சே...கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் .

1963 தொடக்கம் 1964 வரையில் ஐ நா. சபையில் சோஷியலிச புரட்சி பற்றி உணர்ச்சிகரமாக உரையாற்றினார் சே.அந்தக் காலகட்டத்தில், கரந்தடிப் போர்முறை பற்றிய பல கட்டுரைகளையும் புத்தங்களையும் எழுதினார். 1964 டிசம்பர் 11ம் தேதி, கியூபாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் அவையின் 19வது பொது அமர்வில் உரையாற்றினார். விடுதலையின் குரலாகவும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் செயல்பட்டுவந்தார் சேகுவேரா.

1965 இல் கியூபா அரசில் தான் வகித்து வந்த பதவிகளை ராஜினாமா செய்தார்.ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்படும் நாடுகளில்

புரட்சி தேவைப்படும் நாடுகளில் அதை கொண்டு வருவதே தனது இலக்கு என கூறினார்.மீண்டும் பறக்க அவரது சிறகுகள் துடித்தது பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்து விடைபெற்று கியூபாவை விட்டு வெளியேறினார் சே.

ஆப்பிரிக்க நாடான காங்கோவில் நீடித்த சர்வாதிகார ஆட்சிக்காக மக்கள் போராடிய போதுகம்யூனிஸ்ட் புரட்சியை கொண்டு வர பாடுபட்டார் .

சே பொலிவியவில் இருப்பதை கண்டறிந்த அமெரிக்க பொலிவியவில் கொரில்லா யுத்தம் வெற்றி பெற்றால் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று அமெரிக்காவின் பேச்சுக்கு ஆடியது.

1967 அக்டோபர் 8 ஆம் திகதி யூரோ கணவாய் அருகில்வைத்து இவர் கைதானார். அக்டோபர் 9 ஆம் திகதி 9 முறை சுடப்பட்டு சேகுவேரா கொல்லப்பட்டார்.அக்டோபர் 18 ஆம் திகதி கியூபா கொடிகள் அரைக்கம்பத்தில் விடப்பட்டு பிடல் காஸ்ட்ரோ உட்பட ஒட்டு மொத்த கியூபா மக்களும் சோகத்தில் மூழ்கி போனார்கள்.

சேகுவாரா என்றால் சுதந்திரம். சேகுவாரா என்றால் நசுக்கப்பட்ட மனிதர்களின் இதயம். அந்த இயத்தைச் சுட்டுக்கொன்றது, அமெரிக்கா தலைமையிலான பொலிவிய நாட்டு இராணுவம். அவரது மரணத்தின் தடயங்களையும் அவர் உடலையும் புதைத்து மறைத்தாலும், சேகுவாரா மக்களின் மனதில் இன்னும் எழுந்து கொண்டே இருக்கிறார்.

"சே யின் வாசகங்கள் சில"

★ விதைத்து கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம்.

★ ஒவ்வொரு அநீதியைக் கண்டும் ஆத்திரத்தால் அதிர்ந்து போவாயானால் நீயும் எனது தோழனே!

—மபாஸ்—

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# புதுநானூறு 07

புதுக்காலத்தின் கவிதைப் பிரதிநிதியாக ஈழத்துக் கவிதையில் நிலை கொண்டவர் சு.வி என சுருக்கமாக அழைக்கப்பட்ட 'உயிர்த்தெழும் காலத்தின்' கவிஞர் சு.வில்வரெத்தினம். எண்பதுகளின் முக்கிய ஆளுமையாக அடையாளப்பட்டவர்.

யாழ் புங்குடுதீவில் 1950இல் பிறந்த சு.வி 1970 களில் எழுதத்தொடங்கி எண்பதுகளில் கவியாகி நின்றவர்.

உணர்வு ததும்பும் சொற்காரன் சு.வி, மொழியை புதிய தளத்தில் கையாண்டு ஓசையுணர்வளித்து தன் கவிதையின் பொருளை அகலித்தவர்.

மு.தளையசிங்கத்தின் பட்டறையில் பயின்றெமுந்த கவிஞர் சு.வில்வரெத்தினம் தன் தமிழை தன் மண்ணில் குழைத்தெடுத்து வனைந்தெடுத்த கவிதைகள் வரலாறு நெடுகிலும் பேசப்படுவன.

அகங்களும் முகங்களும்(1985)
காலத்துயர்(1995)
காற்று வழிக் கிராமம்(1995)
நெற்றிமண்(2000)

வாசிகம்(2006) என பிரதிகளில் கவிதையாகி நின்றவர். தமிழ்த் தேசியத்தின் விடுதலை விரும்பியாக எழுந்த சு.வியின் கவிதைகளின் பாடுபொருள் மண் நிறமாகவே அமைந்தது.

அவரது மொழிக்கோர்ப்பு வாசகரைக் கவர்ந்திழுக்கும் காந்தப் புலமாய் அமைந்தது.

கவிதை உணர்வு சார்ந்தது என்பதனை சு வில்வரெத்தினத்தின் அசைவியக்கம் கட்டியம் கூறி நிற்கும். தேசிய உணர்வெழுச்சி மிக்க சு.வி. வடக்குத் தாயக முஸ்லிம்கள் தொடர்பில் தொண்ணூறுகளின் வெளியேற்றப் பின்புலத்தில் தனது கவிதைகளைக் கூர்ப்பாக்கியவர். 'நெற்றிமண் 'கவிதை இதற்கான வரலாற்றுச் சாட்சியம்.

உரையாடலாய் விரியும் கவிதையில் கனக்கும் பிரிவுத்துயர் தமிழ், முஸ்லிம் உறவின் இழை.

உணர்வு மொழியில் முற்றுருவச் சித்திரமாகி நெற்றி மண் நெஞ்சக்கூட்டைத் தொடுகிறது அல்லது விறாண்டுகிறது.

நட்பன் தந்தையை அறிமுகம்
செய்த பின்னர்
யதேச்சையாய்த்தான் கேட்டேன்
அந்த நெற்றி வடு பற்றி
நெற்றியை வருடியவாறே
கண்களில் ஒளியூறப் பெரியவர்
"இது தொழுகை வடு"என்றார்
"அடடா"
நொந்து கொண்டேன்
என் அறியாமைக்காக
"அல்லாஹ்வைக் கூவியழைத்து
தான் பிறந்த மண்ணில் தலை பணித்து
தொழுததால் தங்கிக் கொண்டதுதானே
அந்த அழகிய வடு
எப்படி முடிந்தது என்னால்
தொழுகை வடுப்பூத்த நெற்றிப் பொட்டில்
சுத்தியலால் ஓங்கி அடித்தது போல்
அவர்களை பிறந்த மண்ணினின்றும் துரத்தி
என்னை நானே காயப்படுத்திக் கொள்ள
என் மனசுள் புடைத்து நிற்கும்



குற்ற வடுவைத் துளைக்கின்ற
நெற்றிக் கண்ணாக மாறியது
அவர்களின் தொழுகை வடு
விமுப்புண்களையும்
விசாரிக்கின்றனவாய்த் துளைத்து
எப்போது நீங்கும் என் வடு?
அவர்களின் நெற்றிக்கு மிகவும் நெருக்கமான
தொழுகை வடுவாய் நிலைத்த
மண்ணின் அழகை
சிதைத்த பழியினின்றும் நீங்குவது எப்போது?
அவர்களும் தமது இல்லிடம் மீண்டு
'அல்லா'வெனக்கூவி
தொழுகை வடுவை தம் மண்ணில்
புதுப்பித்து வருடுகையில்
விழி உடைத்துப் பாயுமே
பல்லாண்டுகளாய் தேங்கிக் கிடந்த
நீருவி
அதில் முழுகித் திளைக்கும்
அந்தப் பொழுதில் தான்
கழுவப்படும் எனது காலக்கறை
முழுமை பெறும் என் விடுதலை
நண்ப, யாசித்திருக்கிறேன்
அல்லாவிடம் அவ்வினிய நல்கூர் வேளைக்காக...

கவி மனம் வில்வரெத்தினம், வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்னரான நண்பர் மற்றும் அவரதுதந்தையைக் கண்டு உரையாடிய கணத்தில் தோன்றிய உள்ளுணர்வை, கவலையை, சமூகத் துயரை, தன் இயலாமையை, நம்பிக்கையை, வாழ்தலின் எண்ணத்தை, பிரார்த்தனையை இவ்வாறு தன் கவிதை மொழி கொண்டு நிரப்புகிறார்.

இந்தக்கவிதை தமிழ்முஸ்லிம் வரலாற்று ஆவணமுமாகி நிற்கிறது.

எனது' இருத்தலுக்கான அழைப்பு 'முதல் கவிதைத் தொகுதிக்கு கவிஞர் சு.வில்வரெத்தினம் 'வட புலத்து யாழின் கூட்டு நரம்புகளை மீட்டும் குரல்' எனத் தலைப்பிட்டு எழுதிய ஆழமான அணிந்துரையும் ஒரு இலக்கிய ஆவணம்தான்.

பெருமதிப்புமிகு சு.வியின் கவி எழுத்தின் அத்தாட்சியாக 'உயிர்த்தெழும் காலத்திற்காக' முழுத்தொகுதி (2011) காலமெல்லாம் உயிர்த்து நிற்கிறது.

'கவிஞர் அமரர் சு.வில்வரெத்தினத்துக்கும்
நெற்றி மண் கவிதை நினைவுகளுக்கும் 'என எனது 'மண் நிறத்தவன்' கவிதைத்திரட்டைச் சமர்ப்பித்தேன்.

**மறுசொல்**

**முல்லை முஸ்ரிபா**

# நிலப் பசி

கிழிந்து ரத்தம் தோயக் கிடந்தது பெரும் பேயின் வயிறு;

வயிற்றுக்குள் நுண் கமெரா வைத் திணித்து ஆய்வொன்றைத் தொடங்கினான் கி.பி. இருபத்திரெண்டாம் நூற்றாண்டின் நில ஆய்வாளன் பூங்கணியன்.

பூங்கணியன் 'யாதுமூரே யாவரும் கேளிர்'எனக் கொண்டாடிய கி.பி.மூன்றாம் நூற்றாண்டுப் பாடலின் முப்பத்தாறாவது வழித் தோன்றல்.

நில வரைபடத்தில் ரத்தக்கறையுறைந்த காட்சிகள், கண்ணீர் பெருக்கெடுக்குமிடங்கள், பல மிழந்து திக்கலையும் கால்கள், அதிகாரச் சப்பாத்தடிகள், முள்வேலிகளென விரிக்க விரிக்க வியப்பிலாழ்த்தும் குரல்களைக் காணுகிறான்.

பூங்கணியன் நிலச்சுவாந்த காலத்திற்குரிய உக்கிக்கிடந்த கிழிந்த வரைபடங்களை வயிற்றிலிருந்து புரட்டுகிறான்;

எல்லையழிந்த வரைபடமது. நீண்ட நிலத்தைத் தன் வயிற்றுக்கு சேமித்த சுவாந்தர் கூட்டம் அவனது கனவுக்குள் உலாவுகிறது.

நிலப்பிரபு வழி காலத்திலிருந்து முதலாளியும் ஊன்றிய சுவடுகள் சில வரைபடங்களில் அதிகார நாற்றமடித்தது.

அதன் பயங்கரக்கரம் கீறிய சிவப்புக்கோடுகள் முகவரியற்ற காலடிகளுக்கு, துயர்ப்பட்ட வறிய காலடிகளைப் பறித்துப் பரிமாறிய வரலாற்றுக் குறிப்புகளும் கிடந்தன.

கணியன் நிலவாய்வில் ஈடுபடத்தொடங்கியதிலிருந்து மனங் குழம்பிப் போனான். இவனது ஆய்வு முடிவுகளை அறிவிக்க வேண்டிய காலம் அகாலமாகிக் கொண்டிருந்தது.

இயற்கையெனும் பூதத்தின் மீது மனிதன் நிகழ்த்திய இடைவினையால் நிலமழிந்து போன பழைய பனையோலை வரலாற்றுக் குறிப்புகள் பல அவன் கண்களில் இறங்கியது. 'கடல் கொள் தேசம்' என எழுதியிருந்தது.

நிலஞ்சுருங்க மனிசர் பெருத்த காட்சிகள் கடந்த நூற்றாண்டின் செய்திகளில் கிடந்தன. நிலப்பசியொன்று பெரும் பசியாய் தோன்றி மனிதனை, வீட்டை, காணியை, எல்லையை, தெருவை, கிராமத்தை, நகரத்தை, நாட்டை, தேசத்தை, கண்டத்தையெனக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் வளர்ந்திருந்த பேய்ப்பசி பற்றியும் அதற்குத் தீனியின்றி அது நோயாக முற்றி மருந்துமின்றிப் போனதையும் அவன் தன் குறிப்பில் எழுதி வைத்துக் கொண்டான்.

பூங்கணியன் கண்ட கனவுக் காட்சிகள் பலவும் சுவாரசியமானவையென அவனது பேரனின் பேரனொருத்தன் கண்ட கனவில் கண்டிருந்தான்.

பூங்குன்றன் எழுதி வைத்த ஆய்வேட்டில் அறுநூற்றாறாவது பக்கத்தில் அறுபத்தாறு வரிகளில் ஒரு குறுங்குறிப்பிருந்தது.

அதன் சாரம்சம் நிலப்பசி கொண்டலைந்த முந்தைய நூற்றாண்டு மனிதனின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப் பட்டிருந்தன . ஒரு துண்டு மண்ணுமொட்டாத உக்கல்களவை.

நிலப்பசி' என்ற சொல்லை மூன்றாம் பூங்கணியன் ஏற்பனில்லை; நிலமென்பது உயிர்வாழ இறைவன் தந்த சிறுகொடை; அது எல்லோருக்கு மானது.ஒருவனிடமிருந்து ஒருவனால் கொள்ளப்பட முடியாது' என பேரவையில் பேசினான்.

அவன் இரண்டாம் பூங்கணியன் எழுதிய கவிதையொன்றை ஆதாரம் காட்டினான்.

'எனது நிலம்
எனது மொழி
எனது உயிர்
எனக்கானது
என்னிடமிருந்து
சிறு துண்டையேனும்
பறித்தாயெனில்
எனது உயிரால்
எனது மொழியை
எனது நிலத்திலெழுதுவேன்
அழியாக்கவிதையாக'
நிலமென்பது பசியல்ல அது வாழ்வு

**பொன்மீரா**

# வடக்கு முஸ்லிம் எழுத்து: ஆய்வும் ஆவணவாக்கலும்

வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றவாழ்வு முப்பத்து மூன்று வருடங்கள் கடந்து நிற்கிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது பூரணமற்ற மீள்குடியேற்றம் பத்தாண்டுகளைத் தாண்டி விட்டது.

இவர்களது வாழ்வியக்கத்தின் சமூக, பொருளாதார, கலாசார,அரசியல் , பண்பாட்டு அசைவியக்கம் பெரும் செல்வாக்கைச்.செலுத்தி நிற்கிறது.

வடக்கு முஸ்லிம்கள் குறித்த கலை, இலக்கியம், வரலாறு, எழுத்து இயக்கமும் பூரணமற்ற தொடர்ந்தேர்ச்சியற்ற ஒரு தேக்க நிலையிலேயே நின்று வருகிறது. இந்தச்சூழல் இவர்களது வாழ்வியல் குறித்த ஆரோக்கியத்துக்குச் சவாலானதுதான்.

குறிப்பாக மூன்றுதசாப்த இலக்கிய முயல்தல்கள் எந்தளவு காத்திரமாக மேலெழுந்தன என்பதும், அவற்றின் பேசப்படுநிலை எந்தளவு கண்டுகொள்ளப்பட்டது அல்லது இருட்டிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டதென்பதும் எழுவினாக்கள்.

எவ்வாறாயினும் மூன்று தசாப்த வாழ்வியக்கத்தின் சான்றாதாரமாக இலக்கியங்கள் கருதப்படும் சூழலில் அவை வடக்கு முஸ்லிம் குறித்து எல்லாபரப்புகளையும் உட்படுத்தி எந்தளவு இயக்கம் கொண்டது என்பதும் எழுவினாவே.

கவிதைகளாகச் சில பிரதிகள்;கதைகளாக மிகச் சில, நாவல்களாக மிகமிகச் சிலவென வந்துள்ளன. கட்டுரைகள், ஆய்வுகள், வரலாற்றெழுத்துக்கள் வெளிவந்தன.பேராசிரியர் மர்கூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்வின் ஆய்வு கனதியானது.

இவை தவிர்த்து எழுதப்படாத ஒளி பாய்ச்சப்படாத ஒளியில் படரா இருள் அதிகம்தான்.

மறுபுறம் வாழ்வு இடறிய இந்த மக்கள் புலத்தின் கலை, இலக்கியம், வரலாறு, பாரம்பரியம், மொழி, ஆய்வு மற்றுமுண்டானவை ஆவணப்படுத்தப்படுதலுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதும் பெரும் எழு வினாவே.

ஒரு சமூகத்தின் வரலாறே அதனை இருளிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் பாதை.

வடக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்தப்புலம் கவனக்குவிவை வேண்டி நிற்கிறது.

## போதும் எனக்கு

எனது தேசத்து
மண்ணில் சாவதே
எனக்குப் போதும்
அதற்குள்
புதைக்கப்படுவது
எனக்குப் போதும்
உருகி
அந்த மண்ணுடன் கலந்து
மறைந்து போவது
எனக்குப் போதும்
பின்
ஒரு பூவாக மலர்ந்து
என் நாட்டின்
குழந்தை ஒன்றினால்
விளையாடப்படுவது
எனக்குப் போதும்
என் நாட்டின்
அணைப்பில் இருப்பது
எனக்குப் போதும்
எனது.தேசத்தின்
புனித முற்றத்தில்
ஒரு.கைப்பிடியளவு
புழுதியாய்
ஒரு புல்லின் இதழாய்
ஒரு பூவாய் இருப்பது
எனக்குப் போதும்
ஃபத்வா துக்கான்

**தமிழில்: எம்.ஏ. நுஃமான்**
**நன்றி: பலஸ்தீனக் கவிதைகள்**
**30 கவிஞர்களின் 108 கவிதைகள்**

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்–28

எம்.ஜி.ஆர். மணமக்களை பார்த்து ஆசீர்வாதம் செய்து அவர்களுக்கு பரிசுப் பொருட்களை கொடுத்து விட்டு ஏ.வி. ரமணன் மெல்லிசை பாட்டுக் கச்சேரி நடக்கும் மேடைக்கு அருகில் போய் அமர்ந்து விட்டார்.

இதைப் பார்த்துக் கொண்டு பலவித மான பாட்டுக்களை பாடிக் கொண்டிருந்த ரமணன் மேடையை விட்டு இறங்கி வந்து கலைத்துறை அரசர் எம்.ஜி.ஆரின் காலைத் தொட்டு வணங்கிவிட்டு எதுவும் பேசாமல் மேடைக்கு சென்று பாடத் தொடங்கி விட்டார். இடைவெளியே இல்லாமல் அடுத்தடுத்து தொடர்ந்து பாடிக் கொண்டிருந்ததை ரசித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்கு நேரம் போனதே தெரியவில்லை.

இதை கவனித்த பாடகர் ரமணன் பாடுவதை நிறுத்தினார். உடனே எம்.ஜி.ஆர் தனது கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தார் அப்போது 8.45 ஆகவிருந்தது. ஆச்சரியத்துடன் எம்.ஜி.ஆர் பின்னாடி திரும்பி பார்த்தபோது எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

மண்டபம் நிறைந்து இருந்தது. இந்த திருமணவிழாவிற்கு வந்திருந்த எல்லோரும் முன் வரிசையில் எம்.ஜி.ஆர். அமர்ந்து ரமணனின் பாட்டுக் கச்சேரியை கேட்டு ரசித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்தார்கள். சாப்பாட்டிற்கு மண்டபத்திற்கு செல்லாமலும் வீட்டுக்கு செல்லாமலும் வந்தவர்கள் எல்லோரும் அமர்ந்து விட்டார்கள். பிறகு எம்.ஜி.ஆர் பாட்டுக்களை பாடிய ரமணனையும் இசைவாத்தியக்காரர்களையும் பாராட்டி பேசிவிட்டு, பாடகர் ரமணன் அவர்களுக்கு தனது கையிலே கட்டியிருந்த விலையுயர்ந்த கைக்கடிகாரத்தை கழற்றி ரமணன் கையிலே எம்.ஜி.ஆரே அணிவித்து வாழ்த்திச் சென்றார்.

எம்.ஜி.ஆருக்கும் நடிகர் சத்தியராஜ் அவர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி பார்ப்போம். நடிகர் சத்தியராஜ் எம்.ஜி.ஆருடைய தீவிர ரசிகராக ஆரம்ப காலத்திலிருந்தே இருந்தவர். சத்தியராஜ் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். சத்தியராஜ் எம்.ஜி.ஆரை நேரில் பார்த்து பேசுவதற்கு பலவருடங்களாக முயற்சி செய்தும் கைகூடவில்லை



முயற்சியைக் கைவிடவில்லை. சத்தியராஜ் எம்.ஜி.ஆர் நடித்த படங்களை பார்க்கத் தவறமாட்டார். எம்.ஜி.ஆர் படம் வெளியாகும் முதல் நாளே பார்த்து விடுவார். சத்தியராஜ் சென்னைக்கு வந்து சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைத்தும் எம்.ஜி.ஆரை நேரில் சந்தித்து பேச வாய்ப்பு கிடைக்கவில்லை.

எம்.ஜி.ஆரும் முதலமைச்சர் ஆகிவிட்டார். இருந்தும் சத்தியராஜ் நேரில் சந்தித்து பேசும் முயற்சியைக் கைவிடவில்லை. சத்தியராஜ் தனது நண்பர்களிடம் எம்.ஜி.ஆரை நேரில் சந்திப்பதற்கான வழிகளைக் கேட்டு கொண்டே இருந்தார். பலவருடங்களாக முயற்சி செய்து கொண்டிருந்த சத்தியராஜூக்கு ஒரு வழி கிடைத்தது.

அதாவது சத்தியராஜின் தங்கைகளுக்கு திருமண ஏற்பாடு செய்து திருமண அழைப்பிதழ் அடித்து அதனை எடுத்துக் கொண்டு சத்தியராஜ் தனது மனைவியுடன் சென்னைக்கு வந்தார். இது 1987 மே மாதக் கடைசியிலாகும். சத்தியராஜ் தனது தங்கைகளின் திருமண அழைப்பிதழை தனது மனைவியுடன் ராமாபுரம் எம்.ஜி.ஆர் தோட்டத்திற்கு சென்று கொடுத்து எம்.ஜி.ஆரிடம் பேசி வணங்கி வாழ்த்தும் பெற்று வரவேண்டும் என்ற எண்ணத்தில்தான் சென்னைக்கு வந்தார்.

இந்த முயற்சியாவது எம்.ஜி.ஆரை நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணம்தான் சத்தியராஜூக்கு. காலை 9 மணிக்கு ராமாபுரம் எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்கு சத்தியராஜ் தனது மனைவியுடன் தங்கைகளின் திருமண அழைப்பிதழ்களையும் எடுத்துக் கொண்டு சென்றார். எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்கு போக தடை ஏதுமில்லை. ஆனால் வீட்டு வராண்டாவில் அரசாங்க அதிகாரி ஒருவரும் பொலிஸ் ஒருவரும் இருப்பார்கள்.

சத்தியராஜ் மனைவியுடன் வந்திருப்பதை எம்.ஜி.ஆருக்கு தகவல் கொடுப்பட்டது. பிறகு எம்.ஜி.ஆர் ஜானகி அம்மாளுடன் 15 நிமிடங்களில் கீழே வந்துவிட்டார். எம்.ஜி.ஆரையும் ஜானகி அம்மாளையும் பார்த்த சத்தியராஜூம் மனைவியும் தாம் யாரைப் பார்க்கிறோம் என்ற திகைப்பில் பிரமித்து நின்றார்கள்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் ஜானகி அம்மாளும் அவர்களைப் பார்த்து சிரித்த முகத்துடன் அமரச் சொன்னார்கள். சத்தியராஜூக்கு சற்று நேரம் ஆனந்தத்தில் பேச்சு வரவில்லை.

ஆனந்த கண்ணீர்தான் வந்தது. பிறகு சத்தியராஜ் தனது தங்கைகளின் திருமண அழைப்பிதழை எம்.ஜி.ஆரிடம் கொடுத்தார். எம்.ஜி.ஆர். அதனை வாங்கி உடனே படித்தார். எந்த பிரமுகர் பெயரும் இல்லை. எளிமையான திருமண அழைப்பிதழ் போல் இருந்ததை சற்று நேரம் எம்.ஜி.ஆர் எதையோ யோசித்துக் கொண்டிருந்தார்.

சத்தியராஜ் ஒரு பெரிய நடிகர் மக்களுக்கெல்லாம் மிகவும் அறிந்தவர். நல்ல நடிகர் ஆனால் எந்த விளம்பரமும் இல்லாமல் தனது தங்கைகளின் திருமணத்தை நடத்துகிறாரே! என்று எம்.ஜி.ஆர். யோசித்தார.; இந்த திருமணத்திற்கு நாம் எப்படியும் போக வேண்டும் என்ற யோசனைதான் எம்.ஜி.ஆருக்கு. பிறகு எம்.ஜி.ஆர். சத்தியராஜை நோக்கி நானும் ஜானுவும் இந்த திருமணத்திற்கு வருகிறோம் என்றார். உடனே சத்தியராஜ் எம்.ஜி.ஆரை நோக்கி அண்ணே! நீங்கள் இந்த திருமணத்திற்கு வர வேண்டாம். இந்த பத்திரிகையில் உங்கள் பெயரைப் போடவில்லை. மேலும் திருமணம் காலை 4 மணிக்கு தயவு செய்து வர வேண்டாம்.

உங்களுடைய வாழ்த்துச் செய்தி மட்டும் கிடைத்தால் போதும். அண்ணே! உங்களை எப்படியாவது நேரில் பார்க்கணும் உங்களிடம் இரண்டு வார்த்தையாவது பேசனும் உங்களிடம் ஆசீர்வாதம் பெறனும் என்ற ஆசையோடுதான் வந்தேன். நீங்கள் இந்த நாட்டின் முதலமைச்சர் நீங்கள் தயவு செய்து வரவேண்டாம்.

உங்களுடைய வாழ்த்து செய்தியே போதும் நீங்கள் நேரில் வந்த மாதிரி தான் என்னை மன்னிக்கவேண்டும் என்று சொல்லி முடித்தவுடனே முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சத்தியராஜூடைய தோள்பட்டையை தட்டிக் கொண்டே நான் வருவேன் என்று சொல்லிக் கொண்டே அவர்களை வழியனுப்பி வைத்தார்.



**தொடரும்**

கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# பாடகர் மனோ

**பாடகர் மனோ பிறந்த நாள் அக்டோபர் 26, 1965.**

மனோ தென்னிந்தியத் திரைப்படங்களில் பாடிவரும் ஓர் திரைப்படப் பின்னணிப் பாடகர். இவர் தமிழ், மலையாளம், தெலுங்கு , கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் பாடியுள்ளார். தமது திரைவாழ்வை நடிகராகத் துவங்கி பின்னர் பின்னணிப் பாடகராக புகழ்பெற்றார். சின்னத் தம்பி என்ற படத்தில் "தூளியிலே" என்ற பாடலுக்காக தமிழ்நாடு அரசு விருது பெற்றார்.

இளமை வாழ்வும் திரைவாழ்வும் மனோ தெலுங்கு இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் நாகூர் பாபு ஆகும். இவரது பெயரை பிற்காலத்தில் மனோ என்று இளையராஜா மாற்றினார். தமது கர்நாடக இசைப் பயிற்சியை பிரபல பாடகர் நேதனூரி கிருஷ்ணமூர்த்தியிடம் பெற்றார்.

துவக்கத்தில் பல மேடை நாடகங்களில் நடித்து 15 தெலுங்குத் திரைப்படங்களில் நடித்துள்ளார். இவரது படமொன்றிற்கு இசையமைக்க வந்த இசையமைப்பாளர் எம். எஸ். விஸ்வநாதன் இவருடைய பின்னணியை அறிந்து தன்னுடைய குழுவில் துணை புரிய சென்னைக்கு அழைத்துக்கொண்டார். அவரிடம் இரண்டரை ஆண்டுகள் பணி புரிந்துள்ளார். 1984ஆம் ஆண்டு தெலுங்கு இசையமைப்பாளர் சக்கரவர்த்தியிடம் பணிபுரியத் தொடங்கினார்.

1984ஆம் ஆண்டு கற்பூரதீபம் என்ற படத்தில் எஸ். பி. பாலசுப்பிரமணியம், பி. சுசீலா வுடன் இணைந்து பாடும் ஓர் வாய்ப்பு கிடைத்தது . அதனைத் தொடர்ந்து கன்னடத் திரைப் படம் ஒன்றில் இசையமைப் பாளர் அம்சலேகா வாய்ப்பு கொடுத்தார். 1986ஆம் ஆண்டு இளையராஜா பூவிழி வாசலிலே என்றத் தமிழ்த் திரைப்படத்தில் "அண்ணே அண்ணே" என்ற பாடலைப் பாட வாய்ப்பு கொடுத்தார்.



தொடர்ந்து எங்க ஊர் பாட்டுக் காரன் படத்தில் திருப்புமுனை தந்த "செண்பகமே", "மதுரை மரிக்கொழுந்து வாசம்" மற்றும் வேலைக்காரன் படத்தில் "வா வா கண்ணா வா", "வேலையில் லாதவன்" போன்ற பாடல்கள் மூலம் பரவலாக அறியப்படத் தொடங்கினார். சிங்கார வேலன் படத்தில் ஓர் வேடமேற்று நடித்துள்ளார்.

காதலன் படத்தில் "முக்காலா முக்காபலா", முத்து படத்தில் "தில்லானா தில்லானா" மற்றும் உள்ளத்தை அள்ளித்தா படத்தில் "அழகிய லைலா" போன்ற பாடல்கள் பெருவெற்றி பெற்றன.கே.எஸ் சித்ரா, ஸ்வர்ணலதா, ஜானகி ஆகியோருடன் இணைந்து ஏராளமான டுயட் பாடல்கள் பாடி இருக்கிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா, இந்தி ஆகிய மொழிகளில் 1,200 பாடல்களுக்கு மேல் பாடியிருக்கும் இவர் 250 நாடகங்களிலும், 3000 மேடை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்

கமல் நடித்த அத்தனை படங்களுக்கும் தெலுங்கு மொழியில் எஸ் . பி . பாலசுப்பிரமணியம் குரல் கொடுத்தார் என்றால் ரஜினி நடித்த பல படங்களுக்கு தெலுங்கில் குரல் கொடுத்தவர் இவர்.

இவரது மனைவியின் பெயர் ஜமீலா. இவர்களுக்கு ஷாகீர், ராபி என்கிற இரு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மனோவின் பாடல்களில் மட்டுமின்றி பழகும் தன்மையிலும் இனிமை இருக்கும். இவரது வெற்றியின் ரகசியம் அதுதான் என்றால் அது மிகையில்லை.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்திய மாதாந்தம் ஆளுமைகளை கௌரவிக்கும் விழா









தினகரன், தினகரன் வாரமஞ்சரியுடன் இணைந்து சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்திய மாதாந்தம் ஆளுமைகளை கௌரவிக்கும் விழா வத்தளை, நகர சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.